சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

★★★
ஞாயிற்றுக்கிழமை
7 அக்டோபர் 2018
சென்னை
24 பக்கங்கள் ரூ.7

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்
புதிய கிளை
07.10.2018
காலை 08.45 மணிக்கு
துவக்கம்
ஹாரிங்டன் சாலை
@ ராக் ஸ்டோன் ஐஸ் கிரீம்
சேத்துப்பட்டு, சென்னை
துவக்க விழா அன்று
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு கிலோ இனிப்புக்கும்
1/2 kg சுத்தமான பசு நெய் அன்புப்பரிசாக
ஒரு நபருக்கு அதிக அளவு 1 கிலோ.
1/2 கிலோ இனிப்புக்கு 1/4 கிலோ பசு நெய்
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்
Customer Care : 044 - 42616161
Toll Free : 1800 102 102 2343
E- Mail : customercare@srikrishnasweets.com
www.srikrishnasweets.com

இன்றைய இதழுடன்
32 பக்க கதிர் இணைப்பு

இன்றைய 4 பக்க
கொண்டாட்டம்

கோமல் தியேட்டரின் முதல் படைப்பு!
- களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம்!
- சாகா வரம்பெற்ற பாடல்! - கவிஞர் முத்துலிங்கம்
- பூமியை முத்தமிடும் வெந்நீர் நீரூற்று! - சாந்தகுமாரி சிவகடாட்சம்
- பிடித்த பத்து - நடிகை மீரா கிருஷ்ணா
- அறிவு தரும் முகமூடிகள் குரூரமானவை! - இயக்குநர் ராசு ரஞ்சித்

5 மாநில பேரவைத் தேர்தல் தேதி அறிவிப்பு

புது தில்லி, அக். 6: தெலங்கானா, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், மிஸோரம் உள்ளிட்ட 5 மாநிலங்களின் சட்டப் பேரவைத் தேர்தல் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நடைபெற உள்ளது.

இதுதொடர்பான அறிவிப்பை தலைமைத் தேர்தல் ஆணையர் ஓ.பி. ராவத் தில்லியில் சனிக்கிழமை வெளியிட்டார். இதையடுத்து சம்பந்தப்பட்ட மாநிலங்களில் தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளன. புதிய திட்டங்கள் மற்றும் அறிவிப்புகளுக்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டு வந்த 5 மாநிலத் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து தேசிய அரசியலில் தற்போது மிகுந்த பரபரப்பு ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் 2019 மக்களவைத் தேர்தலுக்கான முன்னோட்டமாக இத்தேர்தல் கருதப்படுவதால், பாஜகவுக்கும், காங்கிரஸுக்கும் இடையேயான அக்னி பரீட்சையாகவே அது உருவெடுத்துள்ளது.

அதைக் கருத்தில் கொண்டு அவ்விரு கட்சிகளுமே ஆயத்த நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியுள்ளன. அதேபோன்று பிற கட்சிகளும் தேர்தலை எதிர்கொள்ள வியூகம் வகுத்து காத்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பேரவைக் காலம் நிறைவு: மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் உள்ளிட்ட மாநிலங்களின் சட்டப் பேரவை பதவிக் காலம் ஜனவரியில் நிறைவடைகிறது. மிஸோரத்தில் டிசம்பர் 15-ஆம் தேதியுடன் அது முடிவுக்கு வருகிறது. தெலங்கானாவைப் பொருத்தவரை அந்த மாநில முதல்வர் சந்திரசேகர் ராவ் சட்டப் பேரவையை முன்கூட்டியே கலைத்துவிட்டார். இதனால், அந்த 5 மாநிலங்களிலும் தேர்தல் நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதையொட்டி சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்குச் சென்ற தேர்தல் ஆணைய அதிகாரிகள் அங்குள்ள களநிலவரங்கள், முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றை அண்மையில் ஆய்வு செய்தனர். அதன் அடிப்படையில் பல்வேறு கட்ட ஆலோசனைக்குப் பிறகு தேர்தல் நடத்துவதற்கான தேதிகள் இறுதி செய்யப்பட்டன.

இதையடுத்து, அதுகுறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு சனிக்கிழமை வெளியிடப்பட்டது. இதுதொடர்பாக தில்லியில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஓ.பி.ராவத் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

5 மாநிலங்களிலும் தேர்தல் நடத்தத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அமைதியாகவும், ஆக்கப்பூர்வமாகவும் அவை நடைபெற வேண்டும் என்று விழைகிறோம். தேர்தலில் முறைகேடுகள் நடைபெறுவதைத் தடுக்க கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வாக்குப் பதிவு நாள்கள்: மொத்தம் 230 தொகுதிகளைக் கொண்ட மத்தியப் பிரதேசத்துக்கும், 40 தொகுதிகளைக் கொண்ட மிஸோரத்துக்கும் நவம்பர் 28-ஆம் தேதி வாக்குப் பதிவு நடைபெற உள்ளது. அவ்விரு மாநிலங்களிலும் ஒரே கட்டமாகத் தேர்தல் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

200 தொகுதிகளைக் கொண்ட ராஜஸ்தான் மாநிலத்துக்கும், 119 தொகுதிகளைக் கொண்ட தெலங்கானாவுக்கும் டிசம்பர் 7-ஆம் தேதி ஒரே கட்டமாகத் தேர்தல் நடைபெறும். சத்தீஸ்கரைப் பொருத்தவரை முதல்கட்டமாக 18 தொகுதிகளுக்கு நவம்பர் 12-ஆம் தேதியும், இரண்டாம் கட்டமாக 72 தொகுதிகளுக்கு நவம்பர் 20-ஆம் தேதியும் வாக்குப்பதிவு நடைபெறுவள்ளது.

அனைத்து மாநிலங்களிலும் பதிவான வாக்குகள் டிசம்பர் 11-ஆம் தேதி எண்ணப்பட்டு அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்படும்.

தேர்தலையொட்டி சம்பந்தப்பட்ட மாநிலங்கள் அனைத்தும் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. சத்தீஸ்கரில் நக்ஸல் பாதிப்பு அதிகம் உள்ள காரணத்தால் அங்கு ஒரே கட்டமாகத் தேர்தல் நடத்த இயலாத சூழல் நிலவுகிறது. கர்நாடகத்தில் பெல்லாரி, சிவ மொக்கா, மாண்டியா மக்களவைத் தொகுதிக்கான இடைத் தேர்தல் நவம்பர் 3-ஆம் தேதி நடத்தப்பட்டு அந்த மாதம் 6-ஆம் தேதி முடிவுகள் வெளியிடப்படும் என்றார் ஓ.பி.ராவத்.

பாதுகாப்புப் பணிகள் தீவிரம்: தேர்தலையொட்டி, சத்தீஸ்கர், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு மட்டும் 25 ஆயிரம் மத்திய ஆயுதக் காவல்படை வீரர்களை பாதுகாப்புப் பணிக்கு அனுப்ப மத்திய உள்துறை அமைச்சகம் அண்மையில் உத்தரவிட்டது. அவர்கள் அனைவரும் விரைவில் அந்த மாநிலங்களுக்குச் சென்று பணிகளை மேற்கொள்ள உள்ளனர்.

அதேபோன்று தெலங்கானா, மிஸோரம் மாநிலங்களுக்கும் கூடுதல் எண்ணிக்கையில் துணை ராணுவப் படையினரை அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அனல் பறக்கும் களம்: தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்களில் மிஸோரத்தில் மட்டுமே காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று வருகிறது. தெலங்கானாவில் சந்திரசேகர் ராவின் டிஆர்எஸ் கட்சியின் காபந்து அரசு ஆட்சியில் உள்ளது. பிற மாநிலங்கள் அனைத்தும் பாஜக வசம் உள்ளன.

இந்தச் சூழலில் ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்வதற்காக பாஜக ஒரு புறம் அனைத்து அரசியல் அஸ்திரங்களையும் பயன்படுத்தி வருகிறது. மற்றொரு புறம் பாஜகவை வீழ்த்தி இழந்த பலத்தை மீட்டெடுக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி காய் நகர்த்தி வருகிறது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த அரசியல் நோக்கர்கள் சிலர், இத்தேர்தல் இரு கட்சிகளுக்குமே இன்றியமையாத ஒன்று என்றாலும் காங்கிரஸுக்கு கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது எனத் தெரிவித்துள்ளனர். ராகுல் காந்தி காங்கிரஸ் கட்சியின் தலைவராக பொறுப்பேற்ற பிறகு நடைபெறும் மிக முக்கியத் தேர்தல் இது என்பதால், அதன் முடிவுகள்தான் அவரது அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகின்றன என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

5 மாநில தேர்தல் தொடர்பாக தில்லியில் பேட்டி அளிக்கிறார் தலைமைத் தேர்தல் ஆணையர் ஓ.பி.ராவத்.



திருப்பரங்குன்றம், திருவாரூருக்கு இடைத் தேர்தல் இல்லை

தமிழகத்தில் திருப்பரங்குன்றம் மற்றும் திருவாரூர் தொகுதிகளுக்கு தற்போது இடைத் தேர்தல் நடத்தப் போவதில்லை என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. பருவமழைக் காலம் என்பதால் தற்போது வாக்குப் பதிவு நடத்த உகந்த சூழல் இல்லை என்று மாநில அரசு கேட்டுக் கொண்டதன் பேரில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மேலும், திருப்பரங்குன்றம் இடைத் தேர்தல் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதும் ஒரு காரணம் எனக் கூறப்படுகிறது.

திருவாரூர் எம்எல்ஏ மு. கருணாநிதி, திருப்பரங்குன்றம் எம்எல்ஏ ஏ.கே.போஸ் ஆகியோர் அண்மையில் காலமானதைத் தொடர்ந்து அத்தொகுதிகள் காலியானதாக அறிவிக்கப்பட்டன.

ஆசியாவின் சிறந்த
கருத்தரிப்பு மைய விருது 2017

Joy of Parenting

ஐஸ்வர்யா
கருத்தரித்தல் மையம்

OUR ACHIEVEMENTS
- Winner of Asia Greatest Brand & Leaders 2017
- Doyens of Health care Award 2018
- IVF Leader Award 2018
- India's 1st IVF Chain
- More than a Lakh Successful Couples
- More than a Lakh Laparoscopic Surgeries

IVF | ICSI | IMSI | Laser Hatching
PGD | Sperm bank | Egg bank
Embryo bank | Time Lapse | Fibroid clinic

90 2012 2012

சென்னை (அடையாறு, அம்பத்தூர், தாம்பரம் & OMR) | கோவை | மதுரை
பழநி | ஈரோடு | திருச்சி | தஞ்சாவூர் | ராமநாதபுரம் | பாலக்காடு

Iswarya.in@gmail.com | www.iswaryafertility.com

www.t.me/Tamilpdfworld

திருமலையில் உண்டியல் வருமானம் ரூ.3.37 கோடி

திருப்பதி, அக்.6: திருமலையில் உள்ள வெங்கடாசலபதி கோயில் உண்டியல் வருமானம், நன்கொடை உள்ளிட்டவை தொடர்பான அறிக்கையை தேவஸ்தானம் வெளியிட்டது. அதன் விவரம் வருமாறு:

உண்டியல் காணிக்கை வருமானம்	ரூ.3.37 கோடி
ஏழுமலையானை தரிசனம் செய்த பக்தர்கள்	80,340
நன்கொடை – அன்னதான அறக்கட்டளைக்கு	ரூ.2.49 லட்சம்
மருத்துவ அறக்கட்டளைக்கு	ரூ.1 லட்சம்
ஆரோக்கிய வரப்பிரசாதினி அறக்கட்டளைக்கு	ரூ.1 லட்சம்
தலைமுடி காணிக்கை செலுத்தியவர்கள்	29,775
நிரம்பிய வைகுண்டம் காத்திருப்பு அறைகள்	27
தர்ம தரிசன காத்திருப்பு நேரம்	14 மணி நேரம்
விரைவு தரிசன காத்திருப்பு நேரம்	3 மணி நேரம்
நேர ஒதுக்கீடு தரிசன காத்திருப்பு நேரம்	12 மணி நேரம்
நடைபாதை தரிசன காத்திருப்பு நேரம்	5 மணி நேரம்
குறைகளைத் தெரிவிக்க...	93993 99399 18004254141

தேராபந்த் தர்ம சங்க ஜைன மகாசமிதியின் 43-ஆவது ஆண்டு விழா

பாஜக முன்னாள் எம்.பி. தருண் விஜய் பங்கேற்பு

மாதவரம், அக். 6: சென்னை மாதவரம் அருகே, தேராபந்த் தர்ம சங்க ஜைன மகாசமிதியின் 43-ஆவது ஆண்டு விழாவில், பாஜக மாநிலங்களவை முன்னாள் எம்.பி. தருண் விஜய் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

மாதவரம் தட்டான்குளம் சாலையில், தேராபந்த் நகரில், ஆசார்ய ஸ்ரீமகாஸ்ரமன் சாதுர் மாஸ்ய பிரவஸ் வியவஸ்தா மகாசமிதியின் 43-ஆவது ஆண்டு விழா சனிக்கிழமை நடைபெற்றது. இந்த விழாவில் முன்னாள் எம்.பி. தருண் விஜய் கலந்துகொண்டார். அப்போது அவர் பேசியது:

மகாசமிதியின் 9 மற்றும் 10-ஆவது துறவிகளைச் சந்தித்து அவர்களின் ஆசியைப் பெற்றுள்ளேன். இந்நிலையில், தற்போது 11-ஆவது மகாசமிதியின் துறவியான மகாஸ்ரமன் சந்திப்பும், ஆசியும் எனக்கு மிகவும் மகிழ்ச்சியும், பெருமையும் அளிக்கிறது.

மேலை நாடுகளில் பணத்திற்கும், பலம் படைத்தவர்களுக்கும் தான் மதிப்பு உண்டு.

ஆனால், இந்தியாவில் முற்றும் துறந்த முனிவர்களுக்குத்தான் மதிப்பு அதிகம். மேலும், உலகமே போற்றும் திருக்குறளின் நெறிகளைப் பரப்புவது எனது பணியாகும். இதனால் தமிழக மக்கள் என் மீது அதிக அன்பு வைத்துள்ளனர்.

மேலும் திருக்குறளின் நெறியும் மகாசமிதியின் அனுக்கிரக நெறியும் ஒன்றுதான் என்று அவர் பேசினார். இந்த விழாவில், இந்தியா முழுவதும் உள்ள 300-க்கும் மேற்பட்ட மகாசமிதியின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

விழாக்குழுவினருடன் பாஜக முன்னாள் எம்.பி. தருண் விஜய்.

இணையதளத்தில் பத்மாவதி தாயார் ஆர்ஜித சேவா டிக்கெட்

திருப்பதி, அக். 6: திருச்சானூர் பத்மாவதி தாயார் கோயில் ஆர்ஜித சேவா டிக்கெட்டுகளை தேவஸ்தானம் இணையதளத்தில் வெளியிட்டுள்ளது.

திருமலை திருப்பதி தேவஸ்தானம் நிர்வகிக்கும் இக்கோயில் வழிபாட்டுக்கான ஆர்ஜித சேவா டிக்கெட்டுகள் தேவஸ்தான இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. 50 சதவீத டிக்கெட்டுகள் இணையதளத்திலும், 50 சதவீதம் டிக்கெட்டுகள் உடனடிப் பதிவிலும் வெளியிடப்பட்டுள்ளன. இணையதளம் வாயிலாக முன்பதிவு செய்ய விரும்பும் பக்தர்கள் 48 மணிநேரத்திற்கு முன் முன்பதிவு செய்து கொள்ளலாம். கோயிலுக்கு வருபவர்கள் தரிசன நேரத்திற்கு 3 மணி நேரத்திற்கு முன் இந்த டிக்கெட்டுகளை பெற்றுக் கொண்டு தாயாரை ஆர்ஜித சேவையில் தரிசிக்கலாம்.

ஆர்ஜித சேவா டிக்கெட் பட்டியல் விவரம் வருமாறு:

சேவை	இணையதளம்	உடனடி பதிவு	மொத்தம்
சுப்ரபாதம்	50	50	100
கல்யாணோற்சவம்	50	50	100
அஷ்டதள பாதம்	35	40	75
அஷ்டோத்ர சதகலசம்	15	15	30
திருப்பாவாடை	50	50	100
அபிஷேகம்	30	30	60
வஸ்திர அலங்காரம்	05	02	07
லட்சுமி பூஜை	75	75	150
புஷ்பாஞ்சலி	35	15	50

கொடைக்கானலில் பலத்த மழை: மரங்கள் விழுந்ததால் போக்குவரத்து பாதிப்பு

கொடைக்கானல், அக். 6: கொடைக்கானலில் சனிக்கிழமை பெய்த பலத்த மழையால் பல்வேறு இடங்களில் மரங்கள் விழுந்து, போக்குவரத்து தடைபட்டதால் சுற்றுலாப் பயணிகள், பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர்.

கொடைக்கானலில் கடந்த இரண்டு வாரங்களாக அவ்வப்போது பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் இங்குள்ள நீரோடைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, அனைத்து நீர்நிலைகளும் நிரம்பி வருகின்றன.

இந்நிலையில், சனிக்கிழமை அதிகாலை பெய்த மழையின் போது, கொடைக்கானல் – வத்தலகுண்டு மலைச்சாலையில் மச்சூர் பகுதியில் சாலையின் நடுவே மரம் விழுந்தது. இதனால் அப்பகுதியில் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து சம்பவ இடத்துக்கு சென்ற வனத்துறையினர், பேருந்துகளிலும், வாகனங்களிலும் வந்த பொது மக்களின் உதவியுடன் மலைச் சாலைகளில் விழுந்த மரங்களை அகற்றினர். அதன் பின்னர், போக்குவரத்து சீரானது.

மேலும், கொடைக்கானல் பாம்பார்புரம், செல்லபுரம், கோசன்சாலை, அப்பர்லேக் வியூ சாலை ஆகியப் பகுதிகளிலும் மரங்கள் விழுந்தன. அதைத் தொடர்ந்து வனத்துறையினர் மற்றும் நெடுஞ்சாலைத்துறையினர் விரைந்து சென்று, சாலைகளில் விழுந்த மரங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். இப்பணிகளை கொடைக்கானல் வருவாய் கோட்டாட்சியர் மோகன், வட்டாட்சியர் ரமேஷ் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் பார்வையிட்டனர்.

சனிக்கிழமை அதிகாலை முதல் பிற்பகல் 3 மணி வரை பெய்த மழையால் கொடைக்கானல் – பழனி மலைச்சாலையான வடகவுஞ்சி, பூம்பாறை, கிளாவரை, கவுஞ்சி ஆகிய இடங்களில் மண் சரிவு ஏற்பட்டது. ஆனால் இந்தப் பகுதிகளில் போக்குவரத்துக்கு எவ்வித பாதிப்பும் இல்லை. வழக்கம்போல், பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

தயார் நிலையில் மீட்புக் குழுவினர்: கொடைக்கானலில் மழை காரணமாக ஏற்படும் பாதிப்புகளை சமாளிக்க மாவட்ட நிர்வாகம் சார்பில், பெருமாள் மலை, பண்ணைக்காடு பகுதிகளில் 20-க்கும் மேற்பட்ட மீட்புக் குழுவினர் தயார் நிலையில் உள்ளனர்.

மண்சரிவுகள் ஏற்பட்டால் உடனடியாக சீரமைக்க 3 பொக்லைன் இயந்திரங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

மின் தடையால் பொதுமக்கள் அவதி: கொடைக்கானலில் பல இடங்களில் மரங்கள் விழுந்ததால் மின் தடை ஏற்பட்டது. இதனால் பொது மக்கள் சிரமத்துக்குள்ளாகினர். நகர்ப் பகுதியை தவிர, புறநகர் பகுதிகளில் இன்னும் மின் விநியோகம் சீராகவில்லை.

பாம்பார்புரம் பகுதியில் விழுந்த மரத்தை அகற்றும் பணியில் ஈடுபட்ட வனத்துறையினர்.

நீலகிரி மலை ரயில் இன்று முதல் 3 நாள்களுக்கு ரத்து

உதகை, அக். 6: வடகிழக்குப் பருவமழை தொடக்கம் மற்றும் பலத்த மழை எச்சரிக்கையைத் தொடர்ந்து நீலகிரி மலை ரயில் ஞாயிற்றுக்கிழமை முதல் 3 நாள்களுக்கு ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தென்னக ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நீலகிரி மாவட்டத்தில் வடகிழக்குப் பருவ மழை தொடங்காவிட்டாலும் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. இந்நிலையில், மேட்டுப்பாளையத்தில் இருந்து உதகைக்கு சனிக்கிழமை வந்த மலை ரயில், பாதையில் ஏற்பட்ட மண் சரிவு காரணமாக ஆடர்லி ரயில் நிலையத்திலேயே நிறுத்தப்பட்டுவிட்டது. அதன்பின், குன்னூரில் இருந்து மாற்று ரயில் சென்று அங்கிருந்து சுமார் 5 மணி நேர தாமதத்துக்குப் பின்னர் 210 பயணிகளை அழைத்துக் கொண்டு குன்னூருக்கு வந்தது.

இந்நிலையில், மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை மற்றும் மலை ரயில் பாதையில் ஏற்படக்கூடிய இன்னல்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பாதுகாப்பு நடவடிக்கையாக நீலகிரி மலை ரயில் அக்டோபர் 7ஆம் தேதி முதல் 9ஆம் தேதி வரை ரத்து செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆடர்லி பகுதியில் மாற்று ரயிலுக்காக காத்திருந்த பயணிகள்.

கொல்லிமலையில் தொடர் மழை: ஆகாயகங்கை அருவியில் குளிக்கத் தடை

நாமக்கல், அக். 6: கொல்லிமலையில் கடந்த 2 நாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால், ஆகாய கங்கை அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது. இதனால் அருவியில் குளிக்க வனத்துறையினர் தடை விதித்துள்ளனர்.

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் கடந்த 2 நாள்களாக விட்டு, விட்டு மழை பெய்து வருகிறது. மழையால் வாசலூர்பட்டி அருகே தேப்பகுளம்பட்டி காட்டாற்றில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இந்த மழை நீர் பெரியகோயிலூர் ஆற்றுக்குச் செல்வதால், ஆகாயகங்கை அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது.

இதனால் சனிக்கிழமை காலை முதல் ஆகாயகங்கை அருவியில் சுற்றுலாப் பயணிகள் குளிக்கவும், பார்வையிடவும் வனத் துறையினர் தடை விதித்துள்ளனர். ஆகாயகங்கை நீர் வீழ்ச்சிக்குச் செல்லும் பாதை மூடப்பட்டுள்ளது.

விடுமுறை தினம் என்பதால், சனிக்கிழமை காலை கொல்லிமலையில் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் குவிந்தனர். ஆனால், ஆகாய கங்கை அருவிக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டதால், ஏமாற்றத்துடன் திரும்பினர். தண்ணீர் வரத்து குறைந்தால், அருவிக்குச் செல்ல ஓரிரு நாள்களில் அனுமதி அளிக்கப்படும் என வனத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆகாய கங்கை அருவியில் ஆர்ப்பரித்துக் கொட்டும் தண்ணீர்.

தனுஷ்கோடி செல்ல சுற்றுலா பயணிகளுக்கு தடை: படக்குழுவுக்கு அனுமதி அளித்ததால் அதிருப்தி

ராமேசுவரம், அக். 6: கன மழை பெய்யக்கூடும் என வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளதை தொடர்ந்து தனுஷ்கோடிக்கு சுற்றுலா பயணிகள் செல்ல காவல்துறையினர் தடை விதித்தனர். ஆனால், சினிமா படப்பிடிப்பு நடத்த அனுமதி அளித்துள்ளதற்கு சுற்றுலா பயணிகள் அதிருப்தி தெரிவித்தனர்.

நாள்தோறும் தனுஷ்கோடி அரிச்சல்முனை வரை ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வாகனங்களில் வந்து செல்கின்றனர். இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை கன மழை பெய்யக்கூடும் என வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளதால் தனுஷ்கோடி பகுதிக்கு சனிக்கிழமை முதல் முதல் திங்கள்கிழமை வரை சுற்றுலா வாகனங்கள் செல்ல காவல்துறையினர் தடை விதித்துள்ளனர். இதற்காக நடராஜபுரம் பகுதியில் காவல்துறையினர் தடுப்பு வேலி அமைத்து சுற்றுலா வாகனங்களை திருப்பி அனுப்பி வருகின்றனர். இந்நிலையில், தனுஷ்கோடி பகுதிகளில் 20 க்கும் மேற்பட்ட வாகனங்கள், 500- க்கும் மேற்பட்ட படக்குழுவினர் மட்டும் அனுமதிக்கப்பட்டு சினிமா படப்பிடிப்பு நடந்து வருகிறது. சினிமா படப்பிடிப்புக்கு மட்டும் அனுமதி அளித்துள்ள காவல்துறையினர் மீது சுற்றுலா பயணிகள் அதிருப்தி அடைந்தனர்.

சுற்றுலா பயணிகள் சென்றால் படப்பிடிப்பு பாதிக்கப்படும் என்பதால் சுற்றுலா பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாக காவல்துறை அதிகாரி ஒருவர் கூறினார்.

தனுஷ்கோடிக்கு செல்லும் வாகனங்களை தடுக்க நடராஜபுரம் பகுதியில் காவல்துறையினர் அமைத்துள்ள தடுப்பு வேலி. (வலது) தனுஷ்கோடி பகுதியில் பணியாற்றிய சினிமா படபிடிப்பு குழுவினர்.

கிறிஸ்துமஸ் கேக் தயாரித்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்

செங்கல்பட்டு, அக். 6: மாமல்லபுரத்தில் நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் கிறிஸ்துமஸ் கேக்கை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுடன் இணைந்து உயர்ரக மதுபானங்கள், உலர்ந்த பழவகைகள், உயர் ரக பருப்பு வகைகள் கொண்டு சமையல்கலை நிபுணர்கள் தயாரித்தனர். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுடன் சமையல் கலை நிபுணர்கள் நடனமாடி மகிழ்வித்தனர்.

ஒவ்வொரு ஆண்டும் மாமல்லபுரம் 'ஜிஆர்டி ரேடிசன் புளூ ரிசார்ட் டெம்பிள் பே' நட்சத்திர ஹோட்டலில் கிறிஸ்துமஸ் பண்டிகை வருவதற்கு முன்பே சமையல் கலை நிபுணர்கள், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஆகியோர் இணைந்து கிறிஸ்துமஸ் கேக் தயாரிப்பது வழக்கம். அவ்வாறு தயாரித்த கேக்கை ஆடல் பாடலுடன் நடனமாடி, பகிர்ந்தளித்து உண்டு மகிழ்ந்து விழா போல் கொண்டாடுவர்.

இந்த ஆண்டு கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு, அந்த ஹோட்டலில் தங்கியுள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுடன் இணைந்து சமையல் கலை நிபுணர்கள் 50 கிலோ எடையுள்ள கிறிஸ்துமஸ் கேக்கைத் தயாரிக்கும் பணியில் வெள்ளிக்கிழமை ஈடுபட்டனர். முன்னதாக, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை மகிழ்விப்பதற்காக சமையல் கலை நிபுணர்கள் ஒரு பாடலின் இசைக்கேற்ப நடனமாடி உற்சாகப்படுத்தி அவர்களை மகிழ்வித்தனர்.

ஹோட்டலின் பொது மேலாளர் இளங்கோ ராஜேந்திரன் கேக் தயாரிக்கும் பணியைத் தொடங்கி வைத்தார்.

அதையடுத்து வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கொண்டு உலர்ந்த திராட்சை, உலர்ந்த கிஸ்மிஸ் பழம், செர்ரி பழம் உள்ளிட்ட பழவகைகள், முந்திரி, பாதாம், பிஸ்தா உள்ளிட்ட உயர் ரக பருப்பு வகைகள், வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்டு கிறிஸ்துமஸ் கேக் தயாரிக்கும் பணி நடைபெற்றது.

இந்தப் பணியில் ஹோட்டலில் தங்கியிருந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பலர் கலந்து கொண்டு சமையல்கலை நிபுணர்களுடன் இணைந்து உற்சாகமாக ஈடுபட்டனர். கேக் தயாரித்த பின்னர் சமையல் கலை நிபுணர்களும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் ஆடல் பாடலுடன் நடனமாடினர்.

பின்னர் கிறிஸ்துமஸ் கேக் அனைவருக்கும் வழங்கப்பட்டது. அதை சுற்றுலாப் பயணிகள், ஹோட்டல் பணியாளர்கள் உள்ளிட்டோர் சுவையுடன் உண்டு மகிழ்ந்தனர்.

கிறிஸ்துமஸ் கேக் தயாரிப்பில் சமையல்கலை நிபுணர்களுடன் ஈடுபட்ட சுற்றுலாப் பயணிகள்.

www.t.me/Tamilpdfworld

நூல் வெளியீடு...

சென்னையில் சனிக்கிழமை நடைபெற்ற எழுத்தாளர் இந்திரனின் 70-ஆவது பிறந்த நாள் விழாவில் அவரது நூல்களை கவிஞர் வைரமுத்து வெளியிட, அதைப் பெறுகிறார் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம். உடன் (இடமிருந்து) நூலாசிரியர் இந்திரன், உருது கவிஞர் ஜெயந்த் பார்மர், திரைப்பட இயக்குநர் ராஜசேகரன்.

துணைவேந்தர் நியமனத்துக்கு கோடிக்கணக்கில் பணம்

ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் புகார்

கருத்தரங்கைத் தொடங்கி வைத்துப் பேசுகிறார் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்.

சென்னை, அக். 6: கடந்த காலங்களில் துணைவேந்தர் நியமனங்களுக்கு கோடிக்கணக்கில் பணம் கைமாறியுள்ளதாக பல்கலைக்கழகங்களின் வேந்தரும், தமிழக ஆளுநருமான பன்வாரிலால் புரோஹித் குற்றம்சாட்டியுள்ளார்.

மேலும், இப்போது தன்னுடைய நியமனத்தில் ஒருவர்கூட குற்றம் சுமத்த முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

கல்வியின் தரத்தை உயர்த்துவது குறித்து சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கில் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் பேசினார். அப்போது கடந்த காலங்களில் துணைவேந்தர் நியமனம் தொடர்பான குற்றச்சாட்டுகளை அவர் தெரிவித்தார். அவர் பேசியது:-

இந்தியாவில் கல்வி என்பது தனிநபர்கள் அறிவைப் பெறவும், திறன்கள், ஒழுக்கம் மற்றும் அமைதி, மனித நேயம் ஆகியவற்றைப் பெறும் வகையிலே உருவாக்கப்பட்டது. ஆனால், நவீன கல்வி முறையின் சில அம்சங்களானது இந்தியாவின் பாரம்பரியத்தின் மீது வெறுப்பைக் காட்டும் வகையில் அமைந்திருக்கின்றன.

துணைவேந்தர் நியமனங்கள்: பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால், கடந்த காலங்களில் துணைவேந்தர் பதவிக்காக கோடிக் கணக்கான ரூபாய் கைமாறியுள்ளது. இதனை என்னால் நம்ப முடியவில்லை. ஆனால், நான் பல்கலைக்கழகங்களின் வேந்தராக வந்த பிறகு இதுவரை தகுதியான 9-க்கும் மேற்பட்ட துணைநவேந்தர்களை நியமித்துள்ளேன்.

இந்த நியமன விவகாரங்களில் யாரும் என்னை நோக்கி விரலை நீட்டி குற்றம் சுமத்த முடியாது. துணைவேந்தர் முதல் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் வரை அனைவரும் தகுதி அடிப்படையிலேயே நியமிக்கப்பட வேண்டும் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் சத்யபால் சிங், பல்கலைக் கழக மானியக் குழு துணைத் தலைவர் பூஷன் பட்வர்தன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

ஓராண்டில் நியமனங்கள்: தமிழகத்தின் ஆளுநராக கடந்த ஆண்டு அக்டோபர் 5-ஆம் தேதி பன்வாரிலால் புரோஹித் பொறுப்பேற்றார். அன்று முதல் இன்று வரையிலான ஓராண்டில் மட்டும் பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமித்துள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக் கழகம், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக் கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், பெரியார், பாரதிதாசன், தமிழ்நாடு விளையாட்டுப் பல்கலைக்கழகம், சட்டப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு துணைவேந்தர்களை ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் நியமனம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

தாமிரவருணி புஷ்கரம்: சிறப்பு ரயில்கள் அறிவிப்பு

சென்னை, அக்.6: திருநெல்வேலியில் தாமிரவருணி புஷ்கரம் விழாவை முன்னிட்டு, பயணிகள் வசதிக்காக தாம்பரம்-திருநெல்வேலி, திருநெல்வேலி-தாம்பரம் சிறப்பு ரயில்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தாம்பரம்-திருநெல்வேலி: தாம்பரத்தில் இருந்து அக்டோபர் 11, நவம்பர் 13 ஆகிய தேதிகளில் மாலை 5.15 மணிக்கு சிறப்பு கட்டண ரயில் (06039) புறப்பட்டு, மறுநாள் அதிகாலை 5 மணிக்கு திருநெல்வேலியை சென்றடையும்.

திருநெல்வேலி-தாம்பரம்: திருநெல்வேலியில் இருந்து அக்டோபர் 12, 14 ஆகிய தேதிகளில் பிற்பகல் 2 மணிக்கு சிறப்பு கட்டண ரயில் (06040) புறப்பட்டு, மறுநாள் அதிகாலை 3 மணிக்கு தாம்பரத்தை அடையும்.

திருநெல்வேலி-தாம்பரம்: திருநெல்வேலியில் இருந்து அக்டோபர் 16-ஆம் தேதி மாலை 6.15 மணிக்கு சிறப்பு கட்டண ரயில் (06044) புறப்பட்டு, மறுநாள் காலை 5 மணிக்கு தாம்பரத்தை வந்தடையும்.

தாம்பரம்-திருநெல்வேலி: தாம்பரத்தில் இருந்து அக்டோபர் 15-ஆம் தேதி இரவு 7.15 மணிக்கு சிறப்பு கட்டண ரயில் (06043) புறப்பட்டு, மறுநாள் காலை 6 மணிக்கு திருநெல்வேலியை சென்றடையும்.

இந்த சிறப்பு ரயில்களுக்கான டிக்கெட் முன்பதிவு ஞாயிற்றுக்கிழமை (அக்.7) காலை 8 மணிக்கு தொடங்குகிறது என தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கன மழை எச்சரிக்கை வாபஸ்

சென்னை, அக். 6: மேற்கு தொடர்ச்சி மலையையொட்டிய மாவட்டங்களான கோவை, நீலகிரி, தேனி, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஞாயிற்றுக்கிழமை மிக பலத்த மழை பெய்யும் என விடுவிக்கப்பட்ட எச்சரிக்கை திரும்பப் பெறப்படுவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.பாலச்சந்திரன் சனிக்கிழமை கூறியது: தென்கிழக்கு அரபிக்கடல் பகுதியில் வெள்ளிக்கிழமை நிலைகொண்டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி தற்போது வலுவான காற்றழுத்த தாழ்வு பகுதியாக அதேப் பகுதியில் நீடிக்கிறது.

இது அடுத்த 24 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும், தொடர்ந்து புயலாகவும் வலுவடைந்து, ஓமன் கரையை நோக்கி நகர்ந்து செல்லும். இதுதவிர, தெற்கு அந்தமான் கடல் பகுதியில் வளிமண்டலத்தில் மேலடுக்கு சுழற்சி தற்போது நிலவுகிறது. தென் தமிழகப் பகுதியின் வளிமண்டலத்தில் நிலவிய மேலடுக்கு சுழற்சி தற்போது வலுவிழந்துள்ளது.

மிதமான மழை: தமிழகம், புதுச்சேரியில் பெரும்பாலான இடங்களில் கடந்த 24 மணி நேரத்தில் மிதமான மழை பெய்துள்ளது. ஓரிரு இடங்களில் பலத்த மழை பெய்துள்ளது. தமிழகம், புதுச்சேரியில் அநேக இடங்களில் அக்டோபர் 8-ஆம் தேதி வரை மிதமான மழை பெய்யக் கூடும். ஓரிரு இடங்களில் பலத்த மழை பெய்யக் கூடும்.

எச்சரிக்கை வாபஸ்: மேற்குதொடர்ச்சிமலையை ஒட்டிய மாவட்டங்களானகோவை, நீலகிரி, தேனி, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் ஞாயிற்றுக்கிழமை (அக். 7) எதிர்பார்க்கப்பட்ட மிக பலத்த மழை வாய்ப்பு தற்போது இல்லை. அதனால் இது தொடர்பான எச்சரிக்கை விலக்கிக் கொள்ளப்படுகிறது.

வடகிழக்குப் பருவமழை தொடக்கம்: தென்கிழக்கு அரபிக் கடல் பகுதியில் தற்போது நிலவும் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, தெற்கு அந்தமான் பகுதியில் தற்போது காணப்படும் வளிமண்டல மேலடுக்குச் சுழற்சி ஆகியவற்றின் காரணமாக வங்கக்கடல் பகுதியில் ஒரு காற்றழுத்தத் தாழ்வு நிலை வரும் 8-ஆம் தேதி உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில், வடஇந்திய பகுதியில் தற்போது படிப்படியாக தென் மேற்கு பருவமழை விலக்கிக் கொள்ளப்படுகிறது. இதைத் தொடர்ந்து, வடகிழக்குப் பருவமழை தமிழகம், புதுச்சேரி, கேரளம், தெற்கு ஆந்திரம், தெற்கு கர்நாடகத்தில் வரும் 8 -ஆம் தேதி தொடங்குவதற்கான சாதகமான சூழல் நிலவுகிறது.

மீனவர்களுக்கு எச்சரிக்கை: குமரிக்கடல், மாலத்தீவு, லட்சத்தீவு பகுதிகளில் அக்டோபர் 6-ஆம் தேதி வரையிலும், மத்திய மற்றும் தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளுக்கு வரும் 8-ஆம் தேதி வரையும் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். சென்னை, புறநகரை பொருத்தவரை சிலமுறை மிதமான மழை பெய்யக்கூடும் என்றார் எஸ்.பாலச்சந்திரன்.

காரைக்காலில் 120 மி.மீ: தமிழகம், புதுச்சேரியில் சனிக்கிழமை காலை 8.30 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் காரைக்காலில் 120 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. விழுப்புரத்தில் 90 மி.மீ., நீலகிரி மாவட்டம் குன்னூரில் 80 மி.மீ., கடலூர் மாவட்டம் நெய்வேலி, விழுப்புரம் மாவட்டம் மயிலம், நாகை மாவட்டம், மயிலாடுதுறையில் தலா 70 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம், கடலூர் மாவட்டம் பண்ருட்டி, திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம், காஞ்சிபுரம், விழுப்புரம் மாவட்டம் வானூரில் தலா 60 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

நியமிப்பது ஆளுநர்தான்

தருமபுரி, அக். 6: பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிப்பது ஆளுநர்தான்; தமிழக அரசு அல்ல என்று தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் கே.பி. அன்பழகன் தெரிவித்தார்.

தருமபுரி அரசுப் பொறியியல் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவுக்கு வந்திருந்த அவரிடம், துணைவேந்தர்கள் தேர்வு குறித்து தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தெரிவித்துள்ள கருத்து குறித்து நிருபர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு அவர் அளித்த பதில்:

தமிழக பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமனம் செய்வதில் தமிழக அரசுக்கோ, உயர்கல்வித் துறைக்கோ எந்தத் தொடர்பும் இல்லை.

துணைவேந்தர் பதவிக்குப் பொருத்தமானவரைத் தேர்ந்தெடுக்க 'தேடுதல் குழு' அமைக்கப்படுகிறது. அந்தக் குழுவில் ஒரேயொரு உறுப்பினரை மட்டும் தமிழக அரசின் பிரதிநிதியாக நியமிக்கிறோம். அந்தப் பிரதிநிதிக்கும் 10 ஆண்டுகள் பேராசிரியராகப் பதவி வகித்திருக்க வேண்டும் என்பன உள்ளிட்ட விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. துணைவேந்தர் பதவிக்குப் பொருத்தமானவர்களின் விண்ணப்பங்களைப் பெற்று, அவர்களில் இருந்து மூன்று பேரை தேடுதல் குழுவினர் ஆளுநருக்குப் பரிந்துரைப்பர். அந்த மூவரையும் ஆளுநர் நேரில் அழைத்து நேர்காணல் நடத்தித்தான் துணைவேந்தரைத் தேர்வு செய்கிறார்.

எனவே, துணைவேந்தர்களை நியமிப்பது ஆளுநர்தான்; தமிழக அரசு அல்ல. இந்த நிலையில், ஆளுநர் எதை மனதில் வைத்துக் கொண்டு கருத்துத் தெரிவித்தார் என்பதை அவரிடம்தான் கேட்க வேண்டும் என்றார் அன்பழகன்.

தவறு இருந்தால் நடவடிக்கை

சென்னை அக். 6: துணைவேந்தர் நியமன விவகாரத்தில் தவறு இருந்தால் தமிழக அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சர் டி.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களுக்கு சனிக்கிழமை, தமிழக மீன்வளத் துறை அமைச்சர் டி.ஜெயகுமார் அளித்த பேட்டி:-

எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லாத ஒருவரைத் துணை வேந்தராக நியமிப்பது நல்ல செயல். ஆனால் அதே நேரத்தில் ஆளுநர் குறிப்பிட்டது போன்று தவறு செய்தது வெளியே வந்தால் அரசு அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும். ஆளுநர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அவர் நியமனம் செய்ததைத் தெரிவித்துள்ளார். தவறு செய்தவர்களுக்கு நாங்கள் ஆதரவு அளிக்க மாட்டோம். தவறு செய்திருந்தால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆளுநர் என்பவர் மாநிலத்தின் நிர்வாகத் தலைவர். அந்த அடிப்படையில் முதல்வர் அவ்வப்போது மாநிலத்தில் நடைபெற்றுவரும் பணிகள், சூழ்நிலைகள் குறித்து தெரிவிப்பது வழக்கமான ஒன்றுதான். இப்போது மழை வெள்ளப் பாதிப்புகள் ஏற்படாத வகையில் அரசு எடுத்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆளுநரிடம் முதல்வர் பழனிசாமி தெரிவித்து வந்துள்ளார். இதில் எந்த அரசியல் உள்நோக்கமும் இல்லை என்றார்.

மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை வேண்டும்

சென்னை, அக். 6: ஈரான் நாட்டில் கைது செய்யப்பட்டுள்ள தமிழகத்தின் 6 மீனவர்களை மீட்பதற்கு மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமாகா தலைவர் ஜி.கே.வாசன் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை உள்ளிட்ட 3 மாவட்டங்களுக்கு 29 கண்காணிப்பு அலுவலர்கள் நியமனம்

சென்னை, அக். 6: வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை, நிவாரணப் பணிகளுக்காக பெருநகர சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்கள், திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு கண்காணிப்பு அலுவலர்களாக 29 மூத்த ஐஏஎஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகவலை தலைமைச் செயலகத்தில் உள்ளாட்சி உள்ளிட்ட அனைத்து துறை அதிகாரிகளுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின்போது உள்ளாட்சித் துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தெரிவித்தார்.

அதன்படி, பலத்த மழை, வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை, நிவாரணப் பணிகளுக்காக பெருநகர சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களுக்கு 15 மூத்த ஐஏஎஸ் அதிகாரிகள், திருவள்ளூர் மாவட்டத்துக்கு 4 மூத்த ஐஏஎஸ் அதிகாரிகள், காஞ்சிபுரம் மாவட்டத்துக்கு 10 மூத்த ஐஏஎஸ் அதிகாரிகள் என மொத்தம் 29 ஐஏஎஸ் அதிகாரிகள் கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சனிக்கிழமை தங்களுக்குரிய பகுதிகளில் பணிகளைத் தொடங்கினர்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலங்கள் வாரியாக நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்களின் விவரம்:

	கண்காணிப்பு அலுவலர்	செல்லிடப் பேசி எண்	மண்டலம்	மண்டல அலுவலரின் செல்லிடப்பேசி எண்
1	கே.நந்தகுமார்	94999 56201	திருவொற்றியூர்	94451 90001
2	ஆர்.கண்ணன்	94999 56202	மணலி	94451 90002
3	சந்தோஷ் பாபு	94999 56203	மாதவரம்	94451 90003
4	டி.என்.வெங்கடேஷ்	94999 56204	தண்டையார்பேட்டை	94451 90004
5	டாக்டர் பி.உமாநாத்	94999 56205	ராயபுரம்	94451 90005
6	சி.காமராஜ்	94999 56206	திரு.வி.க.நகர்	94451 90006
7	எம்.பாலாஜி	94999 56207	அம்பத்தூர்	94451 90007
8	டாக்டர் ஆர்.ஆனந்தகுமார்	94999 56208	அண்ணா நகர்	94451 90008
9	ஷன்சோங்கம் ஜடக் சிரு	94999 56209	தேனாம்பேட்டை	94451 90009
10	சி.விஜயராஜ் குமார்	94999 56210	கோடம்பாக்கம்	94451 90010
11	ஆர்.சீதாலட்சுமி	94999 56211	வளசரவாக்கம்	94451 90011
12	கிரண் குர்ராலா	94999 56212	ஆலந்தூர்	94451 90012
13	கே.பாலசுப்பிரமணியம்	94999 56213	அடையாறு	94451 90013
14	டாக்டர் ஆர்.நந்தகோபால்	94999 56214	பெருங்குடி	94451 90014
15	டாக்டர் தாரேஸ் அகமது	94999 56215	சோழிங்கநல்லூர்	94451 90015

தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தென்மண்டலத்துக்கு புதிய நீதிபதி

சென்னை, அக். 6: சென்னையில் உள்ள தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தென்மண்டல நீதித் துறை உறுப்பினராக கேரள உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி கே.ராமகிருஷ்ணனை நியமிக்க நியமனக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தென்மண்டலநீதித்துறை உறுப்பினராக இருந்த எம்.எஸ். நம்பியார் கடந்த ஆண்டு ஜூன் 4-ஆம் தேதி ஓய்வு பெற்றார். அதைத் தொடர்ந்து இதுவரை புதிய நீதிபதி நியமிக்கப்படாததால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வழக்குகளின் விசாரணை தேக்கமடைந்தது. இந்தநிலையில் நீதிபதி கே.ராமகிருஷ்ணன் தற்போது நியமிக்கப்பட உள்ளார்.

இவர் தில்லியில் உள்ள தேசியப் பசுமைத் தீர்ப்பாய முதன்மை அமர்வில் இரு மாதங்கள் பணியாற்றவுள்ளதாகத் தெரிகிறது. ராமகிருஷ்ணன் கேரள மாநிலம் கோழிக்கோட்டில் உள்ள அரசு சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்றவர். கேரள உயர்நீதிமன்றத்தில் கடந்த 2013-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கூடுதல் நீதிபதியாகப் பதவியேற்ற கே.ராமகிருஷ்ணன் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் ஓய்வு பெற்றார்.

பொது அறிவிப்பு

சுற்றுச் சூழல் இசைவாணை: 15.09.2018 தேதியிட்ட DEIAA - 5/TVM/TN/F.No.23/கனிமம் / 2018/E.C.No. 315/2017-24 எஸ்.எ.ட்.ப் எண்: 1/2C, 1/2B2B, 1/2D, 1/7, 1/8, 1/9 & 20/3A எலச்சேரி கிராமம், வெம்பாக்கம் தாலுக், TVL. கோல்டன் சாண்ட்ஸ் திருவண்ணாமலை மாவட்டத்தில், கடினமான கல் மற்றும் சரளைக்கல் (சிறு கனிமங்கள் தோண்டி எடுப்பதற்கான ஆணை.

ICAR - CENTRAL INSTITUTE FOR COTTON RESEARCH
REGIONAL STATION, COIMBATORE-3

F. No. ST-II/1-4/18-15/1199 Dated : 06.10.2018

Online e-tenders are invited through the e-procurement portal http://eprocure.gov.in under two bid system from reputed firms towards supply of Environmental Growth Chamber-One no. at ICAR - CICR, Regional Station, Coimbatore. Eligible firms may submit tender / bid online on CPP Portal (www.eprocure.gov.in/eprocure/app) from 06.10.2018 to 29.10.2018 15.00 hrs. Details can be obtained from www.cicr.org.in website.

Project Coordinator and Head

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்
19-ஏ, ருக்குமணி இலட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை - 600 008.

ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை (இருஉறை முறை)
CIN U74999TN1971SGC005967
ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண். என்.ஐ.டி.16/கபி/வஅ/ஒ.எண்.19/2018-19. நாள். 04.10.2018

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 'இருஉறை முறையில்' பின்வரும் பணிகளுக்கு பொதுப்பணித்துறை / குடிநீர் வடிகால் வாரியம் / சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் / நெடுஞ்சாலைத்துறை / தேசிய நெடுஞ்சாலைத்துறை மற்றும் இதர அரசுத் துறைகள் / நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் வகுப்பு I ல் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வழங்குதல். ஒப்பந்தப்புள்ளி பெற்றுக்கொள்ளுதல் மற்றும் திறக்கப்படும் தேதி பற்றிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் இவ்வலுவலகத்தில் பெற கடைசி நாள் 09.11.2018 மாலை 3.00 மணி. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே பிற்பகல் 3.30 மணிக்கு திறக்கப்படும்

பணியின் பெயர்	திட்ட மதிப்பீடு (ரூ.)	முன் வைப்புத் தொகை
காஞ்சிபுரம் மாவட்டம். இருங்காட்டுக் கோட்டை சிப்காட் தொழில் பூங்காவில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளான பக்கவாட்டு கால்வாய்களை தூர்வாரி சாலைகளை மேம்படுத்துதல். வடக்கு நிழற்சாலை சுவருடன் கூடிய நடைபாதை அமைத்தல். தெருவிளக்குகள் மேம்படுத்துதல். சூரிய ஒளி தெருவிளக்குகள். உயர் கோபுர மின்விளக்குகள். பேருந்து நிழற்குடை. பாதுகாவலர்கள் இருப்பு அறை CCTV கேமிரா பொருத்துதல். கடைவளாகம். தொழிலாளர்களுக்கான அலுவலகம் ஆகியன அமைத்தல் மற்றும் திட்ட அலுவலகம். மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி. மகளிர் தங்கும் விடுதி. செம்பரம்பாக்கம் தலைமை நீர் ஏற்று நிலை மின் மோட்டார் இயங்கும் அறை ஆகியவற்றுக்கு சிறப்பு பழுது பார்த்தல்.	ரூ.23.12.77.950/-	ரூ.23.13.000/- கேட்பு வரைவோலையாக சிப்காட், சென்னை-8

ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்ட இணையதளம் மூலமாக 08.11.2018. மாலை 5 மணிக்குள் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணையதள முகவரி www.tenders.tn.gov.in மற்றும் www.sipcot.com

கை.மு.தொ.இ/ 4112 /ஒப்பந்தப்புள்ளி/2018

மேலாண்மை இயக்குநர்

லக்ஷ்மி விலாஸ் வங்கி
வேளச்சேரி கிளை, சென்னை - 600 073. Ph : 22781007

தங்க நகை ஏல அறிவிப்பு

எங்கள் வங்கியில் நகைகளை பெற்றுள்ள கீழ்கண்ட நபர் கடன் தொகை தவணை கட்டத் தவறியதாலும், கடன் தொகையினை வட்டியுடன் திருப்பி செலுத்த கோரியதன் பேரில் அதன் மூலம் அனுப்பியும் நகைகளை மீட்கவில்லை எனவே அவரிடம் அனுமதிக்கப்பட்ட அசலை பெறாத நகைகளை கைதுபடுத்தி இந்த விளம்பர அறிவிப்பு மூலம் ஏல மற்றும் இதர செலவுகளையும் சேர்த்து 20.10.2018 தேதியன்று 2.00 மணிக்குள் செலுத்தி நகைகளை பெற்றுக்கொள்ள கோரப்படுகிறது.

தவறினால் கடனுக்கு எதிராக வைக்கப்பட்டுள்ள நகைகளை கடன் பெற்றவர்கள் செலவிலேயே 20.10.2018 தேதியன்று 3.00 மணிக்குமேல் வங்கி அலுவலகத்தில் வைத்து மேலாண் அலுவலர் மேற்பார்வையில் பகிரங்க ஏலம் விடப்படும் அல்லது நிர்வாகத்தின் சௌகரியம் போல் மறு அறிவிப்பு ஏதுமின்றி வேறு தேதியில் ஏலம் விடப்படும் என்று இதன் வாயிலாக அறிவிக்கப்படுகிறது. கடனாளர்கள் கிரயத்தொகையை அவரவரு வசதிப்படியாகவும், கடனாளர்கள் வெளியூர் மற்றும் வெளிநாடுகளில் சென்றிருப்பதாலும் அவர்களுக்கும் இவ்வறிவிப்பு செல்லும் மற்றும் அவர்கள் கடிதப்போக்குவரத்தும் ஏலம் விடும் தேதிக்கு முன்னதாக செலுத்த வேண்டிய தொகைக்கு குறைவாக கிரயத்தொகை கடனாளர்கள் மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும். ஏலத்தை மறு அறிவிப்பினால் ஒரே வகையான அல்லது வேறு தேதிக்கு மாற்றி வைக்கவோ அல்லது ரத்து செய்யவோ வங்கிக்கு அதிகாரம் உண்டு.

வ. எண்	கடனாளர் பெயர் மற்றும் விலாசம்	கணக்கு எண்	கடன் தேதி	ஏலம் விடப்பட்ட கிரயம்
1.	V. [illegible] த/பெ. [illegible], 2/226, [illegible] தெரு, [illegible], சென்னை - 600073.	080577100006720	27.03.2017	20.00

மேலாண் அலுவலர்

ICICI BANK

யாருக்கும் துன்பமளிக்காமலும் முடிந்த வரை பிறர் துன்பம் போக்கியும் வாழ்தல் இன்பமான எதிர்காலத்திற்கு வழி

கடமையை செய்யும்போது தவிர மற்ற நேரங்களில் பிறருக்கு துன்பமளித்தல் - பாவம்

பிறர் துன்பம் போக்குதல் - புண்ணியம்

தவறான வழிகளில் வரும் பணம் தவறாமல் துன்பத்தை தரும்

மேலும் விளக்கங்களுக்கு ரூ.10/- விலையுள்ள 144 பக்கமுள்ள எங்கள் புத்தகம் "சிந்திப்போம் சிந்திக்க வைப்போம்" படியுங்கள். ஹேமலதா நினைவு அறக்கட்டளை, 16,ஹரிஹரநாதசுவாமி கோயில் தெரு, தருமபுரி – 636 701. ✆: 04342 – 260366 / 260386, 97905 64199

ஸ்ரீ இராமச்சந்திரா
உயர் கல்வி & ஆராய்ச்சி நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
போரூர், சென்னை - 600 116.

HSSC படிப்புக்கான மாணவர் சேர்க்கை அறிவிப்பு

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட, ஹெல்த்கேர் செக்டார் ஸ்கில் கவுன்சில் (HSSC) தேர்வு நடத்தி சான்றிதழ்கள் வழங்கும், மருத்துவத் துறை சார்ந்த வேலை வாய்ப்புகள் கொண்ட 13 படிப்புப் பிரிவுகளில் சேர விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விவரங்கள் வருமாறு.

தகுதி : 12 ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் : 08.10.2018 இருந்து வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் : 30.10.2018

விண்ணப்ப படிவங்கள் / தகவல்கள் பெற அலுவலகத்தை நேரில் அணுகவும்.
Board No. 044-4592 - 8800, 044-24765512. Extn.:287

வெள்ளிமணி

www.t.me/Tamilpdfworld

ஆன்மிக சிந்தனை

தன்னைவிட மிக்க ஆற்றல் வாய்ந்த பகைவனோடு போர் செய்யக்கூடாது. மேகம் ஒருபொழுதும் காற்றிற்கு எதிர்முக மாகச் செல்வதில்லை என்பதே அதற்கு எடுத்துக்காட்டாகும்.

– சுக்கிர நீதி

எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக் கொண்டாய். ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது.

– சங்கீதம் 91ஃ9, 10

'யாருடைய கையிலேனும் கொழுப்பு வாடை உள்ள நிலையில் உறங்கி, இதனால் ஏதும் தீங்கு ஏற்பட்டால் தன்னைத் தவிர யாரையும் அவர் குறை கூற வேண்டாம்'

– நூல்ஃ திர்மிதி, அபூதாவூத்

இன்றும் நாளையும்

ஞாயிற்றுக்கிழமை
(7-10-2018)
விளம்பி ஆண்டு, புரட்டாசி– 21
பிறை: தேய்பிறை

திதி	: திரயோதசி பகல் 1.11 வரை, பிறகு சதுர்த்தசி.
நட்சத்திரம்	: பூரம் பிற்பகல் 3.14 வரை, பிறகு உத்திரம்.
யோகம்	: சித்த / அமிர்தயோகம்.
ராகுகாலம்	: மாலை 4.30 – 6.00 மணி.
எமகண்டம்	: நண்பகல் 12.00 – 1.30 மணி.
சூலம்	: மேற்கு
நல்ல நேரம்	: காலை 7 – 8 மணி. மாலை 3 – 4 மணி.

இன்றைய விசேஷம்: மாத சிவராத்திரி. திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள் திருக்கோயிலில் குளக்கரை ஆஞ்சநேயருக்குத் திருமஞ்சன சேவை. சூரியனார்கோவில் சூரியநாராயணருக்கு சிறப்பு அபிஷேகம். அருணந்தி சிவாச்சாரியார் குருபூஜை. கீழ்த்திருப்பதி கோவிந்தராஜப் பெருமாள் சந்நிதி எதிரில் அனுமாருக்கு திருமஞ்சன சேவை.

மேஷம்	வரவு
ரிஷபம்	நலம்
மிதுனம்	லாபம்
கடகம்	பரிவு
சிம்மம்	நன்மை
கன்னி	தனம்
துலாம்	அன்பு
விருச்சிகம்	பணிவு
தனுசு	ஆக்கம்
மகரம்	நற்செய்தி
கும்பம்	அமைதி
மீனம்	சாதனை

திங்கள்கிழமை
(8-10-2018)
விளம்பி ஆண்டு, புரட்டாசி– 22.
பிறை: தேய்பிறை

திதி	: சதுர்த்தசி காலை 11.20 வரை, பிறகு அமாவாசை.
நட்சத்திரம்	: உத்திரம் பிற்பகல் 2.11 வரை, பிறகு அஸ்தம்.
யோகம்	: சித்த யோகம்.
ராகுகாலம்	: காலை 7.30 – 9.00 மணி.
எமகண்டம்	: காலை 10.30 – 12.00 மணி.
சூலம்	: கிழக்கு
நல்ல நேரம்	: காலை 6 – 7 மணி. மாலை 3 – 4 மணி.

இன்றைய விசேஷம்: சர்வ மஹாளய அமாவாசை. இன்று சகல புண்ணிய ஸ்தலங்களிலும் பிதுர் கடன் இயற்றுதல் நன்று. திருக்கண்ணபுரம் சௌரிராஜப் பெருமாள் விபீஷணாழ்வாருக்கு நடையழகு சேவை காண்பித்தருளல். ஏரல் அருணாசல சுவாமிகள் திருவிழா. சங்கரன்கோவில் கோமதியம்மன் புஷ்பப் பாவாடை தரிசனம்.

மேஷம்	லாபம்
ரிஷபம்	நலம்
மிதுனம்	நிறைவு
கடகம்	தனம்
சிம்மம்	ஆர்வம்
கன்னி	ஊக்கம்
துலாம்	போட்டி
விருச்சிகம்	விருத்தி
தனுசு	வரவு
மகரம்	கவனம்
கும்பம்	முயற்சி
மீனம்	மகிழ்ச்சி

பட்டமளிப்பு விழா...

சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள மீனாட்சி சுந்தரராஜன் பொறியியல் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற 13–ஆவது பட்டமளிப்பு விழாவில் மாணவிக்கு பட்டம் வழங்கிய அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் எம்.கே.சூரப்பா. உடன் கல்லூரியின் தாளாளர் கே.எஸ். பாபாய், தொழிலதிபர் நல்லி குப்புசாமி, ஹூண்டாய் மோட்டார்ஸ் தலைமை அதிகாரி பி.சி.தத்தா.

உயிர் பறிக்கும் நோய்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை தேவை

முன்னாள் துணைவேந்தர் மேஜர் டி.ராஜா

குரோம்பேட்டை ஸ்ரீபாலாஜி மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாணவிக்கு பட்டம் வழங்குகிறார் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் மேஜர் டி.ராஜா. உடன் (இடமிருந்து) கல்வி ஆலோசகர் வீரபாகு, கல்லூரி முதல்வர் டி.ஆர்.குணசேகரன், பாரத் பல்கலைக் கழக துணைவேந்தர் டாக்டர் வி.கனகசபை, பதிவாளர் பூமிநாதன்.

தாம்பரம், அக். 5: நாட்டில் மலேரியா, காலரா உள்ளிட்ட தொற்று நோயால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கையைக் காட்டிலும், இருதய நோய், புற்றுநோய், சிறுநீரக நோய் ஆகிய உயிர் பறிக்கும் நோய்களால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எம்.ஜி.ஆர்.மருத்துவப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மேஜர் டாக்டர் டி.ராஜா கேட்டுக்கொண்டார்.

சென்னை குரோம்பேட்டை ஸ்ரீபாலாஜி மருத்துவக் கல்லூரியில் வியாழக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் அவர் மேலும் பேசியது:

கடந்த 40 ஆண்டுகளில் மருத்துவத் துறையில் வியக்கத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நோய் பாதிப்புகளைத் துல்லியமாகக் கண்டறிவது, உரிய மருத்துவச் சிகிச்சை மேற்கொள்வது, வளர்ந்த நாடுகளுக்கு இணையான நவீன மருத்துவச் சேவை அளிப்பது ஆகியன இந்திய மருத்துவர்களின் அறிவாற்றலை வெளிப்படுத்துகின்றன.

தொற்றுநோய்களால் ஏற்படும் பாதிப்பை ஒப்பிடும்போது, தவறான உணவுப் பழக்கம், வாழ்க்கை முறை காரணமாக இதயநோய், புற்றுநோய், காசநோய், சிறுநீரகம், கல்லீரல், நுரையீரல் உள்ளிட்ட உயிரைப் பறிக்கும் நோய்களால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றன.

கடந்த 30 ஆண்டுகளில் அமெரிக்காவில் இதயநோயால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 41 சதவீதமாகக் குறைந்துள்ள நிலையில், இந்தியாவில் 34 சதவீதமாக அதிகரித்துள்ளது. மாரடைப்பால் உயிரிழப்போர் எண்ணிக்கை ஆண்டுக்கு 3 கோடியாக உயர்ந்துள்ளது. சர்க்கரை நோயாளிகளின் எண்ணிக்கை 6.5 கோடியாகவும், புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு 11 லட்சமாகவும் அதிகரிக்கிறது.

நோயாளிகளுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள், வரும்முன்காக்கும்வகையில்உடல்நலன் குறித்த விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் உருவாக்க வேண்டும். மருத்துவத் துறை சார்ந்த அறிவாற்றலை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். பணம் சம்பாதிப்பதை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளாமல், மருத்துவத் தொழிலின் பெருமையைக் காக்கும் வகையில் உண்மையோடும், நேர்மையோடும் திகழ வேண்டும் என்றார் மேஜர் டி.ராஜா.

விழாவில் 91 மாணவர்களுக்கு முதுநிலை பட்டங்களும், 53 மாணவர்களுக்கு இளநிலைப் பட்டங்களும் வழங்கப்பட்டன. பாரத் பல்கலைக்கழக துணைவேந்தர் வி.கனகசபை, பதிவாளர் பூமிநாதன், ஸ்ரீபாலாஜி மருத்துவக் கல்லூரி முதல்வர் டி.ஆர்.குணசேகரன், துணை முதல்வர் சாய்குமார், கல்வி ஆலோசகர் வீரபாகு, மருத்துவக் கண்காணிப்பாளர் ஸ்ரீதர்நாராயணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மலைப்பகுதி ஐடிஐ மாணவர்களுக்கு இணையவழி வகுப்பறைகள்

சென்னை, அக். 6: தமிழகத்தில் மலைப் பகுதி, கிராமப்புறங்களில் அமைந்துள்ள அரசு ஐ.டி.ஐ.க்களில் தொழிற்பயிற்சி வழங்குவதற்காக மெய்நிகர் வகுப்பறைகளை (virtual class room) தொழிலாளர் நலத் துறை அமைச்சர் நிலோபர் கபில் தொடங்கி வைத்தார்.

தமிழக அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட 287 பேருக்கு பணி நியமன ஆணை வழங்குதல், தொழில்நெறி வழிகாட்டி கையேடு வெளியீடு, கிராமப்பகுதிகள், மலைப் பகுதிகளில் அமைந்துள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழில்பயிற்சி வழங்குவதற்காக மெய்நிகர் வகுப்பறைகள் தொடக்கம், இணைதளம் மூலம் தொழிற்பயிற்சி சான்றிதழ் சரிபார்க்கும் திட்டம் தொடக்கம், அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய 26 மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்கள் தொடக்கம் ஆகிய நிகழ்ச்சிகள் சென்னையில் நடைபெற்றன.

இவற்றை அமைச்சர் நிலோபர் கபில் தொடங்கி வைத்து வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு பெற்றவர்களுக்கு பணி ஆணைகளை வழங்கிப் பேசியது:

நகர்ப்புறங்களில் செயல்படும் தொழிற்பயிற்சி நிலையங்களில் வழங்கப்படும் பயிற்சிக்கு இணையாக மலைப்பகுதி, கிராமப்புறங்களில் அமைந்துள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்களுக்கும் தொழிற்பயிற்சி வழங்க கோயம்புத்தூர், திருச்சி அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை மைய பயிற்சி நிலையங்களாகவும், ஆனைக்கட்டி, கூடலூர், கருமந்துறை, கொல்லிமலை, ஜமுனாமரத்தூர், சங்கராபுரம் ஆகிய ஆறு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை துணைப் பயிற்சி நிலையங்களாகவும் கொண்டு மெய்நிகர் வகுப்பறைத் திட்டம் ரூ.80 லட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஐடிஐ–களில்பயிலும்மாணவர்கள், அரசு, தனியார் நிறுவனங்களில்பணி அமர்த்தப்படும்போது அவர்களது சான்றிதழ்களின் உண்மைத் தன்மை, சரிபார்ப்பு பணிகளை இணையதளம் மூலம் மேற்கொள்ளும் திட்டம் ரூ. 40 லட்சம் செலவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் சம்பந்தப்பட்ட பணியாளர்களின் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை சரிபார்க்கப்பட்டு வேலையளிப்போருக்கு ஒரே நாளில் வழங்கப்படும்.

40 ஐ.டி.ஐ.க்களுக்கு 3 நட்சத்திர அந்தஸ்து: மத்திய அரசின் சார்பில் தமிழகத்தில் உள்ள 87 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் தர ஆய்வு நடத்தப்பட்டது. அதில் 40 தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு 3 நட்சத்திர அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில் தொழிலாளர், வேலைவாய்ப்புத் துறை முதன்மைச் செயலாளர் சுனில் பாலீவால், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் பா.ஜோதி நிர்மலாசாமி, இணை இயக்குநர்கள் விஜயகுமார், ராஜசேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பணத் தகராறில் இளைஞர் கடத்தல்: உதவி ஆய்வாளர் கணவர் உள்பட இருவர் கைது

சென்னை,அக்.6: சென்னையில் பணத்தகராறில் இளைஞர் கடத்தப்பட்ட வழக்கில், பெண் உதவி காவல் ஆய்வாளரின் கணவர் உள்பட இருவர் கைது செய்யப்பட்டனர்.

இது குறித்து காவல்துறை தரப்பில் கூறப்பட்டதாவது:

ஆதம்பாக்கம் வி.வி.காலனியைச் சேர்ந்தவர் விஜயராமன் (20). இவர் அந்தப் பகுதியில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். விஜயராமன், கடந்த ஆண்டு ஜனவரி மாதம் புழுதிவாக்கத்தைச் சேர்ந்த அஞ்சலக ஊழியர் சஞ்சீவி நேத்தாவிடம் (21), ரூ.1.50 லட்சம் வாங்கினார். இந்த பணத்தை விஜயராமன், சஞ்சீவிடம் திருப்பி.ளிக்காமல் இழுத்தடித்தாராம். இதனால் கோபமடைந்த சஞ்சீவி, இந்த விவகாரத்தை தனது தந்தை கலைமோகனிடம் (47) தெரிவித்தாராம். இந்நிலையில் சைதாப்பேட்டை பனகல் மாளிகை அருகே கடந்த 3–ஆம் தேதி விஜயராமனை சஞ்சீவி, கலைமோகன் உள்ளிட்ட சிலர் காரில் கடத்திச் சென்றனர். பின்னர் திண்டிவனம் அருகே வைத்து விஜயராமனிடம், வெள்ளைத் தாளில் கையெழுத்து வாங்கிவிட்டு, கிண்டியில் கொண்டு வந்து விட்டனராம்.

இதுகுறித்து விஜயராமன், சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் செய்தார். அந்த புகாரின் அடிப்படையில் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, தலைமறைவாக இருந்த கலைமோகன், சஞ்சீவி ஆகிய இருவரையும் வெள்ளிக்கிழமை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட கலைமோகனின் முதல் மனைவி சென்னை காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறார்.

வாராக் கடனை குறைக்க இலக்கு

தேனா வங்கி மேலாண் இயக்குநர்

சென்னை, அக். 6: தேனா வங்கி வாராக் கடனை வரும் மார்ச் மாதத்துக்குள் 22 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாகக் குறைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அந்த வங்கியின் மேலாண் இயக்குநர் கர்ணம் சேகர் தெரிவித்தார்.

சென்னை தியாகராய நகரில் செய்தியாளர்களிடம் அவர் சனிக்கிழமை கூறியது:

2018–19–ஆம் நிதியாண்டில் உடனடியாக பெரிய லாபத்தை பார்க்காமல் இருக்கலாம். இருப்பினும், சில ஆண்டுகளுக்கு பிறகு லாபம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வாராக் கடனும் திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேனா வங்கியின் வாராக் கடன் 22 சதவீதமாக உள்ளதை வரும் மார்ச் மாதத்துக்குள் 15 சதவீதமாக குறைக்க இலக்கு நிர்ணையிக்கப்பட்டுள்ளது. அதன்படி ரூ.16,000 கோடி வாராக் கடனை ரூ.10,000 கோடியாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதுதவிர, நடப்புக் கணக்கு, சேமிப்புக் கணக்கு ஆகியவற்றை மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். வரும் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் வங்கிக்கு லாபம் ஈட்டுவதற்கான திட்டங்களைச் செயல்படுத்தவுள்ளோம். தேனா வங்கி, விஜயா வங்கி, பரோடா வங்கி ஆகிய மூன்று வங்கிகள் இணைப்பு நடவடிக்கையைப் பொருத்தவரை, 3 காலாண்டுகள் காலம் தேவை என்றார் அவர்.

நாட்டில் இரண்டாவது பெரிய கடன் கொடுக்கும் வங்கியை உருவாக்கும் வகையில், தேனா வங்கி, விஜயா வங்கி, பரோடா வங்கி ஆகியவற்றை இணைக்க மத்திய அரசு கடந்த மாதம் ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நகர்வு பொதுத் துறை வங்கிகளின் ஒருங்கிணைப்புக்குத் தயார் நடவடிக்கையாகப் பார்க்கப்படுகிறது.

இரண்டு மாத ஆண் குழந்தை கடத்தல்

சென்னை, அக். 6: சென்னை, வேளச்சேரியில் இரண்டு மாத ஆண் குழந்தை கடத்தப்பட்டது குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து காவல்துறை தரப்பில் கூறப்பட்டதாவது:

வேளச்சேரி திரௌபதி அம்மன் கோயில் தெருவை சேர்ந்தவர் விட்டண்ணா (32). இவர் அந்தப் பகுதியில் உள்ள ஒரு கால் சென்டரில் ஊழியராக வேலை செய்து வருகிறார். விட்டண்ணாவின் மனைவி மனைவி உமா. இத்தம்பதிக்கு சாராவிக் என்னும் இரண்டு மாத ஆண் குழந்தை உள்ளது.

விட்டண்ணா தனது பெற்றோருடன் அங்கு வசித்து வருகிறார். இந்நிலையில் வேளச்சேரி பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு பலத்த மழை பெய்ததால், மின்வெட்டு ஏற்பட்டது. இதனால் காற்றுக்காக விட்டண்ணா, வீட்டின் கதவை திறந்து வைத்து தூங்கினார்.

இதற்கிடையே, சனிக்கிழமை காலை தம்பதியினர் தூக்கத்தில் இருந்து எழுந்து பார்த்தபோது, குழந்தை காணாமல் போயிருப்பதை பார்த்து அதிர்ச்சியடைந்தனர்.

இதையடுத்து விட்டண்ணா குடும்பத்தினர், அந்தப் பகுதி முழுவதும் தேடி பார்த்தனர். ஆனால் குழந்தை எங்கேயும் கிடைக்கவில்லை. இதையடுத்து விட்டண்ணா,வேளச்சேரி காவல் நிலையத்தில் புகார் செய்தார்.

அந்த புகாரின் அடிப்படையில் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, விசாரணையை தொடங்கினர். முதல் கட்டமாக, அந்தப் பகுதியில் இருந்த தனியார் கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகளை போலீஸார் ஆய்வு செய்தனர்.

இதில் ஒரு கண்காணிப்பு கேமராவில், நைட்டி அணிந்த ஒரு பெண் குழந்தையை கடத்திச் செல்லும் காட்சி பதிவாகியிருப்பது தெரியவந்தது.

இதையடுத்து போலீஸார், அந்த காட்சியை கைப்பற்றி அந்தப் பெண்ணை தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

எம்ஜிஆர் இல்லத்தில் பனை விதைகள் விதைப்பு

சென்னை, அக். 6: ராமாபுரத்தில் உள்ள எம்ஜிஆர் இல்லத் தோட்டத்தில் பனை விதைகளை விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் விதைத்தார்.

தொல்.திருமாவளவன் தனது பிறந்த நாளையொட்டி தமிழகம் முழுவதும் பனை விதைகளை ஊன்ற வேண்டும் என்று கட்சியினருக்கு அறிவுறுத்தியுள்ளார். அடுத்த ஆண்டு ஆகஸ்ட் 17–ஆம் தேதிக்குள் ஒரு கோடி பனை விதைகளை ஊன்ற வேண்டும் திட்டமிட்டு செயல்பட்டு வருகிறார். இந்த நிலையில், ராமாபுரத்தில் உள்ள எம்ஜிஆர் இல்லத் தோட்டத்தில் தொல்.திருமாவளவன் வெள்ளிக்கிழமை 56 பனை விதைகளை ஊன்றினார். மேலும், எம்ஜிஆர் கண்பார்வையற்றோர் மற்றும் காது கேளாதோர் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு நல உதவிகளை திருமாவளவன் வழங்கினார்.

எண்ணூரில் நாளை மின்தடை

சென்னை, அக்.6: பராமரிப்புப் பணிகள் காரணமாக எண்ணூர் பகுதியில் திங்கள்கிழமை (அக். 8) காலை 9 முதல் மாலை 4 மணி வரை மின் விநியோகம் நிறுத்தப்படவுள்ளதாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தெரிவித்துள்ளது.

மின்தடை ஏற்படும் பகுதிகள்:

எண்ணூர்ஃ எண்ணூர், கத்திவாக்கம், எர்ணாவூர், எம்.ஆர்.எஃப், ஐடிசி, அசோக் லேலண்ட், ஐசிஐ பிரமல் லிமிடெட், இந்துஜா ஃபவுண்ட்ரி, இஐடி பாரி.

சிட்லப்பாக்கத்தில் மழைநீர் வடிகால் பணி ஆய்வு

சிட்லப்பாக்கத்தில் நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால் பணிகளை பார்வையிடுகிறார் தாம்பரம் கோட்ட கண்காணிப்பு அலுவலர் சி.முனியநாதன். உடன் மாவட்ட பேரூராட்சி உதவி செயற்பொறியாளர் பி.மனோகரன், செயல் அலுவலர் எம்.வெங்கடேசன் உள்ளிட்டோர்.

தாம்பரம், அக். 6: சென்னை குரோம்பேட்டையை அடுத்த சிட்லப்பாக்கத்தில் ரூ. 5.45 கோடி செலவில் நடைபெறும் மழைநீர் வடிகால் பணிகளை தாம்பரம் கோட்ட கண்காணிப்பு அலுவலர் சி.முனியநாதன் சனிக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

கடந்த மழை வெள்ளத்தின் போது கிழக்குத் தாம்பரம் சேலையூர் ஏரி நிரம்பி வெளியேறிய வெள்ளநீர் சிட்லப்பாக்கம் பேரூராட்சி பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான வீடுகளுக்குள் புகுந்தது. சாலைகளில் முழங்கால் அளவுக்கு வெள்ளம் கரைபுரண்டோடியது. வெள்ளநீர் வெளியேற போதிய வடிகால் கால்வாய்கள் இல்லாத நிலையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி நேரில் பார்வையிட்டார். அப்போது சிட்லப்பாக்கத்தில் மழைநீர் வடிகால் கால்வாய்களை அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அதன்படி ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முதல்கட்டமாக சிட்லப்பாக்கம் ரமணர் தெரு வழியாக பாபு தெரு வரை ரூ.5.45 கோடி மதிப்பீட்டில் 690 மீட்டர் மேல் மூடியுடன் கூடிய 690 மீட்டர் நீளமுள்ள மழைநீர் வடிகால் கால்வாயும், இரண்டாம் கட்டமாக பாபு தெரு வழியாக பாலாஜி அவென்யூ, செம்பாக்கம் ஏரி வரை ரூ.12 கோடி மதிப்பீட்டில் 2 ஆயிரம் மீட்டர் நீளமுள்ள மழைநீர் வடிகால் கால்வாய் அமைக்கவும் திட்டமிடப்பட்டு அப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்நிலையில், சிட்லப்பாக்கத்தில் நடைபெற்றுவரும் முதல்கட்ட மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளை கண்காணிப்பு அலுவலர் சி.முனியநாதன் சனிக்கிழமை அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்டார்.

மாவட்ட பேரூராட்சி உதவி செயற்பொறியாளர் பி.மனோகரன் மழைநீர் வடிகால் கால்வாய் பணி குறித்து மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் பற்றி அவரிடம் விவரித்தார். கண்காணிப்பு அலுவலர் திட்டமிட்டபடி குறித்த காலத்துக்குள் இப்பணியை விரைந்து நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். சிட்லப்பாக்கம் செயல் அலுவலர் எம்.வெங்கடேசன் உடன் இருந்தார்.

இன்றைய நிகழ்ச்சிகள்

பொது

எத்திராஜ் மகளிர் கல்லூரி பட்டமளிப்பு விழாஃ சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பி.துரைசாமி பங்கேற்பு, கல்லூரி வளாகம், எழும்பூர், காலை 10.

சைதாப்பேட்டை மகாத்மா காந்தி நூல் நிலையம்– 66–ஆவது ஆண்டு நூலக விழா, சக்தி டி.கே.கிருஷ்ணசாமி விருது வழங்கும் விழா, மாணவர்களுக்குப் பரிசளிப்பு விழாஃ மனிதநேய அறக்கட்டளைத் தலைவர் சைதை சா.துரைசாமி, பதிப்பாளர் காந்தி கண்ணதாசன், எழுத்தாளர் சுபா பங்கேற்பு, சைதாப்பேட்டை மகாத்மா காந்தி நூல் நிலையம், சைதாப்பேட்டை தேரடி அருகில், மாலை 6.

ஸ்ரீ வி.நாராயண ஐயர் நினைவு அறக்கட்டளை– 'வாசஸ்பதி', 'வாழ்நாள் சாதனையாளர்' உள்பட பல்வேறு விருதுகள் வழங்கும் விழாஃ ஸ்ரீ ஹரி ராமகிருஷ்ண சாஸ்திரி, கே.எஸ்.ரகுநாதன், பி.எஸ். நாராயண சுவாமி, சி.எஸ். ராமகிருஷ்ணன், எஸ்.வி.ஜெயராம், நாராயண விஸ்வநாத் பங்கேற்பு, வாணி மகால், ஜி.என். செட்டி சாலை, தியாகராயநகர், மாலை 4.

மருத்துவர் வி.எஸ். நடராஜன் முதியோர் நல அறக்கட்டளை, காவேரி மருத்துவமனை ஆகியவை சார்பில் உலக முதியோர் தின விழாஃ முன்னாள் உள்துறை செயலாளர் ஜெ.ஏ. கல்யாண கிருஷ்ணன், தொழிலதிபர் நல்லி குப்புசாமி, மருத்துவர்கள் வி.எஸ். நடராஜன், அரவிந்தன் செல்வராஜ், ஆர்.எஸ். அரிஹரன், எழுத்தாளர் ஏர்வாடி எஸ்.ராதாகிருஷ்ணன் பங்கேற்பு, சிவகாமி பெத்தாச்சி அரங்கம், எம்.சி.டி.எம். பள்ளி வளாகம், லஸ் தேவாலய சாலை, மயிலாப்பூர், மாலை 4.

ஆழ்வார்பேட்டை வட்டார நூலகம், வாசகசாலை சார்பில் எழுத்தாளர் அசோகமித்திரன் குறித்து 'கதை வழிப் பயணம்' என்ற தலைப்பில் சொற்பொழிவுஃ ஆர்.பி. ராஜநாயகம் பங்கேற்பு, ஆழ்வார்பேட்டை வட்டார நூலகம், எஸ்ஐஇடி கல்லூரி அருகில், காலை 10.30.

சென்னை ரோட்டரி சங்கம்– சாலை விழிப்புணர்வு குறித்த மிதிவண்டி பேரணி தொடக்கம்ஃ நடிகர் சரத்குமார், டி.நாராயணன், விமல்குமார் பங்கேற்பு, லீலா பேலஸ் ஹோட்டல் அருகில், எம்.ஆர்.சி. நகர், ராஜா அண்ணாமலைபுரம், காலை 6.

கன்னிமாரா நூலக வாசகர் வட்டம்– பிருந்தாசாரதி எழுதிய எண்ணும் எழுத்தும் கவிதை நூல் திறனாய்வுக் கூட்டம்ஃ 'இனிய உதயம்' இணை ஆசிரியர் ஆரூர் தமிழ்நாடன், கவிஞர் இந்திரன், எழுத்தாளர் பாரதி பாலன், முனைவர் இராம.குருநாதன், ஆவணப்பட இயக்குநர் ரவி. சுப்பிரமணியன், சித்ரா பாலசுப்பிரமணியன், பிருந்தா சாரதி, மு.வேடியப்பன் பங்கேற்பு, கன்னிமாரா நூலகம், பாந்தியன் சாலை, எழும்பூர், காலை 10.30.

சென்னை மாநகராட்சி, ஐ.சி.டபிள்யு.ஓ அமைப்பு, அரிமா இன்டர்நேஷனல் ஆகியவை சார்பில் வீடில்லாத மக்களுக்கான மேம்படுத்தப்பட்ட உணவருந்தும் கூடம் திறப்பு விழாஃ ஏ.குலாம் ஹுசைன், எம்.செல்வகுமார், பிரபு பங்கேற்பு, சென்னை மாநகராட்சியின் வீடில்லாத மக்களுக்கான தங்குமிடம், தட்டாங்குளம், சூளை, காலை 10.

அடையாறு திருக்குறள் சங்கம், அடையாறு ஆனந்த பவன் ஆகியவை சார்பில் 228–ஆவது திருக்குறள் அரங்கம்ஃ முன்னாள் துணைவேந்தர் இ.சுந்தரமூர்த்தி, சர்வோதயா ராமலிங்கம், சொ.பத்மநாபன், மா.சு. சந்திரசேகரன் பங்கேற்பு, சென்னை உயர்நிலைப்பள்ளி, காமராஜர் நிழற்சாலை, அடையாறு, காலை 10.

'அளவளாவல்' என்ற தலைப்பில் மறக்க முடியாத பழைய பாடல்கள் குறித்த நிகழ்ச்சிஃ ஏ.ஏ. ஹெச். கே. கோரி பங்கேற்பு, குவிகம் இல்லம், சில்வர் பார்க் அப்பார்மென்ட்ஸ், தணிகாசலம் சாலை, தியாகராயநகர், மாலை 4.

'தைரியமாக இருங்கள்' தலைப்பில் யெகோவாவின் சாட்சிகளின் மண்டல மாநாடுஃ காமராஜர் அரங்கம், தேனாம்பேட்டை, காலை 9.20.

இலக்கிய வட்டம்– முனைவர் பட்டம் பெற்ற கவிஞர் ஆ.இரா. பாரதராஜாவுக்கு பாராட்டு விழா, 454–ஆவது சிறப்புக் கூட்டம்ஃ 'முகம்' மாமணி, மெய். ரூஸ்வெல்ட், கோ.பெரியண்ணன், இராம.குருநாதன், அரங்க. ராமலிங்கம், இதயகீதம் இராமானுஜம், ஆ.இரா. பாரதராஜா பங்கேற்பு, அரசு மேல்நிலைப்பள்ளி, எம்.ஜி.ஆர். நகர், காலை 10.30.

ஆதம்பாக்கம் ஸப்தஸ்வராலயா அறக்கட்டளை– வி.வெங்கட நாகராஜன் குழுவினரின் இசை நிகழ்ச்சிஃ ஸ்ரீ கற்பக விநாயகர் பாண்டுரங்கன் ஆலய வளாகம், சாந்திநகர், ஆதம்பாக்கம், மாலை 6.30.

ஆன்மிகம்

ராமகிருஷ்ணா மிஷன் ஆஸ்ரமம்– பகவத்கீதை குறித்த சொற்பொழிவுஃ சுவாமி சத்யபிரபானந்தா பங்கேற்பு, விவேகானந்தா அரங்கம், ராமகிருஷ்ணா மிஷன் ஆஸ்ரமம், எம்.எஸ். சாலை, தியாகராய நகர், மாலை 5.30.

திருவாசக முற்றோதல் குழு– 70–ஆவது திருவாசக முற்றோதல் விழாஃ நிர்மலா ரவி, அ.தேசிகன் பங்கேற்பு, ஸ்ரீ சக்தி விநாயகர் ஆலயம், சத்தியமூர்த்தி பிளாக், ஜாஃபர்கான் பேட்டை, காலை 8.30.

ஸ்ரீ சிவன் சார் ஜெயந்தி மஹோத்சவம்– சங்கீத சிவ சங்கரம்ஃ இன்ஃபோசிஸ் அரங்கம், ராமகிருஷ்ணா பள்ளி, தியாகராயநகர், மாலை 6.

வாசகர்கள் கவனத்துக்கு...
உங்கள் பகுதி நிகழ்ச்சிகள் இடம்பெற வேண்டுமா?
இமெயில்ஃ dinreporter@gmail.com
presphoto@gmail.com
ஃபேக்ஸ்ஃ 044-23457620, 23457619

www.t.me/Tamilpdfworld

பிளஸ் 1 துணைத் தேர்வு: அக். 9-இல் மறுமதிப்பீடு முடிவு

சென்னை, அக். 6: பிளஸ் 1 துணைத் தேர்வு மறுமதிப்பீடு முடிவு செவ்வாய்க்கிழமை வெளியாகிறது.

இது குறித்து அரசு தேர்வுத் துறை இயக்குநர் தண்.வசுந்தராதேவி சனிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:-

கடந்த ஜூன் மாதம் பிளஸ் 1 துணைத் தேர்வு எழுதியவர்களுக்கு மறுமதிப்பீடு, மறுகூட்டல் முடிவு அக். 9-இல் வெளியாகிறது.

மதிப்பெண் மாறியவர்களின் பதிவு எண் பட்டியல் scan.tndge.in என்ற இணையதளத்தில் வெளியிடப்படும்.

பதிவு எண் இல்லாதவர்களுக்கு மதிப்பெண் மாற்றம் இல்லை எனக் கருத வேண்டும்.

திருத்தப்பட்ட மதிப்பெண்களை www.dge.tn.nic.in என்ற இணையதளத்தில் இருந்து மதியம் 2 மணி முதல் பதிவிறக்கம் செய்யலாம்.

துறைமுகம் – மதுரவாயல் உயர்மட்ட மேம்பாலத் திட்டப் பணி சிக்கல்கள்

மத்திய அமைச்சர் ஆலோசனை

திருவொற்றியூர், அக். 6: சென்னைத் துறைமுகம் - மதுரவாயல் திட்டப் பணிகள் விரைவில் தொடங்கும் என அறிவிக்கப்பட்ட நிலையில் இத்திட்டத்தில் உள்ள சிக்கல்களுக்கு தீர்வு காணும் வகையில் சிறப்பு ஆய்வுக் கூட்டம் கப்பல் போக்குவரத்து, நிதித் துறை இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் தலைமையில் சிறப்பு ஆய்வுக் கூட்டம் வெள்ளிக்கிழமை சென்னையில் நடைபெற்றது.

சென்னைத் துறைமுகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கப்பல் போக்குவரத்து அமைச்சக இணைச் செயலர் (துறைமுகங்கள்), சென்னைத் துறைமுகத் தலைவர், தேசிய நெடுஞ்சாலைத் துறை துணை தலைமைப் பொறியாளர், கடற்படை முதன்மை அதிகாரி, திட்ட ஆலோசகர்கள், தமிழக நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் மற்றும் திட்டம் சார்ந்த பிற துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

இதில் தேசிய நெடுஞ்சாலை ஆணைய அதிகாரிகள் திட்ட வரைபடம், சாலையின் அமைப்பு, சென்னைத் துறைமுகத்தின் அமைப்பு உள்ளிட்டவைகள் குறித்து விளக்கம் அளித்தனர்.

மதுரவாயல் உயர்மட்ட மேம்பாலத் திட்டத்தை விரைந்து செயல்படுத்துவது குறித்து மத்திய இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் தலைமையில் சென்னையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டம்

இத்திட்டத்தில் நிலம் கையகப்படுத்துதல் மற்றும் சீரமைப்பு உள்ளிட்டவைகளை சேர்த்து திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.2,700 கோடி ஆகும்.

இத்திட்டத்திற்கான மாற்றியமைக்கப்பட்ட வரைவு திட்ட அறிக்கையை வரும் அக்.10-ஆம் தேதிக்குள் அளிக்க ஆணைய அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர்.

புதிய திருத்திய வழிகாட்டுதலின்படி திட்ட குறுக்கு பிரிவு 20 மீட்டரில் இருந்து 29 மீட்டராக மேம்படுத்தப்பட்டுள்ளது.

முந்தைய திட்டத்தின்படி நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மறுவாழ்வு மற்றும் புனரமைப்புக்கான மொத்த மதிப்பீடு ரூ.470 கோடியில் சென்னைத் துறைமுகம் 50 சதவீதமும், தமிழக அரசு 50 சதவீதமும் ஏற்பதாக உறுதி அளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தில் இதற்கான செலவு அதிகரித்தால் அதனை மாநில அரசே ஏற்க வேண்டும் என கூட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டது.

வெளிநாட்டுக்கு கடத்த முயன்ற 584 நட்சத்திர ஆமைகள் பறிமுதல்

சென்னை, அக். 6: சென்னையில் இருந்து வெளிநாட்டுக்கு கடத்த முயன்ற 584 அரிய வகை நட்சத்திர ஆமைகளை பறிமுதல் செய்து, இருவரை வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் கைது செய்தனர்.

இதுகுறித்த விவரம்:

சென்னை திருல்லிக்கேணியில் ஒரு தனியார் தங்கும் விடுதியில் அரிய வகை நட்சத்திர ஆமைகளுடன் சில மர்ம நபர்கள் தங்கியிருப்பதாக வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு சனிக்கிழமை ரகசியத் தகவல் கிடைத்தது. அந்தத் தகவலின் அடிப்படையில் வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள், சம்பந்தப்பட்ட விடுதிக்கு சென்று சோதனை நடத்தினர். இதில் சந்தேகத்துக்குரிய வகையில் இருவரை பிடித்து அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில் அவர்கள், முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியதால், அவர்களது அறையை அதிகாரிகள் சோதனையிட்டனர். இச்சோதனையில், அந்த அறையில் இருந்த 6 பைகளில் 584 அரிய வகை இந்திய நட்சத்திர ஆமைகள் வைக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து அந்த நபர்களிடம் அதிகாரிகள் விசாரணை செய்தனர்.

சென்னையில் வருவாய் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்ட அரிய வகை நட்சத்திர ஆமைகள்.

விசாரணையில், அவை ஆந்திர மாநிலத்தின் தெற்கு பகுதியில் இருந்து சென்னைக்கு கடத்தி வரப்பட்டிருப்பதும், அடுத்து தென் தமிழக கடல் வழியாக வெளிநாட்டுக்கு கடத்த திட்டமிட்டிருப்பதும் தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள், அவர்கள் இருவரையும் கைது செய்தனர். இக்கடத்தலில் வேறு யாருக்கெல்லாம் தொடர்பு இருக்கிறது என போலீஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஸ்மார்ட் வகுப்பு உள்ளிட்ட திட்டங்கள்: அமைச்சர் செங்கோட்டையன் 12-இல் தில்லி பயணம்

சென்னை, அக். 6: ஸ்மார்ட் வகுப்பு உள்ளிட்ட திட்டங்களுக்கான நிதியை வழங்கக் கோருவதற்காக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் வரும் 12-ஆம் தேதி தில்லி செல்கிறார்.

தில்லியில் மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர் மற்றும் மத்திய அரசுத் துறை அதிகாரிகளைச் சந்தித்து மத்திய அரசின் உதவியுடன் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பள்ளிக் கல்வித் திட்டங்களுக்கு போதிய நிதியை வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து பேச உள்ளார்.

பள்ளி கல்வித் துறை முதன்மைச் செயலாளர் பிரதீப் யாதவ் உள்ளிட்ட தமிழக அரசின் உயரதிகாரிகளும் அமைச்சர் செங்கோட்டையனுடன் செல்கின்றனர். இதேபோன்று, எய்ம்ஸ் மருத்துவமனை திட்டப் பணிகளைத் தொடங்குவது குறித்து மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் நட்டா மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகளை அமைச்சர் விஜயபாஸ்கர் தில்லியில் வரும் 9-ஆம் தேதி சந்தித்துப் பேசவுள்ளார். முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி 8-ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசவுள்ளதைத் தொடர்ந்து, தமிழக அமைச்சர்கள் அடுத்தடுத்து மாநிலத்தின் திட்டப் பணிகளுக்காக தில்லி செல்லவுள்ளது குறிப்பிடத்தக்கது.

வனத் துறையில் 1,178 காலிப் பணியிடங்கள்: அக். 15 முதல் விண்ணப்பிக்கலாம்

சென்னை, அக். 6: தமிழக வனத் துறையில் காலியாக உள்ள வனவர், வனக் காப்பாளர் உள்ளிட்ட 1,178 பணியிடங்களுக்கு அக்டோபர் 15-ஆம் தேதி முதல் விண்ணப்பிக்கலாம்.

இதுகுறித்து தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் வனத் துறையில் காலியாக உள்ள 300 வனவர், 726 வனக் காப்பாளர்கள், 152 ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக் காப்பாளர் பணியிடங்களுக்கு அக்டோபர் 15-ஆம் தேதி காலை 10 மணி முதல் நவம்பர் 5-ஆம் தேதி மாலை 5 மணிக்குள் விண்ணப்பிக்கலாம். இதில், வனவருக்கு மாத ஊதியமாக ரூ. 35,900- 1,13,500-மும், வனக் காப்பாளருக்கு ரூ. 18,200 - 57,900-மும், ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக் காப்பாளருக்கு ரூ. 18,200-57,900-மும் வழங்கப்படும். www.forests.tn.gov.in என்ற இணையதளம் இப்பணிகளுக்கு விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையதளம் முடக்கம்: இந்த அறிவிப்பு வெளியிட்டுள்ள நிலையில் கடந்த இரண்டு நாள்களாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள தமிழக வனத் துறையின் அதிகாரப்பூர்வ இணையதளம் முடங்கியுள்ளது.

அக்டோபர் 15-ஆம் தேதிக்குள் இந்த இணையதளம் இயங்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது வேலைக்கு விண்ணப்பிப்போரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

வடகிழக்கு இரயில்வே

E-கொள்வனவு டெண்டர் அறிக்கை எண். 04 TRACK 2018

இந்தியக் குடியரசுத் தலைவர் சார்பாக தலைமை நிர்வாக அலுவலர் / கட்டுமானம், வடகிழக்கு இரயில்வே, கோரக்பூர் பின்வரும் E-கொள்வனவு டெண்டர்களை வரவேற்கிறார்:

பொது டெண்டர் எண். / இறுதித் தேதி பொருட்கள் விவரம்:	டெண்டரின் தோராய மதிப்பு (ரூ)	EMD
வ.எண்.:- 1, பொது டெண்டர் எண். / இறுதித் தேதி & NECON 0418 Due on 30.10.2018. பொருட்கள் விவரம்: உற்பத்தி மற்றும் அளித்தல் : (a) RDSO	ரூ. 11,46,57,946.69	(ரூ) : 10,00,000/-
	டெலிவரிக் காலம் : 12 மாதங்கள்	

வரைபடம் எண். RDSO/T-3701-ன் படியான மற்றும் திருத்தியமைப்பு எண். 5 மற்றும் IRS ஸ்பெசிபிகேசன் எண். IRS T-31-1992 க்கு உறுதிப்படுத்தும் & திருத்தம் எண். 04 டிசம்பர் 2016 உடன் தட்டையான அடிப்பகுதி கொண்ட எலாஸ்டிக் ரெயில் கிளிப் MK-III. அளவு: 1638025 எண்ணிக்கை, பொருள் வாரியான அளவு SSE/P.Way/Con.-அரிஹார் 324317 எண்ணிக்கை, சாப்ரா 509732, மாவு 25578, பிலிபிட் 730938, கோண்டா 47460. (b) RDSO வரைபடம் எண். RDSO/T-4158-ன் படியான மற்றும் திருத்தியமைப்பு எண். 2 மற்றும் ERC-J (Provisional)-புதுப்பிப்பு 1994 & 2016ன் திருத்தம் எண். 02 இவற்றுக்கான IRS ஸ்பெசிபிகேசனை உறுதிப்படுத்தும் எலாஸ்டிக் இரயில் கிளிப் J. அளவு - 86732, பொருள் வாரியான அளவு SSE/P.Way/Con.-அரிஹார் 6000, சாப்ரா 23468, பெப்னா 21424, கோண்டா 23000, இசாத்நகர் 12840.

- டெண்டர் சமர்ப்பிப்பு 30.10.2018 அன்று 14.59 மணி வரை,
- டெண்டர் திறப்புத் தேதி 30.10.2018, 15.00 மணி.
- விவரமான டெண்டர் அறிவிப்பு, தகுதிகாண் நெறிமுறைகள் மற்றும் விதிமுறைகள் & நிபந்தனைகள் வலைதளம் https://ireps.gov.in ல் கிடைக்கின்றன.
- ஒருவேளை டெண்டர் அறிவிப்பின் இந்தி மற்றும் ஆங்கிலப் பதிப்பிற்கிடையில் ஏதாவது வேறுபாடு எழுந்தால் ஆங்கிலப் பதிப்பின்படியான அறிவிப்பே கருத்தில் கொள்ளப்பட்டுப் பின்பற்றப்படும்.

CPRO/W-176 செயற் பொறியாளர் / Con / Track, கோரக்பூர்

பயணிகளின் எந்த வசதியின்மை பற்றியும் புகார்கள் தெரிவிக்க கை.பே.எண். 09794845955க்கு SMS குறுஞ்செய்தி அனுப்புக.

"லெவெல் கிராசிங்குகளைக் கவனமாகக் கடக்கவும்"

ANNAMALAI UNIVERSITY

A State University accredited with 'A' Grade by NAAC

DIRECTORATE OF DISTANCE EDUCATION, Annamalainagar - 608 002

Admission Notification : 2018 - 2019

I. UNDER GRADUATE PROGRAMMES

Duration: Three Years
1. B.A. Tamil
2. B.A. Functional Tamil
3. B.A. English'
4. B.A. English & Communication
5. B.A. Economics*'
6. B.A. Business Economics*
7. B.A. History*'
8. B.A. History & Heritage Mgt.*
9. B.A. Sociology*'
10. B.A. Political Science*'
11. B.A. Public Administration*
12. B.A. Police Administration*
13. B.A. Social and Civic Studies*
14. B.A. Population Studies*
15. B.A. Human Rights*
16. B.A. Social Welfare Admn.*
17. Bachelor of Rural Studies*
18. B.S.W.(Bachelor of Social Work)
19. B.Com.*'
20. B.Com. Business Studies
21. B.Com. International Business
22. B.Com. Accounting & Finance*'
23. B.Com. Marketing Mgt.*'
24. B.Lit. (Tamil)
25. B.B.A.*'
26. B.Sc. Mathematics'
27. B.Sc.Chemistry'
28. B.Sc.Psychology
29. B.Sc.Physics'
30. B.Sc.Botany'
31. B.Sc.Zoology'
32. B.Sc.Microbiology

II. POST GRADUATE PROGRAMMES

Duration: Two Years
1. M.A. Tamil
2. M.A. English'
3. M.A. Sociology*'
4. M.A. Economics*'
5. M.A. Business Economics*
6. MA. Environmental Economics*
7. M.A.History*
8. M.A. History & Heritage Mgt*
9. M.A.Population Studies*
10. M.A. Political Science*
11. M.A. Public Administration*
12. M.A. International Relations*
13. M.A. Police Administration*
14. M.A. Linguistics*
15. M.A. Translation Studies
16. M.A. Human Rights*
17. M.A. Social Welfare Admn.*
18. M.A. Development Admn.
19. Master of Rural Studies*
20. M.A. Disaster Management*
21. M.A. Philosophy, Religion & Culture
22. M.A. Labour Management
23. M.T.T.M. (Master of Tourism and Travel Management
24. Master of Social Work(M.S.W.*)
25. M.Com. Co-operative Mgt.*'
26. M.Com. Banking & Insurance Mgt.*'
27. M.Com. Education Management
28. M.Com.*'
29. M.Com. Accounting & Finance
30. M.Com. Entrepreneurship
31. M.Com. Marketing
32. M.Sc. Mathematics'
33. M.Sc. Geo-Informatics
34. M.Sc. Applied Psychology
35. M.Sc. Marine Biology and Oceanography
36. M.Sc. Coastal Aquaculture
37. M.Sc. Physics'
38. M.Sc. Chemistry'
39. M.Sc. Zoology'
40. M.Sc. Botany
41. M.Sc. Microbiology
42. M.Sc. Real Estate Valuation
43. M.Sc. Plant and Machinery Valuation
44. M.Sc. Energy Auditing & Mgt.

III. LAW PROGRAMMES

1. LL.M - Three Years
2. B.B.L.-Three Years
3. LL.B (General) Two Years
4. LL.B (Academic) -Three Years

Duration: One Year
5. P.G. Diploma in Criminology and Forensic Science
6. P.G. Diploma in Cyber Law
7. Diploma in Labour Laws with Administrative Law
8. Diploma in Law of Taxation

IV. HEALTH SCIENCE PROGRAMMES

Post Graduate Diploma in
Duration : One Year
1. Tobacco Control 2. Acupuncture
3. Public Health 4. Applied Nutrition
5. Wellness Fitness Science
6. Medical Records Science

V. LIBRARY SCIENCE PROGRAMMES

Duration: One Year
1. M.Lib.I.Sc. 2. B.Lib.I.Sc. 3. C.L.I.S.*

VI. MUSIC & DANCE PROGRAMMES

Duration: Two Years
1. M.F.A. (Music) Vocal*/Veena*/Violin*/M.F.A.(Dance)Bharathanatyam*

Duration: Four Years
2. B.F.A.(Music) Vocal*/Violin*/Veena*/Mridangam*/(Dance)Bharathanatyam*

Duration: Four Years
3. Title of Isaikalaimani Vocal*/Violin*/Mridangam*
4. Title of Nattiyakalamani-Bharathanatyam*

Duration: One Year
5. Diploma in Nattuvangam*

Duration: Two Years
6. Certificate in Vocal*/Veena*/Violin*/Dance*

Duration: Four Years
7. Thesore Isai Kalamani

VII. YOGA RELATED PROGRAMMES

1. M.Sc. Yoga - Direct*
2. P.G. Diploma in Yoga* - One Year
3. Diploma in Yoga* - One Year

VIII. P.G. DIPLOMA, DIPLOMA AND CERTIFICATE PROGRAMMES

Duration: One Year

(A) Management & Commerce Programmes

P.G. Diploma in
1. Business Administration
2. Personnel Management & Industrial Relations
3. Marketing Management
4. Financial Management
5. Tourism Management
6. Advertising
7. Public Relations
8. Software Marketing
9. Foreign Trade
10. Entrepreneurship
11. Banking & Insurance
12. Finance & Taxation
13. Advertising & Salesmanship
14. International Business
15. Human Resource Mgt.
16. Retailing
17. Co-operative Management*

Diploma & Certificate in
18. Goods and Service Tax
19. Front Desk Operation

(B) Agriculture Related Programmes

P.G. Diploma in
20. Dairy Technology
21. Agricultural Marketing Mgt.
22. Ornamental & Landscape Gardening
23. Intellectual Property Rights

Diploma in
24. Horticultural Nursery Mgt.
25. Commercial Floriculture*
26. Agri Business Management*
27. Livestock Products Technology*
28. Post Harvest Technology & Processing of Horticultural Produce
29. Commercial Entomology

(C) Engineering Related Programmes

Civil & Structural Engineering
P.G. Diploma in
30. Design and Construction of Concrete Structures
31. Valuation (Land & Building)
32. Quality Surveying & Valuation
33. Environmental Management

Diploma in
34. Design of Foundation Systems
35. Land Surveying
36. Construction Management

Certificate in
37. Plumbing(Water Supply & Sanitary Installations)
38. Safety in Construction Practices

Mechanical Engineering
P.G. Diploma in
39. Automobile Technology
40. Power Plant Instrumentation & Control

Diploma in
41. Automobile Maintenance

Certificate in
42. Automobile Technology*

Manufacturing Engineering
P.G. Diploma in
43. Materials Management
44. Applied Operations Research
45. M.S. Industrial Engg. & Mgt.

Diploma in
46. Quality Management
47. Welding Engg. & Technology

Certificate in
48. Binding and Finishing*

Electrical Engineering
P.G. Diploma in
49. Electrical Energy Management and Energy Audit
50. Electrical Safety and Safety Mgt.

Instrumentation Engineering
P.G. Diploma in
51. VLSI Design

Diploma in
52. Industrial Automation

Chemical Engineering
P.G. Diploma in
53. Petroleum Exploration

Diploma in
54. Industrial Safety
55. Industrial Hygiene
56. Food & Nutrition
57. Quality Control & Analysis of Industrial Chemicals
58. Petroleum Refining Engg.

Certificate in
59. Food & Nutrition
60. Offset Machine Printing

Computer Science & Engineering
P.G. Diploma in
61. Internet Technology
62. Data Mining
63. Cyber Security
64. Quality Management

(D) Pharmaceutical Programmes

P.G. Diploma in
65. Intellectual Property Rights and Patent Laws

(E) Other Programmes

P.G. Diploma in
66. Educational Administration & Supervision
67. Instructional Technology
68. Parental Education
69. Adult & Continuing Education
70. Natural Resources
71. Aquaculture Management
72. Guidance & Counselling
73. Hospital Management
74. Sociology of Health
75. English Language Teaching
76. Natural Language Processing
77. N.G.O. Management
78. Software Based Statistical Analysis
79. Actuarial Statistics
80. Human Rights
81. Public Administration
82. Rural Development

Diploma in
83. Tamil Journalism(Tamil Medium)
84. English Journalism
85. Folklore(Tamil Medium)
86. Mass Communication
87. Accounting & Finance
88. Human Rights*
89. Social Welfare Administration*
90. Police Administration*
91. Public Administration*
92. Saiva Siddhantha*
93. Self Help Group Management*
94. Population & Health Mgt.
95. Panchayati Raj Administration*
96. Consumer Awareness & Rights

Certificate in
97. Office Management*
98. Spoken English

IX. I.T. PROGRAMMES

Duration: Three Years
1. B.C.A.'
2. B.Sc. Computer Science'
3. B.Sc. Information Technology'
4. B.Sc. Visual Communication'
5. B.Sc. Mathematics with Computer Applications
6. B.Com.Computer Applications
7. B.B.A.Computer Applications'

Duration: Three Years
1. M.C.A.'

Duration: Two Years
1. M.Sc. Software Engineering'
2. M.Sc. Information Technology'
3. M.Sc. Computer Science'
4. M.Sc. Visual Communication'
5. M.Com. Computer Applications

Duration: One Year
1. P.G.D.C.A. 2. P.G.D. LAN

Duration: One Year
1. D.C.A.

X. M.B.A. PROGRAMMES

Duration: Two Years
1. M.B.A.*
2. M.B.A. E-Business
3. M.B.A. International Business
4. M.B.A. Human Resource Mgt.
5. M.B.A. Marketing Management
6. M.B.A. Financial Management
7. M.B.A. Hospital Management
8. M.B.A. Information Systems

B.Ed. PROGRAMME-(2 Years)
(*For Tamil Nadu Students only)
Approved by National Council for Teacher Education (NCTE)
Cost of Application Form: Rs. 500/- in Person
Rs. 590/- by Post

COLLABORATIVE PROGRAMMES

U.G. Programmes
1. B.A. Astrology
2. B.Sc. Hotel Management & Tourism
3. B.Sc. Value Education & Spirituality
4. B.Sc. Fire and Industrial Safety
5. B.Sc. Health Safety & Environment
6. B.Sc. Fashion Design
7. B.Sc. Interior Design
8. B.Sc. Multimedia
9. B.Sc. Animation
10. B.Sc. Visual Effect
11. B.B.A Hospitality and Tourism Mgt.
12. B.Sc. Photography

P.G. Programmes
1. M.A. Astrology
2. M.Sc.Fashion Design
3. M.Sc.Interior Design
4. M.Sc. Cloud Computing & Virtualization
5. M.Sc.Data Science & Analytics
6. M.Sc. Value Education & Spirituality
7. M.Sc. Counselling & Spiritual Health
8. M.Sc. Yoga and Value Education
9. M.Sc. Multimedia
10. M.B.A. Media Management
11. M.B.A. Self Mgt. and Crisis Mgt.
12. M.B.A. Event Management
13. M.B.A. Industry Integrated
14. M.B.A. Hotel Mgt. and Tourism
15. M.B.A. Safety Management

P.G. Diploma Programmes
1. Astrology
2. Banking Mgt. (PGDBM)
3. Cloud Computing
4. Data Science and Analytics
5. Big Data Analytics
6. Counselling and Spiritual Health
7. Event Management
8. Values in Health Care
9. Yoga and Value Education
10. Health Sciences
11. Applied in Yogic Science
12. Advanced Yoga
13. Fire & Safety
14. Health, Safety & Environment
15. Advanced Diploma in Astrology

Diploma Programmes
1. Plant Based Nutrition
2. Astrology
3. Food and Beverage Production
4. Health and Nutrition
5. Agriculture Inputs Trading
6. Hotel Management & Catering Tech.
7. Fire & Safety
8. Health Safety and Environment
9. Event Management
10. Naturopathy & Yogic Service
11. Guasa Therapy
12. Varma Therapy
13. Counselling and Spiritual Health
14. Counseling and Hypnotherapy
15. Value Education and Spirituality
16. Aqua Yoga
17. Yoga Panchakarma

Certificate Programme in Vasthu

CONTACT US ✆ : 04144 - 238043, 238044, 238045, 238046, 238047 & 238610

SCHOLARSHIP is available for SC/ST unemployed students if their parents' annual income does not exceed Rs.2,50,000/-, subject to the Rules and Regulations.

COST OF APPLICATION FORM	IN PERSON	BY POST
M.B.A. & P.G. (IT Programmes)	Rs. 250/-	Rs. 290/
Health Science / B.Ed.	Rs. 500/-	Rs. 590/
All Other Programmes	Rs. 100/-	Rs. 150/-

Lateral Entry Admissions are also available

* OFFERED IN ENGLISH & TAMIL MEDIUM Eligibility Refer Prospectus

Application Form can be downloaded from : www.audde.in (Except Collaborative Programmes)

Last Date for Receipt of Filled-in Applications : 22-11-2018

* For Study Centres / Application Form / Spot Admission & more Details Contact : The Director, Directorate of Distance Education, Annamalai University, Annamalainagar - 608 002.Fax : 04144 - 238987; e-mail : ddedirector2013@gmail.com and Working Hours for Study Centres : 09.30 a.m. to 05.30 p.m.
* Applications can also be had in Person on cash payment from the Directorate of Distance Education, all Study Centres of the Directorate on all days.
* Online I.T. applications can also be downloaded and submitted through Annamalai University Computer Training Centres (AUCTC) located at various centres in Tamil Nadu and Puducherry.

Visit the official website www.annamalaiuniversity.ac.in for contact numbers of Study Centres

DDE/5-2&3/18-19
Annamalainagar - 608 002
Date: 05-10-2018

DIPR/1310/DISPLAY/2018

DIRECTOR
Directorate of Distance Education

REGISTRAR i/c

www.t.me/Tamilpdfworld

வடகிழக்குப் பருவ மழை: 24 மணி நேரமும் இயங்கும் தகவல் கட்டுப்பாட்டு அறைகள்

அமைச்சர் எஸ்.பி. வேலுமணி தகவல்

சென்னை, அக். 6: வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், அதன் பாதிப்புகள் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊரக வளர்ச்சி தலைமையிடங்களில் 24 மணி நேரமும் இயங்கும் தகவல் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளதாக உள்ளாட்சித் துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தெரிவித்தார்.

பலத்த மழை எச்சரிக்கை, வடகிழக்குப் பருவ மழை ஆகியவை தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் வாரியம், பேரூராட்சிகள் ஆகிய துறைகளின் உயரதிகாரிகளுடனான ஆலோசனைக் கூட்டம் உள்ளாட்சித் துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தலைமையில் தலைமைச் செயலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி பேசியது: விரிவாக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சியின் அம்பத்தூர், வளசரவாக்கம், ஆலந்தூர் ஆகிய மண்டலங்களில் 400 கி.மீ. தூரத்துக்கு ரூ.1,200 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரில் 2015-ஆம் ஆண்டு வெள்ளத்துக்குப் பிறகு ரூ.150 கோடி மதிப்பில் 50 கி.மீ. தூரத்துக்கு பல்வேறு இடங்களில் மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது, ரூ. 290 கோடி மதிப்பில் 117 கி.மீ. தூரத்துக்கு 347 இணைப்பு மழைநீர் வடிகால்வாய் பணிகளும், ரூ.150 கோடி மதிப்பீட்டில் 51 கி.மீ. தூரத்துக்கு விடுபட்ட 130 மழைநீர் வடிகால் பணிகளும் நடைபெற்று வருகின்றன. சோழிங்கநல்லூர், பெருங்குடி, ஆலந்தூர் மண்டலங்களில் 326 கி.மீ. தூரத்துக்கு ரூ.1,250 கோடி மதிப்பில் ஜெர்மன் நாட்டு வங்கி உதவியுடன் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன.

16 சுரங்கப் பாதைகளில் மழைக் காலங்களில் தேங்கும் நீரை வெளியேற்றஉயர்திறன்கொண்ட60டீசல் பம்புகளும், தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை வெளியேற்ற 5, 7.5 குதிரைத் திறன் கொண்ட 458 மோட்டார் பம்புகளும், 130 ஜெனரேட்டர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

தயார் நிலை: மழைக் காலங்களில் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை மீட்கும் வகையில் 109 இடங்களில் படகுகளும், பொது மக்களைத் தங்க வைக்க 176 நிவாரண மையங்களும், உணவு தயாரிக்க 4 பொது சமையல் அறைகளில் நாளொன்றுக்கு 1,500 பேருக்கு சமையல் செய்யத் தேவையான பொருள்களும், கூடுதலாகத் தேவைப்படின் அம்மா உணவகங்களிலும் உணவு தயாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மழைக்காலத்தில் தொற்று நோய்களில் பாதிக்கப்படும் மக்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் மாநகராட்சி முழுவதும் 44 நிலையான நடமாடும் மருத்துவக் குழுக்களும், 52 இடங்களில் பேரிடர் மீட்புக் குழுக்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

கட்டுப்பாட்டு அறைகள்: அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊரக வளர்ச்சி தலைமையிடங்களில் 24 மணிநேரமும் இயங்கும் தகவல் கட்டுப்பாட்டு அறைகள் செயல்பட உள்ளன. இக்கட்டுப்பாட்டு அறைகளில் வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை, காவல் துறை, மின்சார வாரியம் உள்ளிட்ட துறைகளின் அலுவலர்களுடன் நகராட்சி, ஊரக வளர்ச்சி அதிகாரிகள் இணைந்து பணியாற்றுவர்.

நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும், புயல் பாதுகாப்பு மையங்கள், சமுதாயக் கூடங்கள், பள்ளிக் கட்டடங்கள், பொதுக் கட்டடங்களைத் தயார் நிலையில் வைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

வடகிழக்குப் பருவமழையையொட்டி பாதுகாப்பு முன்னேற்பாடுகள் செய்வது குறித்து நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் வாரியம் மற்றும் பேரூராட்சிகள் ஆகிய துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய உள்ளாட்சித் துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி.

கடலில் மாயமான தூத்துக்குடி மீனவர்கள் 19 பேரைத் தேடும் பணி தீவிரம்

தூத்துக்குடி, அக். 6: தூத்துக்குடியிலிருந்து கடலுக்கு மீன் பிடிக்கச் சென்று மாயமான 19 மீனவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெறுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தூத்துக்குடி தருவைகுளத்தைச் சேர்ந்த பவுல்ராஜ் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் தருவைகுளத்தைச் சேர்ந்த விஜி, சுதாகர், அந்தோணி, தாளமுத்துநகரைச் சேர்ந்த விக்கி, அன்சாரி, செல்வராஜ், எபிஸ்டன், சவேரியார்புரத்தைச் சேர்ந்த செல்வம், கோவில்பட்டியைச் சேர்ந்த ஜோபின் ஆகிய 9 பேரும், ரவி என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் தருவைகுளத்தைச் சேர்ந்த மிக்கேல்ராஜ், ஜெகன், வசந்த், திரேஸ்புரத்தைச் சேர்ந்த கில்பர்ட், சாயல்குடியைச் சேர்ந்த ஜோசப், தாளமுத்துநகரைச் சேர்ந்த வல்லவன், வேம்பாரைச் சேர்ந்த ராமர், ராஜ், தூத்துக்குடியைச் சேர்ந்த டால்வின், வெட்டுக்காடு பகுதியைச் சேர்ந்த குழந்தைராஜ் ஆகிய 10 பேரும் கடந்த 1ஆம் தேதி கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர்.

ஆழ்கடல் பகுதிக்குச் மீன்பிடிக்கச் சென்ற அவர்கள் கரைதிரும்பாத நிலையில், இதுகுறித்து விசைப்படகு உரிமையாளர்களும், மீனவர்களின் உறவினர்களும் ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை மனு அளித்தனர்.

இதையடுத்து, மாயமான மீனவர்களை கடலோரக் காவல் படைமூலம்தேடும்பணி2ஆவது நாளாக சனிக்கிழமையும் நடைபெற்றது. 19 மீனவர்கள் சென்ற 2 விசைப்படகுகளிலிருந்தும் சரியான தகவல் தொடர்பு கிடைக்காததால் அவர்கள் எந்தப் பகுதியில் உள்ளனர் என்ற விவரத்தை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனிடையே, கடல் சீற்றம் அதிகமாக இருப்பதால், மாயமான மீனவர்கள் குறித்தும், அவர்கள் சென்ற படகுகளின் விவரம் குறித்தும் கடலோரக் காவல் படையினர், இந்திய கடற்படையினருக்குத் தகவல் தெரிவித்துள்ளனர். எனவே, 19 மீனவர்களும் விரைவில் மீட்கப்படுவர் என மீன்வளத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மழை எச்சரிக்கை

புதுவை அரசு ஊழியர்கள் விடுப்பு எடுக்காமல் பணியாற்ற கிரண் பேடி உத்தரவு

புதுச்சேரி, அக். 6: பலத்த மழை எச்சரிக்கை காரணமாக புதுவை அரசு ஊழியர்கள் விடுப்பு எடுக்காமல் 24 மணி நேரமும் பணியாற்ற வேண்டும் என்று துணைநிலை ஆளுநர் கிரண் பேடி உத்தரவிட்டார்.

புதுவையில் கடந்த 3 நாள்களாக பலத்த மழை பெய்து வந்தது. தொடர்ந்து, சனிக்கிழமையும் பலத்த மழை பெய்யும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், மழை ஓய்ந்து வெயில் அடித்தது. எனினும், ஞாயிற்றுக்கிழமை (அக். 7) பலத்த மழை பெய்யும் என வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. மழை பாதிப்புகளை எதிர்கொள்ள புதுவை அரசு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில், புதுச்சேரி கிழக்குக் கடற்கரைச் சாலையிலுள்ள அவசர கால உதவி மையத்தில் மழைக் கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆளுநர் கிரண் பேடி சனிக்கிழமை நேரில் சென்று ஆய்வு செய்தார். அப்போது, அரசுத் துறை அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார். புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் அபிஜித் விஜய் சௌத்ரி, தேசிய பேரிடர் மேலாண்மைத் துறை இயக்குநர் பங்கஜ் குமார் ஜா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர், ஆளுநர் கிரண் பேடி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

புதுவைக்கு பலத்த மழை எச்சரிக்கை விடப்பட்டுள்ளதால், அரசு ஊழியர்கள் அனைவரும் விடுப்பு எடுக்காமல் 24 மணி நேரமும் பணியில் இருக்க வேண்டும். தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கினால், உடனே அகற்ற வேண்டும். மழையால் பாதிக்கப்படும் மக்களை தங்க வைப்பதற்கு 186 நிவாரண மையங்கள் தயார் நிலையில் உள்ளன. புதுச்சேரியில் இதுவரை மழை தொடர்பாக 26 புகார்கள் பெறப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது என்றார் அவர்.

செயற்கைகோள் தொலைபேசி: புதுவையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பேரிடர் மீட்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து தேசிய பேரிடர் மேலாண்மை துறை இயக்குநர் பங்கஜ்குமார் ஜா கூறியதாவது:

பேரிடர் காலங்களில் தொலைத்தொடர்பு சேவை பாதிக்கப்படும் சூழல் உள்ளது. இதனால், மத்திய அரசிடமிருந்து 14 செயற்கைக் கோள் தொலைபேசிகளை (சாட்டிலைட் போன்) வாங்கியுள்ளோம். அவசரக் காலத்தில் இந்தத் தொலைபேசிகளை முக்கிய அதிகாரிகள் பயன்படுத்துவர். இதேபோல, வாக்கி டாக்கியும் பயன்படுத்தப்படும்.

புதுச்சேரியில் உள்ள 16 கடலோரக் கிராமங்கள் மழையால் பாதிக்கப்படும் என்பதால், அங்கு அதிகாரிகள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அங்கும் தொலைதொடர்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றார் அவர்.

புதுச்சேரி அவசர கால உதவி மையத்தில் அதிகாரிகளுடன் சனிக்கிழமை ஆலோசனை நடத்திய புதுவை துணைநிலை ஆளுநர் கிரண் பேடி.

தினமணி வரி விளம்பரம்

real estate

RENTAL COMMERCIAL

1000 SQFT COMMERCIAL PLOT for Rent Bank / Chain Store / Hardware, preferred. No: 135, SVP Colony Main Road, Periyar Nagar, Ch-82. Ph: 9840789494 MS/249

வாடகைக்கு தேவை

வாடகைக்கு தேவை
தொந்தரவு அலுவலகம் அமைத்து தூதுவர் பார்க்கவும், தங்கவும் வசதியாக, நுங்கம்பாக்கம், சேலை, மாநகரத்தில் அமைதியான சூழ்நிலையில் சிறந்தது வசதி கொண்ட 3 அறை வாடகைக்கு தேவை. பிரோக்கர் தவிர்க்கவும்
7598708019

NEW FLAT FOR SALE

735 Sqft 2 BHK New Flat Sale Alwarthirunagar. Contact: 7358446805. DN/18

others

SITUATION VACANT - TECHNICAL

LV Switchgear company needs Engineers (BE, 3-5 yr) / Technicians (Diploma or ITI-Elec, 3-5 yr) Exp in Estimation, Design, Assembly, Wiring, Busbar Fab, Testing. Mail: vinod20@yahoo.co.in TN/79

WANTED

STAFF WANTED Watchman - General (DC), Scavenger - General (DC), Qualification - To read and write Tamil. Apply to: Secretary, R.R.C.A.R.C. Girls Higher Secondary School, Chennai-1. Contact No: 044-42019422. MS/250

விண்ணப்பங்கள்

வேலூர் மாவட்டம் அரக்கோணம் தாலுகா, கடப்பேரி கிராமம், சுப்பராயன் தெரு, வசிக்கும் SMS / வாட்ஸ் அப் முகவரி 99421 16924. W/193/RMS

JOB OPPORTUNITY

OPPORTUNITIES For Retd. people Qual : +2 / Any Degree Interested in Additional Earning! For more info, SMS your name Age: above 50years. 75501 78074

YOGA - MEDITATION

ISRC offering free two day training on Pranahuti Aided Meditation at IIT Campus, Adyar, Chennai on 13th and 14th Oct'18. Registration: 9940910838, 9962215692. www.srisrcharitable.org MS/247

public notice

CHANGE OF NAME

CHANGE OF NAME
I, S.Magendran, Son of Thiru: P.Shenbagamoorthy, Born on: 10th April 1963 (Native District : Madurai), Residing at No.98/6, Appu Flats, Anna Nagar West Extension, Chennai-600 050, Shall henceforth be known as S.MAHENDRAN.
S.MAGENDRAN
Chennai, 15th March 2018.

ஆதார் (யூனிக் அடையாள எண்), ஓட்டுநர் உரிமம், பிறந்த தேதி 17.07.1979 (பிறப்பு சான்று 58), கொடுக்கி தவறாக, பெயர் மாற்றம் செய்வதற்கு, அஞ்சலகம் மாவட்டம்-சென்னை-600211-ல் குடியிருந்து வரும் நான் இனி முதல் பெயரில் கடன்பெறும் பணத்தை முதலில் செலுத்துமாறு அறிவிக்கிறேன். DN/251

I, AJIT KUMAR JHA Resident of 2/10 S/4 DC-II Air Force Station, Avadi, Chennai-600055 have changed My Daughter's Name from DIKSHA to DIKSHA JHA vide affidavit Dated 20th September 2018 before DMC Ambattur Chennai-600053. MS/248

MY DAUGHTER, A.H. TEJASWINI, born on 27th September 2003 (native district: Tiruvallur), residing at No. 142/54/1, T.S.V. Koil Street, Mylapore, Chennai-600004, shall henceforth be known as H. TEJAASHREE. A.R. Muthuppan (Father), Chennai, 28th December 2017. MS/252

I, KALYANI SATHYAGANAPATHI, wife of Thiru H.K. Sathyaganapathi, born on 27th June 1959 (native district: Tiruchirappalli), residing at Flat No. 2C, Ramalingam Survey, Karuna Street, Bhuvaneswari Nagar, Velachery, Chennai-600042, shall henceforth be known as S. PUSHAPAMMAL. Kalyani Sathyaganapathi, Chennai, 15th June 2018. MS/253

MY DAUGHTER, B. RUDRAKSHA alias RUDRAKJIYAA, born on 17th September 2004 (native district: Kancheepuram), residing at Old No. 27, New No. 130, Ring Road, DAE Township, Kalpakkam, Kancheepuram-603102, shall henceforth be known as RUDRAKSHA SHENGE. Bhavias (Father), Kancheepuram, 20th November 2017. MS/254

I, V.S GOFORTH CHRISTIAN BANNER, son of Thiru V. Sugumaran, born on 25th January 1979 (native district: Vellore), residing at No. 22, Sundaramma Street, Reddiyar Garden, N.V. Mettur, Avadi, Chennai-600071, shall henceforth be known as GOFORTH CHRIS. V.S. Goforth Christian Banner, Chennai, 12th September 2018. MS/256

I, G. DORAICHAMY, son of Thiru K.S. Ganapathy Sundaram, born on 28th May 1940 (native district: Pudhukottai), residing at Plot No. 88 and 89, 93, KKN. Pathna, Ambigai Nagar, Arapakkam, Chennai-600077, shall henceforth be known as G DURAISAMY. G. Doraichamy, Chennai, 1st March 2018. MS/257

I, NAZAKI BEGUM, wife of Thiru K. Mohamed Rasul, residing at 28/16, DABE Orchid, Pallikarai, Chennai-600172, shall henceforth be known as J. NAZIMI BEGUM. MS/258

I, A. DIVYA BHARATHY, daughter of Thiru E. Arumugham, born on 24th December 1991 (native district: Chennai), residing at No. 10/1, Sivalan Street, Perambelkudu, MMC, Chennai-600059, shall henceforth be known as A. HEMAASRI. A. Divya Bharathy, Chennai, 19th September 2018. MS/259

MY DAUGHTER, G. NEELAMBARI, born on 12 June 2004 (native district: Vellore), residing at Old No. 303, New No. 54, 7th Block, Kaviarasu Kannadhasan Nagar, Kodungaiyur, Chennai-600118, shall henceforth be known as G. DIVYA NEELAMBARI. D.K. Gajendran (Father), Chennai, 6th April 2018. MS/260

MY DAUGHTER, P.G. VEENADHARSHINI alias VEENADARSHINI, born on 26th September 2003 (native district: Chennai), residing at No. 5/49K, Gandhi Nagar, 4th Street, Sathuma Nagar, Tolgate, Tiruvottiyur, Chennai-600019, shall henceforth be known as P.G. VEENA. N. Prabhakaran (Father), Chennai, 20th September 2018. MS/261

I, T ANANTHAPRIYA alias ANANDHAPRIYA, daughter of Thiru R. Balagopinath, born on 20th October 1994 (native district: Tiruvallur), residing at No. B161, T.N.H.B Quarters, R.D.O Line, Kancheepuram-631502, shall henceforth be known as ANANDHA PRIYADALAGANESAN. T. Ananthapriya alias Anandhapriya, Kancheepuram, 22nd June 2018. MS/263

I, RAJESHKUMAR BAWANKAR, S/o. Thiru Narendrarai Bawankar R/O B1-1 Block, Phase 1, VGN Impesia 3rd Main Road, Mahalakshmi Nagar, Thiruverkadu, Chennai-600077, have changed my name to RAJESH as per Gazette Dated 7th September 2018. MS/262

I, E. SUBBU, son of Thiru Duandaram, born on 6th January 1949 (native district: Tiruchirappalli), residing at Old No. E68, New No. 11, 6th West Street, Kamaraj Nagar, Thiruvanmiyur, Chennai-600041, shall henceforth be known as E. SUBRAMANIYAM. E. Subbu, Chennai, 20th September 2018. MS/264

I, M. KUPPUSWAMY, son of Thiru V. Muniasamy, born on 24th January 1976 (native district: Chennai), residing at No. 15, Bajani Koil Street, Kosi Nadavankarai, Annanagar, Chennai-600040, shall henceforth be known as M.G. KUPPUSAMY. M. Kuppuswamy, Chennai, 6th August 2018. MS/265

I, LOGANATHAN BALARAMAN (Old Name), residing at No. 75A, Mankondan Street, Padmavathy Srinivasa Nagar, Ambattur, Chennai-600053, have changed my name from LOGANATHAN BALARAMAN to LOGANATHAN VENKATRAMAN BALARAMAN vide affidavit dt. 02.10.2018 before the Advocate & Notary Public Mr. Y. Kesavchan, B.A., LL.B., Ambattur, Chennai-600053. MS/266

CAUTION

Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. The New Indian Express Group of Publications does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of The New Indian Express Group of Publications shall not be held responsible / liable for any consequences, in case such claims are found to be false.

THERE IS ONE NEAR YOU
for booking of classified ads in
THE NEW INDIAN EXPRESS
THE NEW SUNDAY EXPRESS & DINAMANI

Change of Name Advertisements @ an attractive flat rate of Rs. 500/- in The New Indian Express & Dinamani Classifieds on all Wednesdays & Sundays.

Please contact any of our
AUTHORISED FRANCHISEES

ADYAR SRMB CHILD BUSINESS SOLUTIONS #3, 6th Floor Gokul Arcade, No.2, Sardar Patel Road, Chennai-20 Ph: 42117302, 9841 726042	ANNA NAGAR MULTI VISUAL ADVERTISING No.2/187, 2nd Floor, 12th Main Road, Anna Nagar, Chennai-40. Ph: 26163482, 9841083628	ARAKI K.PS ADVERTISING No.45A opp. KSE, Mullai Street Arakkonam, Chennai-631101. Ph: 9789029892	AVADI LOKESH ADVERTISING No. 217/88, Kamaraj Nagar Main Road, Avadi, Chennai-71. Ph: 044-26520134, 9789952240
CHENGALPET RARE ADVT 14/5, Rajaji Street, Chengalpet, Ph: 27422994, 9444056418	CHROMEPET : MAITHI ENTERPRISES 8/5, Vanathasiyan Street, Nehru Nagar, Chromepet, Chennai-44 Ph: 9884974072	E.K NAGAR R.D ENTERPRISES, No. 22, 1st Street, 1st Sector KK Nagar, Chennai-78 Ph: 24715725, 9840887975, Fax 43503982.	HASTHINAPURAM YEN YEN ADVERTISING 38, First Main Road, Thirumalai Nagar, Hasthinapuram, Chennai-84 Ph: 9551594204 Email: yenyenadv@gmail.com
PERAMBUR SRI AADITHYA ENTERPRISES Old No. 241/1, New No. 8, Paper Mills Road, Perambur, Chennai - 11 Ph: 9551010158, 8438805441	OLD WASHERMENPET : LAKSHMI AGENCY New No. 309 Old No. 133, Sowcarpet Street, Old Washermanpet, Chennai-21. Ph: 25957723, 9176800850	PORUR JDR AGENCY NO.5/25, First Floor, Arcot Road, Porur, Karambakkam, Chennai-116. Ph:09962917457, 8056011457	PURASAWALKKAM KRAYA ADVERTISING Shop No. 4, 1st Floor, Eswari Palace Arcade, No. 59/143, Tana Street, Purasawalkkam, Ch-7 Ph: 26610221, 9444100133, 7299996949
PURASAIWALKKAM SANJAY BUSINESS SERVICES, No.1 Kasinda Granara st, Chennai-84 Ph: 26412160, 9003211205	ROYAPETTAH : VIKRAM MEDIA No. 164/11, Indra Apartments, Royapettah High Road, Mylapore, Chennai-4 Ph: 9566125608	SAIDAPET : SRI BALAJI ENTERPRISES 62/44, East Jones Road, Saidapet, Chennai - 600015 Ph: 044-24021637, 93814 86462	SALIGRAMAM : SRI RAGHAVENDRA FILM CAR FITTING Sweru Centre, 170, Prakash Colony, Kamaraj Road, Ch-93 Ph: 23765344, 9282111566.
TAMBARAM SANTHOSH ADS No.243/35, Muthamiya Mudali Road, West Tambaram, Chennai-45. Ph: 9445347358, 9361826911	T NAGAR SRI LAKSHMI ADVERTISING New No. 77, Mambalam St, G.I.T Nagar, Chennai-17. Ph: 6526/0245, 9884725735	T-NAGAR Q.ELISUM ADS 302A, PMG Complex, 3rd Floor,57, South Usman Road, T-Nagar, Chennai-17. Ph: 42067669, 9840888898	VALASARAVAKKAM SAI MADHU ADVERTISING First floor, 122, Arcot Road, (Near Valasaravakkam Signal) Chennai-600 087. 9380344805 & 9500037429
VADAPALANI : LEO BUSINESS SOLUTIONS No. 1/1, First Floor, West Sivan Kovil Street, Vadapalani Ph: 9940613888, 9840160211		VELLIYAKKAM TAMIL NADU AGENCIES 13-B Reddy St, Near Vibhakkam bus terminus, Chennai-49. Ph: 44546116, 9380438911	

The New Indian Express Group
Express Gardens, 29, 2nd Main Road, Ambattur Industrial Estate, Chennai-600058.
Ph: 044-23457701, Ext: 205. Cell : 98844 15405, 92824 41823.

கீழடி கண்மாயில் பழைமையான உறை கிணறு கண்டுபிடிப்பு

சிவகங்கை,அக்.6: கீழடி கண்மாயில் பழைமையான உறை கிணறு சனிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டது.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே பசியாபுரம்-கீழடி சந்திப்பு பகுதியில் உள்ள நான்கு வழிச்சாலை அருகே கீழடி கண்மாய் உள்ளது. இக்கண்மாயில் அப்பகுதி பள்ளி மாணவர்கள் சனிக்கிழமை விளையாடிக் கொண்டிருந்தபோது, பழைமையான கிணறு இருப்பதை கண்டறிந்துள்ளனர். இதுகுறித்து கீழடி பள்ளிச் சந்தை புதூரில் அகழாய்வுப் பணிகளில் ஈடுபட்டிருந்த தமிழக தொல்லியல் துறை அலுவலர்களிடம் தகவல் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, அங்கு வந்த தமிழக தொல்லியல் துறை அலுவலர்கள் உறை கிணற்றை ஆய்வு செய்தனர். கீழடி அகழாய்வில் ஏற்கெனவே கிடைத்த உறை கிணற்றின் சம காலத்தை ஒட்டிய சுமார் 2 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான உறை கிணறு என்பது ஆய்வில் தெரியவந்தது.

மேலும், அதனை முழுமையாக தோண்டி ஆய்வு செய்தபோது, ஏற்கெனவே கீழடி அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட உறை கிணற்றை விட இந்த கிணறு பல்வேறு வகைகளில் வடிவமைக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. மேலும் அந்த கிணற்றுக்குள் சில மண்பாண்ட பொருள்களும் இருந்தன. இதனால், இந்த பகுதி முழுவதும் பழங்கால மனிதர்கள் வாழ்ந்ததற்கான தொல்லியல் மேடு பகுதியாக இருக்கலாம் என தொல்லியல் துறையினர் தெரிவித்தனர்.

சிவகங்கை மாவட்டம் கீழடி கண்மாயில் சனிக்கிழமை புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட உறை கிணற்றை பார்வையிடும் தமிழக தொல்லியல் துறை அலுவலர்கள்.

வடகிழக்குப் பருவ மழையை எதிர்கொள்ள அனைத்து துறையினரும் தயார்

சுகாதாரத் துறை செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன்

சீர்காழி, அக். 6: வடகிழக்குப் பருவ மழையை எதிர்கொள்ள அனைத்து துறை அதிகாரிகளும் தயார் நிலையில் உள்ளதாக தமிழக சுகாதாரத் துறை செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாகை மாவட்டம், சீர்காழி அருகே உள்ள அளக்குடி கிராமத்தில் கொள்ளிடம் ஆற்றின் வலது கரையில் ஏற்பட்ட உடைப்பு தற்காலிகமாக சரிசெய்யப்பட்டுள்ளதைப் பார்வையிட, நாகை மாவட்டத்துக்கான புயல் மற்றும் வெள்ளத் தடுப்பு கண்காணிப்பு அலுவலரும் தமிழக சுகாதாரத் துறை செயலருமான ஜெ. ராதாகிருஷ்ணன் சனிக்கிழமை வந்திருந்தார்.

கொள்ளிடம் ஆற்றங்கரை உடைப்பு பகுதியை ஆய்வு செய்த அவர், நல்லூரில் உள்ள மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம், கொள்ளிடம் ஆற்றின் பாலம் ஆகிய பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

கனமழை தொடர்பாக சென்னையில் முதல்வர் தலைமையில் நடைபெற்ற முன்னேற்பாடுகள் குறித்த கூட்டத்தில் மாவட்ட ரிங் செகரட்டரிகள் நியமிக்கப்பட்டு, அந்தந்த மாவட்ட ஆட்சியருடன் இணைந்து பணியாற்ற உத்தரவிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே கடந்த மாதம் கொள்ளிடம் ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை சீரமைக்கும் பணி நிறைவடையும் தருவாயில் உள்ளது.

வடகிழக்குப் பருவமழை அக்டோபர் தொடங்கி டிசம்பர் வரை தொடரும் என்பதால் வருவாய்த் துறை, உள்ளாட்சித் துறை, சுகாதாரத் துறை உள்ளிட்ட அனைத்து துறையினரும் வெள்ளத்தடுப்பு பணிக்கு அறிவுறுத்தப்பட்டு, தயார் நிலையில் உள்ளனர் என்றார்.

நாகை மாவட்டம், அளக்குடியில் கொள்ளிடம் ஆற்றில் ஏற்பட்ட உடைப்பு தற்காலிகமாக சரி செய்யப்பட்டுள்ளதைப் பார்வையிடும் தமிழக சுகாதாரத் துறை செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியர் சீ.சுரேஷ்குமார் உள்ளிட்டோர்.

தமிழகம் முழுவதும் 36 டி.எஸ்.பி.க்கள் பணியிட மாற்றம்

சென்னை, அக்.6: தமிழகம் முழுவதும் 36 டி.எஸ்.பி.க்களை பணியிட மாற்றம் செய்து சட்டம் மற்றும் ஒழுங்கு டி.ஜி.பி. தே.க.ராஜேந்திரன் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

தமிழக காவல்துறையில் விருப்பத்தின் அடிப்படையிலும், நிர்வாக வசதிக்காகவும், பணியில் ஒழுங்கீனமாக இருந்தாலும் காவல்துறையில் அதிகாரிகள் அவ்வப்போது பணியிட மாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர். அதன்படி, மாநிலம் முழுவதும் 36 டி.எஸ்.பி.க்களை பணியிட மாற்றம் செய்து டி.ஜி.பி. தே.க.ராஜேந்திரன் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

இடமாற்றம் செய்யப்பட்ட ஒருசிலர் விவரம் (அடைப்புக்குறிக்குள் ஏற்கெனவே பணிபுரிந்த இடம்):

வி.விஸ்வேஸ்ரய்யா-சென்னை காவல்துறையின் மத்தியக் குற்றப் பிரிவு (மயிலாப்பூர் உதவி ஆணையர்), பி.ஸ்டீபன்- விருதுநகர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு (சென்னை காவல்துறையின் மத்தியக் குற்றப் பிரிவு உதவி ஆணையர்), ஆர்.அர்னால்ட் ஈஸ்தர், சென்னை காவல்துறையின் காவலர் நலம் மற்றும் எஸ்டேட் பிரிவு (கீழ்ப்பாக்கம் உதவி ஆணையர்), எம்.குமாரவேலு-சென்னை காவல்துறையின் போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு தெற்கு மண்டலம் (பெரம்பலூர் சமூக நீதி மற்றும் மனித உரிமை டி.எஸ்.பி.), ஆர்.ராஜசேகரன்- மதுரை காவல்துறையின் மத்தியக் குற்றப் பிரிவு (சென்னை காவல்துறையின் போக்குவரத்து புலனாய்வு பிரிவு தெற்கு மண்டல உதவி ஆணையர்).

அதேபோல் சென்னை பட்டாபிராம் உதவி ஆணையர் ஜி.கே. கண்ணன், பாதுகாப்புப் பிரிவுக்கும், சென்னை காவல்துறை மத்தியக் குற்றப்பிரிவு உதவி ஆணையர் எம்.வெங்கடேசன் புழலுக்கும், புழல் உதவி ஆணையர் எஸ்.பிரபாகரன் சென்னை காவல் துறையின் மத்திய குற்றப்பிரிவுக்கும் என மொத்தம் 36 டி.எஸ்.பிக்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் ஓரிரு நாளில் புதிய பொறுப்பை ஏற்பர் என காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

ராமேசுவரத்தில் இடியுடன் மழை: கோயிலுக்குள் தண்ணீர் புகுந்தது

பக்தர்கள் வெளியேற்றம்

ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயிலுக்குள் சனிக்கிழமை புகுந்த மழை நீர்.

ராமேசுவரம், அக்.6: ராமேசுவரத்தில் சனிக்கிழமை பலத்த மழை பெய்ததால் கோயிலுக்குள் கழிவுநீருடன் தண்ணீர் புகுந்தது. இதனால் பாதுகாப்பு கருதி பக்தர்கள் வெளியேற்றப்பட்டனர்.

ராமேசுவரம் பகுதியில் சனிக்கிழமை இரவு 8 மணிக்கு இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. ராமேசுவரத்தில் கழிவுநீர் வாய்க்கால்கள் தூர்வாரப்படாமல் இருந்த நிலையில், மழை நீர் பெருக்கெடுத்து கழிவுநீருடன் கலந்து தெருக்களில் பாய்ந்தது.

ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயில் அருகே உள்ள வடக்கு மற்றும் கிழக்கு தெருக்களில் இருந்து கழிவுநீருடன் பெருக்கெடுத்த தண்ணீர் கோயிலின் கிழக்கு கோபுர வாசல் வழியாக உள்ளே புகுந்தது.

இதனால் பக்தர்களும் கோயில் ஊழியர்களும் அதிர்ச்சி அடைந்தனர். உள்ளே தேங்கிய தண்ணீரை வெளியேற்றும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டனர். தொடர்ந்து தண்ணீர் வந்ததால் பக்தர்கள் வெளியேற்றப்பட்டனர்.

அடிக்கடி இதுபோன்று கோயிலுக்குள் தண்ணீர் வந்தபோதும் அதை தடுக்க கோயில் நிர்வாகம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காமல் இருப்பதாக பக்தர்கள் கவலை தெரிவித்தனர்.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் அக்.10-இல் நவராத்திரி உற்சவம் தொடக்கம்

மதுரை, அக். 6: மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் நவராத்திரி உற்சவம் அக்டோபர் 10 ஆம் தேதி (புதன்கிழமை) தொடங்குகிறது.

இது குறித்து கோயில் இணை ஆணையர் என். நடராஜன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் நவராத்திரி விழா தொடக்கம் முதல் நிறைவு நாளான அக்டோபர் 18 ஆம் தேதி வரை, தினமும் மாலையில் மீனாட்சி அம்மனின் மூலஸ்தானத்தில் திரை போட்டு அபிஷேகம், அலங்காரம் ஆகிய கல்ப பூஜைகள் மற்றும் சகஸ்ரநாமம் உள்ளிட்ட விசேஷ பூஜைகள் இரவு 8.30 மணி வரை நடைபெறும். பூஜை கால நேரங்களில் பக்தர்கள் தேங்காய் உடைத்தல், அர்ச்சனைகள் ஆகியன மூலஸ்தான அம்மனுக்கு நடத்தப்படமாட்டாது. இரண்டாம் பிரகாரத்தில் உள்ள கொலு மண்டபத்தில் எழுந்தருளும் அம்மனுக்குத்தான் அர்ச்சனைகள், தேங்காய் உடைத்தல் உள்ளிட்டவை நடைபெறும்.

சிறப்பு அலங்கார விவரம்: நவராத்திரி பூஜையை முன்னிட்டு அக்டோபர் 10 ஆம் தேதி மாலை அம்மன் ராஜராஜேஸ்வரி அலங்காரம், 11 ஆம் தேதி மேருவை செண்டால் அடித்தல், 12 ஆம் தேதி ஊஞ்சல், 13 ஆம் தேதி கல் யானைக்கு கரும்பு கொடுத்தல், 14 ஆம் தேதி வலை வீசி அருளல், 15 ஆம் தேதி வரகுண பாண்டியனுக்கு சிவலோகம் காட்டியது, 16 ஆம் தேதி ஷண்முகர் ஜனனம், 17 ஆம் தேதி மகிஷாசுரமர்த்தினி, 18 ஆம் தேதி மாலையில் சிவபூஜை ஆகிய அலங்காரங்கள் நடைபெறும். நவராத்திரி விழாவை முன்னிட்டு, அக்டோபர் 24 ஆம் தேதி சாந்தாபிஷேகம், அன்னாபிஷேகம் ஆகியன நடைபெறுகின்றன. நவராத்திரி பூஜை தொடங்கும் அக்டோபர் 10 முதல் 19 ஆம் தேதி வரை மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை, திருக்கோயில் வளாகத்தில் உள்ள பழைய திருக்கல்யாண மண்டபத்தில் ஆன்மிகச் சொற்பொழிவு, பரதநாட்டியம், வீணை இசைக் கச்சேரி, கர்நாடக சங்கீதம், தோற்பாவை கூத்து, பொம்மலாட்டம், வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

நவராத்திரி மற்றும் அதைத் தொடர்ந்த உற்சவ நாள்களில் உபய திருக்கல்யாணம், உபய தங்கரதம் ஆகியவை பதிவு செய்து நடத்தப்படமாட்டாது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிமுக உறுப்பினர் சீட்டுகள் அளிக்கும் தேதி மாற்றம்

சென்னை, அக். 6: அதிமுகவில் புதிய உறுப்பினர்களுக்கான சீட்டுகள் வழங்கல் அக்டோபர் 8-க்குப் பதிலாக 11-ஆம் தேதிக்கு மாற்றப்பட இருப்பதாக அக்கட்சித் தலைமை அறிவித்துள்ளது.

இதுகுறித்து, கட்சியின் தலைமை அலுவலகம் சனிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு: அதிமுக புதிய உறுப்பினர் சேர்ப்புக்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு திரும்பப் பெறும் பணிகள் மார்ச் 1-இல் தொடங்கி மே 31-இல் நிறைவடைந்தது. விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தோருக்கு ரசீதுகள் அளிக்கப்பட்டன. இந்த ரசீதுகளைப் பெற்றுள்ளோருக்கு உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் வரும் 8-ஆம் தேதி முதல் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

கடும் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் முன்னறிவிப்பு வெளியிட்டுள்ளது. எனவே, வரும் 8-ஆம் தேதிக்குப் பதிலாக 11-ஆம் தேதியன்று (வியாழக்கிழமை) காலை 10.30 மணி முதல் தலைமை அலுவலகத்தில் புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் அளிக்கப்படும். இதனை, கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி கே.பழனிசாமி ஆகியோர் தொடங்கி வைக்கவுள்ளனர். மே 31-ஆம் தேதிக்குப் பிறகு உறுப்பினர் சேர்ப்பு விண்ணப்பப் படிவங்களை தலைமை அலுவலகத்தில் அளித்து ரசீது பெற்றோருக்கு உறுப்பினர் சீட்டுகள் தேதி வாரியாக படிப்படியாக தயார் செய்யப்பட்டு அளிக்கப்படும். அவர்களுக்கான உரிமைச் சீட்டுகள் வழங்கப்படும் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என அதிமுக தலைமை அலுவலகம் வெளியிட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு மருத்துவக் கல்லூரியில் ராகிங்: 4 மாணவர்கள் இடை நீக்கம்

கோவை, அக். 6: கோவை அரசு மருத்துவக் கல்லூரியில் ராகிங் கில் ஈடுபட்ட நான்கு மாணவர்கள் ஓர் ஆண்டுக்கு இடை நீக்கம் செய்யப்பட்டனர்.

திருவண்ணாமலையைச் சேர்ந்த மாணவர் ஒருவர் அரசு மருத்துவக் கல்லூரி விடுதியில் தங்கி இரண்டாம் ஆண்டு படித்து வந்தார். இந்த நிலையில், மூன்றாம் ஆண்டு படிக்கும் மாணவர்கள் நான்கு பேர் அந்த மாணவரை ராகிங் செய்துள்ளனர். இதுகுறித்து அந்த மாணவர் பெற்றோரிடம் தெரிவித்துள்ளார். இதையடுத்து, அந்த மாணவரின் பெற்றோர் தில்லியில் உள்ள ராகிங் தடுப்பு கமிட்டிக்கு புகார் அளித்தனர். இதன் பேரில் விசாரணை நடத்துமாறு அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் அசோகனுக்கு ராகிங் கமிட்டி அறிவுறுத்தியிருந்தது. கல்லூரி துணை முதல்வர், மன நல மருத்துவர், விடுதி காப்பாளர் உள்ளிட்ட 10 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது. இதில்,பொள்ளாச்சி, திருப்பூர், தருமபுரி மாவட்டங்களைச் சேர்ந்த 4 மாணவர்கள் ராகிங்கில் ஈடுபட்டது தெரியவந்தது. இதையடுத்து, மூன்றாம் ஆண்டு படிக்கும் அந்த 4 மாணவர்களையும் ஓராண்டுக்கு இடை நீக்கம் செய்து டீன் அசோகன் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

केनरा बैंक कனரா வங்கி

கெல்லீஸ் கிளை சென்னை

P.B.No.3007, எண்.207, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-600007.
Ph: 044 2665 1314 / 2532 2410, Email:cb0907@canarabank.com

சுவாதீன அறிவிப்பு

2002-ஆம் ஆண்டின் பிணைக்காப்பு நிதிச் சொத்து மறு சீரமைப்பு மற்றும் பிணைக் காப்பு செயலாக்க சட்டம், 2002 மற்றும் பிணைகாப்பு (செயலாக்க) விதிகள் 2002-ன் (Securitisation & Reconstruction of Financial Assets & Enforcement of security Interest Act 2002 and Security interest (Enforcement) rules 2002) (Act 54 of 2002) கீழ் அதிகாரப்பூர்வ அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட கனரா வங்கி, கெல்லீஸ் கிளை, **P.B.No.3007**, எண்.**207**, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-600007 அதிகாரப்பூர்வ அதிகாரி மூலம் மேற்படி சட்டப் பிரிவு 13(12) மற்றும் விதி எண்.3-ன் படியும் **24.07.2018** கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிட்ட கடன் பாக்கி தொகையான **ரூ.1,47,00,969/-** (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து ஏழு லட்சத்து தொள்ளாயிரத்து அறுபத்து ஒன்பது மட்டும்) மேலும் **30.06.2018** முதல் அதன் மீதான வருடாந்திர கூடுதல் வட்டி 15.50% p.a. சேர்த்து அறிவிப்பு பெற்ற 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று கடன் பெற்றவரான **1) M/s.ஏசியா இண்டர்நேஷனல், சார்பாக அதன் உரிமையாளர் திரு.அப்ரோஸ் அகமது, (கடன்தாரர்), 2) திருமதி. மரியம் கௌசர் சாஹிபா** க/பெ.திரு.அப்ரோஸ் அகமது, **(அடமானதாரர்)** எண்.135, வேப்பேரி, நெடுஞ்சாலை, பெரியமேடு, சென்னை-600 003. **3) திரு.அப்ரோஸ் அகமது, (பிணையாளர்)** எண்.135, வேப்பேரி, நெடுஞ்சாலை, பெரியமேடு, சென்னை-600 003 அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

கடன் பெற்ற நபர் / பிணையாளர் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தத் தவறியதால் குறிப்பாக கடன் பெற்ற நபருக்கும், பிணையாளருக்கும், பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி சட்டம் 13(4)பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் படியும் பிணைக்காப்பு நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002-ன் 8-வது விதியின் படியும் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை **04.10.2018** அன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் உடைமையாக்கி உள்ளார்.

இதுமுதற்கொண்டு கடன்பெற்றவரோ, பிணையாளரோ அல்லது மற்ற பொதுமக்களோ இந்த சொத்தின் எந்தவித வில்லங்கங்களும் ஏற்படுத்த கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது **கனரா வங்கி, கெல்லீஸ் கிளை, சென்னைக்கு** வந்து சேரவேண்டிய கடன் பாக்கித் தொகையான 24.07.2018-ம் தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்டபடி **ரூ.1,47,00,969/-** (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து ஏழு லட்சத்து தொள்ளாயிரத்து அறுபத்து ஒன்பது மட்டும்) மேலும் 30.06.2018 முதல் அதன் மீதான 15.50% p.a. வருடாந்திர கூடுதல் வட்டிக்கும் கட்டுப்பட்டவை என்று இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேற்படி சட்டம், பிரிவு 13 உட்பிரிவு (8)-ன் கீழ் கடனுக்காக வங்கிக்கு ஈடுசெய்து கொடுக்கப்பட்ட சொத்துக்களை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் மீட்டுக்கொள்ள முடியும் என்பதனை கடன்தாரர்கள் கவனத்தில் கொள்ளவும்.

அசையும் மற்றும் அசையா சொத்து விவரங்கள்

அசையும் சொத்து: First charge on the entire stock & goods & fixtures of the Company at the premises or at any other place or in transit.

அசையா சொத்து: வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தாலுகா, ஆம்பூர் சார்பதிவு மாவட்ட அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட உரிமை பத்திரம் 14.12.2004-ம்தேதியிட்ட ஆவணஎண்.3560/2004-ல்விவரிக்கப்பட்டுள்ளபடி டவுன் சர்வே எண்.85, நத்தம் சர்வே எண்.354A/1A பகுதி, கதவு எண்.4, மாளிகை ஷேக் மீரான் சாகிப் தெரு, ஆம்பூர், முனிசிபல் டவுன், வார்டு எண்.CA, பிளாக் எண்.7-ல் சர்வே எண்.85, நத்தம் சர்வே எண்.354A/1A பகுதி, வாணியம்பாடி தாலுகா, வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள 1586 சதுர அடி (26 அடி x 61 அடி) அளவுள்ள நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள இரண்டு மாடி கட்டிடம். இந்த சொத்தானது திருமதி.மரியம் கௌசர் சாஹிபா என்பவரின் பெயரில் உள்ளது. இந்த சொத்தின் எல்லைகள்: வடக்கு: மாளிகை ஷேக் மீரான் சாகிப் தெரு, கிழக்கு: ரஹ்மான் சாகிப் தெரு, மேற்கு: மெக்கா பரிதா பேகம் ஷாகிபா-க்கு சொந்தமான வீடு, தெற்கு: அப்துல் ரசாக் சாகிப் etc. சொந்தமான வீடு.

தேதி : 04.10.2018 — அதிகாரப்பூர்வ அதிகாரி
இடம் : ஆம்பூர் — கனரா வங்கி

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

MMDA நகர் கிளை: எண்.B-5, வட்டார பாக்ஸ் ரோடு, MMDA நகர், அரும்பாக்கம், சென்னை-600 106. தொலை: 044-2383 3027, மின்னஞ்சல் முகவரி: iob1310@iob.in

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு (APPENDIX IV [Rule 8(1)])

பிணையாளர், நிதி சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 and Security Interest (Enforcement) Rules, 2002) கீழ் அதிகார பெற்ற அதிகாரியாக இங்கிலாந்து இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, 13(12) விதி மற்றும் விதி 3-ன்படி **13.4.2018** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு குறிப்பிட்டபடி **31.03.2018** அன்றுள்ளபடி கடன் தொகையான ₹ **33,81,251.02** (ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்து எண்பத்தொன்றாயிரத்து இருநூற்று ஐம்பத்து ஒன்று மற்றும் பைசா இரண்டு மட்டும்) மற்றும் திரும்ப செலுத்துதல் வரை ஒப்பந்த கொள்கைப்படி வரும் 2% காசல் வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள், கோரிக்கை அறிவிப்பு வெளியிட்ட பிறகு செலுத்தப்பட்ட தொகை ஏதேனும் இருப்பின் அதுபோக **04.10.2018** அன்றுள்ளபடி செலுத்த வேண்டிய கடன்தொகையான ₹ **35,88,600/-** (ரூபாய் முப்பத்தைந்து லட்சத்து எண்பத்தெட்டாயிரத்து அறுநூறு மட்டும்) மற்றும் திரும்ப செலுத்தும் வரை ஒப்பந்த கொள்கைப்படி வரும் மற்றும் 2% காசல் வட்டி, கட்டணங்கள், இதர செலவுகளுக்கு கட்டுப்பட்டவை என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடனுக்கு காப்பாக வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய காலவரையறை குறித்து சட்ட பிரிவு 13(8) வழித்தடங்களில் மீது கடன்தாரர்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையா சொத்து விவரம்

சர்வே எண்.179, பழைய எண்.53, புதிய எண்.34, அண்ணா தெரு, வசந்தராவ்கண், வசந்தராவ்கண் கிராமம், வசந்தராவ்கண் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், சென்னை - 600 078 என்னும் முகவரியில் உள்ள நிலம் மற்றும் குடியிருப்பு கட்டிடம். சொத்தானது Mrs.A.மரியம்மாள் பெயரில் உள்ளது.

தேதி: 04.10.2018 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம்: சென்னை — இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா
Central Bank of India

பிராந்திய அலுவலகம் இரண்டாவது தளம், 46/49, மாண்டியத் சாலை, வேப்பேரி, சென்னை-600 008. Ph: 2888 3222, 2888 3208

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு

பிணையாளர், நிதி சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002) மற்றும் விதி 3 & 8ன் படி (Security Interest (Enforcement) Rules, 2002) கீழ் அதிகார பெற்ற அதிகாரியாக இங்கிலாந்து சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, 13(12) கீழ் கடன் பெற்றவரான **Mr.M.ராஜமணி, S/o.K.மாரிமுத்து** மற்றும் R.தெய்வசிகாமணி, W/o. M.ராஜமணி, **இருவரது முகவரி** 12/7, LIG NH2, கலைஞர் தெரு, மாதவரம் நகர், சென்னை, எண்.F1, முதல் தளம், பாலாஜி அபார்ட்மெண்ட், MIG எண் எண்.285, NH1, வேளாங்கண்ணி தெரு, மாதவரம் நகர்-603 209 ஆகியவைகளுக்கு **02.07.2018** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட கடன்தொகையான ரூ.19,25,690/- (ரூபாய் பத்தொன்பது லட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து அறுநூற்று எண்பது மட்டும்) (30.06.2018 அன்று வரை அசல் & வட்டி மற்றும் **30.06.2018** முதல் வேறுபட்ட அறிவிப்பு பெற்ற அதாவது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று அறிவிக்கப்பட்டு

உண்மையான மற்றும் முழுமையான வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தவில்லை. குறிப்பாக கடனாளர்களுக்கு மற்றும் ஜாமீன்தாரர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4) விதி கீழ் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **01.10.2018** அன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் காப்பான அடமானமாக உடைமையாக்கியுள்ளார்.

கடனுக்கு காப்பாக வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய காலவரையறை குறித்து சட்டபிரிவு 13(8) வழித்தடங்களின் கீழ் கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. (அசையாச் சொத்து)

இது முற்றொன்றாக கடன் பெற்றவரோ அல்லது மற்ற பொது மக்களோ இந்த சொத்தினை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்றும் அவ்வாறு ஏற்றுக்கொண்டால் அது **சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மாதவரம் நகர் கிளைக்கு** வர வேண்டிய கடன்தொகையான **01.10.2018** அன்றுள்ளபடி ரூ.18,67,578/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து அறுபத்தேழாயிரத்து ஐந்நூற்று எழுபத்தெட்டு மட்டும்) மேலும் 02.10.2018 முதல் திரும்ப செலுத்தும் காலம் வரை வட்டி, இதர செலவுகளுக்கு கட்டுப்பட்டவை என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

அசையா சொத்து விவரம்

சொத்தானது Mr.M.ராஜமணி பெயரிலுள்ளது. சொத்தின் வகை குடியிருப்பு பகுதி.

நடப்பு எண்.1: மாதவரம் நகரம், சர்வே எண்.45 (பழைய), MIG எண் எண்.285, எர்ஹுப்பும்-1, பெரவள்ளூர் கிராமம், மாதவரம், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியில் உள்ள 3128 சதுர அடி நிலம், மாடியை, வடக்கு 30 அடி நீளம், தெற்கு MIG 68, கிழக்கு MIG 286, மேற்கு MIG 284-A, அளவுகள் வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 68 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 68 அடி, கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 46 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 46 அடி

நடப்பு எண்.2: மேலே குறிப்பிட்டுள்ள நடப்பு எண்1 கிரயத்தில் 362.82 சதுர அடி பரிமாணமுடைய மாடி நிலம்

நடப்பு எண்.3: நடப்பு எண்1ல் விவரிக்கப்பட்டுள்ள கிரயத்தில் பிளாட் எண்.F1, முதல் தளத்தில் உள்ள வீடு, வடக்கு தெற்காக 643 சதுர அடி, குடியிருப்பு பகுதி 753.27 சதுர அடி குடியிருப்பு பகுதி, மொத்த இடம் வடக்கு மற்றும் கிழக்கு பாகம்.

தேதி : 01.10.2018 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம்: மாதவரம் — சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா

28 ஆண்டுகால சிறைவாசத்துக்குப் பிறகு

65 வயதில் இணைந்த காதல் தம்பதி

வேலூர், அக். 6: திருமணமான 5 ஆண்டுகளில் கொலை வழக்கில் கைதான காதல் தம்பதி, 28 ஆண்டுகால சிறைவாசத்துக்குப் பிறகு சனிக்கிழமை இணைந்தனர். வேலூர் அருகே அரியூர் முதியோர் இல்லத்தில் சந்தித்துக் கொண்ட அவர்கள், கட்டியணைத்து கதறிய தருணம் அங்கிருந்த அனைவரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

இலங்கைத் தமிழர் பிரச்னையில் அந்நாட்டிலிருந்து அகதியாய் குடும்பத்துடன் தமிழகம் வந்தவர் விஜயா எனும் பக்காவிஜயா. கழைக்கூத்தாடியான அவர்கள் பிழைப்புக்காக தெருக்களில் நடனமாடி வருவாய் ஈட்டி வந்தனர்.

விஜயாவின் நடனத்தால் கவரப்பட்ட திருப்பூர் நாச்சிபாளையத்தைச் சேர்ந்த செல்வந்தர் குடும்பத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன், கடந்த 1985–ஆம் ஆண்டு வீட்டைவிட்டு வெளியேறி விஜயாவை திருமணம் செய்து கொண்டார். பின்னர், இருவரும் நடனமாடி கிடைக்கும் இடங்களில் தங்கி தங்களது அன்றாட வாழ்க்கையை சுமார் 5 ஆண்டுகள் மகிழ்ச்சியாகக் கழித்தனர். எனினும், இவர்களுக்கு குழந்தைகள் இல்லை.

இந்நிலையில், 1990 ஏப்ரல் 20–ஆம் தேதி கோவை சூலூரில் நடந்த கொலை சம்பவத்தில் சுப்பிரமணியன், விஜயா ஆகிய இருவரையும் போலீஸார் கைது செய்தனர். ரூ. 500 வழிப்பறிக்காக கொலை நடந்ததாக போலீஸார் வழக்குப் பதிவு செய்த நிலையில், உண்மையில் கொலையான நபர் விஜயாவை பலாத்காரம் செய்ய முயன்றபோது ஏற்பட்ட தகராறில் சுப்பிரமணி அந்த நபரை கொலை செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

சுப்பிரமணியன். விஜயா.

நீதிமன்ற வழக்கு விசாரணையின்போது, கொலையை இருவரும் சேர்ந்தே செய்தோம் என விஜயா ஒப்புதல் அளித்ததை அடுத்து இருவருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இதையடுத்து, வேலூர் மத்திய ஆண்கள் சிறையில் சுப்பிரமணியனும், பெண்கள் தனிச்சிறையில் விஜயாவும் அடைக்கப்பட்ட நிலையில், இருவரும் தங்களுக்காக வழக்காட யாருமின்றி 23 ஆண்டுகள் சிறையிலேயே கழித்தனர். சிறையில் இருந்தபோது விஜயாவுக்கு உடல் நலமும், மன நலமும் வெகுவாக பாதிக்கப்பட்டது. இதையடுத்து ராஜீவ் காந்தி கொலைக் கைதியான நளினியின் உதவியால் விஜயா கடந்த 2013–ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார். பின்னர், விஜயா அரியூரில் உள்ள தஞ்சம் முதியோர் இல்லத்தில் தங்கியிருந்து தனது கணவர் சுப்பிரமணியனின் விடுதலைக்காகக் காத்திருந்தார்.

இந்நிலையில், எம்ஜிஆர் நூற்றாண்டு விழாவையொட்டி வேலூர் மத்திய சிறையில் இருந்து சுப்பிரமணியன் சனிக்கிழமை விடுதலை செய்யப்பட்டார். 28 ஆண்டுகால சிறைவாசத்துக்குப் பிறகு விடுதலையான சுப்பிரமணியன், தனது மனைவி விஜயாவைக் காண அரியூர் முதியோர் இல்லத்துக்குச் சென்றார்.

அங்கு தனது கணவரைக் கண்டதும் விஜயா, சுப்பிரமணியனைக் கட்டியணைத்து கதறி அழுதார். இந்த நிகழ்வு அங்கிருந்த அனைவரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியது. பின்னர், சுப்பிரமணியத்தை விஜயா முதியோர் இல்ல வாசிகளிடம் அறிமுகம் செய்து வைத்து மகிழ்ந்தார்.

இதுகுறித்து சுப்பிரமணியன் கூறியதாவது:

எங்கள் வாழ்க்கையைக் காப்பற்றிக் கொள்ள நடந்த சம்பவத்தில் இருவரும் நீண்ட தண்டனையை அனுபவித்து விட்டோம். இனி நாங்கள் இருவரும் சொந்த ஊருக்கே செல்ல உள்ளோம். அங்கு எங்களை ஏற்க யாரும் இல்லை என்றாலும், கிடைக்கும் வேலையை வைத்து பிழைத்துக் கொள்வோம்.

எனது உயிர் உள்ளவரை விஜயாவை பாதுகாப்பேன். என்னை மட்டுமே நம்பியுள்ள விஜயாவை நான் காக்காவிடில் அந்த பாவம் என்னை சும்மாவிடாது என்றார் அவர்.

முதியோர் இல்லவாசிகள் கூறுகையில், விஜயா, சுப்பிரமணியன் ஆகிய இருவரும் திருப்பூருக்குச் செல்ல விரும்புகின்றனர். ஆனால், இவர்களை சுப்பிரமணியன் குடும்பத்தார் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. எனினும், இவர்களுக்கு தக்கப் பாதுகாப்பு அளித்திட திருப்பூர் மாவட்டக் காவல் துறைக்கும், அங்குள்ள தொண்டு நிறுவனங்களுக்கும் வேண்டுகோள் விடுக்க உள்ளோம் என்றனர்.

காதலித்து கரம் பிடித்து வாழ வழியின்றி வாழ்ந்தவர்களுக்கு 28 ஆண்டுகால சிறைவாசமே பெரும் துன்பத்தை அளித்துவிட்டது. தற்போது சுப்பிரமணியனுக்கு 65 வயதும், விஜயாவுக்கு 60 வயதும் ஆகிறது. மீதியுள்ள வாழ்க்கையாவது அவர்கள் நிம்மதியுடன் கழித்திட அரசு உதவிகள் புரிய வேண்டும் என்பதே பல்வேறு தரப்பினரின் கோரிக்கையாகும்.

நளினி உதவியால் விடுதலையான விஜயா

கொலை வழக்கில் கைதாகி 23 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த விஜயாவை, விடுதலை செய்ய உதவிகள் புரியும்படி ராஜீவ் காந்தி கொலைக் கைதியான நளினி தனது வழக்குரைஞரும், சிறைக் கைதிகள் உரிமைகள் மையத்தின் இயக்குநருமான புகழேந்தியிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். இதையடுத்து அவரது, 2011–ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்தார்.

மேலும், 20 ஆண்களுக்கு மேலாக சிறையில் உள்ள வயது முதிர்ந்த கைதிகளை கருணை அடிப்படையில் விடுதலை செய்யும் நடைமுறையை அரசு பின்பற்றி வரும் நிலையில், 54 வயதை கடந்த மனநிலை பாதிக்கப்பட்ட விஜயாவையும் விடுதலை செய்திட வேண்டும் என்றும் அவர் தரப்பில் வாதிடப்பட்டது. இதையடுத்து 2013–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் விஜயா விடுதலை செய்யப்பட்டார்.

வில்லங்கச் சொத்து ஆவணப் பதிவுகள்: விசாரணையை காலம் தாழ்த்தக் கூடாது

பதிவுத் துறை அறிவுறுத்தல்

சென்னை, அக். 6: *வில்லங்கச் சொத்து ஆவணப் பதிவுகள் தொடர்பான விசாரணைகளை காலம் தாழ்த்தாமல் விரைந்து முடிக்க வேண்டுமென பதிவுத் துறை அறிவுறுத்தியுள்ளது. இது குறித்து அனைத்து சார்-பதிவாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு பதிவுத் துறை தலைவர் ஜெ.குமரகுருபரன் அண்மையில் அனுப்பியுள்ள சுற்றறிக்கை விவரம்:–*

ஒருவர் தாக்கல் செய்யும் ஆவணப் பதிவு குறித்து ஏற்கெனவே தடை மனு அளிக்கப்பட்டு அந்த மனுவை அளித்த நபர் சொத்து தன்னுடையது என்பதற்கான ஆதாரங்களை தெளிவாக சமர்ப்பித்து இருக்க வேண்டும்.

அவ்வாறு சமர்ப்பித்து இருந்தால் அந்தக் குறிப்பிட்ட சொத்து குறித்து வேறு ஒருவரால் ஆவணம் தாக்கல் செய்யப்படும் போது இருநபர்களையும் விசாரிக்க வேண்டும்.

சொத்தின் உரிமை குறித்து சார்பதிவாளர் மனநிறைவு அடைந்து விசாரணையின் முடிவை வெளியிட்ட பிறகே பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

சொத்து உரிமை குறித்த சந்தேகங்கள் நிரூபிக்கப்படவில்லை என்றால் பதிவு மறுக்கப்பட்டு ஆவணங்கள் திருப்பி அளிக்கப்பட வேண்டும். இதனை ஒருதரப்பினர், மற்றொரு தரப்பினரை பழிவாங்கும் கருவியாக மாற்றிட சார்-பதிவாளர் அனுமதிக்கக் கூடாது. விசாரணை விரைவாகவும், சுருக்கமாகவும் இருக்க வேண்டும். விசாரணை என்ற பெயரில் தாமதம் செய்வது கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும்.

இந்த சுற்றறிக்கையின்படியே சார்பதிவாளர்கள் செயல்பட வேண்டும். உரிய ஆதாரங்கள் ஏதுமின்றி அளிக்கப்படும் தடை மனுக்களையும் சார்பதிவாளர் அலுவலகங்களில் அனுமதித்து, உண்மையான சொத்தின் உரிமைதாரரால் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களையும் பதிவு செய்யாமல் மறுப்பதாக பெருமளவு புகார்கள் வருகின்றன.

உரிய ஆதாரங்களின்றி அனுப்பப்படும் அல்லது நேரில் அளிக்கப்படும் தடை மனுக்களை ஏற்பது சொத்தின் உண்மையான உரிமைதாரருக்கு வீண் அலைச்சலையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தும்.

எனவே, உரிய ஆதாரங்களுடன் அளிக்கப்படும் தடை மனுக்களை மட்டுமே ஏற்க வேண்டும். தடை மனு அளிக்கும் நபர் அவரது பெயரில் உள்ள பட்டா நகலை, தடை மனுவுடன் இணைக்க வேண்டும். பதிவு அலுவலர் இதனை கணினியில் உள்ள பட்டா நகலுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்பன போன்ற அம்சங்களை ஆராய்ந்த பிறகே தடை மனுவை ஏற்க வேண்டும் என்று பதிவுத் துறை தலைவர் குமரகுருபரன் உத்தரவிட்டுள்ளார்.

மாநில அளவிலான இலக்கியப் போட்டிகள்: மாணவர்களுக்கு ரூ.2.20 லட்சம் பரிசு

சென்னை, அக். 6: *தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் மாநில அளவில் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 18 மாணவ, மாணவிகளுக்கு ரூ.2.22 லட்சம் பரிசுத் தொகையை தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் க.பாண்டியராஜன் வழங்கினார்.*

பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் மாநில அளவில் நடத்தப்பட்ட இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா சென்னையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் கோ.விசயராகவன் தலைமை வகித்தார். இதில் அமைச்சர் க.பாண்டியராஜன் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார்.

ஒவ்வொரு போட்டிகளிலும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ.15 ஆயிரம், இரண்டாம் பரிசாக ரூ.12 ஆயிரம், மூன்றாம் பரிசாக ரூ.10 ஆயிரம் வழங்கப்பட்டது.

பள்ளி அளவில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள்:–

கவிதைப் போட்டி: *முதல் பரிசு– பீ.ஜோசி அபர்ணா, வித்யாகிரி மேல்நிலைப்பள்ளி, சிவகங்கை மாவட்டம், இரண்டாம் பரிசு– செ.சுகசஞ்சய், ஸ்ரீசரஸ்வதி மேல்நிலைப் பள்ளி, தருமபுரி மாவட்டம், மூன்றாம் பரிசு– மா.சண்முகநந்தா, பி.எம்.வி. மெட்ரிக். மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.*

மாநில அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுடன் அமைச்சர் க. பாண்டியராஜன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் கோ.விசயராகவன்.

கட்டுரைப் போட்டி: *முதல் பரிசு– ம.திவ்யா, புனித மரியண்ணன் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சிவகங்கை மாவட்டம், இரண்டாம் பரிசு– ரா.திவ்யதர்சினி, நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளி, சேலம், மூன்றாம் பரிசு– ஆ.ராஜலட்சுமி, பா.தொ.ந.உ.க. மேல்நிலைப் பள்ளி, திருநெல்வேலி மாவட்டம்.*

பேச்சுப் போட்டி: *முதல் பரிசு– சை.புவனேஸ்வரி, எஸ்.ஆர்.எம். மேல்நிலைப்பள்ளி, அம்பத்தூர், சென்னை, இரண்டாம் பரிசு– ரோஷிணி, கிறிஸ்தவ மேல்நிலைப்பள்ளி, தாம்பரம், சென்னை, மூன்றாம் பரிசு– மதுமிதா, பெஸ்ட் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சீர்காழி.*

கல்லூரி அளவில் வெற்றி பெற்ற மாணவர்கள்:

கவிதைப் போட்டி: *முதல் பரிசு– த.கார்த்திகா, செந்தமிழ்க் கல்லூரி, மதுரை, இரண்டாம் பரிசு– இரா.மணிகண்டன், ஜவஹர் அறிவியல் கல்லூரி, கடலூர், மூன்றாம் பரிசு– க.அனிதா, மன்னர் சரபோஜி கல்லூரி, தஞ்சாவூர்.*

கட்டுரைப் போட்டி: *முதல் பரிசு– ப.தேவி, பாத்திமா கல்லூரி, மதுரை, இரண்டாம் பரிசு– இ.மரிய ரோஸ்லின் மேரி, கொன்சாகா மகளிர் கல்லூரி, கிருஷ்ணகிரி, மூன்றாம் பரிசு– க.பாண்டித்துரை, எஸ்.ஆர்.வி. கல்வியியல் கல்லூரி, சிவகாசி, விருதுநகர் மாவட்டம்.*

பேச்சுப் போட்டி: *முதல் பரிசு– ந.விஜயநம்பி, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி, இரண்டாம் பரிசு– மூ.ஜனனி, பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், மூன்றாம் பரிசு– நவீன் லூர்து ராஜ், ஆனந்தா கல்லூரி, சிவகங்கை மாவட்டம்.*

வேலூர் சிறையிலிருந்து 6 பெண்கள் உள்பட மேலும் 16 கைதிகள் விடுதலை

வேலூர், அக். 6: எம்ஜிஆர் நூற்றாண்டு விழா, மகாத்மா காந்தியின் 150–ஆவது ஆண்டு பிறந்தநாள் விழாவையொட்டி, வேலூர் மத்திய சிறையிலிருந்து 6 பெண்கள் உள்பட 16 கைதிகள் சனிக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர். ஏற்கெனவே, 7 கட்டங்களாக 99 கைதிகள் விடுதலை செய்யப்பட்டிருந்த நிலையில் தற்போது விடுதலையானவர்களுடன் சேர்த்து இதுவரை 115 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

எம்ஜிஆர் நூற்றாண்டு விழாவையொட்டி தமிழக சிறைகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வரும் கைதிகள் விடுதலை செய்யப்பட்டு வருகின்றனர்.

இதையொட்டி, வேலூர் மத்திய சிறையில் 187 ஆண் கைதிகளும், 15 பெண் கைதிகளையும் விடுதலை செய்திட தமிழக அரசுக்கு பட்டியல் அனுப்பப்பட்டிருந்தது.

இதில், முதல்கட்டமாக கடந்த ஜூலை மாதம் 25–ஆம் தேதி 7 ஆண் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். தொடர்ந்து, 7 கட்டங்களாக மொத்தம் 99 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இந்நிலையில், 8–ஆவது கட்டமாக 4 பெண்கள் உள்பட 13 கைதிகள் சனிக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

இதேபோல், காந்தியின் 150–ஆவது ஆண்டு பிறந்தநாளையொட்டி 5 ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை அனுபவிக்கும் கைதிகளை விடுதலை செய்திட அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அதன் அடிப்படையில், வேலூர் மத்திய சிறையில் இருந்து 2 பெண்கள் உள்பட 3 பேர் சனிக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர். இதன்படி, சனிக்கிழமை ஒரே நாளில் 6 பெண்கள் உள்பட 16 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். எம்ஜிஆர் நூற்றாண்டு விழாவையொட்டி வேலூர் மத்திய சிறையிலிருந்து ஏற்கெனவே 7 கட்டங்களாக 99 கைதிகள் விடுதலை செய்யப்பட்ட நிலையில் தற்போது விடுதலையானவர்களுடன் சேர்த்து இதுவரை 115 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வங்கதேசத்தைச் சேர்ந்த 7 பேர் திருப்பூரில் கைது

திருப்பூர், அக். 6: திருப்பூரில் முறையான ஆவணங்களின்றி தங்கியிருந்த வங்கதேசத்தைச் சேர்ந்த இளைஞர்கள் 7 பேரை போலீஸார் சனிக்கிழமை கைது செய்தனர்.

திருப்பூர், ஊரக காவல் நிலையத்துக்கு உள்பட்ட பகுதியான செவந்தம்பாளையம் பகுதியில் போலீஸார் வெள்ளிக்கிழமை இரவு வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் சென்று கொண்டிருந்த மூன்று பேரை பிடித்து விசாரணை மேற்கொண்டதில், அவர்கள் வங்கதேசத்தைச் சேர்ந்த இப்ராஹிம் (25), சுபியன் (22), உசேன் (23) என்பது தெரியவந்தது.

தொடர்ந்து விசாரணை மேற்கொண்டதில் செவந்தம்பாளையம் பகுதியில் சாமத்தோட்டம் பகுதியில் லலிதா என்பவரது வீட்டில் மேலும் 4 பேர் தங்கியிருந்தது தெரியவந்தது. இதையடுத்து, போல்ஸ் மண்டல் (22), ரோனி (35), சித்திக் அலி (28), காஜ் (19) ஆகிய 4 பேரையும் சனிக்கிழமை காலை கைது செய்தனர்.

இவர்கள், வங்கதேசத்தில் இருந்து கள்ளத்தனமாக இந்தியாவுக்குள் நுழைந்து செவந்தம்பாளையம் பகுதியில் பனியன் நிறுவனங்களில் பணியாற்றி வந்துள்ளனர். மேலும், இவர்களிடம் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) உள்ளிட்ட முறையான ஆவணங்கள் எதுவும் இல்லை என்பதும் தெரியவந்தது.

மாண்புமிகு கடன் வசூல் தீர்ப்பாயம்-II
சென்னை முன்னிலையில்

O.A. No 423/2018

M/s. ஓரியண்டல் பேங்க் ஆஃப் காமர்ஸ்,, அதன் சார்பில் அதன் உதவி மேலாளர், தொகுப்பு அலுவலகம் - தீர்வு, வசூல் & சட்டக்கிளை எண்.63, டாக்டர். இராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை - 600004. ...மனுதாரர்

எதிரிடை

P.பரஞ்சோதி, S/o. M.ரங்கநாதன், எண்.25, பாண்டியன் நகர் வடக்கு, கோவர்தனகிரி, ஆவடி, சென்னை - 600071 & மற்றொருவர் ...எதிர்வாதிகள்

பெறுநர்

1. P.பரஞ்சோதி, S/o. M.ரங்கநாதன், எண்.25, பாண்டியன் நகர் வடக்கு, கோவர்தனகிரி, ஆவடி, சென்னை - 600071

2. திருமதி. J.ஷீலா, W/o. திரு.P.பரஞ்சோதி, எண்.25, பாண்டியன் நகர் வடக்கு, கோவர்தனகிரி, ஆவடி, சென்னை - 600071

எமது கட்சிக்காரர் ஓரியண்டல் பேங்க் ஆஃப் காமர்ஸ், ரூ.18,09,681.45/-ஐ வட்டியுடன் வசூலிக்க மேற்கண்ட O.A.எண்.423/2018-ஐ மாண்புமிகு கடன்வசூல் தீர்ப் பாயம் II, சென்னை முன் தாக்கல் செய்துள்ளது. மேற் கண்ட மாண்புமிகு கடன் வசூல் தீர்ப்பாயம் II சென்னை, 26.10.2018 அளவில் பதிலளிக்குமாறு உங்கள் அனை வருக்கும் அறிவிக்குமாறு உத்தரவிட்டுள்ளது. ஆகை யால் மேற்கூறப்பட்ட தீர்ப்பாயம் முன் 26.10.2018 அன்று காலை 11.00 மணிக்கு நீங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகுமாறு பார்த்துக் கொள்ளவும், தவறினால் மாண்புமிகு தீர்ப் பாயம் மேற்குறிப்பிட்ட O.A-ஐ நீங்கள் இல்லாமலே தீர்மானிக்கும்.

S.K.ஸ்ரீனிவாசன்
மனுதாரருக்கான வழக்கறிஞர்
ப.எண்.21, பு.எண்.35, முதல் தெரு, P.S.சிவசாமி சாலை, மயிலாப்பூர், சென்னை - 600004.

SRI MUTHUKUMARAN COLLEGE OF EDUCATION
CHIKKARAYAPURAM
NEAR MANGADU
CHENNAI – 600 069.
Ph: 044 – 2366 2399
Mob : 94983 83544

Requires ASSISTANT PROFESSORS

Applications are invited from Post Graduate M.Ed and M.Phil (Education)candidates those who qualified with NET / SLET / PhD may be preffered in the following Departments :

TAMIL / ENGLISH / MATHS / COMPUTER SCIENCE / COMMERCE / BIOLOGICAL SCIENCE / PHYSICAL SCIENCE / ECONOMICS / PSYCHOLOGY / SOCIOLOGY

Salary as per norms.
Forward the resume to :
smcemangadu2005@gmail.com

பாரத ஸ்டேட் வங்கி
சொத்து மதிப்பீட்டு கிளை
44, எல்டாம்ஸ் ரோடு, தேனாம்பேட்டை, சென்னை-600 018. போன்:24338112

கோரிக்கை அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடன்பட்டோர் சொத்துகளை ஏலங்கள்க்கும் நிதிச்சொத்துகளை சீரமைத்தல் மற்றும் கடன்பட்டோர் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க சட்டம் பிரிவு 13(2)-ன் கீழ் அறிவிப்பு (இனி சட்டம் என்று அழைக்கப்படும்)

கடன்தாரர்: திரு R.சங்கர், த/பெ.ராஜரத்தினம், இருப்பிட விபரம், எண் 97, வார்டு எண்.11, மாரி நகர், வெங்கடாபுரம், குன்றத்தூர், சென்னை-600 069. பிணைய விபரம்: உரிமையாளர்: ஸ்ரீ சிவ சக்தி டிராண்ஸ்போர்ட், எண்.97, மாரி நகர், வெங்கடாபுரம், குன்றத்தூர், சென்னை-600 069. சொத்து விபரம்: "ஸ்ரீ துர்கா அபார்ட்மெண்ட்ஸ்" ப்ளாட் எண் G-1, தரை தளம் - பின்புற பகுதி, மேல் நகர் விரிவாக்கம், குன்றத்தூர், சென்னை-600 069.

தங்களது லோன்/கொள்கடன் ரூ 22,95,000/- அளவிலான வீட்டுக் கடன் வரவில் 02330869996 மற்றும் அதனுடன் கணக்கு எண் 62340073649 (26.07.2018 அன்றுள்ளபடி பாக்கி தொகை ரூ 30,57,1040/- + வட்டி) வங்கியின் e-SBH மேற்கு தாம்பரம் கிளை, சென்னை மின்னணு சொத்துகள் அடமானம் வைக்கப்பட்டதன் பேரில் வழங்கியது அட்டவணை - A சொத்து சொத்து. தென்சென்னை பதிவு மாவட்டம், குன்றத்தூர் சார்பதிவு மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, சென்னை-600 028, C.M.D.A. மேம்பட்ட லேஅவுட், BL எண் 247/2012-13, 01-03-2013 தேதியிட்ட அனுமதி கடிதம் எண்.512/2013, வைட் பிளாஸில் பிரிவு எண்.21734/2012-13, குன்றத்தூர் டவுன் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரியால் கட்டிட அனுமதி செய்யப்பட்டு, பொது பட்டா எண்.319, சர்வே எண்கள் 67/4A & 67/4B, புதிய பட்டா எண் 3305, பட்டாவில் பதிவான சர்வே எண்.67/4A1B, வேல் நகர் விரிவாக்கம், குன்றத்தூர் கிராமம், எண்.74, மனை எண்கள் 23 & 23-ல் உள்ள 2455 சதுர அடி அளவிலான காலி நிலம் மற்றும் அதனுடன் இணைந்த பகுதிகளும், மனை எண்கள் 23 & 23-ன் எல்லைகள்: வடக்கில் 20 அடி ரோடு, தெற்கில் மனை எண்.24, கிழக்கில் 20 அடி ரோடு, மேற்கில் சர்வே எண் 66-ல் உள்ள நிலம், அளவுகள்: வடக்குப்பக்கம் 41 அடி, தெற்குப்பக்கம் 41 அடி, கிழக்குப்பக்கம் 60 அடி, மேற்குப்பக்கம் 60 அடி மற்றும் 6 இன்ச் ஆக மொத்தம் 2455 சதுர அடி அட்டவணை - "B" உரிமையாளர் தன்னையத்துள்ளார்: அட்டவணை சொத்து "A" குறிப்பிட்டுள்ள 2455 சதுர அடியில் 1244 சதுர அடி பாகம் பிரிக்கப்படாத பங்கு நிலத்தில் மனை எண்கள் 23 & 23, அட்டவணை - "C" (பத்திரம் பிரிக்கப்பட்டுள்ளது) அட்டவணை "B" சொத்தில் 384 சதுர அடி (கார் பார்க் ஏரியா உள்ளிட்டது) பாகம் பிரிக்கப்படாத பங்கு நிலம், அட்டவணை - "D": 731 சதுர அடி குப்பை பிடப் ஏரியாவில் பொது ஏரியா உள்ளிட்ட "ஸ்ரீ துர்கா அபார்ட்மெண்ட்ஸ்" என பெயரிடப்பட்ட தமாதாரர்களின் ப்ளாட் எண் G - 1, குன்றத்தூர் பகுதி பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட சொத்து. 30.07.2018 தேதியிட்டு தங்களுக்கு பதிவு தபாலில் 30.07.2018 அன்று அனுப்பப்பட்ட 13(2) கோரிக்கை அறிவிப்பானது 02.08.2018 அன்று பெறப்படாத காரணத்தினால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

கடன்தாரர்: திரு D.புருஷோத்தமன், த/பெ திரு தயாளன், எண் 28/70, மாரியம்மன் கோயில் தெரு, அப்பாவுகொத்தூர், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, சென்னை-602105. அலுவலக விபரம்: திரு D.புருஷோத்தமன், Mr.ஸ்ரீ ஹம் சக்தி பெரியண்டாவிலாஸ், எண் 32, மெட்டு தெரு, அத்திப்பட்டு, அம்பத்தூர் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், திருவள்ளூர், சென்னை-600 058.

தங்களது லோன்/கொள்கடன் ரூ 13,15,345/- அளவிலான வீட்டுக்கடன் கணக்கு எண் 64144512747, வரவில் (12.07.2018-அன்றுள்ள படியான பாக்கித் தொகை ரூ.16,20,209/- + 13.07.2018-முதலான வட்டி) வங்கியின் e-SBH, ஸ்ரீபெரும்புதூர் கிளை, மின்னணு சொத்துகள் அடமானம் வைக்கப்பட்டதன் பேரில் வழங்கியது. அட்டவணை A சொத்து சொத்து: செங்கல்பட்டு பதிவு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் இணை சார்பதிவு மாவட்டம், செங்கல்பட்டு சார்பதிவு அலுவலகத்தூர், மாரியம்மன் கோயில் தெரு, ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, கதவு எண் 28/70, பழைய சர்வே எண் 1821, புதிய சர்வே எண் 1825-ல் உள்ள 2584 சதுர அடி அளவிலான காலி நிலம் மற்றும் கட்டப்பட்டுள்ள கட்டடம் மற்றும் அதனுடன் இணைந்த பகுதிகளும் எல்லைகள்: வடக்கில்: பெருமாளின் மனை, தெற்கில் ரோடு, கிழக்கில் காஞ்சிபுரமாளின் மனை, மேற்கில் மாளிக்கையின் மனை. (12.07.2018 தேதியிட்டு தங்களுக்கு பதிவு தபாலில் 13.07.2018 அன்று அனுப்பப்பட்ட 13(2) கோரிக்கை அறிவிப்பானது 14.07.2018 அன்று பெறப்படாத காரணத்தினால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது)

கடன்தாரர்கள்: (1) திரு.M முகம்மது ஹுசைன் ரியாஸ், பழைய எண் 10, புதிய எண் 29, 13வது தெரு, B.V நகர், நங்கநல்லூர், பழவந்தாங்கல், சென்னை-600114 (2) திரு.M.M.H.ரியாஸ், எண் 5 புதிய எண் 6, 2வது தெரு, கும்பிடிய சந்து, முத்துபேட்டை (தபால்), திருத்துறைப்பூண்டி (தாலுகா), திருவள்ளூர் (மாவட்டம்) - 214 704.

தங்களது லோன்/கொள்கடன் ரூ 28,00,000/- அளவிலான வீட்டுக்கடன் கணக்கு எண் 62423006096, வரவில் (11.04.2018-அன்றுள்ள படியான பாக்கித் தொகை ரூ.27,68,184.52 + வட்டி) வங்கியின் ARM கிளை, மின்னணு சொத்துகள் அடமானம் வைக்கப்பட்டதன் பேரில் வழங்கியது. பகுதி-II- அலையா சொத்தின் அட்டவணை: (அட்டவணை II-ன் படியான அடமான சொத்துகளின் விபரங்கள் விவரிக்கப்பட்டுள்ளன): தென்சென்னை பதிவு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டம், எல்லைக்குட்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, அனகாபுத்தூர் கிராமம், பழைய சர்வே எண் 22/76, பட்டா எண் 1425-ன் படியான பட்டா எண் 23/76A1B, மனை எண் 74, மனை எண்கள் 23 & 23-ல் உள்ள 2455 சதுர அடி அளவிலான காலி நிலம் மற்றும் அதனுடன் இணைந்த பகுதிகளும், எல்லைகள்: 23 & 23-ன் எல்லைகள்: வடக்கில் 20 அடி ரோடு, தெற்கில் மனை எண்.24, கிழக்கில் 20 அடி ரோடு, மேற்கில் சர்வே எண் 66-ல் உள்ள நிலம், அளவுகள்: வடக்குப்பக்கம் 41 அடி, தெற்குப்பக்கம் 41 அடி, கிழக்குப்பக்கம் 60 அடி, மேற்குப்பக்கம் 60 அடி மற்றும் 6 இன்ச் ஆக மொத்தம் 2455 சதுர அடி அட்டவணை - "B" உரிமையாளர் தன்னையத்துள்ளார்: அட்டவணை சொத்து "A" குறிப்பிட்டுள்ள 2455 சதுர அடியில் 1244 சதுர அடி பாகம் பிரிக்கப்படாத பங்கு நிலத்தில் மனை எண்கள் 23 & 23, அட்டவணை - "C" (பத்திரம் பிரிக்கப்பட்டுள்ளது) அட்டவணை "B" சொத்தில் 384 சதுர அடி (கார் பார்க் ஏரியா உள்ளிட்டது) பாகம் பிரிக்கப்படாத பங்கு நிலம், அட்டவணை - "D": 731 சதுர அடி குப்பை பிடப் ஏரியாவில் பொது ஏரியா உள்ளிட்ட "ஸ்ரீ துர்கா அபார்ட்மெண்ட்ஸ்" என பெயரிடப்பட்ட தமாதாரர்களின் ப்ளாட் எண் G - 1, குன்றத்தூர் பகுதி பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட சொத்து. 30.07.2018 தேதியிட்டு தங்களுக்கு பதிவு தபாலில் 30.07.2018 அன்று அனுப்பப்பட்ட 13(2) கோரிக்கை அறிவிப்பானது 02.08.2018 அன்று பெறப்படாத காரணத்தினால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

தேதி: 06.10.2018 அதிகாரபூர்வ அதிகாரி
இடம்: சென்னை பாரத ஸ்டேட் வங்கி, ARMB, தேனாம்பேட்டை சென்னை

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
சாலிகிராமம் கிளை
எண்.7-C, புதிய எண்.33, அருணாச்சலம் ரோடு, சாலிகிராமம், சென்னை-600 093, Ph: 044 - 2376 3765, 2376 1709, மின்னஞ்சல் iob0676@iob.in

அசையா சொத்தின் e-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

கடன்பட்டோர் சொ

தமிழ்மணி

thamizhmani@dinamani.com 28.6.2018

பழமொழி நானூறு

முன்றுறையரையனார்



ஒரு குடியிற் பிறந்தவர்கள்

முன்னின்னா ராயினும் மூடும் இடர்வந்தால்
பின்னின்னா ராகிப் பிரியார் ஒருகுடியார்
பொன்னாச் செயினும் புகாஅர் புனலூர
துன்னினா ரல்லார் பிறர். *(பா–66)*

நீர்நாடனே!, ஒரு குடியிற் பிறந்தவர்கள் முன்னர் இனிமையுடையவரல்லராயிருப்பினும், மிக்க துன்பம் வந்துற்றவிடத்து பின்னரும் இனிமையுடை யரல்லராகிப் பிரிந்திரார். ஒரு குடிப்பிறந்தவ ரல்லவராகிய பிறரை, பொன்போலப் போற்றிச் செயினும் தமக்கு இடர் வந்த ஞான்று அதனை நீக்கப் புகுதலிலர். (க–து) ஒரு குடியிற் பிறந்தவர்கள் தம்முள் ஒருவர்க்குத் துன்பம் வந்துற்றபொழுது மாறுபாடு நீங்கி உதவி செய்வர் என்பதாயிற்று. **'பொன்னாச் செயினும் புகாஅர் புனலூரதுன்னினார் அல்லார் பிறர்'** என்பது பழமொழி.

கவி பாடலாம் வாங்க – 45

'வாகீச கலாநிதி' கி.வா. ஜகந்நாதன்

11. ஒத்தாழிசைக் கலிப்பாக்கள் (1)

பாக்கள் நான்கில் மூன்றாவது கலிப்பா. அதற்குரிய ஓசை துள்ளலோசை. ஒத்தாழிசைக் கலிப்பா, கொச்சகக் கலிப்பா, வெண் கலிப்பா என்ற மூன்று பெரும் பிரிவை உடையது அது.

ஒத்தாழிசைக் கலிப்பாவின் வகை: (1) நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, (2) அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, (3) வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா என்னும் மூன்று. கொச்சகக் கலிப்பா (1) தரவு கொச்சகக் கலிப்பா, (2) தரவினைக் கொச்சகக் கலிப்பா, (3) சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, (4) பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, (5) மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்று ஐந்து வகைப்படும். வெண் கலிப்பாவில் வேறு வகையில்லை.

கலிப்பாவிற்குரிய உறுப்புக்கள் சில உண்டு. தரவு, தாழிசை, அம்போதரங்கம், வண்ணகம், தனிச்சொல், சுரிதகம் என்பவை அவை. இந்த உறுப்புக்கள் யாவும் வரும் கலிப்பா வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா.

ஒத்தாழிசைக் கலிப்பாவில் ஒன்றாகிய நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவில் தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் நான்கும் வரும். இவற்றோடு அம்போதரங்கம் சேர்ந்து வருவது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா. அவற்றோடு வண்ணக உறுப்பும் சேர்ந்து வருவது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவாகும்.

நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா

தரவு ஒன்றும் தாழிசை மூன்றும் தனிச்சொல்லும் சுரிதகமும் முறையே பெற்று வருவது நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா.

தரவு *என்பது தருதல் என்னும் பொருளை உடையது. அது முகப்பைப் போன்றது. எருத்தம் என்றும் அதற்குப் பெயருண்டு. நான்கு சீர்களை உடைய அடிகளால் வரும். பெரும்பாலும் விளச்சீர், காய்ச்சீர்களால் அடிகள் அமையும். நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவில் தரவு மூன்றடி முதல் பல அடிகளுடையதாக வரும்.*

தாழிசை *என்பது தரவினும் தாழ்ந்து இசைப்பதனால் அப்பெயர் பெற்றது. அதற்கு இடைநிலைப் பாட்டு என்றும் ஒரு பெயர் உண்டு. இரண்டடி முதல் நான்கடி வரையிலும் தாழிசை வரும். தரவுக்குள்ள அடிகளைவிடக் குறைவாகவே இருக்க வேண்டும்.*

தனிச் சொல் *என்பது பாட்டின் அடிகளோடு ஓசையில் இசையாமல் தனியே நிற்கும். அதற்கு விட்டிசை, தனிநிலை, கூன் என்ற பெயர்களும் உண்டு.*

சுரிதகம் *என்பது கடைசியில் முடிந்து நிற்கும் உறுப்பு. கலிப்பா வஞ்சிப்பா என்னும் இரண்டிலும் இது வரும். வெண்பாச் சுரிதகம், ஆசிரியப்பாச் சுரிதகம் என்று இரண்டு வகை உண்டு. நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவில் இந்த இரண்டில் ஏதேனும் ஒன்று வரும். சுரிதகம் என்பது சுழித்து முடிதல் என்னும் பொருளுடையது. அதற்கு அடக்கியல், வைப்பு, வாரம், போக்கியல் என்றும் பெயர்கள் உண்டு. இந்த உறுப்புக்களின் பெயருக்குரிய காரணத்தைப் பின்வரும் பழைய சூத்திரம் புலப்படுத்துகிறது.*

*'தந்துமுன் நிற்றலின் தரவே, தாழிசை**
ஒத்தாழ் தலின்அஃ தொத்தா ழிசையே,
தனிதர நிற்றலின் தனிச்சொல், குனிதிரை
நீர்ச்சுழி போல நின்றுசுரிந் திறுதலின்
**சோர்ச்சியில் புலவர் சுரிதகம் என்ப'*

நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவுக்கு உதாரணம் வருமாறு.

(தரவு)

'வாணெடுங்கண் பனிகூர வண்ணம்வே றாய்த்திரிந்து
தோணெடுந்தண் டகைதுறந்து துன்பங்கூர் பசப்பினவாய்ப்
பூணொடுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ'

(தாழிசை)

சூருடைய நெடுங்கடங்கள் சொலற்கரிய என்பவால்
பீருடைய நலந்தொலையப் பிரிவாரோ பெரியவரே (1)
சேணுடைய கடுங்கடங்கள் செலற்கரிய என்பவால்
நாணுடைய நலந்தொலைய நடப்பாரோ நயமிலரே (2)
சிலம்படைந்த வெங்கானம் சீரிலவே என்பவால்
புலம்படைந்த நலந்தொலையப் போவாரோ பொருளிலரே (3)

(தனிச்சொல்)

எனவாங்கு

(சுரிதகம்)

'அருளென லிலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்
பன்னெடுங் காலமும் வாழியர்
பொன்னொடுந் தேரொடும் தானையிற் பொலிந்தே'

இந்தக் கலிப்பாவில் தரவு ஒன்றும், தாழிசைகள் மூன்றும், தனிச் சொல்லும், சுரிதகமும் அமைந்துள்ளமையின் இது நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா.

(தொடர்ந்து பாடுவோம்...)

நற்றிணை உணர்த்தும் நங்கையர் மாண்பு!

பெற்றோர் உடன்படாததால் பெண்ணவள் பிரியமானவனுடன் சென்று காதலனின் ஊரார்முன் திருமணம் செய்து கொள்கிறாள். செல்வச் செழிப்பு பொலிந்து கொண்டிருந்த புக்ககத்துள் வறுமை எவ்வாறோ வந்து நுழைந்தது. ஒரு வேளை விட்டு ஒரு வேளை உணவுண்ணும் நிலை உண்டாயிற்று. அப்போதும் அந்த அழகு மகள் விரும்பிய போதெல்லாம் விருந்துண்ணும் தன் தந்தை வீட்டைத் தான் நினைத்தாளில்லை! கணவன் இல்லமே அவளுக்குக் கற்பகச் சோலையாற்று.

விறலி ஒருத்தியின் மூலம் இந்தச் செய்தியை நற்றாய் அறிந்தாள். மகளைக் காணும் ஆசை மண்டியது அவளுக்கு. வண்டியைப் பூட்டச் செய்து மகள் வீட்டுக்கு வந்தாள்!

பாத்திரம் தேய்த்துக் கொண்டிருந்தவள் தன் தாயைப் பார்த்தாள்; விழிகள் இரண்டும் வழியும் அருவிகள் ஆயின! தாயோ தத்தளிப்பில் தவித்திருந்தாள். மகளையே பார்த்து மரமான தாய்க்குள் அன்றொரு நாள் நினைவு கண்முன் படமாக ஓடியது. பொன்னால் செய்த புதுக்குவளை. அதிலே காய்ச்சிய ஆவின்பால் கமழும் தேன் சேர்ந்த கலவை அமிழ்தம். ஒரு கையில் பாற்குவளை, மற்றொரு கையில் மலர்ச்சரம் நுனியில் சுற்றிய சிறிய கோல் கொண்டு, பால் அருந்துமாறு மகளைப் பல முறை செவிலி வேண்டினாள். தெளிவான முத்துப் பரல்கள் மோதி ஒலிக்க, அந்தச் சிறுவிளையாட்டி 'பால் அருந்தேன்' என்று அங்குமிங்கும் ஓடினாள்.

துள்ளித் துள்ளி ஓடிய புள்ளிமான் குட்டியைத் துரத்தித் தோற்றுப்போனாள்திரைமிகு மேனி செவிலித் தாய்.

தன்னிலைக்கு வந்த நற்றாய் தான் வருந்திய நிலையிலும் மகளின் வல்லமை எண்ணி மனத்தால் அவளைப் பாராட்டினாள்! தாய் கண்ணீர் ததும்ப மகளைத் தழுவினாள். 'அம்மா!' என்ற ழைத்துத் தாயை அணைத்துக் கொண்டாள் ஆசை மகள்.

தாய் பேசினாள். ''மகளே நான் கூறுவதை மறுக்காமல் ஏற்றுக் கொள்வாயா?''

தாயின் முகத்தை மலர்ச் சிரிப்போடு பார்த்தாள் மகள்.

''தாயே! இந்த இடர் வாழ்க்கை ஏன்? என்னோடு வந்துவிடு என்று சொல்லாமல் வேறு எதைக் கூறினாலும் ஏற்றுக் கொள்கிறேன்'' என்றாள் மகள்.

''ஏனம்மா?'' என்றாள் தாய்.

''தந்தையார் வீட்டில் வாழையிலை போட்டு, வகை வகையாய் உண்ணலாம். ஆனால், ஊர் 'வாழாவெட்டி' என்ற பெயரை அல்லவா வழங்கிவிடும். வேண்டாம் தாயே! இங்கே பசியால் வாடினாலும் பழிப்பில்லாமல் வாழ்கின்றேன். வறுமையோடு வசிக்கவில்லை பெருமையோடு வாழ்கிறேன். கணவனது வருவாய்க்குள் கண்ணியமாக வாழ்வதுதானே காதல் மனைவியின் கடமை என்பதைக் கற்றுக் கொடுத்தது நீங்கள்தனே தாயே! போற்றும் இந்தத் தமிழ் நெறியால் புவியே ஒரு பூஞ்சோலையாகும் என்று போதித்ததும் நீங்களல்லவா? இந்த அறிவையும், ஒழுக்கத்தையும் சிறுவிளையாட்டியாயிருந்த நீ எவ்வாறு பெற்றாய்? என்று கேட்டீர்கள். பாலை மட்டும் ஊட்டி என்னை வளர்க்கவில்லையே... பண்பாட்டையும்தானே சேர்த்துக் கொடுத்து வளர்த்துள்ளீர்கள் என்பதை நினைத்துப் பாருங்கள்'' என்றாள்.

''அருமை மகளே! நீ பிறந்த வீட்டு அடையா நெடுங்கதவம் உன்னை அழைத்துக் கொண்டுதான் ஆவலோடு காத்திருக்கும்,'' என்றுரைத்த தாய் மகளிடம் பிரியா விடை பெற்றாள்.

புலவர் போதனார் இயற்றிய பாடல் இது.

*பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்**
விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்தி
புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண் என்று ஓக்குபு பிழைப்பத் தெண்நீர்
முத்தரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரிமெலிந்து ஒழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்?
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
**பொழுது மறுத்து உண்ணும் சிறுமது கையளே!* (நற்.110)

பாடல் உணர்த்தும் பண்பாடு :

பூவையர் எல்லாம் போற்ற வேண்டிய பொன்னான கருத்து. வளையில் பாம்பாக வசிப்பவரை வாழ வைக்கும் வளர்தமிழ்த் தத்துவம். வயிற்றுக்குப் போடுவதே வாழ்வென்று நினைப்பவர்க்கு மனித வாழ்வின் மகத்துவத்தை உணர்த்தும் பாடல். காதலைக் காயப் படுத்தும் கயமை ஒழியப் போதனாரின் போதனை. மானமிகு மங்கையர் வாழ்வின் மாண்புணர்த்தும் மணித்தமிழ்ப் பாடல்.

இப்பாடலில் 'சிறுவிளையாட்டி' என்னும் சொல்லைப் புலவர் ஆக்கி அறிமுகப்படுத்துகின்றார். சிறுவிளையாட்டு என்னும் பெயர்ச் சொல்லோடு பெயரீற்று 'இகரம்' விகுதி சேர்ந்து பெண்ணுக்குப் பெயராகிப் பேரழகு பெறுகிறது, மதுகை – மனத்தின் பெருமிதம்.

–காழிக்கம்பன் வெங்கடேசபாரதி

ஈன்றோள் நீத்த குழவி!

'பெற்ற தாயால் கைவிடப்பட்ட குழந்தை போன்ற நிலை' குறித்து புலவர் அரிசில்கிழாரால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அரிசில்கிழார் தகடூரை ஆண்டுவந்த அதியமான்களில் ஒருவரான எழினியையும், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையையும் நட்பு பூண்டு ஒழுகி வந்தார்.

எழினி, இரும்பொறையால் கொல்லப்பட்டு அவன் நாடும் கைப்பற்றப்பட்டது. அதனைக் கண்ட அரிசில்கிழார், எழினியை இழந்த தகடூரின் நிலை குறித்தும், எழினி இறப்பால் அவன் நாடு படும் துன்பம் குறித்தும் இரண்டு உவமைகளைக் கூறி விளக்கியிருக்கிறார்.

'கன்றுஅமர் ஆயம் கானத்து அல்கவும்
வெங்கால் வம்பலர் வேண்டுபுலத்து உறையவும்
... ...
பொய்யா எழினி பொருதுகளம் சேர
ஈன்றோள் நீத்த குழவிபோல
... ...
நீ இழைந் தனையேஅறனில் கூற்றம் (புறம் 230:1–12)

'கன்றுகளுடன் கூடிய பசுக்களின் கூட்டம் காட்டிலே தங்கி இருக்கவும், வெப்பமிக்க வழியில் நடந்து வந்த வழிப்போக்கர்கள் தாம் விரும்பிய இடங்களில் அச்சமின்றித் தங்கவும், களத்தில் பெரிய நெற்குவியல்கள் காவலின்றிக் கிடக்கவும், எதிர்த்து வந்த பகையை அழித்து, நிலைகலங்காத செங்கோல் ஆட்சி புரிந்து, உலகம் புகழும் போரைச் செய்யும் ஒளி பொருந்திய வாளையுடைய, பொய் கூறாத எழினி போர்க்களத்தில் இறந்தான். பெற்ற தாயால் கைவிடப்பட்ட குழந்தை போல் தன்னை விரும்பும் சுற்றத்தார் வேறு வேறு இடங்களில் இருந்து வருந்த, மிக்க பசியால் கலக்கமடைந்த துன்பம் மிகுந்த நெஞ்சத்தோடு, அவனை இழந்து நாடு வருந்தியது. அறமில்லாத கூற்றமே! நீ அதைவிட மிக அதிகமாக இழந்தாய்' என்பது பாடலின் பொருள். மேலும்,

'வாழ்தலின் வருஉம் வயல்வளன் அறியான்
வீழ்குடி உழவன் வித்துண் டாஅங்கு
ஒருவன் ஆருயிர் உண்ணாய் ஆயின்' (புறம் 230:12–14)

என்று இன்னொரு வஞ்சப்புகழ்ச்சியாக ஓர் உவமையைக் கையாள்கிறார். உழவனை எமனாக உருவகித்து அதனை விளக்குகிறார். 'தன் வருங்கால வளமான வாழ்வுக்குத் தேவையான விளைச்சலைத் தரும் விதைகளைச் சமைத்து உண்ட வறுமையுற்ற குடியில் உள்ள உழவன்போல் இந்த ஒருவனது பெறுதற்கரிய உயிரை உண்ணாமல் இருந்திருப்பாயாயின், அவன் பகைவரைக் கொல்லும் போர்க்களத்தில் பல பகைவர்களுடைய உயிர்களை உண்டு நீ நிறைவடைந்திருப்பாய்' என்கிறார்.

அதாவது, நல்ல விவசாயி என்றால் அவன் மண்வளம் ஒன்றையே வளப்படுத்த விழைய வேண்டும். அதற்கு விதை அவசியம். ஆனால், அரிசில் கிழார் குறிப்பிடும் உழவன், தான் வைத்திருந்த விதை நெல்லை உணவாக்கித் தன் வயிற்றுப் பசியைப் போக்கிக்கொண்டான். அத்தகைய உழவனை வீழ்குடி உழவன்(வளமில்லாத குடி) என்று புலவரே குறிப்பிடுகின்றார்.

ஒரு விதை பலகோடி விருட்சம். அத்தகைய விதையாக இருந்தவன் எழினி. அவன் பல்லாயிரம் மக்களின் உயிரின் உயிராக இருந்தான். காலனே, நீ அவனை உழவனைப் போல அறிந்தும் அறியாமல் உண்டு விட்டாய் என்கிறார்.

எழினிக்குக் காலன் தான் இறப்பைக் கொடுத்தான். இரும்பொறை அல்ல எனும் பொருள்பட விளக்கிச் செல்கிறார். சங்கப் புலவரின் கவித்திறமும் உண்மையை இலைமறைக் காயாகப் புலப்படுத்தும் பாங்கும் சிறப்புடையது. அதே சமயம் தாயற்ற குழந்தை படும் பாடு கவனிக்கத்தக்கது.

மேலும், நாயன்மார்களுள் ஒருவரானஇளையான் குடிமாற நாயனார் வயலில் விதைத்த நெல்லை மீண்டும் கொணர்ந்து சிவனடியார்க்கு உணவு சமைத்த அந்த விவசாயி (உழவன்) வீழ்குடி உழவனா? என்பதும் அறியத்தக்கதாகின்றது.

–முனைவர் சோ. ராஜலட்சுமி

அன்புள்ள ஆசிரியருக்கு...

நினைவுகூர வைத்தது

தமிழ்மணியில் 'ஊருக்குள் இளைத்தவர்கள்' (30–9–18) கட்டுரையைப் படித்தேன். இன்றைய சமுதாயத்தில் நல்லவனாக, நேர்மையானவனாக, உண்மையைப் பேசுபவனாக உள்ளவரை சிலர் தூற்றுவதையும், புறங்கூறுவதையும், பழித்துப் பேசுவதையும் காணமுடிகிறது. அப்பாவியான ஒருவரை நான்கு பேர் பொறாமையால் தூற்றும் நிகழ்வுகளையும் இன்று காணமுடிகிறது. இதனை நினைவுகூரும் விதமாக சிறப்பாக அமைந்திருந்தது இந்தக் கட்டுரை.

கே.சிங்காரம், வெண்ணந்தூர்.

திணை மயக்க நெறி

சிறுமிகளின் விளையாட்டில் வைத்தும், பாண்டிய நாட்டின் இயற்கை வளங்களை வருணிக்கும் நிலையிலும் 'திணை மயக்கம்' என்னும் இலக்கிய உத்தியைப் பயன்படுத்தி, பரஞ்சோதி முனிவர் சுவையும் இனிமையும் ததும்பப் பாடல்கள் பாடியுள்ளதன் விழுமிய நலங்களை 'அலர் தூற்றுவ முல்லை' எனும் கட்டுரை ஆழ, அகலங்களுடன் விளக்கியது அருமையிலும் அருமை. முதல், கருப்பொருள்கள் மயங்கி வரலாம். ஆனால், உரிப்பொருள் மயங்கலாகாது என்பதே தொல்காப்பியம் (தொல்.அகத்திணையியல், நூ.959) கூறும் திணைமயக்க நெறியாகும்.

அ.சிவராமசேது, திருமுதுகுன்றம்.

கலாரசிகனின் ஆதங்கம்

'இந்த வாரம்' பகுதியில் கலாரசிகன், 'வெளிநாடுகளையும், வெளிமாநிலங்களையும் போல, தமிழகத்தில் அனைத்து ஊர்களிலும் பொதுமக்கள் அதிகமாகக்கூடும் பகுதியில் அந்தந்த மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி மன்றங்கள் ஏன் திருவள்ளுவருக்குச் சிலை அமைக்க முற்படவில்லை' என்ற வேதனையோடு தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார். அரசியல்வாதிகளுக்குப் போட்டிப் போட்டுக் கொண்டு சிலை நிறுவத் துடிப்பவர்களுக்கு திருவள்ளுவருக்குச் சிலை அமைக்க வேண்டும் என்கிற நினைவுகூடத் தோன்றுமா என்பது சந்தேகம்தான். கலாரசிகனின் விருப்பம் விரைவில் நிறைவேற வேண்டும்.

என்.பி.எஸ்.மணியன், மணவாளநகர்.

இந்த வாரம்

கலாரசிகன்

இது அண்ணல் காந்தியடிகளின் 150–ஆவது பிறந்த ஆண்டு. இதையொட்டி சேலம் ஆத்தூரில் 'பாரதி – மகாத்மா பண்பாட்டு அறக்கட்டளை', நகராட்சி அண்ணா கலையரங்கத்தில் நான்கு நாள் நிகழ்ச்சியை வெகு விமர்சையாக ஏற்பாடு செய்திருந்தது. கடந்த 50 ஆண்டுகளாக 'பாரதி – மகாத்மா பண்பாட்டு அறக்கட்டளை' அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறது என்பது மட்டுமல்லாமல், அண்ணலின் பிறந்த நாளையொட்டி கடந்த 25 ஆண்டுகளாகப் பைந்தமிழ்ப் பெருவிழாவும் நடத்தி வருகிறது. இந்த ஆண்டு அந்த அமைப்பின் பொன்விழா ஆண்டு என்பதால், அக்டோபர் 2–ஆம் தேதி நிகழ்வில் நான் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும் என்று அன்புக் கட்டளை இட்டிருந்தார் அறக்கட்டளையின் தலைவர் பே.செ. சுந்தரம்.

நான்கு நாள் நிகழ்ச்சியை நடத்துவதற்குப் பே.செ.சுந்தரமும் அறக்கட்டளை நிர்வாகிகளும் எந்த அளவுக்குப் பாடுபட்டிருப்பார்கள் என்பதை அழைப்பிதழ் வெளிப்படுத்தியது. இத்தனை ஆளுமைகளையும் வரவழைத்து, ஆத்தூரில் நிகழ்ச்சி நடத்துவது என்பது சாதாரணமான ஒன்றல்ல. அண்ணல் காந்தியடிகளின் மீது மக்கள் வைத்திருக்கும் ஈடுபாட்டையும், மரியாதையையும் ஆத்தூரில் நடைபெற்ற அரங்கம் நிறைந்த விழாவில் கூடியிருந்த மக்கள் வெள்ளம் உணர்த்தியது.

மகாத்மாவை இழித்தும், பழித்தும் பேசும் சிறுபான்மைக் கூட்டம் ஒன்று சமூக ஊடகங்களில் நாக்கில் நரம்பில்லாமல் வசைபாடினாலும் கூட, மக்கள் மன்றத்தின் மனசாட்சியாகக் காந்தியடிகள் மட்டும் தான் திகழ்கிறார் என்பது மேடை ஏறியபோது எனக்குப் புரிந்தது. மகாகவி பாரதியின் 'வாழ்க நீ எம்மான்' என்ற பாடலை மனதிற்குள் ஒரு முறை சொல்லிக்கொண்டு எனது உரையை நிகழ்த்தினேன்.

இதேபோல அண்ணலின் 150–ஆவது பிறந்த ஆண்டு தமிழகத்தின் ஒவ்வோர் ஊரிலும் விமர்சையாகக் கொண்டாடப்பட்டு, காந்தியத்தின் அருமை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

ஆத்தூர் பத்திரிகையாளர்கள் 'தமிழ் ஊடக எழுத்தாளர்கள் நலச்சங்கம்' என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பை எனக்கு வழங்கினர். பல்வேறு ஊடகங்களைச் சேர்ந்த ஆத்தூர், கெங்கவல்லி, வாழப்பாடி வட்டாரத்தைச் சேர்ந்த செய்தியாளர்கள் ஒற்றுமையாகவும், நட்புறவோடும் செயல்படுவது மிகுந்த மகிழ்ச்சி அளித்தது. இதற்கு முன்பு இதே போல ஊத்தங்கரையிலும் பத்திரிகையாளர்களைச் சந்தித்து, அவர்களுடன் அளவளாவக் கிடைத்த அந்த வாய்ப்பை இப்போதும் நினைவுகூர்ந்து மகிழ்கிறேன்.

ஆத்தூருக்குச் சென்றிருந்தபோது, பத்திரிகையாளர் பெ.சிவசுப்பிரமணியன் அவர் எழுதிய 'பொய் வழக்கும் போராட்டமும்' என்கிற புத்தகத்தை அந்த நிகழ்ச்சியின்போது எனக்கு வழங்கினார். பெ.சிவசுப்பிரமணியன் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பே எழுத்தின் மூலம் எனக்கு அறிமுகமானவர்தான் என்றாலும், அவரை நேரில் சந்தித்தது இதுதான் முதல் முறை.

'பொய் வழக்கும் போராட்டமும்' தமிழக – கர்நாடக அதிரடிப் படையின் அடக்குமுறைகளை எதிர்கொண்ட செய்தியாளரின் சிறைக்குறிப்புகள் என்று கூறுவதைவிட, ஒரு புலனாய்வுப் பத்திரிகையாளரின் இதழியல் பயணம் என்று குறிப்பிடுவதுதான் பொருத்தமாகஇருக்கும். தமிழக – கர்நாடகக் காவல் படையினரால் தேடப்பட்ட சந்தனக் கடத்தல் வீரப்பன் எனும் கதாபாத்திரம் உண்மையா? பொய்யா? என்கிற ஐயப்பாடு நீண்ட காலம் இருந்து வந்தது. காட்டுக்குள் மறைந்திருந்த அந்த மர்மத்தை வெளிச்சத்துக்குக் கொண்டுவர, தன்னையே பணயமாக வைத்து சந்தனக் கடத்தல் வீரப்பன் வாழும் அடர்ந்த காட்டுக்குள் நுழைந்தவர் 'நக்கீரன்' இதழின் நிருபர் சிவசுப்பிரமணியன்.



1993–லிருந்து ஆண்டுக்கு இரண்டு நேர்காணல்கள் வீதம் ஏழு ஆண்டுகள் 56 நாள்கள் வீரப்பனுடன் காட்டிலேயே தங்கியிருந்தவர் அவர்.

சித்திரவதை, சிறை, உறவுகளைச் சந்திக்க முடியாத நிலை, சிறையில் இருக்கும்போது தந்தையின் மரணச் செய்தி என்று பல உண்மைச் சம்பவங்கள் சிவசுப்பிரமணியனால் பதிவு செய்யப்படும்போது, படிப்பவர்களும் அவருடைய அனுபவங்களில் ஒன்றிவிடுவதுதான் 'பொய் வழக்கும் போராட்டமும்' என்கிற இந்தப் புத்தகத்தின் தனிச்சிறப்பு. கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்டதும், அவருடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதும், அவர் மீட்கப்பட்டதும் முழுமையாகவும், தெளிவாகவும் 'பொய் வழக்கும் போராட்டமும்' புத்தகத்தில்தான் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

நிருபராக இருந்த சிவசுப்பிரமணியனுக்கு நக்கீரன் இதழியல் ஆசிரியர் கோபால் அளித்த ஊக்கமும், துணிவும், பாதுகாப்பும் பல இடங்களில் மெய்சிலிர்க்க வைக்கின்றன. தமிழக இதழியல் வரலாற்றில் இன்னொரு பத்திரிகை ஆசிரியர் தன் நிருபர் ஒருவருக்காக இந்த அளவுக்குத் துணை நின்றிருப்பாரா என்பது சந்தேகம் தான்.

''என்னுடைய இந்தப் பத்தாண்டுகால அனுபவம் என்னைப் போன்ற மற்ற செய்தியாளர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் உதவ வேண்டும் என்பதற்காக இந்த நிகழ்வுகளை நூலாக எழுதியுள்ளேன். எதிர்கால ஊடகவியல் சமூகம் இதைவிடவும் பல மோசமான சிக்கல்களையும், சவால்களையும், பொய் வழக்குகளையும், அடக்குமுறைகளையும் எதிர்கொள்ள வேண்டி வரும். அதை எதிர்கொள்ளத் தயார் செய்து கொள்ளுங்கள்'' என்கிற பெ.சிவசுப்பிரமணியனின் 'என்னுரை'தான் இந்தப் புத்தகம் குறித்த என் கணிப்பும்.

கடந்த ஆண்டு ஜூலை–டிசம்பர் 'தொடரும்' இதழில் வெளிவந்திருக்கிறது 'கூடானாலும் கூண்டானாலும்...' என்கிற கவிதை. அருணன் கபிலனை 'தினமணி'யின் நடுப்பக்கக் கட்டுரையாளராகத்தான் இதுவரை நான் அறிந்திருக்கிறேன். அவர் ஒரு கவிஞரும் கூட என்பதை இந்தக் கவிதை வெளிப்படுத்துகிறது.

***கூடுவிட்டுக் கூடுபாயும்**
வித்தைகள் தெரிந்தாலும்
உன் கூடு விட்டு
இன்னொரு கூடு பாய
என் மனம் ஒப்பவில்லை
கூடு
கூண்டானாலும்
சம்மதந்தான்
நீ
கூடவே இருப்பதென்றால்...*

அடுத்த வாரம் சந்திப்போம்...

தேர்தல் ஆணையத்துக்கு மோடி நெருக்கடி

காங்கிரஸ் குற்றச்சாட்டு

கொல்கத்தா/புது தில்லி, அக். 6: ராஜஸ்தானில் பிரதமர் மோடி உரையாற்ற இருந்ததால், 5 மாநிலங்களின் தேர்தல் தேதி அறிவிப்பை தாமதப்படுத்துமாறு தேர்தல் ஆணையத்துக்கு மோடி நெருக்கடி அளித்துள்ளார் என்று காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது. இந்த குற்றச்சாட்டை தேர்தல் ஆணையம் மறுத்துள்ளது.

மேலும், தேர்தல் ஆணையத்தின் இந்த தாமதம், பிரதமர் மோடி மற்றும் அந்த மாநில முதல்வர் வசுந்தரா ராஜே ஆகியோர் ராஜஸ்தான் மாநில மக்களுக்கு தேர்தல் சலுகைகளை அறிவிக்க வழிவகுத்துள்ளது என்றும் காங்கிரஸ் கூறியுள்ளது.

இந்த ஆண்டு இறுதியில் (நவம்பர்-டிசம்பர்) சட்டப்பேரவை தேர்தல் நடைபெற இருக்கும் தெலங்கானா, மத்திய பிரதேசம், மிஸோரம், ராஜஸ்தான், மற்றும் சத்தீஸ்கர் ஆகிய 5 மாநிலங்களின் தேர்தல் தேதியை சனிக்கிழமை மதியம் 12.30 மணிக்கு அறிவிப்பதாக தேர்தல் ஆணையம் முன்னர் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், அந்த அறிவிப்பை 3 மணிக்கு வெளியிட உள்ளதாகக் கூறி செய்தியாளர்கள் சந்திப்பை தேர்தல் ஆணையம் ஒத்தி வைத்தது. மேலும், 'தெலங்கானா வாக்காளர் பட்டியல் வெளியிடுவதில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு, தெலங்கானா வாக்காளர் பட்டியலை வெளியிடுவதற்கு முன்பு உயர் நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்க வேண்டும் என்ற உத்தரவு, மாநிலத்தில் பருவநிலை சரியில்லாத காரணத்தால் தேர்தலை தாமதமாக நடத்துமாறு அந்த மாநிலத்திடம் இருந்து வந்த கோரிக்கை' ஆகிய காரணங்களால் அறிவிப்பு தாமதமாவதாக தலைமை தேர்தல் ஆணையர் ஓ.பி. ராவத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக, காங்கிரஸ் கட்சி செய்தி தொடர்பாளர் ரண்தீப் சிங் சுர்ஜேவாலா கூறியதாவது:

அறிவிப்பு தாமதமானதற்கு தேர்தல் ஆணையம் கூறும் காரணம் அபத்தமாக உள்ளது. 12.30 மணிக்கு நடக்க வேண்டிய செய்தியாளர்கள் சந்திப்பை 3 மணிக்கு தேர்தல் ஆணையம் ஒத்தி வைத்தது. ராஜஸ்தானில் நடைபெறும் மாபெரும் தேர்தல் பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி 1 மணிக்கு உரையாற்ற இருந்தார். அது தான் தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பு தாமதமானதுக்கு காரணம். தேர்தல் ஆணையத்தின் இந்த தாமதத்தால் ராஜஸ்தான் மாநில மக்களுக்கு தேர்தல் சலுகைகளை மோடி அறிவித்து விட்டார்.

கடந்த ஆண்டு குஜராத் சட்டப்பேரவை தேர்தல் தேதியை அறிவிக்கும் போதும் தேர்தல் ஆணையம் இவ்வாறு தான் நடந்து கொண்டது. குஜராத் தேர்தலின் தேதியை தேர்தல் ஆணையத்துக்கு முன்பு பாஜகவினர் வெளியிட்டனர். அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு அடிமை வேலை பார்ப்பதை தேர்தல் ஆணையம் நிறுத்த வேண்டும் என்று அவர் பாஜகவையும் தேர்தல் ஆணையத்தையும் சாடினார்.

இதனிடையே, ரூபாய் மதிப்பின் ஏற்ற இறக்கத்தால் இந்தியப் பொருளாதாரம் மந்த நிலையில் உள்ளது என்றும், அரசால் மக்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள் என்றும் அவர் கருத்து தெரிவித்தார்.

மேலும், 2019-ஆம் ஆண்டு நடைபெற உள்ள மக்களவை தேர்தலில் பிரதமர் வாய்ப்பு யாருக்கு என்ற கேள்விக்கு, பிரதமர் யார் என்பதை மக்கள் முடிவு செய்வார்கள். ஆனால் அது மக்களுக்கான அரசாக அமையும் என்று சுர்ஜேவாலா தெரிவித்தார்.

தேர்தல் ஆணையம் மறுப்பு: காங்கிரஸ் கட்சி செய்தித் தொடர்பாளர் சுர்ஜேவாலாவின் குற்றச்சாட்டை தேர்தல் ஆணையம் மறுத்துள்ளது. இதுகுறித்து தில்லியில் தலைமை தேர்தல் ஆணையர் ஓ.பி. ராவத் கூறுகையில், 'தாமதத்துக்கான காரணங்களை தெளிவாக கூறிவிட்டோம். தேர்தல் ஆணையத்துக்கு எந்த நெருக்கடியும் கொடுக்கப்பட வில்லை. அவ்வாறு நினைப்பவர்கள் தாராளமாக புகார் அளிக்கலாம். அரசியல்வாதிகள் அனைத்து விஷயங்களையும் அரசியலாக்க நினைப்பார்கள். அதனால் அதுகுறித்து நாங்கள் கருத்து தெரிவிக்க ஒன்றும் இல்லை' என்றார்.

மேலும், தொழில்நுட்ப பிரச்னை காரணமாக, அக்டோபர் 8-ஆம் தேதி வெளியிட இருந்த தெலங்கானா வாக்காளர் பட்டியல் அக்டோபர் 12-ஆம் தேதி வெளியிடப்பட உள்ளது ' என்று ராவத் தெரிவித்தார்.

மக்களை பிரித்தாளும் கட்சி காங்கிரஸ்

பிரதமர் மோடி சாடல்

ராஜஸ்தானில் சனிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்ற பிரதமர் மோடி, மாநில முதல்வர் வசுந்தரா ராஜே உள்ளிட்டோர்.

அஜ்மீர், அக். 6: ஆட்சி, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக வாக்கு வங்கி அரசியலிலும், பிரித்தாளும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவது காங்கிரஸ் கட்சியின் வாடிக்கை என்று பிரதமர் மோடி விமர்சித்துள்ளார்.

அக்கட்சி அரியணை ஏறுவதற்கு மக்கள் இனி வாய்ப்பளிக்கக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ராஜஸ்தான் முதல்வர் வசுந்தரா ராஜே, கடந்த சில நாள்களாக அந்த மாநிலம் முழுவதும் அரசியல் யாத்திரை மேற்கொண்டு வந்தார். அதன் நிறைவு விழா அஜ்மீர் நகரில் சனிக்கிழமை நடைபெற்றது. அதில் பிரதமர் மோடி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். ராஜஸ்தான் உள்ளிட்ட 5 மாநிலங்களுக்கான தேர்தல் தேதி அறிவிக்கப்படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பாக அவர் அதில் பங்கேற்று பேசினார். அப்போது காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகளையும், அதன் தலைமையையும் பிரதமர் மோடி கடுமையாக விமர்சித்தார். இதுதொடர்பாக விழாவில் அவர் மேலும் பேசியதாவது:

மத்தியில் பாஜக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு பல்வேறு நலத் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. அது மட்டுமன்றி சர்வதேச அளவில் நமது ராணுவ வலிமையை பறைசாற்றியும் வருகிறது. இரு ஆண்டுகளுக்கு முன்னர் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீருக்குள் அதிரடியாக நுழைந்து பயங்கரவாதிகளையும், அவர்களது முகாம்களையும் அழித்தொழித்ததே அதற்கு சாலச் சிறந்த சான்று.

அந்த நிகழ்வை நாடே எண்ணி பெருமிதப்படும்போது காங்கிரஸ் கட்சி மட்டும் அதுகுறித்து பல்வேறு சந்தேகங்களையும், கேள்விகளையும் எழுப்புகிறது. இது, நம் நாட்டு பாதுகாப்புப் படையினரை அவமதிக்கும் செயலாகும். இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக காங்கிரஸ் கட்சி வெட்கப்பட வேண்டும்.

எந்தவிதமான ஜனநாயகப் பண்புகளும் இல்லாத கட்சி காங்கிரஸ். அதில் அங்கம் வகிக்கும் முக்கியத் தலைவர்கள் அனைவரும் ஒரே ஒரு குடும்பத்துக்கு (சோனியா குடும்பம்) கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களை போற்றிப் புகழ்ந்தே அரசியல் செய்ய வேண்டும். இதுதான் அங்கு இருக்கும் யதார்த்த சூழல். இதுபோன்ற மலிவான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் கட்சி தான் காங்கிரஸ் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அக்கட்சி ஆட்சியில் இருந்த போது வளர்ச்சியின் அடிப்படையில் செயல்படவில்லை. மாறாக, வாக்கு வங்கி அரசியலை அடிப்படையாகக் கொண்டே செயல்பட்டது. பட்ஜெட் தாக்கல் செய்யும் போதுகூட வாக்கு வங்கியை கருத்தில் கொண்டே அறிவிப்புகளை வெளியிடும் கட்சி காங்கிரஸ். மேலும், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக பிரித்தாளும் நடவடிக்கைகளை மேற்கொள்வது அக்கட்சியின் வாடிக்கை.

கடந்த 60 ஆண்டுகளாக இத்தகைய செயல்களில்தான் காங்கிரஸ் ஈடுபட்டு வருகிறது. அக்கட்சியால் சீர்குலைந்திருந்த தேசத்தை மிகுந்த சிரமத்துக்கு நடுவே தற்போது மீட்டெடுத்துள்ளோம். இப்போதுதான் நாடு சரியான பாதையை நோக்கி பயணிக்கத் தொடங்கியுள்ளது. எனவே, மீண்டும் காங்கிரஸுக்கு வாய்ப்பளித்து ஆட்சி, அதிகாரத்தை அளிக்க வேண்டாம் என மக்களிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன் என்றார் பிரதமர் மோடி. இந்த விழாவில் மாநில முதல்வர் வசுந்தரா ராஜே, மத்திய அமைச்சர்கள், பாஜக தலைவர்கள், நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கீழடியில் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள் குறித்து விரைவில் அறிக்கை

சென்னை, அக். 6: கீழடியில் கண்டுபிடிக்கப்பட்ட தொன்மையான பொருள்கள் குறித்து விரைவில் அறிக்கை வெளியிடப்படும் என்று தமிழ் வளர்ச்சி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் க.பாண்டியராஜன் தெரிவித்தார்.

சென்னை சேத்துப்பட்டில், சென்னை மிஷன், யுனிடெட் வே, சிஐஎஸ்ஏ அமைப்பு சார்பில் சமூகப் பணியாளர்களையும், தன்னார்வலர்களையும், பெருநிறுவன நிர்வாகிகளையும் ஒருங்கிணைக்கும் 'சேவா மேளா-2018' நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது. இதில், பங்கேற்ற அமைச்சர் க.பாண்டியராஜன் நிருபர்களிடம் கூறியது:

கீழடியில் முதலில் நடைபெற்ற 3 அகழாய்வுகளுமே சோதனை முறையில் நடைபெற்றவை. அதற்கான அறிக்கையை இந்தியத் தொல்லியல் துறையிடம் இருந்து பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 4-ஆம் கட்ட அகழாய்வை தமிழக அரசே தொடங்கி, கடந்த 6 மாதங்களாக நடத்தி வருகிறது. இதன் அறிக்கை விரைவில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும்.

கீழடியில் ஏராளமான தொன்மையான பொருள்கள் கிடைத்துள்ளதால், இதுவரை கிடைக்கப் பெற்ற பொருள்களைக் கொண்டு அருங்காட்சியகம் அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். அதற்காக ரூ. 1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டம், ஆதிச்சநல்லூரில் அகழாய்வு முடிந்து 17 ஆண்டுகளாகியும் இந்தியத் தொல்லியல் துறை இன்னும் அறிக்கை வழங்கவில்லை என்றார் அமைச்சர்.

விவசாயிகளை புறக்கணிக்கிறது பாஜக அரசு

ராகுல் காந்தி

மத்தியப் பிரதேச மாநிலம், ஜபல்பூரில் வாகனத்தில் ஊர்வலமாகச் சென்றபோது தொண்டர்களைப் பார்த்து கையசைக்கும் காங்கிரஸ் கட்சித் தலைவர் ராகுல் காந்தி. நாள்: சனிக்கிழமை.

மொரேனா, அக்.6: மத்தியில் ஆளும் பாஜக அரசு விவசாயிகளை புறக்கணிப்பதாக காங்கிரஸ் கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டினார்.

கர்நாடகத்தில் காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் விவசாயிகளின் கடன் தள்ளுபடி செய்யப்படும் என தான் உறுதியளித்ததாகவும், அதன்படி கூட்டணி அரசு அமைந்தவுடன் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டதாகவும் அவர் கூறினார்.

கடந்த 2006-ஆம் ஆண்டில், ஐக்கிய முற்போக்கு கூட்டணி, மத்தியில் ஆட்சியில் இருந்தபோது பழங்குடியினர் உரிமை பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில் தற்போது சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவிருக்கும் மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், அந்தச் சட்டம் அமல்படுத்தப்படும் என்று ராகுல் காந்தி தெரிவித்தார்.

மத்தியப் பிரதேச மாநிலம், மொரேனாவில், பழங்குடியினர் அமைப்பு சார்பில் சனிக்கிழமை நடத்தப்பட்ட நிகழ்ச்சி ஒன்றில் ராகுல் காந்தி கலந்துகொண்டார். அப்போது அவர் பேசியதாவது:

பழங்குடியினர் உரிமைமசோதா என்பது பரிசல்ல; அது அந்த மக்களுக்கான உரிமை. நிலம், தண்ணீர், காடு ஆகியவற்றில் பழங்குடியின மக்களுக்கான உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தில் இருந்த முக்கியமான பிரிவை மோடி அரசு நீர்த்துப் போகச் செய்துவிட்டது. பஞ்சாயத்து அமைப்புகளையும் மோடி அரசு நலிவடையச் செய்துவிட்டது.

மத்திய அரசு பணக்காரர்களுக்கு உதவ விரும்பினால், அதன்படியே செய்யட்டும். ஆனால், அதே சமயத்தில் விவசாயிகளுக்கும், சமூகத்தில் உள்ள பிற நலிவடைந்த மக்களுக்கும் உதவி செய்ய வேண்டும். பெரும் பணக்காரர்களின் ரூ.3 லட்சம் கோடி கடனை அரசால் தள்ளுபடி செய்ய முடியுமென்றால், விவசாயிகளுக்கும், நலிவடைந்த மக்களுக்கும் அதேபோன்ற சலுகைகளை ஏன் வழங்க முடியாது?

கடந்த 2016-இல் பணமதிப்பிழப்பு நடவடிக்கையை மத்திய அரசு செயல்படுத்தியபோது, கருப்புப் பணமெல்லாம் வெள்ளையாக மாறிவிட்டது. தவறிழைத்தயாரும் சிறைக்கு செல்லவில்லை. பாஜக வாக்குறுதி அளித்தபடி, யார் ஒருவரின் வங்கிக் கணக்கிற்கும் ரூ.15 லட்சம் வந்து சேரவில்லை.

நாம் எடுக்கும் ஒரு முடிவு ஏழைகளின் நலன்களை பாதிக்கும் என்றால், அதை நான் ஒருபோதும் செயல்படுத்துவதில்லை. ஆனால், ஒரு முடிவெடுத்தால், அது பணக்காரர்களுக்கு பலனளிப்பதாக இருக்குமா என்றுதான் பாஜக சிந்திக்கிறது. பணக்காரர்களுக்கு பலனளிக்கும் என்று தெரிந்தால் மட்டுமே அதை செயல்படுத்தவும் செய்கிறது.

கடந்த 2004-ஆம் ஆண்டில் இருந்து நான் அரசியலில் இருக்கிறேன். எனது பேச்சுகளை ஆய்வு செய்து பாருங்கள். உங்கள் வங்கிக் கணக்கில் ரூ.15 லட்சம் செலுத்தப்படும் என்பது போன்ற ஒரேயொரு பொய்யான வாக்குறுதியேனும் நான் கொடுத்தது உண்டா?

கர்நாடகாவில் காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், விவசாயிகளின் கடன் ரத்து செய்யப்படும் என்று நான் கூறினேன். அது போன்ற புதிய அரசு அமைந்ததும், விவசாயக் கடனை முதல்வர் ரத்து செய்தார் என்றார் ராகுல் காந்தி.

நர்மதை நதியில் வழிபாடு: இதனிடையே, ஜபல்பூருக்குச் சென்ற ராகுல் காந்தி நர்மதை நதிக்கு வணக்கம் செலுத்தினார். அப்போது 'நர்மதை பக்தர்' என்று தொண்டர்கள் முழக்கமிட்டனர். இதைத்தொடர்ந்து, திறந்தவெளி வாகனத்தில் 8 கி.மீ. தொலைவுக்கு ராகுல் காந்தி ஊர்வலமாக சென்றார். இந்தப் பயணத்தில் 3 சட்டப்பேரவைத் தொகுதிகளை அவர் கடந்து சென்றார். வழியெங்கும் பல இடங்களில் நர்மதை பக்தர் என்ற சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

காங்கிரஸ் கூட்டணிக்காக இனியும் காத்திருக்கப்போவதில்லை

லக்னௌ, அக். 6: மத்தியப் பிரதேசத்தில் எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலுக்காக கூட்டணி அமைப்பதற்கு காங்கிரஸ் கட்சிக்காக இனியும் காத்திருக்கப்போவதில்லை என்று சமாஜவாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் கூறியுள்ளார். மேலும், பகுஜன் சமாஜ் கட்சியுடன் கூட்டணி அமைப்பது குறித்து கலந்தாலோசிக்க வுள்ளதாகவும் கூறினார்.

ராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேச மாநில பேரவைத் தேர்தல்களில் காங்கிரஸுடன் எந்தவித கூட்டணியும் வைத்துக் கொள்ளப்போவதில்லை என்று சமீபத்தில் பகுஜன் சமாஜ் கட்சி அறிவித்திருந்தது.

இந்த சூழலில் தற்போது சமாஜவாதி கட்சியும் காங்கிரஸுடனான கூட்டணியில் இருந்து பின்வாங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. இது, 2019 மக்களவைத் தேர்தலுக்காக பாஜகவுக்கு எதிரான முன்னணியை அமைக்கும் எதிர்க்கட்சிகளின் முயற்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அகிலேஷ் யாதவ் செய்தியாளர்களிடம் சனிக்கிழமை கூறியதாவது:

காங்கிரஸ் கட்சி கூட்டணிக்காக எங்களை நீண்டகாலம் காத்திருக்கச் செய்துவிட்டது. நேரம் கடந்துகொண்டிருப்பதால் இனியும் எங்களால் காத்திருக்க இயலாது. எனவே, எதிர்வரும் மத்தியப் பிரதேச பேரவைத் தேர்தலுக்கான கூட்டணிக்காக, ஏற்கெனவே எங்களுடன் கூட்டணியில் இருக்கும் கோண்ட்வானா கன்தந்த்ரா கட்சியுடன் கலந்தாலோசிக்கவுள்ளோம். அத்துடன், பகுஜன் சமாஜ் கட்சியுடனும் கூட்டணி குறித்து ஆலோசிப்போம் என்று அகிலேஷ் யாதவ் கூறினார்.

காங்கிரஸ் பதில்: இதனிடையே, சமாஜவாதி கட்சியின் முடிவு தொடர்பாக காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ரண்தீப் சுர்ஜேவாலா தில்லியில் சனிக்கிழமை கூறியதாவது:

மத்தியப் பிரதேசத்தில் சமாஜவாதி கட்சியுடன் எந்த சூழ்நிலையிலும் கூட்டணி அமைக்கும் திட்டம் காங்கிரஸுக்கு இருந்ததில்லை. சத்தீஸ்கர் மற்றும் மத்தியப் பிரதேச பேரவைத் தேர்தல்களில் பகுஜன் சமாஜ் கட்சியுடன் காங்கிரஸ் கூட்டணி அமைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று ரண்தீப் சுர்ஜேவாலா கூறினார்.

முன்னதாக கூட்டணி குறித்து அண்மையில் பேசிய பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி, 'பேரவைத் தேர்தல்களில் பகுஜன் சமாஜ் கட்சி தனித்தோ அல்லது மாநிலக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்தோ போட்டியிடும்.

பகுஜன் சமாஜுடன் கூட்டணி அமைப்பதற்கு காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி மற்றும் சோனியா காந்திக்கு விருப்பம் இருந்தாலும், அக்கட்சியில் இருக்கும் சுயநலமிக்க சில மூத்த தலைவர்கள் அதற்கான புரிந்துணர்வு ஏற்படாத வகையில் தடுத்து வருகின்றனர்' என்று கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

மக்கள் நலத்திட்டங்களை துணைநிலை ஆளுநர் தடுக்கிறார்

புதுச்சேரி முதல்வர் புகார்

தஞ்சாவூர், அக். 6: புதுச்சேரியில் மக்கள் நலத் திட்டங்களைத் துணைநிலை ஆளுநர் தடுத்து நிறுத்துவதாக அம்மாநில முதல்வர் வே.நாராயணசாமி குற்றம்சாட்டினார்.

தஞ்சாவூரில் சனிக்கிழமை அவர் செய்தியாளர்களிடம் கூறியது: புதுச்சேரியைப் பொறுத்தவரை நிலம், நிர்வாகம், சட்டம்-ஒழுங்கு, காவல்துறை ஆகியவை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் அதிகாரத்தில் உள்ளது. புதுதில்லியில் நிலம், காவல் துறை, சட்டம்-ஒழுங்கு ஆகியவை மத்திய அரசின் அதிகாரத்திலும், மற்றவை மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இதை எதிர்த்து புதுதில்லி முதல்வர் அரவிந்த் கேஜரிவால் உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில், துணைநிலை ஆளுநருக்கு தன்னிச்சையாக முடிவெடுக்க எந்த அதிகாரமும் கிடையாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு உறுதுணையாக துணைநிலை ஆளுநர் செயல்படுவதோடு, மாநில வளர்ச்சிக்கு குந்தகமாக இருக்கக் கூடாது என தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதை புதுச்சேரி துணைநிலை ஆளுநர் ஏற்றுக்கொள்ளவில்லை. இதுதொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் தீர்ப்பு வர உள்ளது.

மக்களால்தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுதான் மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டும். துணைநிலை ஆளுநருக்கு அதிகாரம் கிடையாது. ஆனால், நாங்கள் அனுப்பும்கோப்புகளை எல்லாம் திருப்பி அனுப்புவது, ஒப்புதல் கொடுக்காமல் காலம் தாழ்த்துவது போன்ற செயல்களை புதுச்சேரியில் துணைநிலை ஆளுநர் செய்து வருகிறார்.

அரிசி வழங்கும் திட்டம், முதியோர் உதவித் தொகைத் திட்டம், மருத்துவக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 2.25 லட்சம் கல்விக் கட்டணம், பொறியியல் படிக்கும் மாணவர்களுக்கு ரூ.25 ஆயிரம் கல்விக் கட்டணம் போன்ற திட்டங்களுக்கான பணத்தைத் தடுத்து நிறுத்துகிறார். அதேபோல, பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கொடுக்க வேண்டிய மானியத் தொகையையும் தடுத்து நிறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்.

இதுகுறித்து பிரதமர், உள்துறை அமைச்சரிடம் கூறியும், அவர்கள் தலையிடவில்லை. புதுச்சேரி துணைநிலை ஆளுநரை மத்திய அரசு ஊக்குவிப்பதாகத் தெரிகிறது.

சபரிமலை உள்ளிட்ட முக்கிய தீர்ப்புகள் சமூகத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்

புது தில்லி, அக்.6: சபரிமலை ஐயப்பன் கோயில் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகள், சமூகத்தில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி தெரிவித்துள்ளார்.

ஓரினச் சேர்க்கை தொடர்பான வழக்கில் உச்ச நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தபோது, அதை கிரிமினல் குற்றமில்லை என்று தெரிவித்தது. முறையற்ற உறவும் தண்டனைக்குரிய குற்றமில்லை என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதேபோல், சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குள் அனைத்து வயது பெண்களையும் அனுமதிக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதுகுறித்து தில்லியில் சனிக்கிழமை நடைபெற்ற 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' நாளிதழ் கருத்தரங்கில் பேசியபோது, மத்திய நிதியமைச்சரும், பாஜக மூத்த தலைவர்களில் ஒருவருமான அருண் ஜேட்லி தனது அதிருப்தியை வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது:

ஓரினச் சேர்க்கையை கிரிமினல் குற்றமில்லை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தபோது, இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 21ஆவது பிரிவில் வாழ்வதற்கு அளிக்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமையின்கீழ் பாலியல் தொடர்பான செயல்பாடுகள் வருகிறது, அந்த சட்டப்பிரிவில் பாலியல் விவகாரத்தில் பாகுபாடு காட்டக் கூடாது என குறிப்பிடப்பட்டிருப்பதாக தெரிவித்தது. இந்த காரணங்களை நான் ஏற்கிறேன். அதே நேரத்தில், பாலியல் செயல்பாடுகளை பேச்சுரிமையின் ஒரு பகுதி என்று தெரிவித்திருப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை.

பேச்சுரிமை என்பது முழுவதும் வேறு விஷயமாகும். இறையாண்மை, பாதுகாப்பு, சட்டம்-ஒழுங்கு ஆகியவை தொடர்பான காரணங்களை அடிப்படையாகக் கொண்டு, பேச்சுரிமைக்கு தடை விதிக்கலாம். அப்படியிருக்கையில், ஓரினச் சேர்க்கையையும் அடிப்படை உரிமையில் ஒன்று என்றும், அது பேச்சுரிமை என்றும் தெரிவித்தால், பள்ளிகள், சிறைகள், ராணுவத்தில் பாலியல் செயல்பாடுகள், ஓரினச் சேர்க்கைக்கு எப்படி தடை விதிக்க முடியும்? எனவே இதுகுறித்து கூடுதல் விவாதம் நடத்த வேண்டிய தேவைகள் எழுந்துள்ளது.

முறையற்ற உறவு குறித்து சம்பந்தப்பட்ட சட்டப் பிரிவிலேயே தவறான வார்த்தையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது நீக்கப்பட வேண்டும். அதேநேரத்தில், முறையற்ற உறவை தண்டனைக்குரிய குற்றமில்லை என்ற தீர்ப்பு, சமூகத்தில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். அது பல பிரச்னைகளுக்கு வழிவகுக்கும்.

இத்தகைய விவகாரங்கள் தொடர்பான தீர்ப்பை பார்க்கையில், சமூக முன்னேற்றம் போல தெரியும். மேலை நாடுகளின் பத்திரிகையாளர்களின் கருத்துகளும் தீர்ப்புக்கு சாதகமாக இருப்பது போல் தெரியும். இதனால் நமது இந்திய குடும்ப அமைப்பு முறையானது, மேலைநாடுகளின் குடும்ப அமைப்பு முறைக்கு மாறும். திருமண உறவுகளில் அதிக விரிசல்களை ஏற்படுத்தும்.

சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குள் பெண்களை அனுமதிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல், பிற மதத்தினர் சம்பந்தப்பட்ட வழிபாட்டு தலங்களுக்குள் பெண்களை அனுமதிக்க வேண்டும் என்று உத்தரவிட முடியுமா? அப்படி செய்ய முடியாது. இந்தியா போன்ற பன்முகத்தன்மை கொண்ட நாட்டில், ஏதேனும் ஒரு சட்டத்தை எடுத்து, அதை அனைவருக்கும் அமல்படுத்தினால், சமூக ரீதியில் பல பிரச்னைகளை உருவாக்கும் என்றார் ஜேட்லி.

தினமணி

பம்பாய் பொதுப் பிரார்த்தனையில் காந்திஜி

பம்பாய் காங்கிரஸ் மண்டபத்தில் மகாத்மா காந்தி தலைமை வகித்து நடத்திய பொதுப் பிரார்த்தனையில் 15ஆயிரம் மக்கள் கலந்து கொண்டார்கள்.

ஆச்ரம வழக்கம்போல் பகவத் கீதையின் 13-வது அத்தியாயத்திலிருந்து சில ஸ்லோகங்கள் படிக்கப்பட்டன. பிரார்த்தனைக்கு முன்பு காந்திஜி ஓர் சிறிய பிரசங்கம் செய்தார்.

''ஸ்ரீமதி கமலாநேரு வைப் பார்ப்பதற்காகத்தான் நான் பம்பாய்க்கு வந்தேன். அந்த வேலை முடிந்து விட்டது. இனி பம்பாயில் எனக்கு ஒன்றும் வேலை இல்லை.

அசாத் மைதானத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்படி என்னைக் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் அது என் சக்திக்கு மேற்பட்டது. ஆகையால் அதற்கு மறுத்துவிட்டேன்.

பிறகு காங்கிரஸ் மண்டபத்தில் ஒரு பிரார்த்தனை நடத்தும்படி கேட்டுக்கொண்டார்கள். பிரார்த்தனையினுடைய பலனில் நான் நம்பிக்கையுடையனாதலால் அதற்கு மறுக்க முடியாது.

வாழ்க்கையில் ஏமாற்ற மடைந்தவர்களுக்கு பிரார்த்தனையால் ஆறுதலும், நிம்மதியும் ஏற்படுகிறது. மனதில் உற்சாகக் குறைவேற்படும் பொழுது பிரார்த்தனை தான் நமக்கு பலமளிக்க முடியும். எந்தப் பெயர் சொல்லி அழைத்தாலும், கடவுள் ஒருவர்தான்.

எனக்கு உற்சாகக் குறைவேற்படும் பொழுது ''ஸ்ரீராம்'' என்று நான் கூறிக் கொள்ளுகிறேன்''.

காங்கிரஸ் அரசியலிலிருந்து தான் விலகியதைப்பற்றியும் காந்திஜி குறிப்பிட்டார்.

''நான் காங்கிரசிலிருந்து விலகிவிட்டதால், தேசத்தில் என்ன நடக்கிறதென்று எனக்குத் தெரியாதென்று அர்த்தமல்ல. ஆனால் இதனால் எனக்கு உற்சாகக் குறைவேற்படவில்லை. எல்லாவற்றையும் விட பிரார்த்தனை எனக்கு அதிக பலத்தை அளித்திருக்கிறது''.

ஸ்தல ஊழியர்களுடன் கிராமச் சங்கத்தைப் பற்றி காந்திஜி வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்.

இரவு குஜராத் மெயிலில் போர் சாதுக்கு பிரயாணமானார்.

தினமணி (23-5-1935)

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

மண்டல அலுவலகம்: 20, 21, காமராஜர் சாலை, காஞ்சிபுரம் 631 501
Phone : 27225360, 27223165, 27223131. Email ID: 2000law@iob.in

விற்பனை அறிவிப்பு
(e-ஏலம் வாயிலாக மட்டும் விற்பனை)

கடன்பட்டோர் சொத்துக்களை ஒரே கையகப்படுத்தல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடன் சொத்துகள் அமலாக்கம் 2002 (SARFAESI ACT) - இன் கீழ் அசை சொத்து விற்பனை

கடன்பட்டோர் சொத்துக்களை ஒரே கையகப்படுத்தல், நிதிச்சொத்துகளை சீரமைத்தல், கடன்பட்டோர் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ் வங்கியிடம் அமானத்திலுள்ள அசையா சொத்து விற்பனை. அதிகாரபூர்வ அதிகாரி தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி மேற்படி சட்டம் பிரிவு 13(2)ன் **கடன்பட்டோர் சொத்துக்களை ஒரே கையகப்படுத்தல், நிதிச்சொத்துகளை சீரமைத்தல், கடன்பட்டோர் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ்** கடனாளர்களுக்கு கோரிக்கை அறிவிப்பை (Demand Notice) அனுப்பி, கீழ்காணும் கடனாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசூலின் தொகையை வங்கியிடம் அமானமாகவுள்ள கடனுக்கு கடன் கீழ்காணும் சொத்துகளை கீழ் குறிப்பிட்ட தேதியன்று தமது வசமாகிவிட்டதை (possession) எடுத்துக் கொண்டார். இதனால் ஒவர்சீஸ் வங்கிக்கு கீழ் வைக்கும் ஒரு வெளிப்படை ஏலம் மூலம் விற்க, கட்டணம் இதர செலவுகள் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரி தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி சட்டம் பிரிவு 13(4)-ன் கீழ் e-ஏலம் முகமாக விற்பனை முடிவு செய்துள்ளார். சொத்து விற்பனை **https://iob.forecloseureIndia.com** என்ற இணையதளத்தில், இ-ஏலம் வாயிலாக கீழே கண்டபடி மட்டுமே நடத்தப்படும்.

வ.எண்.1: கடுவாஞ்சேரி கிளை: Ph: 27461050, Mob: 9840043517. Email ID: iob2749@iob.in
கடன் கணக்கு பெயர்: 1. M/s வெங்கடேஷ்வரா ஹாஸ்பிடல்ஸ், அதன் உரிமையாளர் Mr.G.தங்கராஜு, S/o Mr.கோவிந்தன், எண்.19, சாமுண்டீஸ்வரி நகர், வையாவூர், கடுவாஞ்சேரி அஞ்சல், காஞ்சிபுரம் தாலுகா மற்றும் 2. **Mrs.R.தேவகி** W/o.ராஜசேகர், 18, பாலாஜி தெரு, கடுவாஞ்சேரி, செங்கல்பட்டு, காஞ்சிபுரம்-603202. NPA தேதி: **27.09.2014**; கோரிக்கை அறிவிப்பு தேதி: **31.03.2018** (சுற்றறிக்கையில் வெளியிட்ட தேதி: 24.04.2018); வரவிலை எடுத்த தேதி: **05.07.2018, கடன் நிலுவை தொகை: 05.07.2018 அன்றுள்ளபடி Rs.28,30,339/-** மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விபரம்: சர்வே எண்.121A/2A, கதவு எண்.B4, முதல் தளம், வைகுண்ட விலாஸ் அபார்ட்மெண்ட்ஸ், GST ரோடு, கடுவாஞ்சேரி கிராமம், காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியில் 647 சதுர அடி பரப்பு மற்றும் 487.22 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம் விலைக்கான வடக்கு N.G.O. காலனி மற்றும் Mrs.சங்கர் வீட்டு மனை, தெற்கு ஸ்ரீ ராகவ செட்டி வீட்டு மனை, கிழக்கு GST ரோடு மற்றும் Mrs.சங்கர் வீட்டு மனை, மேற்கு வேணுகோபால நாயுடு வீட்டு மனை.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 27,00,000/-, டெபாசிட்தொகை: ₹ 2,70,000/- & ஏல உயர்வு தொகை: ₹ 50,000/-

EMD Remittance: GUDUVANCHERY BRANCH (Sl.No.1): Deposit through EFT/NEFT/RTGS transfer in favour of " Authorised Officer, Indian Overseas Bank" to the credit of A/c. No.274902000000188, Indian Overseas Bank, Guduvanchery Branch, 9, Gandhi Street, Opp. CSI Church, Nandhivaram, Guduvancherry-603 202. Branch Code: 2749; IFSC : IOBA0002749.

வ.எண்.2: காஞ்சிபுரம் மெயின் கிளை: Ph: 2722 2846 / 8867, Mob: 9789583890. Email ID: iob0157@iob.in
கடன் கணக்கு பெயர்: Mrs.G.சோமாவதி, W/o.A.சோமு மற்றும் **A.சோமு,** 29-A, காஞ்சிபுரம் தெரு, காஞ்சிபுரம். NPA தேதி: **01.04.2014;** கோரிக்கை அறிவிப்பு தேதி: **31.12.2014;** வரவிலை எடுத்த தேதி: **30.12.2016, கடன் நிலுவை தொகை : 01.06.2018 அன்றுள்ளபடி Rs.5,18,798/-** மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விபரம்: கதவு எண்.29-A, பழைய சர்வே எண்.1641/13, TS எண்.1641/22P, வரதராஜபுரம் தெரு, காஞ்சிபுரம் பகுதி மற்றும் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியில் 1056 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம், அதனுடன் இணைந்த நுண்கூறும் பகுதிகளும் எல்லைகள் வடக்கு தெரு, தெற்கு திருவேலி பாபு ஏங்கிலை, கிழக்கு ஆதி லக்ஷ்மி அம்மாள் காலி மனை, மேற்கு முனுசாமி காலி மனை.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 41,38,000/-, டெபாசிட்தொகை: ₹ 4,13,800/- & ஏல உயர்வு தொகை: ₹ 50,000/-

வ.எண்.3: காஞ்சிபுரம் மெயின் கிளை: Ph: 2722 2846 / 8867, Mob: 9789583890. Email ID: iob0157@iob.in
கடன் கணக்கு பெயர்: ஸ்ரீ ராமஜெயம் மாடர்ன் லாஸ் மில், NPA தேதி: **30.06.2015**; கோரிக்கை அறிவிப்பு தேதி: **15.10.2016**; வரவிலை எடுத்த தேதி: **30.12.2016, கடன் நிலுவை தொகை : 24.09.2018 அன்றுள்ளபடி Rs.39,39,671/-** மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விபரம்: 1. T.S எண்.1305, கதவு எண்.15A, அப்பாராவ் தெரு, கொசவன்பேட்டை கிராமம், காஞ்சிபுரம் தாலுகா, காஞ்சிபுரம் சார் மாவட்டம், காஞ்சிபுரம் என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக 21½ அடி, வடக்கு தெற்காக 164½ அடி, ஆக மொத்தம் 3525 சதுர அடி நிலம் அதனுடன் லாஸ் மில் கட்டிடம் மற்றும் லாஸ் மில்-ன் பிரதான தூணுமானில் அமைந்த கிழக்கு மேற்காக 164 அடி, வடக்கு தெற்காக 8 அடி ஆக மொத்தம் 1312 சதுர அடி மற்றும் வடக்கு நுட்கட்டிடத்தின் அளவுகள்: கிழக்கு மேற்காக 58.3 அடி, வடக்கு தெற்காக 16 அடி ஆக மொத்தம் 932.8 சதுர அடி அதனுடன் கதவுகள், ஜன்னல்கள், மின்சார இணைப்புகள் மற்றும் தண்ணீர் குழாய் இணைப்புகள், அதனுடன் இணைந்த நுண்கூறும் பகுதிகளும். சொத்தானது Mr.K.S.கோபு மற்றும் Mr.S.மணி பெயரில் உள்ளது எல்லைகள் வடக்கு தெரு, தெற்கு ஸ்ரீ ராமஜெயம் மாடர்ன் லாஸ் மில், கிழக்கு Mr.V.தேவராஜன் மற்றும் மற்றவர்கள் வீடு மற்றும் மனை, மேற்கு Mr.ஆறுமுகம் தாயார் மற்றும் மற்றவர்கள் வீடு மற்றும் மனை.

2. சர்வே எண்.1301/1B1A2, மனை எண்.12, அப்பாராவ் தெரு, காஞ்சிபுரம் பழைய காஞ்சிபுரம் தாலுகா, காஞ்சிபுரம் சார் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 7 அடி, தெற்கு பக்கம் 8 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 105 அடி, மேற்கு பக்கம் 104 அடி ஆக மொத்தம் 572 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம், அதனுடன் இணைந்த நுண்கூறும் பகுதிகளும். சொத்தானது Mr.K.S.கோபு மற்றும் Mr.S.மணி பெயரில் உள்ளது எல்லைகள் வடக்கு சர்வே எண்.1303/1-ல் உள்ள நிலம், தெற்கு வெங்கடேசன் பட்டா, கிழக்கு வடக்கு தெற்கு ரோடு, மேற்கு T.S எண்.1304-ல் உள்ள லாஸ் மில் கட்டிடம்.

3. T.S எண்.1304, கதவு எண்.13A/2, கொசவன்பேட்டை கிராமம், காஞ்சிபுரம் பழைய, காஞ்சிபுரம் தாலுகா, காஞ்சிபுரம் சார் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியில் 15627.75 சதுர அடி நிலம் அதனுடன் இந்த மனையில் கட்டப்பட்டுள்ள லாஸ் மில் கட்டிடம், "ஸ்ரீ ராமஜெயம் மாடர்ன் லாஸ் மில்" மற்றும் 1152.67 சதுர அடி தரைமாடி கட்டிடம் கட்டிடம், அதனுடன் இணைந்த நுண்கூறும் பகுதிகளும், அதனுடன் கதவுகள், ஜன்னல்கள், மின்சார இணைப்புகள் மற்றும் தண்ணீர் குழாய் இணைப்புகள் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள கட்டுமானங்கள், இயந்திரங்கள் மற்றும் சர்வீஸ் ஸ்டேஷன் மட்டும், சர்வீஸ் உள்ள இடங்கள் தவிர அருணாச்சலேஸ்வரர் தேவஸ்தானத்திற்கு சொத்தானது எல்லைகள் வடக்கு அப்பாராவ் முதலி தெரு வீட்டின் கொல்லைப்புறம் மற்றும் 4வது அட்டவணை சொத்து, தெற்கு T.S எண்.1218-ல் உள்ள தெற்கு பக்க குளம் மற்றும் சந்து, கிழக்கு Mr.துரைசாமி தாயார் மற்றும் மற்றவர்கள் தோட்டம், மேற்கு வெங்கடேசனும் பட்டா மற்றும் புறம்போக்கு காலி மனைகள்.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 88,89,000/-, டெபாசிட்தொகை: ₹ 8,88,900/- & ஏல உயர்வு தொகை: ₹ 50,000/-

வ.எண்.4: காஞ்சிபுரம் மெயின் கிளை: Ph: 2722 2846 / 8867, Mob: 9789583890. Email ID: iob0157@iob.in
கடன் கணக்கு பெயர்: Mr.R.ரங்கராஜன், S/o.ராமாமி மற்றும் **R.கலா ரங்கராஜன்,** W/o.R.ரங்கராஜன், கதவு எண்.82/156, பெரியார் நகர், அண்ணா இந்திரா நகர், கோவேரிநகர் கிராமம், காஞ்சிபுரம் தாலுகா மற்றும் மாவட்டம் என்னும் முகவரியில் உள்ள 2400 சதுர அடி குடியிருப்பு நிலம் மற்றும் கட்டிடம், அதனுடன் இணைந்த நுண்கூறும் பகுதிகளும், சொத்தானது Mrs. R.கலா ரங்கராஜன் என்னும் பெயரில் உள்ளது. எல்லைகள் : வடக்கு : மனை எண்.63, தெற்கு : மனை எண்.61, கிழக்கு : பெரியார் சாலை, மேற்கு : மனை எண்.49

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 57,73,000/-, டெபாசிட்தொகை: ₹ 5,77,300/- & ஏல உயர்வு தொகை: ₹ 50,000/-

வ.எண்.5: காஞ்சிபுரம் மெயின் கிளை: Ph: 2722 2846 / 8867, Mob: 9789583890. Email ID: iob0157@iob.in
கடன் கணக்கு பெயர்: Mr.N.வெங்கடேசன், S/o R.நாராயணன், தங்கல் தெரு, வாலாஜா கிராமம், செய்யார் தாலுகா, திருவண்ணாமலை மாவட்டம். NPA தேதி: **01.04.2015**; கோரிக்கை அறிவிப்பு தேதி: **21.05.2018**; வரவிலை எடுத்த தேதி: **23.08.2018, கடன் நிலுவை தொகை : 24.09.2018 அன்றுள்ளபடி Rs.3,40,321/-** மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விபரம்: சர்வே எண்.72/39, கதவு எண்.204, தங்கல் தெரு, வாலாஜா கிராமம், செய்யார் தாலுகா, திருவண்ணாமலை மாவட்டம் என்னும் முகவரியில் 2100 சதுர அடி நிலம் (அங்கு உள்ளபடி மனை) மற்றும் குடியிருப்பு கட்டிடம், அதனுடன் இணைந்த நுண்கூறும் பகுதிகளும். சொத்தானது N.வெங்கடேசன் பெயரில் உள்ளது. எல்லைகள் வடக்கு பெரிய தெரு, தெற்கு தங்கல் குட்டை (அதாவது காலி மனை), கிழக்கு முனியப்பன் காலி மனை மற்றும் மேற்கு வல்லப்பன் காலி மனை.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 10,50,000/-, டெபாசிட்தொகை: ₹ 1,05,000/- & ஏல உயர்வு தொகை: ₹ 50,000/-

வ.எண்.6: காஞ்சிபுரம் மெயின் கிளை: Ph: 2722 2846 / 8867, Mob: 9789583890. Email ID: iob0157@iob.in
கடன் கணக்கு பெயர்: M/s.மகேந்திரா ஆட்டோ மொபைல்ஸ், உரிமையாளர்: Mr.V.மகேந்திரன், 13, காஞ்சிபுரம் ரோடு, வாலாஜாபாத்-631605, NPA தேதி: **30.06.2017**; கோரிக்கை அறிவிப்பு தேதி: **04.07.2017**; வரவிலை எடுத்த தேதி: **25.09.2018, கடன் நிலுவை தொகை : Rs.56,24,080.62** மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விபரம் சொத்து எண்.1: சர்வே எண்.270/1, கதவு எண்.13/26, காஞ்சிபுரம் நெடுஞ்சாலை, வாலாஜாபாத் பகுதி, காஞ்சிபுரம் மாவட்டம்-631 605 என்னும் முகவரியில் உள்ள 759 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம், அதனுடன் இணைந்த நுண்கூறும் பகுதிகளும். உரிமையாளர் : Mr. மகேந்திரன், எல்லைகள் : வடக்கு : காஞ்சிபுரம் நெடுஞ்சாலை, தெற்கு : ஆறுமுகம் சொத்து D வெட்டியுள், கிழக்கு: 5 அடி அகல பொது வழிப்பாதை, மேற்கு : ஆறுமுகம் சொத்து - D வெட்டியுள்.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 47,00,000/-, டெபாசிட்தொகை: ₹ 4,70,000/- & ஏல உயர்வு தொகை: ₹ 50,000/-

சொத்து விபரம் சொத்து எண். 2 : சர்வே எண்.270/1E, புதிய கதவு எண்.20-E, பழைய கதவு எண்13-E, காஞ்சிபுரம் நெடுஞ்சாலையுடன் இணைக்கும் 5 அடி அகல பொது பாதை, வாலாஜாபாத் பகுதி, காஞ்சிபுரம் மாவட்டம்-631 605 என்னும் முகவரியில் உள்ள 1107 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம், அதனுடன் இணைந்த நுண்கூறும் பகுதிகளும். உரிமையாளர் : Mr. V.மகேந்திரன், எல்லைகள் : வடக்கு : Mr. மகேந்திரன் ஸ்ரீராம் தெருவுக்கு உரியது, தெற்கு : Mr. ரவியுடைய மனை, கிழக்கு : 5 அடி அகல பொது வழிப்பாதை, மேற்கு : வெட்டு காலி மனை.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 55,56,000/-, டெபாசிட்தொகை: ₹ 5,55,600/- & ஏல உயர்வு தொகை: ₹ 50,000/-

EMD Remittance: Kancheepuram Main Branch (Sl.No.2 to 6): Deposit through EFT/NEFT/RTGS transfer in favour of "Authorised Officer, Indian Overseas Bank" to the credit of A/c No.015702000000919, Indian Overseas Bank, Kancheepuram Main Branch, No.61, Gandhi Road, Kanchipuram - 631 501. Ph: 2722 2846 / 2722 8867 Branch Code: 0157, IFSC: IOBA0000157

வ.எண்.7: மாமல்லபுரம் கிளை: Ph: 27442222, Mob: 9629021081. Email ID: iob0050@iob.in
கடன் கணக்கு பெயர்: T.பஞ்சாட்சரம் (T.Panchatcharam) S/o.திருமலை, எண் 100/3 & 4, TKM ரோடு, மாமல்லபுரம் -603104, NPA தேதி: **31.12.2017**; கோரிக்கை அறிவிப்பு தேதி: **16.02.2018**; வரவிலை எடுத்த தேதி: **18.05.2018, கடன் நிலுவை தொகை : 06.10.2018 அன்றுள்ளபடி Rs.11,53,456/-** மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விபரம் கிராமத்தம் பழைய சர்வே எண்.170/1, புதிய சர்வே எண்.170/37 என மறு ஒதுக்கீடு செய்யப்பட்டது, கதவு எண்.53, தலிதா தெரு மல்லிக திருக்குளம் தெரு என்னும் முகவரியிலுள்ள 0.5 சென்ட் நிலம் மற்றும் 220 சதுர அடி கட்டிடம், அதனுடன் இணைந்த நுண்கூறும், பகுதிகளும். Mrs.B.மரகதம் பரிட்சத்து சொத்தானது எல்லைகள் வடக்கு, Mr.கண்ணையன் பண்ருத்திக்கு சொந்தமான மனை, தெற்கு சர்வேயர் நாயகர் நெடுவேலிக்கு சொந்தமான மனை, கிழக்கு தலிதா தெரு, மேற்கு குளம்.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 78,79,000/-, டெபாசிட்தொகை: ₹ 7,87,900/- & ஏல உயர்வு தொகை: ₹ 50,000/-

வ.எண்.8: மாமல்லபுரம் கிளை: Ph: 27442222, Mob: 9629021081. Email ID: iob0050@iob.in
கடன் கணக்கு பெயர்: M/s.J.K.ஏஜென்சி ஹாலிடேஸ், அதன் உரிமையாளர் **Mr.E.K.K.ஜெகதீசன்** எண்.70, கலைஞர்தெரு, புதிய பேருந்து நிலையம், பட்டிணம் அருகில், மாமல்லபுரம்-603104. NPA தேதி: **31.12.2017**; கோரிக்கை அறிவிப்பு தேதி: **06.01.2018**; வரவிலை எடுத்த தேதி: **14.03.2018, கடன் நிலுவை தொகை : 06.10.2018 அன்றுள்ளபடி Rs.25,07,295/-** மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விபரம் சர்வே எண்.2/1B, கலியனான கோயில் தெரு, புது பேருந்து நிலையம், 110 கலைஞர்நகர் கிராமம், திருக்கோழி தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியில் உள்ள 10 சென்ட் நிலம் மற்றும் கட்டிடம், அதனுடன் இணைந்த நுண்கூறும் பகுதிகளும், எல்லைகள் வடக்கு: ரோடு (அப்துல்கலாம் தெரு), தெற்கு: ரோடு (காளியம்மன் கோயில் தெரு), கிழக்கு: முனுசாமி நட்டார் வீடு, மேற்கு: வெங்கடேசன் மனை.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 69,70,000/-, டெபாசிட்தொகை: ₹ 6,97,000/- & ஏல உயர்வு தொகை: ₹ 50,000/-

EMD Remittance: MAHABALIPURAM BRANCH (Sl.No.7 & 8): Deposit through EFT/NEFT/RTGS transfer in favour of " Authorised Officer, Indian Overseas Bank" to the credit of A/c No.005002000001918, Indian Overseas Bank, Mahabalipuram Branch, 22, East Raja Street, Mahabalipuram, PIN-603104, Branch Code: 0050; IFSC : IOBA0000050.

வ.எண்.9: M C C கேம்பஸ் கிளை: Ph: 22390114, 22395612, Mob: 9444914398. Email ID: iob0191@iob.in
கடன் கணக்கு பெயர்: M/s. ஸ்ரீ மீனாட்சி ஏஜென்சிஸ், அதன் உரிமையாளர் **Mr.மணிகண்டன்** மற்றும் **Mr.மணிகண்டன்,** எண்.5/52, பாக்டி அம்பேதகர் தெரு, மணிமங்கலம், காஞ்சிபுரம் - 601 301 NPA தேதி: **30.06.2011**; கோரிக்கை அறிவிப்பு தேதி: **05.08.2017**; வரவிலை எடுத்த தேதி: **06.06.2018, கடன் நிலுவை தொகை : 07.09.2018 அன்றுள்ளபடி Rs.44,99,020/-** மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விபரம் பட்டா சார் பதிவு அலுவலகத்திற்கு உட்பட்ட சர்வே எண்.119/1C2, கதவு எண்.3/173, ஆலப்புரம் கோயில் தெரு, மணிமங்கலம் கிராமம், சென்னை 601301 என்னும் முகவரியில் மொத்தம் உள்ள 20 சென்ட் காலி நிலம் , அதில் உள்ள 594 சதுரஅடி தரை தளம் மற்றும் முதல் தளம் கட்டிடம் மற்றும் அதனுடன் இணைந்த நுண்கூறும் பகுதிகளும். எல்லைகள் வடக்கு: ஏழுமலையின் வீடு, தெற்கு: M.திவாகரின் வீடு, கிழக்கு: ஆலப்புரம் கோயில் தெரு, மேற்கு: வெங்கடேசன் நிலம்.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 60,61,000/-, டெபாசிட்தொகை: ₹ 6,06,100/- & ஏல உயர்வு தொகை: ₹ 50,000/-

வ.எண்.10: M C C கேம்பஸ் கிளை: Ph: 22390114, 22395612, Mob: 9444914398. Email ID: iob0191@iob.in
கடன் கணக்கு பெயர்: M/s.முலர் ஏஜென்சிஸ், Mr.E.சங்கர் (உரிமையாளர்) எண்.29/14, வடக்கு தெரு, கணபதிபுரம், கிழக்கு தாம்பரம், சென்னை-600059, **துணைஉரிமையாளர்: Mr.K.ரஜனி,** எண்.30, பாலாஜி தெரு, கணபதிபுரம், கிழக்கு தாம்பரம், சென்னை-600059, **மற்றும் Mr.M.ஜஸ்டின்பாபு,** A-45, சென்னை காவிரிநகர், சூளைமேடு, திருவள்ளூர் சாலை, கண்ணிகாபுரம், வண்ணாரப்பேட்டை, சென்னை-600016. NPA தேதி: **29.06.2014;** கோரிக்கை அறிவிப்பு தேதி: **02.11.2015;** வரவிலை எடுத்த தேதி: **07.03.2018, கடன் நிலுவை தொகை : 27.09.2018 அன்றுள்ளபடி Rs.31,29,307/-** மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விபரம் சொத்து எண்.1 K.ராஜாவுக்கு சொந்தமானது. சர்வே எண்.1007/1B, மனை எண்.27, ஜீ வாலி நகர், மணிமங்கலம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியில் 2100 சதுர அடி சொத்து. அதனுடன் நுண்கூறும் பகுதிகளும் எல்லைகள் வடக்கு: மனை எண்.26, தெற்கு: மனை எண்.28, கிழக்கு: மனை எண்.35, மேற்கு: மனை எண்.31.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 21,00,000/-, டெபாசிட்தொகை: ₹ 2,10,100/- & ஏல உயர்வு தொகை: ₹ 50,000/-

சொத்து விபரம் சொத்து எண்.2: Mr.M.ஜஸ்டின்பாபுக்கு சொந்தமானது. சர்வே எண் 1019/2 பகுதி மற்றும் 1019/1A, மனை எண்.15, ஜீ வாலி நகர், மணிமங்கலம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியில் 1800 சதுர அடி காலி நிலம் அதனுடன் நுண்கூறும் பகுதிகளும். எல்லைகள் வடக்கு: மனை எண்.14, தெற்கு: மனை எண்.16, கிழக்கு: அண்ணாசாலை, மேற்கு: மனை எண்.1020 தனியார் சொத்து.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 15,30,000/-, டெபாசிட்தொகை: ₹ 1,53,000/- & ஏல உயர்வு தொகை: ₹ 50,000/-

EMD Remittance: MCC CAMPUS BRANCH (Sl.No.9 & 10): Deposit through EFT/NEFT/RTGS transfer in favour of " Authorised Officer, Indian Overseas Bank" to the credit of A/c.No.019102000001500, Indian Overseas Bank, MCC Campus Branch, No.295, MCC Campus, Velachery Road, Tambaram (East), Chennai-600 059. Branch Code: 0191, IFSC: IOBA0000191.

வ.எண்.11: ஓரகடம் கிளை: Ph: 2719 7071, Mob: 9841005760 Email ID: iob1940@iob.in
கடன் கணக்கு பெயர்: M/s.J.M.மிட்டல், அதன் சார்பாக Mr.P.முரளிகான், S/o.Mr.K.பெருமாள், எண்.163, கோதண்டராமன் நகர், வரதராஜபுரம் கிராமம், முடிச்சூர், சென்னை-600048. NPA தேதி: **29.06.2015**; கோரிக்கை அறிவிப்பு தேதி: **05.10.2015**; வரவிலை எடுத்த தேதி: **14.06.2018, கடன் நிலுவை தொகை : 28.08.2018 அன்றுள்ளபடி Rs.34,34,114/-** மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விபரம் தென் சென்னை சார் பதிவு மாவட்டம், குன்றத்தூர் பத்தாவது முனியன் கண்டிகை S.எண்.240/5, மனை எண்.116, பட்டா எண்.1876, மலைவாடி நகர், எண்.111, வரதராஜபுரம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியில் 664 சதுர அடி காலி மனை. எல்லைகள் வடக்கு: 16 அடி அகல ரோடு, தெற்கு: மனை எண்.111, கிழக்கு: மனை எண்.115, மேற்கு: Mr.ரமேஷ் பாபுக்கு சொந்தமான மனை எண்.117.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 17,25,000/-, டெபாசிட்தொகை: ₹ 1,72,500/- & ஏல உயர்வு தொகை: ₹ 50,000/-

வ.எண்.12: ஓரகடம் கிளை: Ph: 2719 7071, Mob: 9841005760 Email ID: iob1940@iob.in
கடன் கணக்கு பெயர்: Mr.D.பிரகாஷ், S/o.Mr.துரைக்கண்ணு, எண்.133/149, கண்ணபிரான் கோயில் தெரு, சௌராஷ்ட்ரா கிராமம், காஞ்சிபுரம்-602105. NPA தேதி: **31.03.2017**; கோரிக்கை அறிவிப்பு தேதி: **29.07.2017**; வரவிலை எடுத்த தேதி: **14.06.2018, கடன் நிலுவை தொகை: 31.07.2018 அன்றுள்ளபடி Rs.4,54,954/-** மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விபரம் S.எண்.104/35, கதவு எண்.149, கண்ணபிரான் கோயில் தெரு, சௌராஷ்ட்ரா கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியில் ஆலமரத்து 1667.25 சதுர அடி மற்றும் மனை எண் 1624 சதுர அடி நிலம் அதனுடன் இணைந்த நுண்கூறும் பகுதிகளும். சொத்தானது Mr.D.பிரகாஷ் பெயரில் உள்ளது. எல்லைகள் வடக்கு: கண்ணபிரான் கோயில் தெரு, தெற்கு: சர்வேஸ் மனை, கிழக்கு: எல்லையம்மன் நாராயணன் மனை, மேற்கு: பொன்னுசாமி மனை.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 16,00,000/-, டெபாசிட்தொகை: ₹ 1,60,000/- & ஏல உயர்வு தொகை: ₹ 50,000/-

வ.எண்.13: ஓரகடம் கிளை: Ph: 2719 7071, Mob: 9841005760 Email ID: iob1940@iob.in
கடன் கணக்கு பெயர்: M/s.கோகுலா கெமிகல் & ஜாலர்ஸ் சர்வீஸ், அதன் சார்பாக உரிமையாளர் Mr.V.வ தமிழரசு, S/o. Mr. வெங்கடேசுவர ராவ், எண்.2/20, கலைஞர்நகர் தெரு, குன்றத்தூர், சென்னை-600094, NPA தேதி: **30.09.2016**; கோரிக்கை அறிவிப்பு தேதி: **07.06.2018;** வரவிலை எடுத்த தேதி: **20.08.2018, கடன் நிலுவை தொகை : 12.09.2018 அன்றுள்ளபடி Rs.27,53,933/-** மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விபரம் தென் சென்னை பதிவு மாவட்டம், விருகம்பாக்கம் சார் பதிவு மாவட்டம் என்னைக்குட்பட்ட புதிய சர்வே எண்.75/2B, பழைய சர்வே எண்.75, கதவு எண்.2, மனை எண்.97, எம்.எம். தெரு, பல்லாவரம் நகர், பண்.எ எண்.11, வார்டு எண்.145, எண்.74, தெற்குமாடி கிராமம், அம்பத்தூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியில் 756 சதுர அடி காலி மனை, அதனுடன் இணைந்த நுண்கூறும் பகுதிகளும். சொத்தானது Mr.V.வ தமிழரசு பெயரிலுள்ளது எல்லைகள் வடக்கு மனை எண்.28, தெற்கு: ரோடு, கிழக்கு: மனை எண்.90, மேற்கு: பள்ளி.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 30,00,000/-, டெபாசிட்தொகை: ₹ 3,00,000/- & ஏல உயர்வு தொகை: ₹ 50,000/-

வ.எண்.14: ஓரகடம் கிளை: Ph: 2719 7071, Mob: 9841005760 Email ID: iob1940@iob.in
கடன் கணக்கு பெயர்: M/s.J.M.மிட்டல், அதன் சார்பாக Mr.P.முரளிகான், S/o.Mr.K.பெருமாள், எண்.163, கோதண்டராமன் நகர், வரதராஜபுரம் கிராமம், முடிச்சூர், சென்னை-600048. NPA தேதி: **30.09.2016**; கோரிக்கை அறிவிப்பு தேதி: **07.06.2018;** வரவிலை எடுத்த தேதி: **18.08.2018, கடன் நிலுவை தொகை : 12.09.2018 அன்றுள்ளபடி Rs.57,39,058/-** மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விபரம் சொத்து எண்.1: ஸ்ரீபெரும்புதூர் பதிவு மாவட்டம், செங்கல்பட்டு சார் பதிவு மாவட்டம் என்னைக்குட்பட்ட, சர்வே எண்.291/14, **பழைய எண்.174, புதிய எண்.121, மனை எண்கள்.6,7,&8, கலைஞர்தெரு அலெனது விரிவு-1, தாதனூர் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா** என்னும் முகவரியில் 9056 ½ சதுர அடி காலி மனைகள், அதனுடன் இணைந்த நுண்கூறும் பகுதிகளும். எல்லைகள் **மனை எண்.6:** வடக்கு: மனை எண்.5, தெற்கு: மனை எண்.7, கிழக்கு: 23 அடி ரோடு, மேற்கு: கலைஞர்தெரு அலெனது விரிவு மனை எண்.36. **மனை எண்.7:** வடக்கு: மனை எண்.6, தெற்கு: மனை எண்.8, கிழக்கு: 23 அடி ரோடு, மேற்கு: கலைஞர்தெரு அலெனது விரிவு மனை எண்.37. **மனை எண்.8:** வடக்கு: மனை எண்.7, தெற்கு: காலி நிலம், கிழக்கு: 23 அடி ரோடு, மேற்கு: கலைஞர்தெரு அலெனது விரிவு மனை எண்.38.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 47,00,000/-, டெபாசிட்தொகை: ₹ 4,70,000/- & ஏல உயர்வு தொகை: ₹ 50,000/-

சொத்து எண்.2: புதிய சர்வே எண்.245/5A2, ஆலம்பாக்கம் ரோடு, புதிய கிராம எண்.143, பழைய கிராம எண்.89, ஆதனஞ்சேரி கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியில் 4400 சதுர அடி காலி வீட்டு மனை, அதனுடன் இணைந்த நுண்கூறும் பகுதிகளும். எல்லைகள் வடக்கு: ஆலம்பாக்கம் ரோடு, தெற்கு: சர்வே எண்.245/6-ல் உள்ள நிலம், கிழக்கு: சர்வே எண்.245/5A2A-ன் கிழக்கு பகுதி, மேற்கு: சர்வே எண்.246-ல் உள்ள நிலம்.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 45,00,000/-, டெபாசிட்தொகை: ₹ 4,50,000/- & ஏல உயர்வு தொகை: ₹ 50,000/-

வ.எண்.15: ஓரகடம் கிளை: Ph: 2719 7071, Mob: 9841005760 Email ID: iob1940@iob.in
கடன் கணக்கு பெயர்: M/s.J.S.டிரேடர்ஸ், அதன் சார்பாக Mr.எஸ்கிரேட்டு வெங்க. ரமணா, S/o.Mr.வேதத் ஆரி நெட்டு, எண்.163, கோதண்டராமன் நகர், வரதராஜபுரம், முடிச்சூர், சென்னை-600048. NPA தேதி: **31.03.2017**; கோரிக்கை அறிவிப்பு தேதி: **

மதுரை ஒருங்கிணைந்த மொத்த பழச்சந்தை அக். 11-இல் திறப்பு

முதல்வர் பங்கேற்கிறார்

மதுரை, அக். 6: மதுரை மாட்டுத்தாவணி பகுதியில் சுமார் ரூ.22 கோடியில் அமைக்கப்பட்டுள்ள புதிய ஒருங்கிணைந்த மொத்த பழச்சந்தை வளாகத்தை தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி வரும் அக். 11 ஆம் தேதி திறந்து வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதையடுத்து சனிக்கிழமை அமைச்சர்கள் இச்சந்தை வளாகத்தை ஆய்வு செய்தனர்.

மதுரை யானைக்கல் பகுதியில் பழக்கடைகள் உள்ளன. நூறாண்டுகள் கடந்து செயல்படும் இப்பழக்கடைகளால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாக புகார் எழுந்தது. இதையடுத்து பொலிவுறு நகர்த் திட்டத்தின் கீழ் இப்பழக்கடைகள் அனைத்தையும் மாட்டுத்தாவணி பகுதிக்கு இடம் மாற்றம் செய்ய மாநகராட்சி நிர்வாகம் முடிவு செய்து, அவற்றின் உரிமையாளர்களிடம் கடைகளுக்கான முன்வைப்புத் தொகைகள் பெறப்பட்டன. மொத்தம் 240 பேரிடம் பெறப்பட்ட ரூ. 8 கோடி மூலம் கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டன. அத்துடன் மாநகராட்சியின் பொது நிதி ரூ.3 கோடியையும் சேர்த்து அங்கு 240 கடைகளுக்கான கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மதுரை மாட்டுத்தாவணியில் கட்டப்பட்டுள்ள புதிய ஒருங்கிணைந்த மொத்த பழச்சந்தை வளாகத்தை சனிக்கிழமை ஆய்வு செய்த அமைச்சர்கள் ஆர்.பி. உதயகுமார், செல்லூர் கே.ராஜூ.

இந்த ஒருங்கிணைந்த மொத்த பழச்சந்தை வளாகத்துக்குள் மழை நீர் வடிகால், சுற்றுச்சுவர் மற்றும் மழைநீர் சேமிப்பு, கழிவுநீர் வெளியேற்றம், சிமெண்ட் சாலை ஆகியவற்றை அமைக்க பொலிவுறு நகர்த் திட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் பொலிவுறு நகர்த்திட்ட நிதியை செலவிட்டதன் அடையாளமாக இச்சந்தையின் சுற்றுச் சுவர்களில் மதுரையின் சித்திரைத் திருவிழா உள்ளிட்ட பாரம்பரிய வண்ண ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

முதல்வர் மூலம் திறக்க நடவடிக்கை: இதனிடையே புதிய ஒருங்கிணைந்த மொத்த பழச்சந்தை வளாகத்தை முதல்வர் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரும் அக். 11 ஆம் தேதி திறப்பு விழா நடத்த திட்டமிட்டுள்ளதாக மாவட்ட, மாநகராட்சி நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆய்வு: இந்நிலையில், இப்பழச்சந்தையை சனிக்கிழமை அமைச்சர்கள் செல்லூர் கே.ராஜூ, ஆர்.பி.உதயகுமார் ஆகியோர் ஆய்வு செய்தனர். அப்போது மாவட்ட ஆட்சியர் ச.நடராஜன், மாநகராட்சி ஆணையர் அனீஷ்சேகர் மற்றும் சட்டப் பேரவை உறுப்பினர்கள் வி.வி.ராஜன்செல்லப்பா, எஸ்.எஸ்.சரவணன், பெரியபுள்ளான் மற்றும் நகரப் பொறியாளர் வீ.அரசு உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

சேர்வலாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 16 அடி உயர்வு

திருநெல்வேலி, அக். 6: மேற்குத் தொடர்ச்சி மலையின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்து வரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. சேர்வலாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 16 அடி உயர்ந்துள்ளது.

வடகிழக்குப் பருவமழை அடுத்த சில நாள்களில் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், சில நாள்களாக திருநெல்வேலி மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும், மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை நீடிப்பதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

சனிக்கிழமை காலை 8 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்தில் பதிவான மழையளவு (**மில்லி மீட்டரில்**): குண்டாறு அணை – 49, பாபநாசம் அணை – 47, பாபநாசம் கீழ் அணை – 47, சேர்வலாறு அணை – 43, செங்கோட்டை – 33, கன்னடியன் அணைக்கட்டு – 32.4, சேரன்மகாதேவி – 31, அம்பாசமுத்திரம் – 30, மணிமுத்தாறு அணை – 23.8, ராமநதி அணை – 22, தென்காசி – 22, ஆய்க்குடி – 6.4, பாளையங்கோட்டை – 5.2, ராதாபுரம் – 5, கடனாநதி அணை – 5, நான்குனேரி – 4, சங்கரன்கோவில் – 4, திருநெல்வேலி – 3, சிவகிரி – 3, அடவிநயினார் அணை – 3, கருப்பாநதி அணை – 2.

பாபநாசம், சேர்வலாறு அணைகளுக்கு விநாடிக்கு 1,100 கனஅடி, மணிமுத்தாறு அணைக்கு 45 கனஅடி, கடனாநதி அணைக்கு 76 கனஅடி, ராமநதி அணைக்கு 70 கனஅடி, கருப்பாநதி அணைக்கு 36 கனஅடி, குண்டாறு அணை, அடவிநயினார் அணை, நம்பியாறு அணைகளுக்கு தலா 10 கனஅடி, கொடுமுடியாறு அணைக்கு 36 கனஅடி நீர்வரத்து இருந்தது.

பாபநாசம் அணை நீர்மட்டம் – 105.30 அடி, சேர்வலாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 16 அடி உயர்ந்து 35.27 அடி, மணிமுத்தாறு அணை நீர்மட்டம் – 84.40 அடி, கடனாநதி அணை நீர்மட்டம் – 63.00 அடி, ராமநதி அணை நீர்மட்டம் 2.50 அடி உயர்ந்து 53.50 அடி, கருப்பாநதி அணை நீர்மட்டம் 59.39 அடி, குண்டாறு அணை நீர்மட்டம் ஒரடி உயர்ந்து 35 அடி, அடவிநயினார் அணை நீர்மட்டம் – 83 அடி, வடக்குப் பச்சையாறு அணை நீர்மட்டம் 20 அடி, நம்பியாறு அணை நீர்மட்டம் ஒரடி உயர்ந்து – 21.98 அடி, கொடுமுடியாறு அணை நீர்மட்டம் – 30 அடி.

தொடரும் மழையால் பாபநாசம் அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவு 150 கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது. கடனாநதி அணையிலிருந்து 70 கனஅடி, ராமநதி அணையில் 20 கனஅடி, கருப்பாநதி அணையில் 10 கனஅடி, அடவிநயினார் அணையில் 35 கனஅடி, கொடுமுடியாறு அணையில் 50 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது.

தண்ணீர் நிறுத்தம்: பாசனத்துக்கு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 7 கால்வாய்களில் திறக்கப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் மருதூர் மேலக்கால்வாயில் 1,450 கனஅடி, ஸ்ரீவைகுண்டம் தென்கால் பாசனத்துக்கு 1,006 கனஅடி, வடகால் பாசனத்துக்கு 1,093 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

திருவனந்தபுரம் நவராத்திரி விழாவில் பங்கேற்க சுசீந்திரம் முன்னுதித்த நங்கை அம்மன் புறப்பாடு



மக்கள் வெள்ளத்தில் ஆடி அசைந்து வரும் முன்னுதித்த அம்மன் பல்லக்கு.

நாகர்கோவில், அக். 6: கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் நடைபெறவுள்ள நவராத்திரி விழாவில் பங்கேற்பதற்காக சுசீந்திரம் முன்னுதித்த நங்கை அம்மன் புறப்பாடு சனிக்கிழமை நடைபெற்றது.

திருவிதாங்கூர் மன்னர் ஆட்சிக்காலத்தில் கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரத்தில் உள்ள அரண்மனையில் நவராத்திரி திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்று வந்தது. இவ்விழா 1840ஆம் ஆண்டு சுவாதித் திருநாள் மகாராஜா காலத்தில் திருவனந்தபுரத்துக்கு மாற்றப்பட்டது.

இதையடுத்து, அங்கு நடைபெறும் நவராத்திரி விழாவில் சுசீந்திரம் முன்னுதித்த நங்கை அம்மன், குமாரகோவில் வேளிமலை முருகன், பத்மநாபபுரம் தேவாரக்கெட்டு சரஸ்வதி அம்மன் பங்கேற்பது வழக்கமானது.

நிகழாண்டு நவராத்திரி திருவிழா புதன்கிழமை (அக். 10) தொடங்குகிறது. இதையொட்டி, அந்த விழாவில் பங்கேற்பதற்காக சுசீந்திரம் முன்னுதித்த நங்கை அம்மன் சிலை புறப்பபாடு நிகழ்ச்சி சனிக்கிழமை காலை நடைபெற்றது. முன்னதாக, அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. பின்னர், மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கு வாகனத்தில் அம்மன் எழுந்தருளினார்.

அப்போது, தமிழக – கேரள மாநில போலீஸார் துப்பாக்கி ஏந்தி அணிவகுப்பு மரியாதை செலுத்தினர். வழியெங்கும் பக்தர்கள் மலர் தூவி அம்மனை வழிபட்டனர். பெண்களும், சிறுமிகளும் முத்துக்குடை ஏந்தி ஊர்வலத்துக்கு முன்னால் சென்றனர்.

தொடர்ந்து, பல்லக்கு ஊர்வலம் தாணுமாலய சுவாமி கோயில் முன்னால் வந்தது. அங்கு கோயில் நிர்வாகம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

கோயிலின் 4 ரதவீதிகளையும் பல்லக்கு வலம் வந்தது. பெண்கள் தங்களது வீடுகளில் விளக்கேற்றி மலர்தூவியும், திருக்கண்சாத்தியும் வழிபட்டனர்.

நிகழ்ச்சியில், மலையாளத் திரைப்பட நடிகர் சுரேஷ்கோபி எம்.பி. கலந்துகொண்டு அம்மனை தரிசித்தார். திரளானோர் கலந்துகொண்டனர்.

இந்த ஊர்வலம் கோட்டாறு, செட்டிக்குளம் சந்திப்பு, பார்வதிபுரம், சுங்கான்கடை வழியாக பத்மநாபபுரம் நீலகண்டன் சுவாமி கோயிலை அடைந்தது. அங்கிருந்து, ஞாயிற்றுக்கிழமை (அக்டோபர் 7) முன்னுதித்த நங்கை அம்மன், வேளிமலை முருகன், தேவாரக்கெட்டு சரஸ்வதி அம்மன் சிலைகள் திருவனந்தபுரத்துக்கு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படுகின்றன.

அப்போது, பத்மநாபபுரம் அரண்மனையில் பாரம்பரியமான உடைவாள் மாற்றும் நிகழ்ச்சி நடைபெறும். இதில் மத்திய இணை அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன், கேரள மாநில அமைச்சர்கள் கலந்துகொள்கின்றனர்.

தொடர் மழையால் புதுச்சேரியில் 1,500 ஏக்கர் நெல் பயிர்கள் நீரில் மூழ்கின

புதுச்சேரி, அக். 6: தொடர் மழையால் புதுச்சேரி சுற்று வட்டாரப் பகுதிகளில் 1,500 ஏக்கர் நெல் பயிர்கள் நீரில் மூழ்கின.

புதுவையில் கடந்த 3-ஆம் தேதி இரவு முதல் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், தாழ்வான பகுதிகளில் வீடுகளுக்குள் மழைநீர் புகுந்தது. சனிக்கிழமை ஓரளவு மழை குறைந்து லேசான தூறல் மட்டுமே இருந்தது. இருப்பினும், புதுச்சேரி சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடந்த 4 நாள்களாகப் பெய்த பலத்த மழையால் ஏரிகளில் நீர்வரத்து அதிகரித்தது. சில இடங்களில் மதகுகள் பராமரிப்பின்றி இருப்பதால், அதன் வழியாக நீர் வெளியேறி விளைநிலங்களில் தேங்கியது.

பாகூர், ஏம்பலம், கரிக்கலாம்பாக்கம், திருக்கனூர், திருபுவனை, நெட்டப்பாக்கம் ஆகிய கிராமப் புறப் பகுதிகளில் விவசாய நிலங்களில் மழைநீர் தேங்கியுள்ளதால், சுமார் 1,500 ஏக்கரில் நெல் பயிர்கள் நீரில் மூழ்கின.

மேலும், 3 நாள்களுக்கு பலத்த மழை இருக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டதால், அரசுத் துறை அதிகாரிகளை புதுவை அரசு தீவிரக் கண்காணிப்பில் இருக்கும்படி அறிவுறுத்தியுள்ளது.

புதுச்சேரி பாகூர் பகுதியில் பெய்த தொடர் மழையால் நீரில் மூழ்கிய நெல் பயிர்கள்.

புதுவை ஆளுநர் கிரண் பேடி, முதல்வர் நாராணசாமி ஆகியோர் அரசு அதிகாரிகளுடன் தொடர்ந்து ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி, மழை நிவாரணப் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

மோசமான வானிலை காரணமாக, புதுச்சேரியில் இருந்து பெங்களூரு, ஹைதராபாத் நகரங்களுக்கு இயக்கப்படும் விமானங்கள் வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமை ரத்து செய்யப்பட்டன. மீனவர்கள் 4 நாள்களுக்கும் மேலாக கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை.

பாகூர் பகுதியில் வெள்ளிக்கிழமை காலை முதல் சனிக்கிழமை காலை வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் 84. மி.மீ. மழை பதிவானது.

இந்தப் பகுதியில் 500-க்கும் மேற்பட்ட வீடுகளை மழைநீர் சூழ்ந்துள்ளது.

இந்த நிலையில் பாகூர், குருவிநத்தம், சோரியாங்குப்பம், பரிக்கல்பட்டு ஆகிய பகுதிகளில் மழைநீரில் மூழ்கிய நெல் பயிர்களை வேளாண் கூடுதல் கண்காணிப்பு இயக்குநர் பார்த்திபன் சனிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் அபிஜித் விஜய் சௌத்ரி புதுச்சேரி, உழவர்கரை நகராட்சிப் பகுதிகளில் மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் ஆய்வு செய்து, மீட்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட்டார்.

தொடர் மழையால் காட்டேரிக்குப்பம், ஜிப்மர் அருகே வேரோடு சாய்ந்த மரங்களைத் தீயணைப்பு வீரர்கள் அகற்றினர்.

பிள்ளையார்குப்பம், கிருமாம்பாக்கம், இந்திரா காந்தி சிலை சதுக்கம் உள்ளிட்ட பகுதிகளில் தேங்கிய நீரை பொதுப்பணித் துறையினர் அகற்றினர்.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
ராயபுரம் கிளை
எண்.82/153 & 83/155, மக்காஸாரி கோயில் தெரு, ராயபுரம், சென்னை-600 013
Ph: 2595 3208, 2595 2550. e-mail: iob0673@iob.in

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான இ - ஏல பொது அறிவிப்பு

கடன்பட்ட சொத்துக்களை பொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளை சீரமைத்தல், கடன்பட்ட சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ் வங்கியிடம் அடமானத்திலுள்ள அசையா சொத்துக்கள் விற்பனை, அதிகாரபூர்வ அதிகாரி தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி விதி எண் 8(6)ன் கீழ் கடன்பட்ட சொத்துக்களை பொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளை சீரமைத்தல், கடன்பட்ட சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ் கடன்தாரருக்கு கோரிக்கை அறிவிப்பை (Demand Notice) அனுப்பி, நிலுவையுள்ள கடனாகக்கருதி வழங்கப்பட்ட கடன் வரியின் தொடர்பாக வங்கியின் அடமானமாகவுள்ள கீழுக்கு கடன் பெற்றவரும் சொத்துக்களை கீழ் குறிப்பிட்ட தேதியன்று தனது வசத்தாக்கி (Possession) எடுத்துக் கொண்டன. இந்தியன் ஓவர்சீஸ் வங்கியுடன் மேலும் அதன் மீதான வட்டி, கட்டணம் இதர செலவுகள் ஆகியவற்றையும் சேர்த்து கடனுக்கு கீழுக்கு கடன் அமைய சொத்துக்களை **'எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையில்' மற்றும் 'எவ்வொப்பிட்டுள்ள அதிகாரி'** தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி சட்டம் விதி 13(4)-ன் கீழ் ஏல முறையாக விற்கவோ முடிவு செய்துள்ளார். சொத்துக்களின் விபரங்கள் (www.auctiontiger.net) என்ற இணையதளத்தில், இணைப்பு வங்கியாக கீழே எவ்வொப்பிட்டவரால் தரப்படும்.

வ.எண்.1: கடன்தாரர்களின் பெயர் மற்றும் முகவரி: 1. Mr.B.கோபாலசாமி மற்றும் 2. Mrs.G.ராஜலக்ஷ்மி, W/o.கோபாலசாமி, இருவரது முகவரி: பிளாட் எண்.4, இரண்டாவது தளம், பிளாக் C, பிரிந்தாவன் அபார்ட்மெண்ட்ஸ், பழைய கதவு எண்.15, புதிய எண்.67 குறுக்கு ரோடு, புதிய வண்ணாரப்பேட்டை, சென்னை-600081. 3. M/s.G R K ஸ்டீல், அதன் உரிமையாளர் Mr.B.கோபாலசாமி, பழைய எண்.54, புதிய எண்.70, அரண் எண்.8, செங்குன்னம் தெரு, சென்னை-600 001.

NPA தேதி: 01.01.2015; கோரிக்கை அறிவிப்பு தேதி: 24.07.2017; கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 24.07.2017 அன்றுள்ளபடி ரூ.47,72,004/- வட்டி, இதர செலவுகள் **கைதினம் எடுத்த தேதி: 02.03.2018; கைதின அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 02.03.2018** அன்றுள்ளபடி ரூ.53,97,580.00 மற்றும் வட்டி, இதர செலவுகள்; ***கடன் நிறுவைத் தொகை: 05.10.2018** அன்றுள்ளபடி **Rs.58,40,000/-** (ரூபாய் ஐம்பத்து எட்டு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகள் மற்றும் **அரசுக்கு செலுத்த வேண்டிய (சொத்து வரி, தண்ணீர், கழிவுநீர், மின்சார ரசீது போன்றவை).**

அசையா சொத்து விபரம்

வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் ராயபுரம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட R.S.எண்.3977/3, பிளாக் எண்.76, தண்டையார்பேட்டை கிராமம், சோட்டா - தண்டையார்பேட்டை, தாலுகா, பிருந்தாவன் அபார்ட்மெண்ட் என அழைக்கப்படும் கட்டடம், அபார்ட்மெண்ட் எண்.4, இரண்டாவது தளம், பிளாக் C, பழைய எண்.15, புதிய எண்.67, குறுக்கு ரோடு, புதிய வண்ணாரப்பேட்டை, சென்னை-600081 என்னும் முகவரியில் பரப்பு 1355 சதுர அடி (125.87 மீட்டர்)-ல் ஒரு பகுதி கட்டடம் கொண்டுள்ள 91,044 சதுர அடி (8461.30 சதுர மீட்டர்), நிலத்தில் 749.53 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம், அதனுடன் இணைந்த தண்டுகளும், பகுதிகளும் எல்லைகள் வடக்கு R.S.எண்.3977/7-ல் உள்ள குறுக்கு ரோடு, தெற்கு R.S.எண்.3973-ல் உள்ள குடியிருப்பு பகுதி, கிழக்கு R.S.எண்.3977/13-ல் உள்ள காலியிட, மேற்கு R.S.எண்.3976/3-ல் உள்ள நிலம் மற்றும் கட்டடம் R.S.எண்.3976/3. சொத்தானது Mr.B.கோபாலசாமி மற்றும் Mrs.G.ராஜலக்ஷ்மி பெயரில் உள்ளது.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 67,18,000/-; டிபாஸிட்தொகை (EMD): ₹ 6,71,800/-

வ.எண்.2: கடன்தாரர்களின் பெயர் மற்றும் முகவரி: Mrs.S.கௌரிவல்லி மற்றும் Mrs.K.கலைச்செல்வி, இருவரது முகவரி: 108/247 & 249, T.H.ரோடு, கொடுங்கையூர், சென்னை-600019.

NPA தேதி: 01.07.2013; கோரிக்கை அறிவிப்பு தேதி: 20.11.2017; கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 20.11.2017 அன்றுள்ளபடி ரூ.68,54,350/- வட்டி, இதர செலவுகள் **கைதினம் எடுத்த தேதி: 03.08.2018; கைதின அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 03.08.2018** அன்றுள்ளபடி ரூ.54,77,577/- மற்றும் வட்டி, இதர செலவுகள்; ***கடன் நிறுவைத் தொகை: 05.10.2018** அன்றுள்ளபடி **Rs.57,01,000/-** (ரூபாய் ஐம்பத்தேழு லட்சத்து ஆயிரம் மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகள் மற்றும் **அரசுக்கு செலுத்த வேண்டிய (சொத்து வரி, தண்ணீர், கழிவுநீர், மின்சார ரசீது போன்றவை).**

அசையா சொத்து விபரம்

சர்வே எண்கள் 173/4D, 41, 45, T.S.எண்கள் 740 பகுதி, 76, 77, 78, 79 பகுதி, 80 பகுதி, 81 பகுதி, பழைய கதவு எண்கள் 107, 109A, 111, 112, 113, 108, புதிய கதவு எண்கள் 247, 249, T.H.ரோடு, காத்தவராயன் வந்தவாசி தெரு, காவாயிபேட்டை, சென்னை-600019 என்னும் முகவரியில் 3684 சதுர அடி நிலம் மற்றும் கட்டடம், அதனுடன் இணைந்த தண்டுகளும் பகுதிகளும் எல்லைகள் வடக்கு T.S.எண் 74 பகுதி, 75 பகுதி, 79 பகுதி, 80 பகுதி, தெற்கு T.S.எண் 79 பகுதி, 81 பகுதி, 82, 83, கிழக்கு T.H.ரோடு, மேற்கு T.S.எண் 104.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 2,22,50,000/-; டிபாஸிட்தொகை (EMD): ₹ 22,25,000/-

வ.எண்.3: கடன்தாரர்களின் பெயர் மற்றும் முகவரி: Mrs.வசீர மரியம் மற்றும் Mr.ஜா.டீன் ஜாதிக், இருவரது முகவரி: பிளாட் எண்.T24-A&B, முதல் தளம், எல்பிஸ்டோன் அபார்ட்மெண்ட்ஸ், புதிய வைத்தியராமன் தெரு, தண்டையார்பேட்டை, சென்னை-600081.

NPA தேதி: 31.03.2017; கோரிக்கை அறிவிப்பு தேதி: 17.04.2017; கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 17.04.2017 அன்றுள்ளபடி ரூ.55,64,436.28 வட்டி, இதர செலவுகள் **கைதினம் எடுத்த தேதி: 02.03.2018; கைதின அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 02.03.2018** அன்றுள்ளபடி ரூ.61,05,808.28 மற்றும் வட்டி, இதர செலவுகள்; ***கடன் நிறுவைத் தொகை: 05.10.2018** அன்றுள்ளபடி **Rs.66,21,000/-** (ரூபாய் அறுபத்து ஒரு லட்சத்து இருபத்து ஒராயிரம் மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகள் மற்றும் **அரசுக்கு செலுத்த வேண்டிய (சொத்து வரி, தண்ணீர், கழிவுநீர், மின்சார ரசீது போன்றவை).**

அசையா சொத்து விபரம்

பழைய சர்வே எண்.3213, 3940/A, 3940/B, 3214 & 3215 மற்றும் புது சர்வே எண்.3938/1, 3940/1, 3936/1 & 3937/1, தண்டையார்பேட்டை கிராமம், பிளாக் எண்.73, சென்னை மாநகராட்சி தாலுகா, **சர்வே எண்.T24-A&B,** முதல் தளம், எல்பிஸ்டோன் அபார்ட்மெண்ட்ஸ், புதிய வைத்தியராமன் தெரு, தண்டையார்பேட்டை, சென்னை-600081 என்னும் முகவரியில் 1630.47 சதுர அடி ப்ளாட் பொத்தமுள்ள 221 கிரவுண்ட் 648.88 சதுர அடி நிலத்தில் 1007.67 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம் மற்றும் கார் பார்க்கிங் மற்றும் அதனுடன் இணைந்த தண்டுகளும், பகுதிகளும் எல்லைகள் வடக்கு R.S.எண்.3941/3-ல் உள்ள சொத்து, தெற்கு வைத்தியராமன் தெரு, கிழக்கு சென்னிமலை கோயில் தெரு மற்றும் சர்வே எண்.3940/2-ல் உள்ள சொத்து, மேற்கு எல்பி முதலி தெரு, சர்வே எண் 3939/3-ல் உள்ள சொத்து.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 76,87,000/-; டிபாஸிட்தொகை (EMD): ₹ 7,68,700/-

வ.எண்.4: கடன்தாரர்களின் பெயர் மற்றும் முகவரி: J.ஜீதரன், S/o.V.B.தாமோதரன் மற்றும் Mrs.S.காமாட்சி, W/o.J.ஜீதரன், இருவரது முகவரி: பிளாட் எண்.2, இரண்டாவது தளம், பிளாக் C, பிருந்தாவன் அபார்ட்மெண்ட்ஸ், பழைய எண்.15, புதிய எண்.67, குறுக்கு ரோடு, புதிய வண்ணாரப்பேட்டை, சென்னை-600 081.

NPA தேதி: 01.07.2015; கோரிக்கை அறிவிப்பு தேதி: 20.11.2017; கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 20.11.2017 அன்றுள்ளபடி ரூ.42,11,032.05 வட்டி, இதர செலவுகள் **கைதினம் எடுத்த தேதி: 03.08.2018; கைதின அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 03.08.2018** அன்றுள்ளபடி ரூ.45,53,587.05 மற்றும் வட்டி, இதர செலவுகள்; ***கடன் நிறுவைத் தொகை: 05.10.2018** அன்றுள்ளபடி **Rs.47,01,000/-** (ரூபாய் நாற்பத்து ஏழு லட்சத்து ஆயிரம் மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகள் மற்றும் **அரசுக்கு செலுத்த வேண்டிய (சொத்து வரி, தண்ணீர், கழிவுநீர், மின்சார ரசீது போன்றவை).**

அசையா சொத்து விபரம்

வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் ராயபுரம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.3977/3, பிளாக் எண்.76, அபார்ட்மெண்ட் எண்.2, இரண்டாவது தளம், பிளாக் C, பிருந்தாவன் அபார்ட்மெண்ட்ஸ் என பெயரிட்ட கட்டடங்கள் மீதுள்ள, தண்டையார்பேட்டை கிராமம், சோட்டா தண்டையார்பேட்டை, தாலுகா, சென்னை 600 081 என்னும் முகவரியில் 1545 சதுர அடி ப்ளாட், மொத்த இடம் உட்பட, மொத்தமுள்ள 91044 சதுர அடி (608.59 சதுர மீட்டர்) நிலத்தில் 854.63 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம், அதனுடன் இணைந்த தண்டுகளும் பகுதிகளும் எல்லைகள் வடக்கு R.S.எண்.3977/7-ல் உள்ள குறுக்கு ரோடு, தெற்கு R.S.எண்.3973-ல் உள்ள குடியிருப்பு இடம், கிழக்கு R.S.எண்.3977/13-ல் உள்ள காலியிட, (நிலம் மற்றும் தொழிற்சாலை கட்டடம் மற்றும் OSR நிலம்), மேற்கு R.S.எண் 3976/3-ல் உள்ள நிலம் மற்றும் கட்டடம்

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 77,88,000/-; டிபாஸிட்தொகை (EMD): ₹ 7,78,800/-

இ-ஏலம் நடைபெறும் தேதி & நேரம்: 12.11.2018 காலை 11.00 மணி முதல் 12.00 மணி வரை

விற்பனை முடியும் வரை தலா 5 நிமிடங்கள் கொண்ட நீட்டிப்புகள் அனுமதிக்கப்படும்

EMD செலுத்தும் முறை : EFT/NEFT/RTGS மின்பரிவர்த்தனை மூலம் "IOB Royapuram Branch" to the credit of **Current A/c No.067302000010000; Name: E Auction Account; IFSC Code: IOBA0000673; Branch Code: 0673;** Indian overseas bank, Royapuram Branch, 82/153 & 83/155 M.S. Koil Street, Royapuram, Chennai 600013 என்ற வங்கியில் வங்கியின் பெயரில், செய்ய வேண்டும்.

ஏல உயர்வுத்தொகை வ.எண்கள் 1, 3 & 4: ₹ 25,000/- & வ.எண் 2: ₹ 1,00,000/-

வங்கிக்கு தெரிந்தவரை விவரங்கள்: தெரியவில்லை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்: 02.11.2018, காலை 11.00 மணி

விலைக்குறிப்பேடு படிவத்தினை EMD உடன் ஆன்லைனில் சமர்பிக்கும் தேதி : 06.10.2018 முதல்

விலைக்குறிப்பேடு படிவத்தினை EMD உடன் ஆன்லைனில் சமர்பிக்க கடைசி தேதி : 09.11.2018 by 4.00 p.m.

***சட்டபூர்வமான பாக்கிகளை விட வங்கியின் பாக்கிகளுக்கே முன்னுரிமை உள்ளது.**

விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு பின்வரும் இணையதளங்களை பார்க்கவும்:
(1) https://www.iob.in/e-Auctions.aspx (2) https://www.publishtenders.gov.in (3) www.auctiontiger.net

ஆர்வமுள்ள விலைக்குறிப்பேடாளர்கள் சொத்தினை பார்வையிடுதல் / இ-ஏல விற்பனையின் மேலும் விவரங்களுக்கு, Shri G.தினகரன், உதவி பொது மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இராயபுரம் கிளை, எண்.82/153 & 83/155 M.S. கோயில் தெரு, இராயபுரம், சென்னை 600013. Ph: No: 044 - 2595 2550 என்ற முகவரியில் அலைபேசி வேலை நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். அல்லது வங்கியின் அனுமதி பெற்ற சேவை வழங்குநர் **M/s E- Procurement Technologies Pvt Ltd.,** Mr.பாரதி ராஜா, **Mob: +91 - 88390 00594** மற்றும் Mr.பிரவின் குமார் தேவா, **Mob: +91 - 97227 78823 / +91 - 79681 35422 / +91 - 79681 35475**-ஐ தொடர்புகொள்ளலாம்.

இடம் : சென்னை
தேதி : 05.10.2018

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

இந்தியாவின் கலாசார அங்கமாகத் திகழ்கிறது அறிவியல்!

ராம்நாத் கோவிந்த் பெருமிதம்

வே.சுந்தரேஸ்வரன்

லக்னௌ, அக்.6: 'இந்திய கலாசாரத்தின் ஓர் அங்கமாக அறிவியல் திகழ்கிறது' என்று குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

உத்தரப் பிரதேச மாநிலம், லக்னௌவில் நான்காவது இந்திய சர்வதேச அறிவியல் விழா வெள்ளிக்கிழமை தொடங்கியது. இரண்டாவது நாளான சனிக்கிழமை இந்த விழாவை முறைப்படி தொடங்கி வைக்கும் நிகழ்வில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பங்கேற்றுப் பேசியதாவது: பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள் அமைந்துள்ள லக்னௌவில் இந்த அறிவியல் விழா நடைபெறுவது மிகவும் சிறப்புக்குரியதாகும். அறிவியல் எப்போதுமே இந்திய கலாசாரத்தின் ஓர் அங்கமாகத் திகழ்ந்து வருகிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நமது மூதாதையர்கள் கணிதம், பூஜ்ஜியம் ஆகியவற்றின் கருத்தாக்க ரகசியங்களை வெளிப்படுத்தினர். அறிவியலின் அனுபவங்களை மருத்துவம், உலோகத் தூய்மை போன்ற தளங்களில் பயன்படுத்தவும் செய்தனர்.

நாட்டில் 1947-ஆம் ஆண்டுக்கு பிறகு அறிவியல் வளர்ச்சி கண்டுள்ளது. பசுமைப் புரட்சியில் இருந்து விண்வெளித் திட்டம் வரை பலவற்றிலும் அறிவியல் உந்து சக்தியாக இருந்து வருகிறது. தற்போது 21-ஆம் நூற்றாண்டின் முதல் கால் பகுதியானது, 'ரோபோடிக்ஸ்' காலமாக உள்ளது. மிகப்பெரிய வளர்ச்சிக்கான உரிய காலமாகும் இது. அறிவியலை மக்கள் இயக்கமாக மாற்றாமல், இந்த வளர்ச்சியை எட்ட முடியாது. இந்தியாவை, மேம்பட்ட தொழில்துறை பலம் வாய்ந்த நாடாக மாற்றுவதற்கு, அறிவுசார் படைப்புச் சக்தியை மேம்படுத்துவது அவசியமாகும். 2012 - 2017 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் தாயகத்தில் ஆராய்ச்சி வாய்ப்புகளை தொடர்ந்து மேற்கொள்வதற்காக வெளிநாடுகளில் இருந்து 649 இந்திய விஞ்ஞானிகள் நாடு திரும்பினர். இது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். அதற்கு முந்தைய ஐந்து ஆண்டுகளில் 243 விஞ்ஞானிகள் மட்டுமே நாடு திரும்பினர்.

இந்திய சர்வதேச அறிவியல் விழாவில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்துக்கு நினைவுப் பரிசாக மரக்கன்று வழங்கிய மத்திய அறிவியல், தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன். உடன், உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்.

இந்திய 'ஸ்டார்ட் அப்' நிறுவனங்களின் காப்புரிமை விண்ணப்பங்கள் 2016-இல் 61 என்ற நிலையில் இருந்தது. இது 15 மடங்கு அதிகரித்து 2017-இல் 909 ஆக உயர்ந்துள்ளது. 2018-இல் இந்தியாவினுடைய ஆராய்ச்சி, வளர்ச்சி முதலீடுகள் 83.27 பில்லியன் அமெரிக்க டாலராக மதிப்பிடப்படும். மத்திய அரசு அறிவித்துள்ள பிரதமரின் ஆராய்ச்சி 'ஃபெல்லோ ஷிப்' திட்டமானது புதுமைகள் மூலம் வளர்ச்சியை ஊக்குவிக்கும். 2018-19இல் தொடங்கி 7 ஆண்டுகளுக்கான இத்திட்டத்துக்காக ரூ.1,650 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார் ராம்நாத் கோவிந்த்.

மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன் பேசுகையில், 'நாட்டில் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், இளம் மாணவர்கள், பெண்கள் ஆகியோரை அறிவியல் துறையில் ஊக்குவிக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையின் கீழ் அறிவியல் துறை பல்வேறு முன்னேற்றங்களைக் கண்டு வருகிறது. நானோ தொழில்நுட்பத்திலும் இந்தியா மிகப்பெரிய முன்னேற்றத்தைக் கண்டு வருகிறது. இந்தியாவின் சிஎஸ்ஐஆர் நிறுவனம் உலக அளவில் மிகப்பெரிய கவனத்தைப் பெற்று வருகிறது. தடுப்பூசி உற்பத்தியிலும் இந்தியா மிகப்பெரிய பங்களிப்பை உலகுக்கு அளித்து வருகிறது. பிரதமர் மோடி ஆட்சியில் ஒரே நேரத்தில் 104 செயற்கைக் கோள்கள் விண்வெளிக்கு அனுப்பப்பட்டன. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தங்களது செயற்கைக்கோளை அனுப்புவதற்கு இந்தியாவை நாடுகின்றன. 2022-க்குள் புதிய இந்தியாவை உருவாக்கும் நோக்கில் பிரதமர் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறார்' என்றார்.

உத்தரப் பிரதேச மாநில ஆளுநர் ராம் நாயக், முதல்வர் யோகி ஆதித்யநாத், விஞ்ஞான பாரதிய அமைப்பின் தலைவர் விஜய் பட்கல், மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை செயலர் அசுதோஷ் சர்மா, மத்திய உயிரி தொழில்நுட்பத் துறை செயலர் ரேணு ஸ்வரூப் உள்ளிட்ட பலர் பேசினர். உத்தரப் பிரதேச துணை முதல்வர் தினேஷ் சர்மா மற்றும் ஏராளமான மாணவர்கள், ஆராய்ச்சியாளர்களும் பங்கேற்றனர்.

பிருத்வி-2 ஏவுகணை இரவு நேரத்தில் சோதனை

பாலசோர், அக்.6: அணு ஆயுதங்களை சுமந்து சென்று தாக்குதல் நடத்தும் வல்லமை கொண்ட பிருத்வி-2 ஏவுகணை இரவு நேரத்தில் வெற்றிகரமாக சோதனை நடத்தி பார்க்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பாதுகாப்புப் படை வட்டாரங்கள் கூறியதாவது:

ஒடிஸா மாநிலம், பாலசோர் அருகே உள்ள சண்டிப்பூரில் பிருத்வி-2 ஏவுகணை சனிக்கிழமை இரவு 8.30 மணியளவில் சோதனை நடத்தப்பட்டது. மொபைல் லாஞ்சர் கருவியில் இருந்து செலுத்தப்பட்டதும், திட்டமிட்டபடி பறந்து சென்று இலக்கை பிருத்வி-2 ஏவுகணை வெற்றிகரமாக தாக்கி அழித்தது.

முன்னதாக, பிருத்வி-2 ஏவுகணை கடந்த பிப்ரவரி மாதம் 21 ஆம் தேதி இரவு நேரத்தில் சோதனை நடத்தி பார்க்கப்பட்டது. இதையடுத்து தற்போது சோதனை நடத்தி பார்க்கப்பட்டுள்ளது. ஏவுகணைத் தாக்குதலின் துல்லியத் தன்மை உள்பட அனைத்து செயல்பாடுகளும், பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு முகமையின் கண்காணிப்பு நிலையங்கள், ரேடார் சாதனங்கள் உள்ளிட்டவற்றால் உன்னிப்பாக கவனிக்கப்பட்டன என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிருத்வி-2 ஏவுகணை, அணுகுண்டு உள்ளிட்ட 1,000 கிலோ ஆயுதங்களை சுமந்து சென்று, 350 கிலோ மீட்டர் தூரமுள்ள எதிரிகளின் இலக்கை தாக்கி அழிக்கும் வல்லமை கொண்டது. இந்த ஏவுகணை கடந்த 2003ஆம் ஆண்டு இந்திய பாதுகாப்புப் படைகளில் சேர்க்கப்பட்டது.

ரிலையன்ஸ் காப்பீட்டு திட்டத்தில் சேரும்படி கட்டாயப்படுத்தப்படும் காஷ்மீர் அரசு ஊழியர்கள்

ராகுல் மீண்டும் தாக்கு

புது தில்லி/ஸ்ரீநகர், அக்.6: ரிலையன்ஸ் நிறுவனத்தின் காப்பீட்டு திட்டத்தில் சேரும்படி, ஜம்மு-காஷ்மீர் அரசு ஊழியர்கள் அந்த மாநில அரசால் கட்டாயப்படுத்தப்படுவதாக காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

பிரான்ஸ் நாட்டின் டஸால்ட் ஏவியேஷன் நிறுவனத்திடம் இருந்து இந்திய விமானப் படைக்கு 36 ரஃபேல் போர் விமானங்களை வாங்குவது தொடர்பாக மத்திய அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த ஒப்பந்தத்தில் பொதுத் துறை நிறுவனமான ஹெச்ஏஎல் நிறுவனத்தை சேர்க்காமல், ரிலையன்ஸ் நிறுவனத்தை மத்திய அரசு சேர்த்துள்ளதாகவும், இதில் ஊழல் நடைபெற்றிருப்பதாகவும் ராகுல் காந்தி குற்றம்சாட்டி வருகிறார். இது தொடர்பாக சுட்டுரையில் அவர் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் பதிவுகளை வெளியிட்டார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:

உங்களது (ரிலையன்ஸ் அதிபர் அனில் அம்பானி) மிகவும் சிறந்த நண்பர் நாட்டின் பிரதமராக உள்ளார். ஆதலால், எந்தவித முன் அனுபவமுமில்லை என்றாலும், உங்களால் ரூ.1.30 லட்சம் கோடி மதிப்புடைய ரஃபேல் ஒப்பந்தத்தை பெற முடியும்.

ஆனால் பொறுங்கள். கூடுதல் விஷயங்கள் உள்ளன. உங்களது காப்பீட்டு திட்டத்தில் மட்டும் சேரும்படி கட்டாயப்படுத்தப்படுவதால், ஜம்மு-காஷ்மீர் மாநில அரசு ஊழியர்களும் ஆத்திரத்தில் உள்ளனர் என்று ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்.

காஷ்மீர் அரசு மறுப்பு: இதனிடையே, ராகுல் காந்தியின் குற்றச்சாட்டுகளுக்கு ஜம்மு-காஷ்மீர் அரசு மறுப்பு தெரிவித்துள்ளது. இதுகுறித்து ஸ்ரீநகரில் அந்த மாநில அரசு செய்தித் தொடர்பாளர் கூறியதாவது:

ஜம்மு-காஷ்மீர் அரசால் அண்மையில் தொடங்கப்பட்ட காப்பீட்டு திட்டம் குறித்து தேவையில்லாத சந்தேகங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம், நேர்மையாகவும், வெளிப்படையான முறையிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக 2 முறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. முதல் முறை, ஒரு அரசு நிறுவனம் மட்டுமே விண்ணப்பித்தது. ஆதலால், இது திறக்கப்படவில்லை. இதையடுத்து, 2ஆவது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அப்போது தகுதிவாய்ந்த 5 நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டன. அதில் ரிலையன்ஸ் ஜெனரல் காப்பீட்டு நிறுவனமும் ஒன்று. அந்நிறுவனம் ப்ரீமியம் தொகையாக ரூ.8,776 குறிப்பிட்டிருந்தது. ரிலையன்ஸை காட்டிலும் தேசிய காப்பீட்டு நிறுவனம், ஐசிஐசிஐ லோம்பார்டு, பஜாஜ் அலையன்ஸ், யுனைடெட் இந்தியா அஸுரன்ஸ் ஆகிய 4 நிறுவனங்களும் அதிக ப்ரீமியம் தொகை கோரியிருந்தன' என்றார்.

முன்னதாக, ஜம்மு-அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு அளிக்கப்படும் காப்பீட்டு திட்டத்துக்கு ரிலையன்ஸ் ஜெனரல் காப்பீட்டு நிறுவனத்தை அந்த மாநில அரசு தேர்வு செய்திருப்பதாக செய்திகள் வெளிவந்தன.

நானா படேகருக்கு எதிராக நடிகை தனுஸ்ரீ தத்தா போலீஸில் புகார்

மும்பை, அக்.6: கடந்த 2005ஆம் ஆண்டு நடைபெற்ற திரைப்படப் பிடிப்பில் தன்னிடம் மோசமாக நடந்து கொண்டதாக ஹிந்தி நடிகர் நானா படேகருக்கு எதிராக பிரபல நடிகை தனுஸ்ரீ தத்தா போலீஸில் புகார் அளித்துள்ளார்.

இதுகுறித்து மும்பை (மேற்கு) நகர காவல்துறை கூடுதல் ஆணையர் மனோஜ் குமார் ஷர்மா கூறுகையில், 'நானா படேகருக்கு எதிராக தனுஸ்ரீ தத்தா புகார் அளித்துள்ளார்.

அதன்மீது இதுவரையிலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை' என்றார்.

அண்மையில் அளித்த பேட்டி ஒன்றில், நானா படேகர் தன்னிடம் திரைப்படப் பிடிப்பில் தவறாக நடந்து கொண்டதாக தனுஸ்ரீ புகார் தெரிவித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து, அவருக்கு இந்த விவகாரத்தில் பல நடிகர், நடிகைகள் ஆதரவு தெரிவித்தனர். அப்போது சிலர் மட்டும், சட்ட ரீதியில் நானா படேகருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என கேள்வியெழுப்பினர்.

அதன் தொடர்ச்சியாக, நானா படேகருக்கு எதிராக தனுஸ்ரீ தற்போது புகார் அளித்திருப்பதாக தெரிகிறது.

நானா படேகர் மறுப்பு: ஜோத்பூரில் திரைப்படம் ஒன்றின் படப்பிடிப்பில் கலந்து கொண்ட நானா படேகரிடம் இதுகுறித்து கேள்வியெழுப்பப்பட்டது. அதற்கு அவர் பதிலளிக்கையில், '10 ஆண்டுகளுக்கு முன்பே இது குறித்து தெரிவித்தேன். அது பொய் ஆகும்' என்றார்.

மும்பையின் புறநகர் பகுதியான அந்தேரியிலுள்ள தனது இல்லத்தில் வரும் 8ஆம் தேதியன்று செய்தியாளர்கள் சந்திப்புக்கும் நானா படேகர் ஏற்பாடு செய்துள்ளார்.

அதேபோல், தனுஸ்ரீ தத்தாவுக்கு நானா படேகரின் வழக்குரைஞர் நோட்டீஸும் அனுப்பியுள்ளார்.

சர்ச்சைக்குரிய பதிவுகளை தடுக்க வல்லுநர் குழு

ஃபேஸ்புக் அதிகாரி தகவல்

புது தில்லி, அக்.6: ஐந்து மாநிலங்களில் சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், வெறுப்புணர்வைத் தூண்டும் பேச்சுக்கள் பகிரப்படுவதை தடுப்பதற்காக வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளதாக ஃபேஸ்புக் (முகநூல்) நிறுவனம் தெரிவித்துள்ளது. அந்நிறுவனத்தின் பொதுக் கொள்கை பிரிவு துணைத் தலைவர் ரிச்சர்ட் ஆலன், தில்லியில் செய்தியாளர்களிடம் இதனை சனிக்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், "தேர்தல் சுதந்திரமானதாகவும், நியாயமானதாகவும் நடைபெற எங்களது வலைதளம் உதவிகரமாக இருக்க வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். அரசியல் தலைவர்கள் குறித்து பொதுமக்கள் உரையாடுவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், பொதுமக்கள் அவதூறு பரப்புவதை அனுமதிக்க மாட்டோம்" என்றார்.

கடந்த காலங்களில், தேர்தலின் போது மக்களின் எண்ண ஓட்டங்களை திசை திருப்பும் வகையில் கருத்துக்களை திரித்து வெளியிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும், வெறுப்புணர்வு பேச்சுக்கள் பகிரப்படுவதை தடுக்கவில்லை எனவும் முகநூல் நிறுவனம் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், வெறுப்புணர்வு மற்றும் வன்முறையை தூண்டும் விதமான பதிவுகளை நீக்கும் வகையிலான கொள்கைகளை முகநூல் நிறுவனம் வகுத்துள்ளது.

இதுகுறித்து ரிச்சர்ட் ஆலன் கூறுகையில், "அவதூறு என்பது நாடு விட்டு நாடு வேறுபடுகிறது. ஆனால், விதிமுறை என்பது ஒரே மாதிரியாகத் தான் இருக்க முடியும். ஆகவே, அப்பிரச்சினையை கையாளும் வகையிலான கொள்கைகளை முகநூல் நிறுவனம் வகுத்துள்ளது.

தேர்தல்களை நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம். உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக இந்தியா இருக்கிறது. பாதுகாப்பு வல்லுநர், கருத்தாக்க வல்லுநர் உள்ளிட்டோர் அடங்கிய சிறப்புக் குழுவை நாங்கள் அமைத்துள்ளோம். இந்தியாவில் பரப்பப்படும் அவதூறுக்கும், பிற நாடுகளில் பரவும் அவதூறுகளுக்கும் உள்ள வேறுபாட்டை நாங்கள் புரிந்துகொள்ள முயற்சித்து வருகிறோம்.

பாலினம், இன அடையாளம், தேசிய அடையாளம், உடல் அமைப்பு குறைபாடு, மதம் உள்ளிட்டவற்றின் அடிப்படையில் வெறுப்புணர்வு தூண்டப்படுவதை அனுமதிக்க முடியாது" என்றார்.

கனரா வங்கி
விஜயா கார்ப்பொரேட் கிளை
1-7-1, TSR காம்ப்ளெக்ஸ், S.P. ரோடு, செகந்தராபாத் 500003.

சுவாதீன அறிவிப்பு (விதி 13(4))

(பிணைக்கடன் நிதிச்சொத்து மறு சீரமைப்பு மற்றும் பிணைக்கடன் செயலாக்கச் சட்டம் 2002 மற்றும் பிணைக்கடன் (செயலாக்க) விதிகள் 2002-ன் சட்டம் 54/2002 கீழுள்ள இந்த சட்டம் என்றழைக்கப்படும் (Securitisation & Reconstruction of Financial Assets & Enforcement of Security Interest Act, 2002 and Security Interest (Enforcement) Rules 2002) கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக பிரிவு 13(12)-ன் கீழ் கனரா வங்கியின் அதிகாரியாகிய நான் கோரிக்கை அறிவிப்பு (Demand Notice) குறிப்பிட்ட 21.05.2018 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பின் (Demand Notice) குறிப்பிட்டபடி கடன் தொகையான ரூ.120,69,49,969.28 (ரூபாய் நூற்று இருபது கோடியே அறுபத்து ஒன்று லட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து ஒன்பது மற்றும் ஊபா இருபத்து எட்டு பைசா) - கோரிக்கையாக கடன் மற்றும் கணக்குகளுடன், அறிவிப்பு பெற்ற தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் திருப்பி செலுத்த வேண்டுமென்று கடன்பெற்றவர் M/s.PVP வென்சர்ஸ் லிட், காம்ப்ளெக்ஸ், உத்தரவாதமளித்தவர் மற்றும் M/s.PVP வென்சர்ஸ் லிட், காம்ப்ளெக்ஸ், உத்தரவாதமளித்தவர்/அடமானதாரர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டது.

கடன்பெற்றவர் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தத் தவறியதால் குறிப்பாக கடன் பெற்றவருக்கும் மற்றும் பொதுக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால் பிரிவு சட்டம் 13(4) பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், பிரிவு விதிமுறைகளின் படியும் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 05.10.2018 அன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் உடைமையாக்கியுள்ளார். இதுமுதல் கொண்டு கடன் பெற்றவரோ அல்லது மற்ற பொதுக்களோ இந்தச் சொத்தில் எந்தவித வியாபாரங்களும் எற்படுத்தக் கூடாது என்றும் அவ்வாறு எற்படுத்தினால் அது கனரா வங்கியிடம் வந்து சேர வேண்டிய கடன் தொகை ரூ.120,69,49,969.28 அத்துடன் 01.05.2018 தேதியிலிருந்து பின் வட்டிக்கும், பிற செலவுகளுக்கும் கட்டுபடையது என்றும் இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். பிணையம் வைத்துள்ள சொத்துக்களை மீட்பதில் உள்ள கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ள இச்சட்டத்தின் உட்பிரிவு (8) பிரிவு பிரகாரம் கடன்பெற்றவர்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையா சொத்து விபரம்

மத்திய சென்னை பதிவு மாவட்டம், முகலிவாக்கம் சார் பதிவு மாவட்டம், சென்னை மாவட்டம், முகலிவாக்கம்-கொரட்டூர் நெடுஞ்சாலை, கொரட்டூர் ஏரிக்கரை, கொரட்டூர் கிராமம், பயன் சர்வே எண் 51/1-ல் கிழக்கு பகுதியாக உள்ள 2.82.900 சதுர அடி (24,355.29 சதுர மீட்டர்) காலியிட சொத்து (மேலும் எண்.50 நெடுஞ்சாலை ரோடு, கொரட்டூர், சென்னை-600011 என்ற விலாசத்தில் அமைந்துள்ளது. இச்சொத்து M/s.PVP வென்சர்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தின் பெயரிலுள்ளது. எல்லைகள்: வடக்கு : சர்வே எண் 51/1-ன் பகுதி, தெற்கு : எல்லையான ரோடு, கிழக்கு : குடிநீர் மாற்று ரோடு, மேற்கு : சர்வே எண் 51/1-ன் பகுதி.

தேதி : 05.10.2018 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம்: சென்னை கனரா வங்கி

பாரத ஸ்டேட் வங்கி
தமிழ்நாடு கடன் மதிப்பீட்டு வங்கி
சதீஷ் பாரடைஸ், 1வது தளம், எண் 388, வேளச்சேரி மெயின் ரோடு, சென்னை-600113. போன்:22794876/79

சொத்து கடனாளர்கள் அறிவிப்பு (அரசு சொத்துகளது) (விதி-9(1))

பாரத ஸ்டேட் வங்கி, தனியார் கடன் மதிப்பீட்டு வங்கியாக (RACPC), தாம்பரம், சதீஷ் பாரடைஸ், 1வது தளம், எண்.388, வேளச்சேரி மெயின் ரோடு, சென்னை, சென்னை-600073-ன் அதிகாரமுள்ள அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இருக்கிறபடியால், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை மொக்கமாக்குதல், நிதி சொத்துகளை சீரமைத்தல் & கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம், பிரிவு 13(12)-ன் கீழும் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகளில் விதி 3-ன் கீழும் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கடன்தாரர் திரு.T.நக்கீரன், தாயிரு தனுசாமிக்கட் (வீட்டுக்கடன் கணக்கு எண் 6229098204 & வாகன கடன் கணக்கு எண் 6242903743), எண்.6/139, 1வது தெரு, அவுக்கிங்கார் நகர், பொழிச்சலூர், சென்னை-600 074 மற்றும் தாயிரு திருமதி.N.கார், எப்பெரி T.நக்கீரன், எண்.6/139, 1வது தெரு, அவுக்கிங்கார் நகர், பொழிச்சலூர், சென்னை-600 074 மற்றும் கதவு எண்.9 (பழைய எண்.5), மாடி எண்.4, ஏழுமலை தெரு, திருவள்ளுவர் நகர், பம்மல், சென்னை-600 075 ஆகியோருக்கு 29.06.2018-தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பின் (Demand Notice) அலுவல் 28.06.2018-அன்று உள்ளபடி பாக்கித்தொகையான ரூ.41,07,040/- (ரூபாய் நாற்பத்தொரு இலட்சத்து ஏழாயிரத்து நாற்பது மட்டும்) மற்றும் 29.06.2018-முதல் வட்டி மற்றும் தற்செலவான செலவினங்கள், கட்டணங்கள் அனைத்தும் சேர்த்து இந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் செலுத்தாது போய்விட்டது.

மேற்படி கடன்தாரர் பாக்கித் தொகையை செலுத்த தவறி விட்டபடியால் மேற்படி கடன் பெற்றவருக்கு மேலுமாகவும், கடன்தாரருக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது மேற்படி சட்டம் பிரிவு 13 உட்பிரிவு (4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதிகளில் விதி 8-ன் கீழும் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட கடன்தாரர்கள்/அடமானதாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு (இனிமேல் "கடன்தாரர்கள்" என்று குறிப்பிடப்படும்) கோரிக்கை அறிவிப்பின் அலுவல் அந்த அறிவிப்பு குறிப்பிட்டுள்ள பாக்கித்தொகையை அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் திருப்பி செலுத்துமாறு கேட்டுக்கொண்டிருந்தார். விபரங்கள் கீழே குறிப்பிட்டபடியுள்ளன.

2. கடன்தாரர்கள்/அடமானதாரர்கள்/ஜாமீன்தாரர்கள் முறையாக ஒப்புக்கொள்ளவில்லை என அந்தக் அதிகாரியாக விழிப்போக்கப்படாமல் மேற்குறிப்பிட்ட அறிவிப்பு திருப்பி விட்டது. எனவே வங்கியானது அதன் சம்பந்தப்பட்ட வங்கி மூலமாக இந்த பத்திரிகையில் கோரிக்கை அறிவிப்பு வெளியிடப்படுகிறது. எனவே மேற்கூறிய கடன்தாரர்கள்/அடமானதாரர்கள்/ஜாமீன்தாரர்களான அனைவரை அறிவிப்பட்ட முகவரியின் வாயிலாகவும் கீழே கையொப்பமிட்டவரால் இந்த அறிவிப்பு ஒட்டி வைக்கப்பட்டன. மேற்குறிப்பட்ட கடன்தாரர்கள்/அடமானதாரர்கள்/ஜாமீன்தாரர் விரும்பாமல் அறிவிக்கப்பட்டுள்ள அறிவிப்பு பிரதிகளை ஏற்க வேண்டாமென்றால், வேண்டாமென்று கையொப்பமிட்டு பெற்றுக்கொள்ளவும்.

3. மேற்கூறிய பிணையில்லாத எதிரே, அறிவிப்பு வழங்கப்படுகிறது. மீண்டும் குறிப்பாக, கடன்தாரர்கள்/அடமானதாரர்கள்/ஜாமீன்தாரர்கள் இந்த அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் மீது குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் மற்ற பத்திரங்களின் குறிப்பிட்டுள்ள தொகை/செலுத்த வேண்டிய தொகை செலுத்த வேண்டும். கடனை திரும்ப செலுத்துவதற்கான கடன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் அடமானம் வைக்கப்பட்ட சொத்துகள் மற்றும் அடமானம் வைக்கப்பட்டவர்களின் விபரம் மீது குறிப்பிட்டுள்ள.

வ. எண்	கடன்தாரர்கள்/அடமானதாரர்கள்/ஜாமீன்தாரர்களின் பெயர் / முகவரி	மொத்த பாக்கித் தொகை *	அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் விபரம்	கோரிக்கை அறிவிப்பு தேதி
1	**கடன்தாரர் : M/s. வைஷ்ணவி பில்டேவலர்ஸ்,** உரிமையாளர் திருமதி, செல்வி.லக்ஷ்மி நகர், அரியலூர், திருமயிலை. **கடன்தாரர் மற்றும் அடமானதாரர் : திருமதி G.அருணா,** க/பெ G. விஜய குமார், எண்.1, பாரதி தெரு, சாய் நகர், ராகவி நிலையம் அருகில், அரும்பாக்கம், சென்னை. **ஜாமீன்தாரர் : திரு.G.விஜயகுமார்,** க/பெ G. சந்தான சாமி, எண்.1, பாரதி தெரு, சாய் நகர், ராகவி நிலையம் அருகில், அரும்பாக்கம், சென்னை.	18.09.2018 அன்றைய தேதியில் ரூ.28,26,737/- (இருபத்தி எட்டு இலட்சத்து இருபத்து ஆறாயிரத்து எழுநூற்று முப்பத்தி ஏழு மட்டும்)	வருவாய் பதிவு மாவட்டம் மற்றும் மாவட்டம் நல் சார்பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட எண்.2021E, அரியலூர் கிராமம், திருமயிலை தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்திற்கு உட்பட்ட மனை எண்.78, "ஸ்ரீ வெங்கடேஸ்வரா நகர்"-ல் உள்ள திருமதி. G.அருணா அவர்களின் பெயரில் உள்ள 3300 சதுர அடி மனையை கொண்ட வீட்டு மனை மற்றும் அதனை சார்ந்த பகுதியை குறிக்கும். எல்லைகள் : கிழக்கு : மனை எண்.77, மேற்கு : பாதை, வடக்கு : 30 அடி சாலை, தெற்கு : காலி நிலங்கள்.	24.09.2018

* மேலே குறிப்பிட்டுள்ள நாள் வரை செலுத்த வேண்டிய தொகை மேலும் வட்டி மற்றும் கட்டணங்கள்/கட்டணங்கள் செலுத்த வேண்டும்.

4. மேற்கூறப்பட்ட கடன்தாரர்கள்/அடமானதாரர்கள்/ஜாமீன்தாரர்கள் இந்திய ஓவர்சீஸ் வங்கியை செலுத்த வேண்டிய தொகை செலுத்த தவறியதால், மேற்கொண்ட சட்டம் பிரிவு 13 துணை பிரிவு (13) விதி அடமானம் வைக்கப்பட்ட சொத்து எதிரே மற்றும் கடன்தாரர்கள்/அடமானதாரர்கள்/ஜாமீன்தாரர்கள் மேல் அமலாக்கம், செலுத்தல் மற்றும் விலையுதல் மேற்கொள்ளப்படும்.

5. கடுமுறை சட்டம் அமலாக்கம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்கு கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

6. மேற்கூறப்பட்ட கடன்தாரர்கள்/அடமானதாரர்கள்/ஜாமீன்தாரர்கள் SARFAESI சட்டத்தின்படி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் எழுத்துமூலமான ஒப்புதல் பெறாமல், மேல் குறிப்பிட்டுள்ள சமி பெற்ற சொத்துகளை விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல் போன்ற எந்தவித மாற்றம் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு உரிமையற்றவர்கள் ஆவர். மேற்கொண்ட சட்டத்தில் உள்ள விதிகளை மீறி நடந்தால், சட்டம் பிரிவு 29-ன் கீழ் தண்டிக்கக்கூடிய குற்றமாக கருதப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இடம் : சென்னை
தேதி : 24.09.2018
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

பாரத ஸ்டேட் வங்கி
தமிழ்நாடு கடன் மதிப்பீட்டு வங்கி
சதீஷ் பாரடைஸ், 1வது தளம், எண் 388, வேளச்சேரி மெயின் ரோடு, சென்னை, சென்னை-600073. போன்:22794876/79

பிணையறு ஏல விற்பனை அறிவிப்பு

கடன்பெற்ற சொத்துகளை மொக்கமாக்குதல் நிதி சொத்துகள் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ் வங்கியின் அமலாக்க வைக்கப்பட்ட அசையா சொத்துகளை விற்பனை செய்தல்

கடன்தாரர் திரு.A.வேணுகோபால், த/பெ திரு.B.அங்கமுத்து, அமர்வில் பாரத ஸ்டேட் வங்கி, RACPC தாம்பரம், சென்னையில் சீரமைப்பு துறையில் உள்ள அலுவலர் சொத்துகளை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார். SARFAESI சட்டத்தின்படி பிரிவு 13(2)-ன் கீழ் கடன்தாரர் திரு.A.வேணுகோபால், த/பெ திரு.B.அங

சபரிமலை தீர்ப்பு

பேச்சுவார்த்தைக்குப் பிறகு அமல்படுத்த மார்க்சிஸ்ட், காங்கிரஸ் வலியுறுத்தல்

திருவனந்தபுரம், அக். 6: சபரிமலையில் அனைத்து வயது பெண்களுக்கும் அனுமதி அளிக்கும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அமல்படுத்தும் முன்பாக, இவ்விவகாரத்தில் தொடர்புடையவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கேரளத்தில் ஆளும் கட்சியான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டும், எதிர்க்கட்சியான காங்கிரஸும் வலியுறுத்தியுள்ளன.

இதுதொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலர் கொடியேறி பாலகிருஷ்ணன் தில்லியில் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'சபரிமலை விவகாரத்தில் உச்ச நீதிமன்ற தீர்ப்பானது, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடன் உரிய கலந்தாலோசனைக்குப் பிறகே அமல்படுத்தப்பட வேண்டும். இதில் தொடர்புடையவர்களிடம் மாநில அரசு ஆதரவு கோருகிறதே தவிர, எதற்கும் அழுத்தம் கொடுக்கவில்லை' என்றார்.

கேரள தேவஸ்வம் அமைச்சர் கடகம்பள்ளி சுரேந்திரன் கூறுகையில், 'உச்ச நீதிமன்ற தீர்ப்பை அமல்படுத்தும் விவகாரத்தில் எந்தத் தரப்பினருடனும் கலந்தாலோசிக்க மாநில அரசு தயாராக உள்ளது. இவ்விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் மக்களிடையே தவறான புரிதலை ஏற்படுத்தி, ஆதாயம் அடைய முயல்கின்றன. அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்புடனேயே சபரிமலை விவகாரத்தில் அடுத்தகட்டத்துக்குச் செல்ல மாநில அரசு விரும்புகிறது' என்றார்.

கேரள பிரதேச காங்கிரஸ் கமிட்டி தலைவர் முள்ளப்பள்ளி ராமச்சந்திரன் கூறுகையில், 'உச்ச நீதிமன்றத் தீர்ப்பு தொடர்பாக கலந்தாலோசிக்க கேரள அரசு அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்ட வேண்டும். உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக கேரள அரசு சீராய்வு மனு தாக்கல் செய்யும் பட்சத்தில், காங்கிரஸ் கட்சி ஆதரவளிக்கும்' என்றார்.

பரவலாக ஆர்ப்பாட்டங்கள்: இதனிடையே, உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து கேரள மாநிலத்தில் சனிக்கிழமை பரவலாக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

கோட்டயம், மலப்புரம் மாவட்டங்களில் நூற்றுக்கணக்கான பக்தர்கள், குறிப்பாக பெண்கள் சுவாமி ஐயப்பனை வேண்டியபடி பேரணி சென்றனர். பத்தனம்திட்டாவில் பாஜக இளைஞர் பிரிவான யுவ மோர்ச்சா, திருவாங்கூர் தேவஸ்வம் வாரிய தலைவர் வீட்டை நோக்கி பேரணி சென்றனர்.

அப்போது வன்முறை ஏற்பட்டதால், போலீஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டியடித்தனர். திருவனந்தபுரத்தில் உள்ள திருவாங்கூர் தேவஸ்வம் போர்டு தலைமை அலுவலகம் முன்பாக பக்தர்கள் சிலர் தர்ணாவில் ஈடுபட்டனர். கோட்டயத்தின் சங்கனாச்சேரியில் நடைபெற்ற கூட்டத்தில் பக்தர்களிடையே உரையாற்றிய சபரிமலை தலைமை தந்திரி கண்டரரு ராஜீவரரு, மரபுகள், மதச் சடங்குகள் ஆகியவற்றை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றார்.

சந்திப்பு...

தில்லியில் மத்திய உணவு மற்றும் நுகர்வோர் நலத் துறை அமைச்சர் ராம் விலாஸ் பாஸ்வானை சனிக்கிழமை சந்தித்த கர்நாடக முதல்வர் குமாரசாமி. அப்போது, மாநிலத்தில் அரிசி, பருப்பு உள்ளிட்ட ரேஷன் பொருள்களை கொள்முதல் செய்ததற்கான நிலுவைத் தொகையை உடனடியாக வழங்குமாறு பாஸ்வானிடம் குமாரசாமி வலியுறுத்தினார்.

புரி கோயிலில் பக்தர்களுக்கு வரிசை தேவையில்லை: ஒடிஸா அமைச்சர்

புவனேசுவரம், அக்.6: புரி ஜெகந்நாதர் கோயிலில் பக்தர்களுக்கு வரிசை தேவையில்லை என்று ஒடிஸா மாநில வருவாய்த் துறை அமைச்சர் மகேஷ்வர் மொகந்தி தெரிவித்துள்ளார்.

புரி ஜெகந்நாதர் கோயிலில் கடந்த 1ஆம் தேதி பக்தர்களுக்கு வரிசை முறையை கோயில் நிர்வாகம் அறிமுகப்படுத்தியது. இந்த நடைமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்து, பக்தர்கள் கடந்த 3ஆம் தேதி வன்முறையில் ஈடுபட்டனர். அப்போது அமைச்சர் மொகந்தியின் வீடும் தாக்கப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பாக 10 பேரை புரி போலீஸார் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில், புவனேசுவரத்தில் செய்தியாளர்களுக்கு அமைச்சர் மொகந்தி பேட்டியளித்தபோது கூறியதாவது:

பிற கோயில்கள் மிகவும் சிறியதாக இருக்கும். ஆனால் புரி கோயில் அப்படியில்லை. புரி கோயிலில் திறந்தவெளி பகுதி இருக்கும் இடமே மிகவும் பெரிதாகும்.

எனவே புரி ஜெகந்நாதர் கோயிலில் பக்தர்களுக்கு வரிசை தேவையில்லை. ஆதலால், இந்த நடைமுறையை கோயில் நிர்வாகம் கைவிட வேண்டும் என்றார் அவர்.

கூட்டணி திட்டத்தை டி.ஆர்.எஸ். நிராகரித்ததால் காங்கிரஸுடன் கை கோர்த்தோம்

அமராவதி, அக்.6: கூட்டணி திட்டத்தை தெலங்கானா ராஷ்டிர சமிதி (டி.ஆர்.எஸ்.) கட்சி நிராகரித்த பிறகே, காங்கிரஸுடன் கை கோர்த்ததாக தெலுங்கு தேசம் கட்சித் தலைவரும், ஆந்திர முதல்வருமான சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

அமராவதியில் நடைபெற்ற தெலுங்கு தேசம் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், இதுகுறித்து அவர் பேசியதாவது:

நமது கட்சிக்கு எதிராக பாஜக செயல்படுகிறது. அப்படியிருக்கையில், பாஜக அல்லாத கட்சிகளுடன் கூட்டணி அமைப்பதை தவிர்த்து, நமது கட்சிக்கு வேறு வாய்ப்பு இல்லை. ஆந்திரத்துக்கு மத்திய அரசு இழைத்த அநீதிக்கு எதிராக நாம் போராட வேண்டியுள்ளது. இதற்கு நமக்கு தேசிய அளவில் ஆதரவு தேவைப்படுகிறது.



எனவே, ஒத்த கருத்துகளை கொண்ட கட்சிகளுடன் கூட்டணி அமைப்பதற்கு தெலுங்கு தேசம் கட்சி முடிவு செய்தது. அப்போது டி.ஆர்.எஸ். தலைவர் சந்திரசேகர் ராவை தொடர்பு கொண்டு, கூட்டணி திட்டத்தை முன்வைத்தேன். அவரிடம், தெலங்கானா ராஷ்டிர சமிதி, தெலுங்கு தேசம் ஆகிய 2 கட்சிகளும் கூட்டணி அமைக்க வேண்டும், இப்படி செய்வதால், கர்நாடகத்துடன் காங்கிரஸை கட்டுப்படுத்திவிடலாம், தமிழகத்தில் காங்கிரஸ், பாஜகவுக்கு இடமிருக்காது என்றேன். இரண்டு கட்சிகளும் கூட்டணி சேர்ந்தால், தெலுங்கு பேசும் நமது இரு மாநிலங்களின் கைகள், தென் மாநிலங்களில் ஓங்கும் எனவும் கூறினேன்.

இதைக் கேட்ட சந்திரசேகர் ராவ், யோசித்து சொல்கிறேன் என்றார். பிறகு ஒரு வாரம் கழித்து, எனது திட்டத்தை நிராகரித்து விட்டார். தெலங்கானாவில் தெலுங்கு தேசம் கட்சி போட்டியிட வேண்டும், காங்கிரஸுடன் கூட்டணி அமைக்கக் கூடாது என்றார். இதையடுத்து, சந்திரசேகர் ராவ் வேறு யாரோ ஒருவரின் கைப்பாவையாகி விட்டார் என்பதை புரிந்து கொண்டேன் (பிரதமர் நரேந்திர மோடியை மறைமுகமாக விமர்சித்தார்).

இதையடுத்து, வரலாற்று காரணங்களுக்காக, தெலுங்கு தேசம், காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், தெலங்கானா ஜன சமிதி ஆகியவை இணைந்து மகா கூட்டணி அமைத்தன. ஜனநாயக கட்டாயத்துக்கு, காங்கிரஸுடன் தெலுங்கு தேசம் கூட்டணி அமைத்துள்ளது. தெலுங்கு பேசும் மக்களின் நலன்களே, தெலுங்கு தேசம் கட்சியின் உண்மையான இலட்சியம். இதற்காகத்தான் தெலுங்கு தேசம் கட்சியை என்.டி. ராமாராவ் தொடங்கினார் என்றார் சந்திரபாபு நாயுடு.

வேட்பாளரின் குற்றவழக்கு குறித்த விளம்பரம்: தேர்தல் ஆணையம் பரிந்துரை

புது தில்லி, அக்.6: வேட்பாளர்களின் குற்றவழக்குகள் குறித்து விளம்பரம் வெளியிட வேண்டும் என உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை, தற்போது தேர்தல் நடைபெறவுள்ள 5 மாநிலங்களில் செயல்படுத்துவதற்கு தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து, தலைமைத் தேர்தல் ஆணையர் ஓ.பி.ராவத் கூறுகையில், "அரசியலை குற்றமற்றதாக்கும் வகையில் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை பின்பற்றும் வகையில், வேட்பாளர்களின் பிரமாணப் பத்திரங்களில் மாற்றம் செய்வது தொடர்பாக சட்ட அமைச்சகத்துக்கு பரிந்துரை செய்துள்ளோம்.

இந்த மாற்றம் அமலுக்கு கொண்டு வரப்படும். அதன்படி வாக்காளர்களும், அரசியல் கட்சிகளும் குற்றப்பின்னணி குறித்து அச்சு மற்றும் காட்சி ஊடகங்களில் மூன்று முறை விளம்பரம் செய்ய வேண்டும்" என்றார்.

வேட்பாளர்கள் வேட்பு மனுவை தாக்கல் செய்த பிறகு, அவர்கள் மீதான குற்றவழக்குகள் குறித்த விவரங்களை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில், அச்சு மற்றும் காட்சி ஊடகங்களில் தொடர்ந்து விளம்பரம் செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது.

முன்னதாக, வேட்பாளர்கள் தங்களது குற்றவழக்குகள், சொத்து மற்றும் கடன் விவரங்கள் குறித்து தேர்தல் அதிகாரிகளிடம் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கும் நடைமுறை செயல்பாட்டில் இருந்து வருகிறது. அதனை தேர்தல் ஆணையமும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்து பொதுமக்கள் பார்வைக்கு காட்சிபடுத்தி வருகிறது.

இந்நிலையில், உச்ச நீதிமன்ற உத்தரவின்படி விளம்பரம் செய்வதற்கான படிவத்தை தயாரிக்கும் பணியில், சட்ட அமைச்சகத்தின் கீழ் இயங்கும் சட்ட விதிகள் துறை மேற்கொண்டு வருகிறது. அந்தப் படிவதுக்கு சட்ட அனுமதி கிடைத்ததும், தேர்தல் ஆணையம் அதனை அமலுக்கு கொண்டு வரும் எனத் தெரிகிறது.

நேஷனல் ஹெரால்டு வழக்கு விசாரணைக்கு சமூக ஊடகம் மூலம் சுவாமி இடையூறு

மோதிலால் வோரா குற்றச்சாட்டு

புது தில்லி, அக். 6: சமூக ஊடகங்களில் விமர்சனங்களை தெரிவித்து, நேஷனல் ஹெரால்டு வழக்கு விசாரணையில் பாதிப்பை ஏற்படுத்த பாஜக எம்.பி. சுப்பிரமணியன் சுவாமி முயலுகிறார் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் மோதிலால் வோரா, நீதிமன்றத்தில் முறையிட்டுள்ளார்.

நேஷனல் ஹெரால்டு பத்திரிகையை நடத்தி வந்த அசோசியேட்டட் ஜர்னல்ஸ் நிறுவனம், காங்கிரஸ் கட்சிக்கு ரூ. 90.25 கோடி கடன் பாக்கி வைத்திருந்தது. இதனிடையே, காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, கட்சியின் மூத்த தலைவர் சோனியா காந்தி ஆகியோரால் ரூ. 50 லட்சம் முதலீட்டில் யங் இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் கடந்த 2010-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. யங் இந்தியா நிறுவனத்தின் பங்குதாரர்களாக ராகுல் காந்தி, சோனியா காந்தி, மோதிலால் வோரா, ஆஸ்கார் பெர்ணான்டஸ், சுமன் துபே, சாம் பிட்ரோடா ஆகியோர் உள்ளனர்.

யங் இந்தியா நிறுவனம், அசோசியேட்டட் ஜர்னல்ஸ் நிறுவனத்தின் சொத்துகளை முறைகேடாக அபகரித்து விட்டதாக, பாஜக எம்.பி. சுப்பிரமணியன் சுவாமி தில்லி மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். இந்த வழக்கு தொடர்பாக, மோதிலால் வோரா மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். அந்த மனு நீதிபதி சமர் விஷால் முன்னிலையில் சனிக்கிழமை விசாரணைக்கு வந்தது. மோதிலால் சார்பில் ஆஜரான வழக்குரைஞர்கள் டி.சீமா, ஆர்.எஸ்.சீமா ஆகியோர் முன்வைத்த வாதம்:

இந்த வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருவதற்கு முந்தைய நாள், ராகுல் காந்தி, சோனியா காந்தி, மோதிலால் வோரா உள்ளிட்டோரை விமர்சித்து சுட்டுரை போன்ற சமூக ஊடகங்களில் சுப்பிரமணியன் சுவாமி பதிவுகளை வெளியிடுகிறார். இதன் மூலம், வழக்கு விசாரணைக்கு இடையூறுகளை ஏற்படுத்தவும், ராகுல் காந்தி, மோதிலால் வோரா உள்ளிட்டோரின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கவும் அவர் முயலுகிறார். எனவே, நேஷனல் ஹெரால்டு வழக்கு தொடர்பாக, சமூக ஊடகங்களில் கருத்து தெரிவிப்பதற்கு சுப்பிரமணியன் சுவாமிக்கு தடை விதிக்க வேண்டும் என்று வழக்குரைஞர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து, அவர்களின் கோரிக்கை குறித்து சுப்பிரமணியன் சுவாமி பதிலளிக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார். மேலும், வழக்கின் அடுத்த விசாரணையை, வரும் 20-ஆம் தேதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

IDBI BANK IDBI வங்கி லிமிடெட் 115, தர்மா சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600015. CIN NO: L65190MH2004GOI148838 www.idbibank.com

மின் ஏல விற்பனை அறிவிப்பு சபரி சூப்பர்மார்கெட் பிரைவேட் லிமிடெட்(SSMPL) கடன்தாரரின் அசையா சொத்துக்கள் (கடனீட்டுச் சொத்து) விற்பனை தொடர்பாக

2002-ம் ஆண்டு கடனீட்டு சொத்துகளை நிர்வகிக்கும் மற்றும் கடனீட்டு சொத்து நிதி உரிமை அமலாக்க சட்டத்தின் விதிகளுக்கான மற்றும் அதற்கு தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டு சொத்து நிதி உரிமை அமலாக்க சட்டத்தின் கீழ் சொத்தினை அடமானம் வைத்து கடன்பெற உதவியினை பெற்றுள்ளார். இந்த சொத்தினை 21.8.2014 அன்று IDBI வங்கியின் அதிகாரியால் அனுமதியுடன் (கடன் வழங்கியவர்) வசூலிக்க செய்யப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள கடனீட்டு சொத்தினை மின் ஏல விற்பனை செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சொத்து விவரம்	முன்னிருப்பு கேட்பு விலை (ரூ.இலட்சத்தில்)	டெபாசிட் தொகை (ரூ.இலட்சத்தில்)	பார்வையிடும் தேதி	மின் ஏல விற்பனை தேதி/நேரம்
பழைய எண்.15, புதிய எண்.29, சின்னையா தெரு, திருவல், சென்னை - 600017ல் மொத்தமாக கட்டு எழுப்பப்பட்ட பகுதி 13000 ச.அடியில் 4794 ச.அடி பிரிக்கப்படாத பங்குடன் அமைந்த நிலம் மற்றும் வணிக கட்டிடம்	1270.00	127.00	அக்டோபர் 22, 2018 (திங்கள்) காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை	நவம்பர் 12, 2018 மாலை 5 மணி வரை	நவம்பர் 13, 2018 காலை 11 மணி முதல் நண்பகல் 12 மணி வரை

விதிமுறைகள் & நிபந்தனைகளின்:

1. 31.12.2013 அன்றுள்ளபடி நிலுவை தொகை ரூ.15,79,14,924.63 (ரூபாய் பதினைந்து கோடி எழுபத்தி ஒன்பது லட்சத்து பதினான்காயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தி நான்கு மற்றும் அறுபத்தி மூன்று பைசா) செலவுகள் கட்டணம் மேல் வட்டிகள் கட்டணம் ரூ.15 லட்சம் + சேவை வரி செலவுக் கட்டணம் வரைவு முன்பணம் ரூ.1 லட்சம் + சேவை வரி மற்றும் வரைவு தரகர் ரூ.75000 செலுத்த வேண்டியது நவம்பர் 11, 2013 வரை செலுத்த ரூ.40 லட்சம் மற்றும் கடன்தாரர் அறிவிப்பு ரூ.2.99 கோடி முறையே வட்டி மற்றும் முதல் வட்டி மற்றும் இதர செலவுகள் / கணக்கீட்டு செலுத்த வேண்டிய கடன் தொகைக்கு, பிரைவேட் கடன் கொடுத்தவர் IDBI வங்கி லிமிடெட் நிறுவனத்தின் சார்பில் எங்கு உள்ளதோ அங்கு அடமானம் வைக்கப்பட்ட சொத்தினை விற்பனை செய்வதற்கு உரிமை பெற்றுள்ளது.

2. விற்பனை https://idbi.auctiontiger.net இணையதளத்தில் உள்ள மின் ஏல முறையில் நடைபெறும். சொத்து விவரங்களை Auction Tiger Mobile App(s) மூலமாகவும் பார்க்கலாம். மின் ஏல விற்பனை 13.11.2018 அன்று காலை 11 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நடைபெறும். விற்பனை முடிவு மின் ஏல தொகை 5 நிமிடத்தில் நடைபெறும் கவனிக்கவும்.

3. ஏல உறுதி அளவு ரூ.50,000/- செலுத்தியிருக்க வேண்டும். சொத்தின் மின் ஏல விற்பனை குறித்ததும், ஏலதாரர்கள் தங்களுக்கு "User ID" மின்னஞ்சலில் மேலும் அறிவிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்படும்.

4. மின் ஏல விற்பனை சம்பந்தமான கலந்தாலோசனைக்கு அணுகவும். தொடர்பு கொள்ள வேண்டிய நபர்கள் M/s e-Procurement Technologies Limited, அலுவலகம் 306-308, தொழில் நுண்மனை, திருவல்லிக்கேணி, சென்னை 600018. (தொலைபேசி எண் 9722778828) (support@auctiontiger.net), திரு. மனு (மின்னஞ்சல்) - 9989406384 (service@auctiontiger.net) தொலைபேசி உதவி மற்றும் வழிகாட்டி மின்னஞ்சல் முகவரி(support@auctiontiger.net) AUCTION TIGER TOLL FREE NUMBER 18001020342

5. மின் ஏல விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏல விற்பனை இணையதளமான https://idbi.auctiontiger.net வலைதளத்தில் பார்த்து மின் ஏல விற்பனையில் பங்கு பெறுமாறு அறிவிக்கப்படுகிறீர்கள்.

6. வருமான வரி மற்றும் KYC ஆவணங்களான அட்டையின் நகல், முகவரி அடையாள அதிகாரியால் அதிகாரபூர்வமாக சான்றிதழ் வழங்கப்பட்டு, கையொப்பமிட்டு, தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி மற்றும் செல்லுபடியாகும் ஐடி மற்றும் கடவுச்சொல் வழங்கப்பட்டு, மின்னஞ்சல் மூலம் M/s e-Procurement Technologies Limited அனுப்பப்படும்.

7. வருமானவரி செலுத்தப்பட்ட பேன் அட்டை நகலுடன் வருமான வரி தொகை, மின் ஏல விற்பனை முடிவு மற்றும் வரி தொகை ஆகியவற்றை மின் ஏல விற்பனை முடிவு நாளிலிருந்து 15 நாட்களுக்குள் கொடுக்க வேண்டும்.

8. அனைத்து சட்டபூர்வ செலுத்தப்படாமல் வரிகளையும் அரசுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை செலவுகளை முழுமையாக உறுதிப்படுத்தவேண்டும் மற்றும் வெற்றிபெற்ற விண்ணப்பதாரர் ஏல மொத்தம் வங்கியானது எவ்வித தகவல் மற்றும் விளக்கமின்றி நிராகரிக்க வேண்டும். சொத்தினை பெறுவதற்கு அனைத்து சிறந்த சொத்துகளை வெற்றி பெற்றவர் ஏற்கவேண்டும்.

9. கடன் வழங்கியதாக பெற்றுக்கொள்ள சொத்தினை தனி அதன் மீதான எந்தவொரு விலங்கு / கடனுக்கு / அடமானம் முழுக் கவனம் வைக்கப்படுகிறது.

10. மேலும் விவரங்களுக்கு www.idbi.com and https://idbi.auctiontiger.net ஆகிய இணையதளங்களில் பார்க்கலாம். கேள்விகள் கேட்கலாம் மற்றும் விவரங்களுக்கு திரு S. நிவாஸ் (T+91 44 22202161, 9551324866 (email) nivas.s@idbi.co.in or அதிகாரியை அணுகவும், திரு. C. முரளிதர் ஜெயசேகர், IDBI வங்கி லிமிடெட் வடு தளம், 115, அண்ணா சாலை, சைதாப்பேட்டை, சென்னை-600015. (T+91 44 22202004, (M) +91 9840095622 (email) n.devasena@idbi.co.in அதிகாரியை தொடர்பு கொள்ளவும்.

11. மேலும்/வேறு சலுகை உள்ளிட்ட கடன் பகிர்வு செலவுகள் முழுமை அனைத்து தேவையான செலவினங்களையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இடம்: சென்னை
தேதி: 05.10.2018

ஒப்பம்
அதிகாரபூர்வ அலுவலர்
IDBI வங்கி லிமிடெட்

யூகோ வங்கி

கடன்தாரருக்கான அறிவிப்பு

தேதி: 04.10.2018

பெறுநர்

திருமதி தேவ, எண்.3 முனுசாமி அவென்யூ, கோயம்பேடு, சென்னை-600 092

2002 ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை நிர்வகிக்கும் நிதிச்சொத்துக்களை மீட்கவும் மற்றும் கடனீட்டுச் சொத்துக்களின் உரிமை அமலாக்க சட்டம் பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு (இனி சட்டம் என்று அழைக்கப்படும்)

ஐயா/மீ,

திரு. ரமேஷ்பாபு (கேட்) அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்கி சொத்துகள் அடமானம் வைக்கப்பட்டதன் பேரில் M/s.S.R.பிரிண்டர்ஸுக்கு இனி 'கடன்தாரர்' என்று குறிப்பிடப்படுவார் கடன் வரம்பை யூகோ வங்கியின் சென்னை வாரச்சேட்டை கிளை, வழங்கியது. சொத்தின் விவரம் பார்க்க தொகை பெற்றுள்ள கடன்தாரருக்கான அறிவிப்பு குறிப்பிட்டுள்ளன.

திரு. ரமேஷ்பாபு (கேட்) நாமினிதாரரையும் இருந்து கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை அடமானம் வைப்பதின் மூலம் கடன் பெற்றுள்ளார்.

அடமானம் வைக்கப்பட்ட சொத்து ஆவணங்கள் பற்றிய விவரம்	கடன் தொகை (ரூ)
A31 தேதி 02-02-2005 படிவம் F தேதி 13.03.2007	ரூ.4,00,000/- அவர்களால் தாங்கு வரையறை பாக்கி தொகை ரூ.7,37,065/- (ரூபாய் ஏழு லட்சத்து முப்பத்தி ஏழாயிரத்து அறுபத்தைந்து மட்டும்)

சொத்து விவரம்: விற்பனை பத்திர எண்.1032, தேதி 10.03.2003 மாவட்டப் அலுவலகம், பிளாக் B-5, முதல் தளத்தில் 875 சதுர அடி அளவில் (சுமார்) பிரிக்கப்பட்டுள்ள பொதுப்பகுதி உள்ளிட்டது கட்டப்பட்டுள்ள குடியிருப்பு ஃப்ளாட் எண் 3 மற்றும் கீழே விரிவாக விவரிக்கப்பட்டுள்ள சொத்தின் பாகப் பிரிக்கப்படாத பங்கு நிலம். சென்னை-600 088, ஆதம்பாக்கம், செக்ரெட்ரியேட் காலனி, தெரு எண் 1, வேளச்சேரி கிராமம், பிளாக் எண் 3, டவுன் சர்வே எண்.2 (முன்னர் பழைய மற்றும் புதிய சர்வே எண்.110 & 111)-ல் உள்ள 1 ஏக்கர் 85.66 சென்ட் அளவிலான நிலமும் அதனுடன் இணைந்த பகுதிகளும் எல்லைகள் வடக்கில்: A.P.சொசைட்டிக்குச் சொந்தமான நிலத்தின் பகுதி மற்றும் தென்கிழக்கு ஆதிபோர்களுக்குச் சொந்தமான நிலத்தின் பகுதி மற்றும் ரேர் தேவி அவர்களால் விற்பனை செய்யப்பட்ட நிலம் தெற்கில்: செக்ரெட்ரியேட் காலனி விளையாட்டு மைதானத்தின் பகுதி மற்றும் சென்னை மாநகராட்சிக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிலம் மேற்கில்: வெளிப் & ஜானுதீன் ஆதிபோர்களுக்குச் சொந்தமான நிலத்தின் பகுதி மற்றும் ரேர் தேவி அவர்களால் விற்பனை செய்யப்பட்ட நிலம் மற்றும் சென்னை மாநகராட்சிக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிலத்தின் பகுதி. 1 ஏக்கர் மற்றும் 9.9 சென்ட் நிலத்தின் உரிமையாளர்களுக்கான உயில் உரிமையானது பத்திர எண்கள் 1252, 1283, 1292, 1293, 1294, 1295 of 1988 மற்றும் 1283/80 மற்றும் 1010/91-ல் குறிப்பிடப்பட்டுள்ளது நிலம் தென்சென்னை பதிவு மாவட்டம், வளசரவாக்கம் சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்டது.

வங்கிக் கிளையில் செலுத்த வேண்டிய கடன் முழுவதும் செலுத்தத் தவறியிருப்பதாலும், கடன்தாருக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பில் குறிப்பிட்டவாறு தொடர்புள்ள கடன் வசூலானது, வாராக்கடன் (NPA) பிரிவில் சேர்க்கப்பட்டுவிட்டது.

மேற்கூறிய காரணங்களுக்காக மேற்படி சட்டம் பிரிவு 13(2)ன் கீழ் (காலஞ்சென்ற) திரு. ரமேஷ் பாபுவின் சட்டபூர்வ வாரிசுதாரர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், 04-10-2018-அன்றுள்ளபடி பாக்கித்தொகையான ரூ.7,37,065/- (ரூபாய் ஏழு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து அறுபத்தைந்து மட்டும்) மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கான ஒப்பந்த அடிப்படையான வட்டி, எதிர்பாராத செலவுகள், கட்டணங்கள் உள்ளிட்ட இதரசெலவுகளையும் சேர்த்து, இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் முழுமையாக செலுத்தும்படி கோரப்படுகிறது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள 04-10-2018-அன்றுள்ளபடி பாக்கித்தொகையான ரூ.7,37,065/- (ரூபாய் ஏழு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து அறுபத்தைந்து மட்டும்) மற்றும் கடன் எதிர்பாராத செலவுகள், கட்டணங்கள் உள்ளிட்ட இதரசெலவுகளையும் சேர்த்து செலுத்தாத பட்சத்தில், வங்கியானது 13(2)-ன் கீழ் மற்றும் உட்பிரிவு 13(4)-ன் கீழ் கடனுக்கு ஈடான அடமான சொத்து மீது வங்கிக்கு இருக்கும் அனைத்து உரிமைகளை வங்கி பயன்படுத்தும்.

மேலும் நீங்கள் துணை சட்டம் 13-ல் பிரிவு 13-ன் கீழ், சொத்துகளை விற்பனை செய்ய குத்தகைக்கு விடுவதற்கு மற்றும் வேறு எந்த முறையிலும் சொத்தை மாற்றம் செய்வதற்கு வங்கியின் எழுத்துபூர்வ அனுமதி இன்றி செய்யத்தடை முயலாது என இந்த அறிவிப்பின் மூலம் தெரிவு படுத்தப்படுகிறது.

நிறுவனம் உள்ள நற்பெயரை பாதுகாக்கப்பட்ட கடனாளர்கள், வங்கி உத்தரவாதங்கள் மற்றும் வழங்கப்பட்ட கடன் சான்று மற்றும் இதர எதிர்பார்ப்பு பொறுப்புகள் அனைத்தையும் M/s.S.R.பிரிண்டர்ஸ் (கடன்தாரர்) கணக்கிலிருந்து திரும்ப பெறுவதற்கான அனுமதியை விரைவில் வங்கிக்கு உரிமையுண்டு.

வங்கிக் இருக்கும் உரிமைகளை, இந்த நடவடிக்கைகள் அனைத்து சட்ட நடவடிக்கைகளை பாதியிலிருந்து மேற்கொள்ளவும் இதர பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு தேவையென்றாலும் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

தேதி: 04.10.2018
இடம்: சென்னை

அதிகாரபூர்வ அதிகாரி
யூகோ வங்கி

வெள்ளிதோறும் தினமணியுடன்...
வெள்ளி மணி

பாரத ஸ்டேட் வங்கி
வண்டலூர் கிளை, எண்.1/3, வாலாஜாபாத் ரோடு, வண்டலூர், சென்னை 600048. தொலைபேசி: 04422742281
Email: sbi.13832@sbi.co.in

சொத்து வசப்படுத்துதல் அறிவிப்பு

பாரத ஸ்டேட் வங்கி, வண்டலூர் கிளை, காஞ்சிபுரம் ன் அதிகாரம் பெற்ற மற்றும் கீழே கையொப்பம் செய்துள்ள அதிகாரி 2002ம் ஆண்டின் செக்யூரிட்டிசேஷன் மற்றும் ரிகன்ஸ்ட்ரக்ஷன் ஆப் பைனான்சியல் அசெட்ஸ் மற்றும் என்போர்ஸ்மெண்ட் ஆப் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் சட்டம் மற்றும் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) விதிகளில் சட்டப்பிரிவு 13(12) மற்றும் உடனிணைந்த விதி 3ன் படி கேட்பு அறிவிப்பு கடந்த 21.07.2018 ம் தேதி கடன்தாரர்: செல்வி.P.சரண்யா, த/பெ திரு.பரமசிவம்; No.3/128, பச்சையப்பன் முதல் தெரு, பாலவாக்கம், திருவான்மியூர், காஞ்சிபுரம் 600041 -க்கு HTL Account Number: 37332349870 அனுப்பிய நோட்டீஸில் கண்டுள்ளபடி வாங்கிய கடனில் 21/07/2018 ல் பாக்கியுள்ள **ரூ.68,14,923/- (ரூபாய் அறுபத்து எட்டு லட்சத்து பதினான்காயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து மூன்று மட்டும்)** மற்றும் பின் வட்டியும் அனுமதிக்கப்படும் செலவுத் தொகையினையும் சேர்த்து அவ்வறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் செலுத்தச் சொல்லி கோரப்பட்டிருந்தது.

மேற்படி கடன்பெற்றவர் மேற்படி கடன் தொகையை திருப்பி செலுத்த தவறியிருப்பதால் மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் விதி 8ன் படி **01.10.2018** ம் தேதியில் அடியிற் கையெழுத்திட்டுள்ளவர் அடியிற்கண்ட சொத்தின் சுவாதீனத்தை எடுத்துக்கொண்டுள்ளார் என மேற்படி கடனாளிக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

இது முதற்கொண்டு கடனாளி மற்றும் சகலமானவரும் சொ

அரசியலுக்கு வருகிறார் சிபிஐ முன்னாள் இணை இயக்குநர்

திருப்பதி, அக்.6: சிபிஐ முன்னாள் இணை இயக்குநர் வி.வி. லட்சுமி நாராயணா அரசியலுக்கு வருகிறார்.

திருப்பதியில் செய்தியாளர்களிடம் பேசியபோது, இதுகுறித்து அவர் கூறியதாவது:

விவசாயிகள், நெசவு தொழிலாளர்கள், மீனவ சமூகத்தினர் படும் துன்பங்களை பார்த்து, கிராமங்களின் பெருமையை மீட்டெடுக்க அரசியலுக்கு வர வேண்டும் என்ற முடிவை எடுத்தேன். ஆந்திரத்தில் உள்ள 13 மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து, விவசாயிகள், மீனவர்கள், மாணவர்களை சந்தித்தேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மக்களுக்கு இருக்கும் தேவைகள் குறித்த திட்டத்தை தயாரித்து விட்டேன். இதை ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, பிற அரசியல் தலைவர்களிடம் அளித்து பதிலை கேட்டுள்ளேன். கிராம மேம்பாடு தொடர்பான திட்டத்தை செயல்படுத்துவதற்கு, தனிக்கட்சியை நான் ஆரம்பிப்பேன் அல்லது பிற அரசியல் கட்சிகள் ஏதேனும் ஒன்றில் சேருவேன் என்று லட்சுமி நாராயணா கூறினார்.

நாட்டை உலுக்கிய சத்யம் நிறுவன ஊழல் வழக்கு தொடர்பான விசாரணையில் முக்கிய பங்கு வகித்தவர் லட்சுமிநாராயணா. கடந்த மார்ச் மாதம் அவர் விருப்ப ஓய்வு பெற்றார். அப்போது அவர், மும்பையில் காவல்துறை கூடுதல் டிஜிபியாக பணி புரிந்தார்.

கேரள பேராயருக்கு மேலும் 14 நாள்கள் நீதிமன்ற காவல்

கோட்டயம், அக். 6: கேரளத்தில் கன்னியாஸ்திரி மீதான பாலியல் வன்கொடுமை புகாரில் கைது செய்யப்பட்டுள்ள கத்தோலிக்க பேராயர் பிராங்கோ முலக்கலை மேலும் 14 நாள்களுக்கு நீதிமன்ற காவலில் வைத்து விசாரணை நடத்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜலந்தர் மாவட்டத்தைசேர்ந்தகத்தோலிக்கபேராயர் பிராங்கோ முலக்கல் (54) என்பவர், கடந்த 2014 முதல் 2016ஆம் ஆண்டு வரை பல சந்தர்ப்பங்களில் தன்னிடம் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டதாக கடந்த ஜூன் மாதம் கோட்டயத்தை சேர்ந்த கன்னியாஸ்திரி ஒருவர் போலீஸில் புகார் கொடுத்தார். பேராயர் கைது செய்யப்படாததால் கொச்சியில் கன்னியாஸ்திரிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் கடந்த செப்டம்பரில் பேராயர் கைது செய்யப்பட்டார்.

இதனிடையே தனக்கு ஜாமீன் வழங்கக்கோரி பேராயரால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஜாமீன் மனு புதன்கிழமையன்று தள்ளுபடி ஆனது.

ஜாமீன் மனு மீதான விசாரணையின் போது, சமூகத்தில் உயர் பொறுப்பில் உள்ளதால் சாட்சிகளை கலைக்கும் அபாயம் உள்ளதாகக்கூறி பேராயருக்கு ஜாமீன் வழங்கக்கூடாது என அரசுத்தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, நீதிமன்றக் காவல் சனிக்கிழமையுடன் முடிவடைந்ததால் கோட்டயம் மாவட்டம் பாலா குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் பேராயரை போலீஸார் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நடுவர் நீதிமன்ற நீதிபதி மேலும் 14 நாள்களுக்கு, அதாவது வரும் அக்.20ஆம் தேதி வரை பேராயரின் நீதிமன்றக் காவலை நீட்டித்து உத்தரவிட்டார்.

பேராயர் கைது செய்யப்பட்டப்பிறகு விசாரணை மேலும் முன்னேற்றம் அடைந்துள்ளதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா மீது பொருளாதாரத்தடை விதிக்கப்பட மாட்டாது

வெள்ளை மாளிகை சூசகம்

வாஷிங்டன், அக்.6: ரஷிய தளவாடங்களைக் கொள்முதல் செய்யும் விவகாரத்தில், இந்தியா மீது பொருளாதாரத்தடை விதிக்கப்பட மாட்டாது என்று வெள்ளை மாளிகை சூசகமாகத் தெரிவித்துள்ளது.

இது குறித்து, வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செய்தித்தொடர்பாளர் கூறியதாவது:

அமெரிக்காவின் எதிரி நாடுகள் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கும் சட்டமானது மிகவும் குறுகிய நோக்கமுடையது. இது அந்த நாடுகளின் ராணுவ பலத்தைக் குறைப்பதற்காக அமெரிக்கா மேற்கொள்ளும் நடவடிக்கை அல்ல. மாறாக, அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு எதிராக பல்வேறு அவதூறான செயல்களில் ஈடுபட்டு வரும் ரஷியாவுக்கு தகுந்த பாடம் புகட்டும் வகையில் எடுக்கப்படும் நடவடிக்கையாகும்.

முக்கியமாக, இந்தியா போன்ற நட்பு நாடுகளின் ராணுவ பலம் அதிகரிப்பதை இந்தச் சட்டம் தடுக்காது. இதன்படி, ரஷிய தளவாடங்களைக் கொள்முதல் செய்வதை நாடுகள் நிறுத்திக்கொள்ள வேண்டும் அல்லது குறைத்துக்கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டுகளில், ரஷியாவிடமிருந்து இறக்குமதி செய்யப்படும் தளவாடங்களை 40 சதவீத அளவுக்கு இந்தியா குறைத்துள்ளது. அதே வேளையில், அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தளவாடங்கள் அதிகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ரஷியாவிடமிருந்து எஸ்-400 'டிரையம்ஃப்' ரக போர் விமானங்களைக் கொள்முதல் செய்யும் ஒப்பந்தத்தில், ரஷிய அதிபர் விளாடிமிர் புதினும், பிரதமர் நரேந்திர மோடியும் வெள்ளிக்கிழமை கையெழுத்திட்டனர்.

இதற்கிடையே, '2020-ஆம் ஆண்டு அக்டோபர் முதல், எஸ்-400 ரக போர் விமானங்கள் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படும்' என்று அமெரிக்காவிலுள்ள ரஷிய தூதரகம் தெரிவித்துள்ளது.

அண்மையில் சீன பாதுகாப்பு நிறுவனம் ஒன்று ரஷியாவிடம் இருந்து சுகோய் ரக போர் விமானங்களையும், எஸ்-400 ரக ஏவுகணைகளையும் கொள்முதல் செய்த விவகாரத்தில், அந்த நிறுவனத்தின் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடையை விதித்தது.

உணவக ஒப்பந்த முறைகேடு வழக்கு: லாலு மனைவி, மகனுக்கு ஜாமீன்

புது தில்லி, அக். 6: ரயில்வே உணவக ஒப்பந்த முறைகேடு வழக்கில் ராஷ்ட்ரீய ஜனதா தளத் தலைவர் லாலு பிரசாதின் மனைவி ராப்ரி தேவி, மகன் தேஜஸ்வி யாதவ் ஆகியோருக்கு தில்லி நீதிமன்றம் சனிக்கிழமை ஜாமீன் வழங்கியது.

லாலு பிரசாத், ரயில்வே அமைச்சராக இருந்தபோது, ரயில்வேயின் ஐஆர்சிடிசிக்குச் சொந்தமான உணவகங்களை நடத்துவதற்கான ஒப்பந்தத்தை வழங்கியதில் முறைகேடு நடைபெற்றதாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

இதையடுத்து, சிபிஐ வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி, கடந்த ஏப்ரல் மாதம் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது. அதனடிப்படையில் அமலாக்கத் துறை தனியாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி, குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது. அதில், வழக்கில் குற்றம் சாட்டப்பட்டோர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், லாலு பிரசாத் குடும்பத்தினருக்கு தில்லி பாட்டியாலா ஹவுஸ் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியிருந்தது.

தில்லியில் உள்ள பாட்டியாலா ஹவுஸ் நீதிமன்றத்தில் சனிக்கிழமை ஆஜராகிவிட்டு வெளியே வந்த ராஷ்ட்ரீய ஜனதா தளத் தலைவர் லாலு பிரசாதின் மனைவி ராப்ரி தேவி, மகன் தேஜஸ்வி யாதவ் உள்ளிட்டோர்.

அதன்படி, ராப்ரி தேவி, தேஜஸ்வி யாதவ் உள்ளிட்டோர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி அருண் பரத்வாஜ் முன்னிலையில் சனிக்கிழமை ஆஜரானார்கள். சிபிஐ தொடுத்த வழக்கில், அவர்களுக்கு ஜாமீன் வழங்கி நீதிபதி உத்தரவிட்டார்.

அதே நேரத்தில், அமலாக்கத் துறை சார்பில் தொடுக்கப்பட்ட வழக்கில், அவர்களுக்கு, வரும் நவம்பர் 19-ஆம் தேதி வரை இடைக்கால ஜாமீன் வழங்கி நீதிபதி உத்தரவிட்டார்.

உடல்நலக் குறைவு காரணமாக லாலு பிரசாத், நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை நேரில் ஆஜராகவில்லை. எனவே, வரும் 19-ஆம் தேதி காணொலி முறையில் அவர் ஆஜராக வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

லாலு பிரசாத், ரயில்வே அமைச்சராக இருந்தபோது, புரி மற்றும் ராஞ்சி நகரங்களில் ரயில்வே துறையின் ஐஆர்சிடிசிக்குச் சொந்தமான ஹோட்டல்களை நடத்துவதற்கான ஒப்பந்தம், சுஜாதா ஹோட்டல்ஸ் நிர்வாகத்துக்கு வழங்கப்பட்டது. அந்த ஒப்பந்தத்தை சுஜாதா ஹோட்டல்ஸ் நிர்வாகத்துக்கே வழங்கும் வகையில், அதன் விதிகளில் முறைகேடாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

அதற்குப் பிரதிபலனாக, பாட்னாவில் உள்ள நிலத்தை டிலைட் மார்க்கெட்டிங் நிறுவனத்துக்கு சுஜாதா ஹோட்டல்ஸ் நிர்வாகம் கடந்த 2005-ஆம் ஆண்டு விற்பனை செய்தது. லாலு பிரசாதின் நெருங்கிய நண்பரும், முன்னாள் அமைச்சருமான பிரேம் சந்த் குப்தாவின் மனைவி சரளா குப்தா, டிலைட் மார்க்கெட்டிங் நிறுவனத்தின் இயக்குநராக உள்ளார். பின்னர் கடந்த 2010-ஆம் ஆண்டுக்குப் பிறகு அந்த நிலம், லாலு குடும்பத்தினரின் பெயருக்கு மாற்றப்பட்டது என்று அமலாக்கத் துறை தெரிவித்துள்ளது.

கர்நாடகத்தின் 3 மக்களவை, 2 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நவ. 3-இல் இடைத்தேர்தல்

தேர்தல் ஆணையம் அறிவிப்பு

பெங்களூரு, அக். 6: கர்நாடகத்தில் உள்ள 3 மக்களவை, 2 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நவ. 3-ஆம் தேதி இடைத்தேர்தல் நடத்தப்போவதாக இந்திய தேர்தல் ஆணையம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன் நடைபெற்ற கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட்டு வென்றிருந்த சிவமொக்கா தொகுதி எம்.பி. எடியூரப்பா, பெல்லாரி தொகுதி எம்.பி. ஸ்ரீராமுலு, மண்டியா தொகுதி எம்.பி. சி.எஸ்.புட்டராஜு ஆகிய மூவரும் தங்கள் பதவியை ராஜிநாமா செய்திருந்தனர். மேலும், அதே சட்டப்பேரவைத் தேர்தலில் ராமநகரம், சென்னப்பட்டணா ஆகிய இரு தொகுதிகளில் ம.ஜ.த. வேட்பாளராகப் போட்டியிட்டு வென்ற முதல்வர் குமாரசாமி, ராமநகரம் தொகுதிக்கான எம்.எல்.ஏ. பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். பாகல்கோட் மாவட்டத்தின் ஜம்கண்டி தொகுதியில் வென்றிருந்த காங்கிரஸ் எம்.எல்.ஏ. சித்து நியாம கௌடா சாலை விபத்தில் காலமானார்.

இதன் காரணமாக, சிவமொக்கா, பெல்லாரி, மண்டியா ஆகிய 3 மக்களவைத் தொகுதிகள், ராமநகரம், ஜம்கண்டி ஆகிய 2 சட்டப்பேரவைத் தொகுதிகள் காலியாக இருந்தன. இத் தொகுதிகளுக்கு நவ.3-ஆம் தேதி இடைத்தேர்தல் நடத்த இந்திய தேர்தல் ஆணையம் முடிவுசெய்து, அதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை சனிக்கிழமை (அக்.6) வெளியிட்டது.

அதன்படி, அக். 9-ஆம் தேதி தேர்தல் அறிவிக்கை வெளியிடப்படுகிறது. அன்று வேட்புமனுத் தாக்கல் தொடங்கி, அக்.16-ஆம் தேதி வரை நடைபெறுகிறது. தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் அக்.17-ஆம் தேதி பரிசீலிக்கப்படுகின்றன. வேட்பு மனுக்களை அக்.20-ஆம் தேதிக்குள் திரும்பப் பெறலாம். இதைத் தொடர்ந்து, இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்படுகிறது.

சிவமொக்கா, பெல்லாரி, மண்டியா மக்களவைத் தொகுதிகள், ராமநகரம், ஜம்கண்டி சட்டப்பேரவைத் தொகுதிகளில் நவ.3-ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறுகிறது. காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்குப் பதிவு நடைபெறும். இதனையடுத்து, நவ. 6-ஆம் தேதி காலை 8 மணிக்கு வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன.

இடைத்தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளதால், தேர்தல் நடக்கும் மாவட்டங்களில் சனிக்கிழமை முதல் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன. 2018-ஆம் ஆண்டு ஜன.1-ஆம் தேதி வெளியிடப்பட்டுள்ள வாக்காளர் பட்டியலின்படி தேர்தல் நடத்தப்படுகிறது. இத் தேர்தலில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

ம.பி.: சுங்கச் சாவடி ஊழியர்களை தாக்கிய பாஜக எம்.பி.

சிவபுரி(ம.பி), அக். 6: மத்திய பிரதேச மாநிலத்தில், பாஜக எம்.பி. நந்தகுமார் சிங் சௌகான் மற்றும் அவரது தொண்டர்கள் இணைந்து சுங்கச் சாவடி ஊழியர்களை தாக்கிய விடியோ சமூக வலைதளங்களில் பரவி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனினும், இந்த சம்பவம் குறித்து எவ்வித புகாரும் பதிவு செய்யப்படவில்லை என்று காவல் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து சிவபுரி-குணா சாலை சுங்கச் சாவடி மேலாளர் மகேந்திர சிங் தோமர் கூறியதாவது: சிவபுரி-குணா சாலையில் உள்ள சுங்கச் சாவடியில் வெள்ளிக்கிழமை இரவு எம்.பி. நந்தகுமாரின் கார் நிறுத்தப்பட்டது. சுங்கச் சாவடிகளில் எம்.பி. , எம்எல்ஏக்களுக்கு இலவசம் என்பதால் அவர் எம்.பி என்பதற்கான அடையாள அட்டையை காட்டுமாறு ஊழியர்கள் கூறினர். அதைக் கேட்டு கோவப்பட்ட எம்.பி. சண்டையிட ஆரம்பித்தார். அதன் பின்னர், அஜேந்திர சிங் என்னும் ஊழியரை எம்.பி. அடித்துள்ளார். எம்.பி. யுடன் இருந்தவர்கள் 2 வாக்கி டாக்கிகளை உடைத்து விட்டு சுபான் தீக்ஸித் என்னும் ஊழியரை கடுமையாகத் தாக்கினர் என்று அவர் கூறினார்.

இதுகுறித்து காவல்துறை கண்காணிப்பாளர் ராஜேஷ் ஹிங்கன்கர் கூறுகையில், சுங்கச் சாவடியில் நடந்த பிரச்னை குறித்து புகார் எதுவும் வரவில்லை. சுங்கச் சாவடியில் இருந்த கண்காணிப்பு கேமராக்களில் பதிவான விடியோ சமூக வலைதளங்களில் பரவியது என்று அவர் தெரிவித்தார்.

இதனிடையே, பாஜக ஆளும் மாநிலங்களில் இத்தகைய சம்பவங்கள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. எதிர்வரும் சட்டப்பேரவை தேர்தலில் மக்கள் பாஜகவுக்கு விடை கொடுக்க இருப்பதால் அக்கட்சி தலைவர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அந்த மாநில காங்கிரஸ் தலைவர் கமல் நாத் தெரிவித்தார்.

2019 மக்களவைத் தேர்தலில் சரத் பவார் போட்டியில்லை

தேசியவாத காங்கிரஸ்

மும்பை, அக். 6: தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், எதிர் வரும் மக்களவைத் தேர்தலில் போட்டியிட மாட்டார் என்று அக்கட்சி சனிக்கிழமை அறிவித்தது.

இதுகுறித்து கட்சித் தலைவரும், மும்ப்ரா-கால்வா தொகுதி எம்எல்ஏவுமான ஜிதேந்திர அஹ்வத் கூறியதாவது:

மக்களவைத் தேர்தல்களில் தாம் இனி போட்டியிடப்போவதில்லை என்று சரத் பவார் கடந்த 2014-ஆம் ஆண்டிலேயே தெளிவுபடத் தெரிவித்துவிட்டார். இந்நிலையில் 2019 மக்களவைத் தேர்தலுக்கான கட்சியின் வேட்பாளர்கள் குறித்து கலந்தாலோசிக்கும் கூட்டம் மாநில அலுவலகத்தில் சனிக்கிழமை காலை தொடங்கியது. அப்போதும், தேர்தல் வேட்பாளர்களுக்கான பட்டியலில் தனது பெயரை முன்மொழிய வேண்டாம் என்று சரத் பவார் கூறினார்.

இதனிடையே, கட்சியின் மூத்த தலைவர் அஜித் பவாரின் மகன் பார்த் பவார், மேவால் மக்களவைத் தொகுதியில் போட்டியிடுவதற்கு சரத் பவார் எதிர்ப்பு தெரிவித்ததாக கூறப்படுவதில் உண்மையில்லை. அதுதொடர்பான ஆரம்பகட்ட கலந்தாலோசனை நடைபெற்று வருகிறது. கட்சித் தொண்டர்களுடன் கலந்தாலோசித்த பிறகு மேவால் தொகுதிக்கான வேட்பாளர் அறிவிக்கப்படுவார் என்று ஜிதேந்திர அஹ்வத் கூறினார்.

'விலகத் தயார்': இதனிடையே, தேசியவாத காங்கிரஸ் கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவரான பாஸ்கர் ஜாதவ், ராய்கட் மக்களவைத் தொகுதியில் போட்டியிட விரும்பும் பட்சத்தில், தாம் விலகிக் கொள்வதாக அத்தொகுதியில் போட்டியிடுபவரும், மற்றொரு முன்னாள் மாநிலத் தலைவருமான சுனில் தாக்கரே சனிக்கிழமை கூறியுள்ளார்.

கடந்த மக்களவைத் தேர்தலின்போது அந்தத் தொகுதியில் போட்டியிட்ட சுனில் தாக்கரே, சிவசேனை வேட்பாளர் அனந்த் கீதேவிடம் தோல்வி கண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

வழக்குரைஞர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி

புது தில்லி, அக்.6: வழக்குரைஞர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது என்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் தெரிவித்துள்ளார்.

உச்ச நீதிமன்றத்தின் 46-ஆவது தலைமை நீதிபதியாக ரஞ்சன் கோகோய் கடந்த 3-ஆம் தேதி பதவியேற்றதையடுத்து, பார் கவுன்சில் சார்பாக சனிக்கிழமை அவருக்குப் பாராட்டு விழா நடைபெற்றது.

அப்போது பேசிய பார் கவுன்சில் தலைவர் மனன் குமார் மிஸ்ரா, 'கடந்த 16 ஆண்டுகளாக வழக்குரைஞர்களின் வாய்கள் கட்டப்பட்டுள்ளன. அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட விதிக்கப்பட்டிருக்கும் தடையானது, மக்களாட்சியின் அடிப்படைத்தத்துவத்தையே கேள்விக்குறியாக்குகிறது. இந்த விவகாரம் குறித்து, தலைமை நீதிபதி நல்ல தொரு முடிவை எடுக்க வேண்டும்' என்று கூறினார்.

இதனையடுத்து, தலைமை நீதிபதி கோகோய் தெரிவித்ததாவது:

வழக்குரைஞர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதற்குத் தகுந்த காரணங்களே இல்லை. இந்த விவகாரம் குறித்து விவாதிப்பது முற்றிலும் அவசியமற்றது.

வழக்குகளின் தேக்க நிலை: நாடு முழுவதிலும் மிக அதிக அளவில் வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. 'இந்திய நாட்டில் மக்கள் தொகை அதிகமாக இருப்பதால் தான், இத்தனை வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன' என்று பலர் தவறாக நினைத்துக் கொண்டிருக்கின்றனர். அமெரிக்காவில், 1000 நபர்களுக்கு 300 புதிய வழக்குகள் ஓராண்டில் பதிவு செய்யப்படுகின்றன. ஆனால், நம் நாட்டில் இந்த எண்ணிக்கை 15 மட்டுமே. அப்படியிருந்தும் கூட நம்மால் இந்த வழக்குகளை முடிக்க முடிவதில்லை.

நாட்டில் தற்போது 1400 நபர்களுக்கு 1 வழக்குரைஞர் உள்ளார். இன்னும் பல வழக்குரைஞர்கள் புதிதாக நியமிக்கப்பட உள்ளனர். மேலும் பல வழக்குகளும் நீதிமன்றங்களை நாட உள்ளன.

சட்ட உதவி: தற்போது சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்களில் 67 சதவீதம் பேர் விசாரணைக் கைதிகள் ஆவர். அவர்களுள் 47 சதவீதம் பேர், 18 முதல் 30 வயதுக்குள்ளான இளைஞர்கள். அவர்களுக்கு சரியான சட்ட உதவிகள் கிடைக்காததாலும், வழக்கு விசாரணைகளின் கால தாமதத்தாலும், இளைஞர்களின் சக்தி சிறைக்குள்ளேயே வீணடிக்கப்பட்டு வருகிறது.

அவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை வழங்க வழக்குரைஞர்கள் முன்வர வேண்டும். இது போன்ற ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளில் வழக்குரைஞர்கள் ஈடுபட வேண்டுமே தவிர, வேலை நிறுத்தம் போன்றவற்றில் காலத்தை வீணடிப்பது முற்றிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல என்று கோகோய் தெரிவித்தார்.

சட்ட உரிமை பாதிக்கப்படும்: உச்ச நீதிமன்ற நீதிபதி அருண் மிஸ்ரா கூறுகையில், 'வழக்குரைஞர்கள் வேலை நிறுத்தத்தால், நாள்தோறும் நீதிமன்றத்தை நாடி வரும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அதனால் பாதிக்கப்படுவர் என்றார்.

பெட்ரோல் மீதான மாநில வரியை குறைக்காதது ஏன்?

எதிர்க்கட்சிகளுக்கு ஜேட்லி கேள்வி

புது தில்லி, அக். 6: பெட்ரோல் மற்றும் டீசல் மீதான விலையை ரூ.2.50 வீதம் மத்திய அரசு குறைத்தபோதிலும், பாஜக ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் அத்தகைய விலை குறைப்பு நடவடிக்கை ஏன் முன்னெடுக்கப்படவில்லை? என்று மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி கேள்வி எழுப்பியுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் சுட்டுரையிலும், தொலைக்காட்சிப் பேட்டிகளிலும்தான் சாமானிய மக்களின் நலன் குறித்து பேசுகிறார்களே தவிர, அவற்றை செயல்படுத்தும் வாய்ப்பு வரும்போது அதனை புறக்கணித்து விடுகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

சர்வதேச சந்தையில் உயர்ந்து வரும் கச்சா எண்ணெய் விலையால் இந்தியாவில் பெட்ரோல் மற்றும் டீசல் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்து புதிய உச்சத்தை எட்டியுள்ளது. இதற்கு பல்வேறு தரப்பில் இருந்தும் எதிர்ப்பு எழுந்து வருகிறது. குறிப்பாக, காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், இடதுசாரி கட்சிகள் இந்த விவகாரத்தை தீவிரமாக கைகளில் எடுத்துள்ளன. எரிபொருளை ஜிஎஸ்டி வரம்புக்குள் கொண்டு வர வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றன.

இந்தச் சூழலில், பெட்ரோல், டீசல் மீதான கலால் வரியை மத்திய அரசு லிட்டருக்கு ரூ.1.50 குறைத்தது. மேலும், எண்ணெய் நிறுவனங்கள் லிட்டருக்கு ரூ.1 குறைத்து பெட்ரோல், டீசலை விநியோகிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியது. இதனால், அவற்றின் விலை லிட்டருக்கு ரூ.2.50 குறைந்தது. அதேபோன்று மாநில அரசுகளும் தங்களது வரிகளில் இருந்து ரூ.2.50-ஐ குறைக்குமாறு மத்திய அரசு வலியுறுத்தியது.

அதைஏற்று, குஜராத், மகாராஷ்டிரம், உத்தரப் பிரதேசம், ஜம்மு-காஷ்மீர், மத்தியப் பிரதேசம், ஜார்க்கண்ட், அஸ்ஸாம், ஹிமாசலப் பிரதேசம், ஹரியாணா, உத்தரகண்ட், கோவா, அருணாசலப் பிரதேசம், திரிபுரா உள்ளிட்ட மாநிலங்களில் பெட்ரோல், டீசல் மீதான உள்ளூர் வரிகள் குறைக்கப்பட்டுள்ளன. இதையடுத்து, அங்கு எரிபொருள் விலை லிட்டருக்கு மொத்தமாக ரூ.5 குறைந்துள்ளது.

அதேவேளையில் பாஜக ஆட்சியில் இல்லாத கர்நாடகம், மேற்கு வங்கம், கேரளம் உள்ளிட்ட மாநிலங்கள் அந்தக் கோரிக்கையை புறக்கணித்துவிட்டன.

இந்நிலையில், அதைவிமர்சித்து 'எண்ணெய் விலையும், எதிர்க்கட்சிகளின் இரட்டை வேடமும்' என்ற தலைப்பில் ஜேட்லி முகநூலில் பதிவு ஒன்றை சனிக்கிழமை வெளியிட்டார். அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:

வெனிசுலா, லிபியா உள்ளிட்ட நாடுகளில் நிலவி வரும் அரசியல் நெருக்கடி காரணமாக கச்சா எண்ணெய் உற்பத்தி பாதித்துள்ளது. அதன் தாக்கம் இந்தியாவிலும் எதிரொலிக்கிறது. அதனால் சாமானிய மக்கள் பாதிக்கப்புக்குள்ளாமல் இருப்பதற்கான சிறிய நிவாரணத்தை மத்திய அரசு அளித்துள்ளது.

அதேவேளையில், அரசின் மீது விமர்சனங்களை மட்டுமே முன்வைத்து வரும் எதிர்க்கட்சிகள், இந்த விவகாரத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பாஜக ஆட்சி இல்லாத வேறு மாநில அரசுகள் உள்ளூர் வரியை குறைக்க மறுத்துவிட்டன. இதில் இருந்தே அவர்களின் கபடநாடகத்தை அறிந்து கொள்ளலாம்.

சுட்டுரையிலும், தொலைக்காட்சிப் பேட்டியிலும் இதுகுறித்து பேசும் ராகுல் காந்தி உள்ளிட்டோர், மக்களின் நலன் காப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை என்று அதில் ஜேட்லி பதிவிட்டுள்ளார்.

ஆதார் முரண்பாடுகள்: இதனிடையே, தில்லியில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் பேசிய ஜேட்லி, 'தனியார் தொலைத் தொடர்பு நிறுவனங்கள், வங்கிகள் உள்ளிட்டவை, வாடிக்கையாளர்களிடம் ஆதார் விவரங்களை கேட்டுப் பெறுவதற்கு சட்டத்தில் இடம் உள்ளது' என்றார்.

சிம் கார்டு வாங்கவும், வங்கிக் கணக்குத் தொடங்கவும் ஆதார் கட்டாயமில்லை என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், ஜேட்லி இவ்வாறு கூறியுள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் பேசுகையில், 'முக்கிய நடவடிக்கைகளில் ஆதார் அவசியம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது; அதேவேளையில், தொலைத் தொடர்பு நிறுவனங்கள், வங்கிகள், தங்களது வாடிக்கையாளர்களிடம் ஆதாரைக் கேட்டு கட்டாயப்படுத்தக் கூடாது எனத் தெரிவித்துள்ளது; சட்ட விதிகளின்படி அத்தகைய விவரங்களை கேட்பதற்கான வாய்ப்புகள் உள்ளன; அதற்காக அத்தகைய விதிகளுடன் கூடிய சட்டத்தை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தி அரசு அமலாக்கும் என கருத வேண்டாம்' என்றார்.

பாஜகவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் இணைந்து மகா கூட்டணி அமைக்க முயன்று வருவதை விமர்சித்த ஜேட்லி, இத்தகைய பரிசோதனை முயற்சிகள் இதற்கு முன்னர் நடந்திருப்பதாகவும், அவை அனைத்தும் தோல்வியிலேயே முடிந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

காஷ்மீரில் 300 பயங்கரவாதிகள் செயல்பாட்டில் உள்ளனர்: ராணுவ அதிகாரி தகவல்

ஸ்ரீநகர், அக்.6: ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் 300 பயங்கரவாதிகள் தற்போது செயல்பாட்டில் உள்ளனர். மேலும் 250 பயங்கரவாதிகள் நாட்டுக்குள் ஊடுருவுவதற்காக எல்லைக் கட்டுப்பாட்டு பகுதி அருகே பதுங்கியுள்ளனர் என்று ராணுவத்தின் லெப்டினென்ட் ஜெனரல் ஏ.கே.பட் தெரிவித்தார்.

இதுகுறித்து, குப்வாரா மாவட்டத்தில் செய்தியாளர்களிடம் அவர் சனிக்கிழமை கூறியதாவது:

சுமார் 250 பயங்கரவாதிகள் ஊடுருவ முயற்சித்து வருகின்றனர். ராணுவம் விழிப்புடன் இருக்கிறது; அவர்களை தடுத்து நிறுத்தவும் தயாராக இருக்கிறது.

ராணுவத்தின் முயற்சிகளுக்கு எல்லையோர கிராம மக்கள் ஒத்துழைப்பு அளித்து வருகின்றனர். ஒட்டுமொத்த காஷ்மீரிலும் பயங்கரவாதத்தை நாங்கள் கட்டுப்படுத்த விரும்புகிறோம்.

ஜம்மு-காஷ்மீரில்நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலை அமைதியாக நடத்தி முடிக்கும் வகையில் காவல்துறை மற்றும் மத்திய ரிசர்வ் போலீஸ் ஆகியோருடன் இணைந்து பகுதி வாரியாக பயிற்சி ஒத்திகையை நடத்தி வருகிறோம் என்றார் அவர்.

காங்கோ: டேங்கர் லாரி விபத்தில் 60 பேர் பலி

கின்சாஸா, அக்.6: காங்கோ நாட்டில் டேங்கர் லாரி விபத்துக்குள்ளானதில், 60 பேர் உடல் கருகி பலியாகினர்.

காங்கோ நாட்டின் மேற்குப் பகுதியில் உள்ள புபா கிராமத்தில் நெடுஞ்சாலையில் சென்ற டேங்கர் லாரி, அவ்வழியே வந்த வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதைத் தொடர்ந்து லாரி வெடித்து தீப்பிடித்தது. இந்தத் தீ, சாலையோரம் இருக்கும் வீடுகளுக்கு வேகமாக பரவியது.

இந்த பயங்கர விபத்தில் வீடுகளில் இருந்த மக்கள் உள்பட 60 பேர் உடல் கருகி பலியாகினர். மேலும் 100 பலத்த தீக்காயமடைந்தனர்.

விபத்து நேரிட்ட பகுதியில் மருத்துவமனைகள், அவசர சிகிச்சை உதவி வாகனங்கள் வசதியில்லை எனத் தெரிகிறது.

இதனால் விபத்தில் தீக்காயமடைந்த நபர்கள், மோட்டார் சைக்கிள்கள், தனியாருக்கு சொந்தமான கார்களில்தொலை தூரத்தில் உள்ள மருத்துவமனைகளுக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

ஒத்திகை...

86-ஆவது விமானப்படை தின(அக். 8) அணிவகுப்புக்காக, உத்தரப் பிரதேசத்தின் காஜியாபாத் பகுதியிலுள்ள விமானப்படைத்தளத்தில் சனிக்கிழமை ஒத்திகையில் ஈடுபட்ட 'சாரங்' ஹெலிகாப்டர்கள்.

மோடி ஆட்சியில் விவசாயிகளின் நலனுக்கு ரூ.2.11 லட்சம் கோடி செலவிடப்பட்டுள்ளது



ஜோரா, அக்.6: 2014-இல் பிரதமர் நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்த பிறகு விவசாயிகளின் நலனுக்காக ரூ.2.11 லட்சம் கோடி செலவிடப்பட்டுள்ளது என்று பாஜக தலைவர் அமித் ஷா தெரிவித்தார்.

ராபி மற்றும் காரீஃப் பருவ பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை இரட்டிப்பாக்கியது மோடி அரசுதான் என்றும் அவர் கூறினார்.

மத்தியப் பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, ஜோரா, உஜ்ஜைனி, ரட்லம் உள்ளிட்ட இடங்களில் அமித் ஷா, சனிக்கிழமை பிரசாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது:

2014-இல் அரசு அமைத்த போது, ஏழைகளும், விவசாயிகளும் தனது இதயத்துக்கு அருகாமையில் இருப்பதாக பிரதமர் மோடி கூறியிருந்தார். அதை மனதில் வைத்து விவசாயிகளுக்காக அவரது அரசு ஏராளமான திட்டங்களை செயல்படுத்தியிருக்கிறது.

வேளாண் வளர்ச்சி குறித்து ஆலோசிப்பதற்காக மாநில முதல்வர்கள் அடங்கிய குழு ஒன்றையும் மத்திய அரசு அமைத்தது. மத்தியப் பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சௌஹான்தான் அந்தக் குழுவின் தலைவர்.

விவசாயிகளின் நலனுக்காக கடந்த 2014 -2019 வரையிலான நிதியாண்டுகளில் ரூ.2.11 லட்சம் கோடியை மோடி அரசு ஒதுக்கீடு செய்தது.

ஆனால், காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது, விவசாயிகளின் நலனுக்காக செய்தது என்ன? பாஜக ஆட்சிக்கு வந்த பின் விவசாயிகளின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டது. வேளாண் பொருள்களை இடைத்தரகர்கள் வாங்குவதும் கட்டுப்படுத்தப்பட்டது.

ராகுலுக்கு சவால்: வளர்ச்சி குறித்து காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி விவாதத்துக்கு தயாரா? தேதி, நேரம், இடம் ஆகியவற்றை முடிவு செய்து சொல்லுங்கள். அன்றைய தினம் எங்களது இளைஞரணித் தலைவரை அனுப்பிவைக்கிறோம். 55 ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சி பெரிதா அல்லது 15 ஆண்டுகால சௌஹான் ஆட்சி பெரிதா என விவாதித்து முடிவு செய்யலாம்.

ஊடுருவலை முறியடிப்போம்: 'ஜெய் ஜவான், ஜெய் கிசான்' என்று முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி கூறுவார். மக்களுக்கு விவசாயிகள் உணவளிப்பதைப் போல, எல்லையில் ராணுவத்தினர் காவல் காப்பர். ஆனால், கரையான்களைப் போல நுழைந்த ஊடுருவல்காரர்கள், நாட்டின் பாதுகாப்பை அரித்துவிட்டனர். ஆகவே, அவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்றார் அமித் ஷா.

காஷ்மீர்: பேருந்து கவிழ்ந்து 22 பேர் பலி

பனிஹால்/ஜம்மு, அக். 6: ஜம்மு-காஷ்மீர் மாநிலம், ராம்பன் மாவட்டத்தில் மினி பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 22 பேர் உயிரிழந்தனர். மேலும், 15 பேர் காயமடைந்தனர்.

இதுகுறித்து காவல் துறை அதிகாரி ஒருவர் சனிக்கிழமை தெரிவித்ததாவது:

பனிஹால் பகுதியில் இருந்து ராம்பன் நோக்கி பேருந்து சனிக்கிழமை சென்று கொண்டிருந்தது. கேலா மோர்ஹ் அருகே ஜம்மு-ஸ்ரீநகர் நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த போது, பேருந்து ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து அங்கிருந்த 200 அடி பள்ளத்தில் விழுந்தது. பேருந்தில் இருந்தவர்களில் 22 பேர் இந்த விபத்தில் உயிரிழந்தனர். காயமடைந்த 15 பேரில் 10 பேரின் நிலைமை மிகவும் கவலைகிடமாக உள்ளது. அவர்கள் ஜம்முவில் உள்ள மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

இழப்பீடு அறிவிப்பு: இந்த விபத்து குறித்து கேள்விப்பட்ட மாநில ஆளுநர் சத்யபால் மாலிக் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார்.

மேலும், விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்துக்கு ரூ. 5 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு ரூ. 50 ஆயிரமும் இழப்பீட்டு தொகையாக அறிவித்தார்.

இதனிடையே, மக்கள் ஜனநாயக கட்சி, தேசிய மாநாட்டு கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தனர்.

மகாராஷ்டிரத்தில் வறட்சி நிலையை கண்காணிக்க இணையதளம்

மும்பை, அக்.6: மாநிலத்தின் மழை அளவு, பயிர் விவரங்கள், நிலத்தடி நீர்மட்டம் ஆகியவற்றைக் கொண்டு வறட்சி நிலை குறித்த தகவல்களை அறிய உதவும் இணையதளத்தை மகாராஷ்டிர அரசு தொடங்கியுள்ளது.

இது குறித்து, இணையதளத்தைத் தொடங்கி வைத்த மறுவாழ்வு மற்றும் நிவாரணத் துறை அமைச்சர் சந்திரகாந்த் பாட்டீல் கூறியதாவது:

மாநிலத்தின் மழைஅளவு, சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர் விவரங்கள், குறிப்பிட்ட பகுதிகளில் நிலவும் நிலத்தடி நீர்மட்டம் ஆகியவற்றைக் கொண்டு அப்பகுதியின் வறட்சி நிலை குறித்த தகவல்களை அறிய உதவும் இந்த இணையதளம், மறுவாழ்வு மற்றும் நிவாரணத் துறை அமைச்சகத்தின் சார்பில் தொடங்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் குறிப்பிட்ட பகுதியை வறட்சி பாதித்த பகுதியாக அறிவிக்க, மத்திய அரசு கடந்த 2016-ஆம் ஆண்டு, சில வழிமுறைகளை வகுத்தது. அதனை அடிப்படையாகக்கொண்டும், குறிப்பிட்ட பகுதிகளில் சேகரித்த தகவல்களைக் கொண்டும், இந்தப் புதிய இணையதளத்தின் மூலம் அந்தப் பகுதிகளை வறட்சி பாதித்த பகுதிகளாக எளிதில் அறிவிக்க முடியும்.

இதன் மூலம், அந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து, மாநில அரசு எளிதில் முடிவெடுக்க முடியும். மேலும், இந்த இணையதளத்தின் மூலம் வறட்சியால் பாதிக்கப்பட இருக்கும் பகுதிகள் குறித்த தகவல்களையும் முன்கூட்டியே பெற முடியும். இதனால், அந்தப் பகுதிகளில் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசால் எடுக்க முடியும் என்று அவர் கூறினார்.

கிர் காடுகளில் சிங்கங்களை பாதுகாக்க நடவடிக்கை

பிரதமர் மோடிக்கு அகமது படேல் கடிதம்

ஆமதாபாத், அக். 6: குஜராத் மாநிலம், கிர் வனப்பகுதியில் உள்ள சிங்கங்கள் மரணமடைவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு காங்கிரஸ் மூத்த தலைவரும், மாநிலங்களவை எம்.பி.யுமான அகமது படேல் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து பிரதமர் மோடிக்கு அவர் சனிக்கிழமை எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:

குஜராத் மாநிலத்தில் உள்ள கிர் வனப்பகுதியில் கடந்த 2015-ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 523 சிங்கங்கள் இருந்தன. இதனிடையே, வைரஸ் தொற்று உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், கடந்த 3 வாரங்களில் மட்டும் 23 சிங்கங்கள் உயிரிழந்து விட்டன.

சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் மாநில அரசு அலட்சியம் காட்டியதன் காரணமாகவே, கிர் வனப்பகுதியில் அடுத்தடுத்து சிங்கங்கள் உயிரிழந்துள்ளன. அந்த காடுகளில் உள்ள ஆசிய வகை சிங்கங்கள், குஜராத் மாநிலத்தின் பெருமைக்குரிய விஷயங்களில் ஒன்று என்பதை அறிவீர்கள்.

கிர் வனப்பகுதியைச் சுற்றிலும் 10 கிலோ மீட்டர் தொலைவுக்கு பாதுகாக்கப்பட்ட பகுதியாக இருக்க வேண்டும் என்று மத்திய வனம், சுற்றுச்சூழல் அமைச்சகம் ஆலோசனை தெரிவித்துள்ளது.

ஆனால், நடைமுறையில் அந்த வனப்பகுதியில் இருந்து 500 மீட்டர் தொலைவு வரை மட்டுமே பாதுகாக்கப்பட்ட பகுதியாக உள்ளது. எனவே, 10 கி.மீ. தொலைவு வரை பாதுகாக்கப்பட்ட பகுதியாக விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், அந்த வனப்பகுதி அருகே உள்ள சட்ட விரோத விடுதிகளை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வன உயிரினங்களைப் பாதுகாப்பதிலும், சுற்றுலாவை மேம்படுத்துவதிலும் சமமான அளவில் முக்கியத்தும் அளிக்கப்பட வேண்டும்.

எனவே, கிர் வனப்பகுதியில் உள்ள சிங்கங்களைப் பாதுகாப்பதற்கு ரூ.1,000 கோடி நிதியில் திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும். சிங்கம் உள்ளிட்ட வன உயிரினங்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு போதுமான எண்ணிக்கையில் மருத்துவர்களை நியமிக்க வேண்டும் என்று அந்த கடிதத்தில் அகமது படேல் குறிப்பிட்டுள்ளார்.

காஷ்மீரில் நாளை உள்ளாட்சித் தேர்தல்: பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆய்வு செய்தார் ஆளுநர்

ஸ்ரீநகர், அக். 6: ஜம்மு-காஷ்மீரில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதல் கட்ட தேர்தல் திங்கள்கிழமை நடைபெறுவதை முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆளுநர் சத்யபால் மாலிக், சனிக்கிழமை ஆய்வு செய்தார்.

ஸ்ரீநகரில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், ராணுவத்தின் வடக்கு மண்டல தளபதி ரண்பீர் சிங், காவல் துறை டிஜிபி தில்பக் சிங் மற்றும் காவல் துறை, மத்திய ஆயுத காவல் படை, மத்திய, மாநில உளவுத் துறை ஆகியவற்றின் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட விஷயங்கள் குறித்து ஆளுநர் மாளிகையின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறியதாவது:

காஷ்மீரில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல், ஊராட்சித் தேர்தல் ஆகியவற்றை அமைதியான முறையில் நடத்துவதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆளுநர் ஆய்வு செய்தார். மேலும், பூத் வாரியாக மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள், அங்குள்ள சவால்கள் குறித்தும் அவர் அதிகாரிகளுடன் விவாதித்தார். பின்னர், களநிலவரத்தை உன்னிப்பாக கவனித்து அதற்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதிகாரிகளை அவர் வலியுறுத்தினார். அதிகாரிகளும், பாதுகாப்புப் படையினரும் ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கு ஆளுநர் பாராட்டு தெரிவித்தார் என்று அந்த செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

ஜம்மு-காஷ்மீரில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதல் கட்ட தேர்தல் 8-ஆம் தேதியும், இரண்டாம் கட்ட தேர்தல் 10-ஆம் தேதியும், மூன்றாம் கட்டத் தேர்தல் 13-ஆம் தேதியும், நான்காவது மற்றும் கடைசி கட்டத் தேர்தல் 16-ஆம் தேதியும் நடைபெறவுள்ளது.

அரசுப் பணி தேர்வுகளுக்கான மாதிரி வினா-விடைகள்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) நடத்தும் அனைத்து தேர்வுகளுக்கும் பயனளிக்கும் வகையிலான மாதிரி வினா-விடைகள்

பொதுத்தமிழ்

1299. என்மனார் புலவர் எனக் குறிப்பிடும் நூல் எது?
A) புறநானூறு
B) தொல்காப்பியம்
C) தொன்னூல் விளக்கம்
D) இலக்கண விளக்க பாட்டியல்

1300. மறைமலையடிகள் தனித்தமிழ் இயக்கத்தை ஆரம்பித்த ஆண்டு எது?
A) 1817 B) 1816
C) 1916 D) 1918

1301. தற்காலத் தமிழ்ச் சொல்லகராதியை இயற்றியவர் யார்?
A) குப்புசாமி B) பவானந்தம் பிள்ளை
C) மு.சண்முகம் D) வின்ஸ்லோ

1302. பின்வருபவர்களுள் வீராணம் குடிநீர் திட்டத்தை உருவாக்கியவர் யார்?
A) காமராசர் B) அண்ணா
C) எம்.ஜி.ஆர் D) மேற்கூறிய எவருமில்லை

1303. பிரணவ கேசரி 1927இல் சென்னையில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்?
A) கல்கத்தா B) பாம்பே
C) சென்னை D) லக்னோ

1304. "கற்பி, ஒன்று சேர், போராடு" இக்கூற்று யாருடையது?
A) காமராசர் B) அண்ணா
C) காந்தி D) அம்பேத்கர்

1305. 1930இல் அவ்வை இல்லத்தை தன் வீட்டிலேயே தொடங்கியவர் யார்?
A) முத்துலட்சுமி ரெட்டி
B) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்
C) அம்புஜத்தம்மாள்
D) அஞ்சலையம்மாள்

1306. தவறாக பொருந்தியுள்ள இணையைக் கண்டறிக.
A) கருவூர் – கரோரா
B) சோபட்டினம் – சோபட்னா
C) உறையூர் – ஓர்தொர
D) கொற்கை – திண்டிஸ்

1307. பெயர்ச் சொல்லின் வகையறிக: கழல் பணிந்தான்
A) சினையாகு பெயர் B) காலவாகு பெயர்
C) உவமையாகு பெயர் D) தானியாகு பெயர்

1308. பின்வரும் வாக்கியங்களை கவனிக்க.
I. சிந்துக்கு தந்தை என்னும் அடைமொழியால் குறிக்கப்படுபவர் கம்பர்.
II. முடிபொருள் தொடர்நிலைச் செய்யுள் என்னும் அடைமொழியால் குறிக்கப்படும் நூலின் ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார்.
மேற்கூறியவற்றில் சரியானவற்றைத் தேர்ந்தெடு.
A) I மட்டும் B) II மட்டும்
C) இரண்டும் D) இரண்டுமில்லை

1309. கி.மு.10ஆம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்கு தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்ட பொருள் யாது?
A) யானைத் தந்தம்
B) மயில் தோகை
C) வாசனைப் பொருட்கள்
D) மேற்கூறிய அனைத்தும்

1310. பட்டியல்-Iயை பட்டியல்-II உடன் பொருத்துக.

(பட்டியல்-I) (சொல்)	(பட்டியல்-II) (எதிர்ச்சொல்)
a) அவல்	1. வன்மை
b) இசை	2. மிசை
c) மென்மை	3. வெம்மை
d) தண்மை	4. வசை

குறியீடுகள்:

	a	b	c	d
A)	2	4	1	3
B)	3	4	1	2
C)	3	2	4	1
D)	2	1	4	3

1311. "டெலிகேட்" என்னும் ஆங்கிலச் சொல்லின் தமிழ்ச்சொல் காண்க.
A) செயலர் B) விண்ணப்பதாரர்
C) பேராளர் D) மேலாளர்

1312. ஒலி வேறுபாடறிந்து சரியான இணையைக் கண்டறிக.

கோருதல்		கோறல்
A) சிறந்த	–	வீரம்
B) ஒன்று	–	தண்டனை
C) விரும்புதல்	–	கொல்லுதல்
D) கூவு	–	கொல்லுதல்

1313. கீழ்காணும் கூற்றுகளை கருத்தில் கொள்க.
I. திரு, விழு, முழு போன்ற முற்றியலுகரச் சொற்களின் பின்வலி மிகும்.
II. இனி, தனி என்னும் சொற்களின் பின்வரும் வல்லினம் மிகாது.
மேற்கூறியவற்றில் தவறானவற்றைத் தேர்ந்தெடு.
A) I மட்டும் B) II மட்டும்
C) இரண்டும் D) இரண்டுமில்லை

1314. 'திருமுதுகுன்றம்' என்னும் பெயரால் அழைக்கப்படும் ஊர் எது?
A) விருத்தாசலம் B) வேதாரணியம்
C) ஸ்ரீரங்கம் D) சிதம்பரம்

1315. பட்டியல்-Iயை பட்டியல்-II உடன் பொருத்துக.

(பட்டியல்-I)	(பட்டியல்-II)
a) எருது	1. ஞை
b) அரண்	2. ஞா
c) இகழ்ச்சி	3. சோ
d) சுட்டு	4. சே

குறியீடுகள்:

	a	b	c	d
A)	1	2	3	4
B)	4	3	1	2
C)	3	1	4	2
D)	1	4	3	2

1316. 'வெகுள்' என்ற வினைமுற்றை வினையெச்சமாக்குக
A) வெகுண்ட B) வெகுண்டு
C) வெகுளல் D) வெகுத்து

1317. பின்வரும் வாக்கியங்களை கவனிக்க.
I. கம்பர் தம் இராமாயணத்தை அரங்கேற்றிய இடம் திருவரங்கம்.
II. கம்பர், குலசேகர ஆழ்வார் பற்றி பாடியது சடகோபர் அந்தாதி.
மேற்கூறியவற்றில் தவறானவற்றைத் தேர்ந்தெடு.
A) I மட்டும் B) II மட்டும்
C) இரண்டும் D) இரண்டுமில்லை

1318. பதிற்றுப்பத்தில் ஆறாம் பத்துப் பாடியவர் யார்?
A) பரணர் B) கபிலர்
C) காக்கைப் பாடினியார் D) அரிசில்கிழார்

1319. சமண சமய நூல்களுள் பொருந்தா ஒன்றைக் கண்டறிக.
A) நாககுமார காவியம் B) வளையாபதி
C) குண்டலகேசி D) நீலகேசி

1320. பின்வருபவர்களுள் பாட்டுத் திறந்தாலே வையத்தைப் பாலித்திடச் செய்தவர் யார்?
A) பாவேந்தர் B) தேசியக்கவி
C) கவிமணி D) நாமக்கல் கவிஞர்

1321. பின்வரும் வாக்கியங்களை கவனிக்க.
I. "நாடக வழக்கினும் உலகியல் வழங்கினும்" எனக் குறிப்பிடுபவர் தொல்காப்பியர்.
II. தொல்காப்பியம் மூன்று வகையான திரைச் சீலைகள் பற்றி குறிப்பிடுகிறது.
மேற்கூறியவற்றில் சரியானவற்றைத் தேர்ந்தெடு.
A) I மட்டும் B) II மட்டும்
C) இரண்டும் D) இரண்டுமில்லை

1322. "வில்லே நுதலே வேற்கண் கயலே" இதில் எவ்வகை தொடை விகற்பம் அமைந்துள்ளது?
A) மேற்கதுவாய் இயைபு B) கீழ்க்கதுவாய் இயைபு
C) ஒரூஉ இயைபு D) பொழிப்பு இயைபு

1323. உரியது என்னும் சிறுகதையின் ஆசிரியர் யார்?
A) நீலவன் B) கழனியூரன்
C) ந.பழநியப்பன் D) கிருபானந்த வாரியார்

1324. தமிழில் முதல் பேசும் படம் எது?
A) ராஜா ஹரிசந்திரா B) காளிதாஸ்
C) ஆலம் ஆரா D) ஏசுவின் வாழ்க்கை

1325. தவறாக பொருந்தியுள்ள இணையைக் கண்டறிக.
A) இந்தியாவில் உள்ள மொழிக் குடும்பங்கள் – 12
B) தென் திராவிட மொழிகள் – 9
C) நடுத்திராவிட மொழிகள் – 13
D) வட திராவிட மொழிகள் – 3

1326. பின்வருவனவற்றுள் குற்றம், இருள், கருமை பொருளில் வரும் ஒரெழுத்து ஒருமொழி யாது?
A) மே B) பை
C) மை D) கு

1327. அகர வரிசைப்படுத்துக.
A) அற்றம், அங்கை, அட்டை, அர்ப்பணி, அவ்வை, அச்சம்
B) அங்கை, அச்சம், அட்டை, அர்ப்பணி, அவ்வை, அற்றம்
C) அங்கை, அச்சம், அர்ப்பணி, அவ்வை, அற்றம், அட்டை
D) அச்சம், அட்டை, அர்ப்பணி, அவ்வை, அற்றம், அங்கை

1328. 'இடும்பை' என்பதற்குப் பொருத்தமான எதிர்ச்சொல்லைக் கண்டறிக.
A) துன்பம் B) இன்பம்
C) கோபம் D) பொறுமை

விடைகள்

1299	1300	1301	1302	1303	1304	1305	1306	1307	1308	1309
B	D	B	B	C	D	A	D	D	D	D
1310	1311	1312	1313	1314	1315	1316	1317	1318	1319	1320
A	C	C	B	A	B	B	B	C	C	B
1321	1322	1323	1324	1325	1326	1327	1328			
A	A	D	B	C	C	B	B			

தொடரும்...

தொகுப்பு : சங்கர் ஐ.ஏ.எஸ். அகாதெமி, சென்னை.

ஒரு இன்னிங்ஸ், 272 ரன்கள் வித்தியாசத்தில்

மேற்கிந்திய தீவுகளை பந்தாடியது இந்தியா

ராஜ்கோட், அக். 6: முதல் டெஸ்டில் மேற்கிந்திய தீவுகள் அணியை ஒரு இன்னிங்ஸ் மற்றும் 272 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றது இந்தியா.

இந்திய பந்துவீச்சை எதிர் கொள்ள முடியாமல் மேற்கிந்திய தீவுகள் அணி மூன்றாம் நாளான சனிக்கிழமையே தோல்வியடைந் தனர்.

இந்திய அணி தனது முதல் இன் னிங்ஸில் 649-9 ரன்களுக்கு டிக் ளேர் செய்தது. பின்னர் ஆடிய மேற்கிந்திய தீவுகள் அணி இரண் டாவது நாள் ஆட்ட முடிவில் 6 விக்கெட்டை இழந்து 94 ரன் களுடன் தள்ளாடிக் கொண் டிருந்தது. இந்நிலையில் மூன் றாவது நாளான சனிக்கிழமை ஆட்டத்தை தொடர்ந்த அந்த அணி இறுதியில் 181 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இந்திய தரப் பில் அஸ்வின் 4-37, சமி 2-22, உமேஷ், ஜடேஜா, குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 1 விக்கெட்டை யும் வீழ்த்தினர்.

பாலோ ஆன்: பாலோ ஆனைத் தொடர்ந்து மேற்கிந்திய தீவுகள் தனது 2-ஆவது இன்னிங்ஸை தொடங்கியது. கிராக் பிராத் வொயிட் 10 ரன்களிலும், ஷாய் ஹோப் 17 ரன்களிலும் ஆட்டமி ழந்தனர். 18.6 ஓவர்களில் 2 விக் கெட்டை இழந்து 79 ரன்களை மேற்கிந்திய தீவுகள் எடுத்திருந்த து.பின்னர் ஷிம்ரன் ஹெட்மயர் 11 ரன்களிலும், சுனில் அம்பரீஸ் ரன் ஏதுமின்றியும் ஆட்டமிழந்த னர். அப்போது 22.4 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 97 ரன்க ளுடன் தள்ளாடிக் கொண்டிருந் தது.

ரோஸ்டோன் சேஸ் 20, ஷேன் டௌவ்ரிச் 16, கீமோ பால் 15, தேவேந்திர பிஷு 9, ஷெர்மன் லீவிஸ் 4, ஷனான் கேப்ரியேல் 4 என சொற்ப ரன்களுக்கு ஆட்ட மிழந்தனர்.

மறுமுனையில் கிய்ரன் பவல் மட்டுமே நிலைத்து ஆடி 4 சிக் ஸர், 8 பவுண்டரியுடன் 93 பந்துக ளில் 83 ரன்களை குவித்து ஆட்ட மிழந்தார்.

இறுதியில் 50.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து மேற்கிந்திய தீவுகள் 196 ரன்களுக்கு ஆல் அவுட்டானது.

குல்தீப் யாதவ் 5 விக்கெட் (முதல் முறை): இளம் சுழற்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் அபா ரமாக பந்து வீசி 57 ரன்களை மட்டுமே விட்டுக் கொடுத்து 5 விக்கெட்டை வீழ்த்தினார்.

தனது நான்காவது டெஸ்ட் ஆட்டத்திலேயே முதல் முறை யாக 5 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்தார் குல்தீப். மேற்கிந்திய தீவுகளின் துவக்க மற் றும் மிடில் ஆர்டர் பேட்டிங்கை குல்தீப் தனது சிறப்பான பந்துவீச் சால் நிலைகுலையச் செய்தார்.

ரவீந்திர ஜடேஜா 3-35, அஸ் வின் 2-71 விக்கெட்டை வீழ்த்தி னர். முடிவில் 1 இன்னிங்ஸ் மற் றும் 272 ரன்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது.

கடந்த ஜூன் மாதம் ஆப்கா னிஸ்தானுக்கு எதிராக 1 இன் னிங்ஸ் மற்றும் 262 ரன்கள் வித் தியாசத்தில் இந்தியா வென்றிருந் தது. தற்போது அதைக் காட்டி லும் பெரிய வெற்றியை பெற்றுள் ளது. இந்த வெற்றி மூலம் 1-0 என தொடரில் முன்னிலை பெற்றுள் ளது.

இந்த அபார வெற்றி மூலம் உல கில் நம்பர் ஒன் டெஸ்ட் அணி என்ற அந்தஸ்தை தொடர்ந்து தக்க வைத்துள்ளது இந்தியா.

அக். 12-இல் 2-ஆவது டெஸ்ட்: வரும் 12-ஆம் தேதி ஹைதராபாத் ஜவாஹர்லால் நேரு மைதானத்தில் இந்தியா-மேற்கிந்திய தீவுகள் இடையி லான 2-ஆவது டெஸ்ட் ஆட்டம் தொடங்குகிறது.

வெற்றி மகிழ்ச்சியில் இந்திய அணி வீரர்கள்.

அணியின் ஒட்டுமொத்த முயற்சி: கோலி

இந்த அபார வெற்றி இந்திய அணியின் ஒட்டுமொத்த முயற் சிக்கு கிடைத்த வெற்றியாகும். உள்ளூர் சூழ்நிலையில் நமது அணி ஆதிக்கம் செலுத்தும் என்பது முன்னரே தெரியும். வீரர்கள் இந்த சூழலில் எப்படி விளையாட வேண்டும் என் பதை அறிந்துள்ளனர். எனி னும் சில இடங்களில் முன் னேற்றம் தேவைப்படுகிறது. இளம் வீரர் பிரித்வி ஷாவின் ஆட்டம் பாராட்டுக்குரியது. பிரித்வி, ஜடேஜா இருவரின் ஆட்டமும் மறக்க முடியா தது. பிரித்வி தனக்கு கிடைத்த வாய்ப்பை சரியாக பயன்படுத் தினார்.

பந்துவீச்சும் அபாரமாக இருந்தது. சமி, உமேஷ் தங் கள் பணியை சிறப்பாக செய்த நிலையில் சுழற்பந்து வீச்சாளர் கள் குல்தீப், அஸ்வின் அதை நிறைவு செய்தனர் என்றார் கோலி.

சாதனைகள்

இந்த வெற்றி இந்திய அணி உள்ளூரில் பெறும் 100-டெஸ்ட் வெற்றியாகும். ஆஸ்திரேலியா (238), இங்கிலாந்து (217), தென் னாப்பிரிக்கா (104) என இச்சா தனையை நிகழ்த்தும் 4-ஆவது அணி இந்தியாவாகும்.

வெற்றி இந்தியாவுக்கு உரியது: பிராத்வொயிட்

மேற்கிந்திய தீவுகள் கேப்டன் பிராத்வொயிட் கூறுகையில்: இந்த வெற்றி இந்தியாவுக்கு முழுமையாக உரியது. எவ்வாறு பேட்டிங் செய்ய வேண்டும் என்பதை காண்பித்தனர். எங்கள் பேட்டிங் இணை சரியாக அமையவில்லை. இந்த தோல்வியால் துவளாமல் அடுத்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடுவோம் என்றார்.

முதல் டெஸ்ட் சிறப்பம்சங்கள்...

- அறிமுக வீரர் பிரித்வி ஷா தனது முதல் டெஸ்ட் ஆட்டத்தி லேயே அபாரமாக ஆடி சதமடித்தார் 134 (154). ஆட்ட நாய கன் விருதையும் பெற்றார்.
- 5 விக்கெட் வீழ்த்திய முதல் சைனாமேன் பௌலர் என்ற பெரு மையை குல்தீப் யாதவ் இந்த டெஸ்டில் பெற்றார்.
- ஆல்ரவுண்டர் ரவீந்திர ஜடேஜா சொந்த ஊரான ராஜ்கோட்டில் தனது 38-ஆவது டெஸ்ட்டில் முதல் சதத்தை பதிவு செய்தார் (100).
- கேப்டன் விராட் கோலி தனது 24ஆவது சதத்தை அடித்து (139) தொடர்ந்து மூன்றாண்டுகளாக டெஸ்ட் ஆட்டங்களில் 1000 ரன் களை குவித்த முதல் கேப்டன் மற்றும் இந்திய வீரர் என்ற சாத னையைப் படைத்தார்.
- 94/6 ரன்களுடன் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள், ஒரு மணி நேரம் பத்து நிமிடங்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து விட்டது.

பிரித்வி ஷா நீண்ட நாள் இந்திய அணியில் நிலைப்பார்

மும்பை, அக். 6: அறிமுக டெஸ்ட் ஆட்டத்திலேயே சதமடித்த பிரித்வி ஷா நீண்ட நாள் இந்திய அணியில் நிலைப்பார் என ஜாம்ப வான் சச்சின் டெண்டுல்கர் பாராட் டியுள்ளார்.

18 வயதே ஆன பிரித்வி மேற் கிந்திய தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்டில் சிறப்பாக ஆடி 154 பந் துகளில் 134 ரன்களை குவித்தார். மேலும் முதல் டெஸ்டிலேயே சத மடித்த இளம் வீரர் என்ற சிறப்பையும் அவர் பெற்றார்.

இந்நிலையில் பிரித்வி ஷா ஆட்டம் குறித்து சச்சின் சனிக்கிழமை கூறியதாவது: பிரித்வி தன் வசம் அபரிதமான ஆட்டத்திறனை தன் னுள் கொண்டுள்ளார். அவருக்கு எதிர்காலம் மிகவும் சிறப்பாக அமையும். முதல் ஆட்டத்திலேயே பெரிய ஸ்கோரை அவர் எடுத்தி ருப்பது திருப்தி அளிக்கிறது.

உள்ளூரில் சிறப்பாக ஆடிய ஒருவர் அதே போல் சர்வதேச அள வில் முத்திரை பதிப்பாரா என்பது கவனிக்கப்பட வேண்டிய விஷ யம். ஒவ்வொருவரும் வெவ்வேறு வகையில் சிந்தனை செய்வர். பிரித்வியை பொறுத்தவரை முதல் தடையை அவர் தாண்டி விட்டார். அணியில் தனது இடத்தை உறுதி செய்து விட்டார். மேலும் வேகமாக கற்று வருகிறார். வெவ்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்ப அவர் ஆட்டத் திறமையை பின்பற்றுவார் என்றார் சச்சின்.

பள்ளி அளவிலான ஆட்டத்தில் ஹாரிஸ் கோப்பை போட்டியில் 546 ரன்களை விளாசினார் பிரித்வி. அவரை 10 ஆண்டுகளுக்கு எனது நண்பர் ஜகதீஷ் சவான் என்னை பார்க்க வேண்டும் என பிரித்வி விரும்புவதாக தெரிவித்தார். கிரிக்கெட் தொடர்பாக ஆலோ சிக்க விரும்புவதாக அவர் தெரிவித்தார். அப்போது எதிர்காலத்தில் பிரித்வி இந்தியாவுக்கு விளையாடுவார் என அப்போதே தெரிவித் தேன். இது தான் எனது முதல் அனுமானம் என்றார் சச்சின்.

தேசிய டென்னிஸ் போட்டி: விஸ்வகர்மா, மஹக் சாம்பியன்

புது தில்லி, அக். 6: புது தில்லியில் நடைபெற்ற பெனஸ்டா தேசிய டென்னிஸ் போட்டியில் சித்தார்த் விஸ்வகர்மா புதிய சாம்பியன் ஆனார். மகளிர் பிரிவில் மஹக் ஜெயின் தனது பட்டத்தை தக்க வைத் துக் கொண்டார்.

ஆடவர் மற்றும் மகளிர் ஒற்றையர் இறுதிச் சுற்று ஆட்டங்கள் சனிக் கிழமை நடைபெற்றன. இதில் ஆடவர் பிரிவில் முதல் நிலை வீரர் அர் ஜுன் கடேவை 6-2, 6-7, 6-3 என்ற செட் கணக்கில் 122 நிலை வீரர் சித்தார்த் விஸ்வகர்மா வென்று புதிய தேசிய சாம்பியன் ஆனார்.

வாராணாசியைச் சேர்ந்த சித்தார்த், அபாரமாக ஆடி அர்ஜுனை வீழ்த்தினார். அர்ஜுன் இந்திய டேவிஸ் கோப்பை அணியில் இடம் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் தேசிய சாம்பியன் போட்டியில் மூன்றாவது முறையாக 2-ஆம் இடம் பெற்றுள்ளார் அர் ஜுன். மகளிர் ஒற்றையர் பிரிவில் நடப்பு சாம்பியன் மஹக் ஜெயின் (இந்தூர்) 6-1, 6-2 என்ற நேர் செட்களில் கோவாவைச் சேர்ந்த நடாஷா பல்ஹாவை வென்று பட்டத்தை தக்க வைத்தார். வெற்றி பெற்றவர்களுக்கு தலா ரூ.3 லட்சமும், இரண்டாம் இடம் பெற்றவர் களுக்கு ரூ.2 லட்சமும் பரிசாக வழங்கப்பட்டன.

சிறப்பு அனுமதிச் சீட்டு விவகாரம்: பிசிசிஐ தீர்வு

புது தில்லி, அக். 6: கிரிக்கெட் போட்டிகளில் மாநில சங்கங்க ளுக்கு சிறப்பு அனுமதிச் சீட்டு வழங்குவது தொடர்பான பிரச் னைக்கு பிசிசிஐ கிரிக்கெட் நிர்வாக குழு சிஓஏ தீர்வு கண்டுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் அணி 5 ஒரு நாள் ஆட்டங்களில் பங்கேற்கிறது. இதில் இரண்டாவது ஆட்டம் மத் திய பிரதேசத்தின் இந்தூர் ஹோல் கர் மைதானத்தில் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் மாநில சங்கம் சார்பில் போட்டிக்கு சிறப்பு அனு மதிச் சீட்டு வழங்குவதில் பிசிசிஐயு டன் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. புதிய பிசிசிஐ சட்டவரையறையின் படி மொத்த நுழைவுச் சீட்டில் 90 சதவீதத்தை விற்பனைக்கு தர வேண் டும். 10 சதவீதமே சிறப்பு அனுமதிச் சீட்டாக ஒதுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பிசிசிஐ கிரிக்கெட் நிர்வாகக் குழு சிஓஏ தில்லியில் சனிக்கிழமை கூடி இப்பிரச்னை தொடர்பாக விவாதித்தது. பிசிசிஐ யின் சிறப்பு அனுமதிச் சீட்டு ஒதுக் கீடான 1200-இல் இருந்து 604 ஆக குறைத்துக்கொள்ள முடிவெடுக்கப் பட்டது. இதனால் மாநில சங்கங்க ளுக்கு கூடுதல் ஒதுக்கீடு கிடைக்கும் எனத் தெரிகிறது.

ஐஎஸ்எல் லீக்

கோவாவிடம் வீழ்ந்தது சென்னை

கோல் அடித்த கோவா வீரர் கோரோ.

சென்னை, அக். 6: ஐஎஸ்எல் கால் பந்து லீக் 2018-19 போட்டியின் ஒரு பகுதியாக சனிக்கிழமை நடை பெற்ற ஆட்டத்தில் நடப்பு சாம் பியன் சென்னையின் அணியை 3-1என்ற கோல் கணக்கில் வென் றது கோவா எஃப்சி அணி.

இந்நிலையில் இரு அணிகள் இடையிலான ஆட்டம் சென்னை நேரு விளையாட்டரங்கில் நடை பெற்றது. முதல் வெற்றியை பெற வேண்டும் என்ற நோக்கில் இரு அணிகளும் ஆட்டத்தை தங் கள் கட்டுக்குள் கொண்டு வர முனைந்தன. கோவா ஸ்ட்ரைக் கர் கோரோ தொடக்கம் முதலே சென்னையின் தற்காப்பு அரணை ஊடுருவி கோலடிக்க முயன்றார். இதன் பலனாக 12-ஆவது நிமிடத் தில் கோவா வீரர் எடுபேடியா அற் புதமாக கோலடித்தார். பதிலுக்கு கோலடிக்க சென்னை முயன் றும் முடியவில்லை. முதல் பாதி ஆட்டத்தின் போது கோவா 1-0 என முன்னிலை பெற்றிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் சென்னை அணி ஆதிக்கம் செலுத் திய போதிலும், அதனால் கோல் டிக்க முடியவில்லை. எனினும் 53-ஆவது நிமிடத்தில் கோவா வீரர் கோரோ அற்புதமாக கோலடித் தார்.

தொடர்ந்து கோவா வீரர் கள் சென்னையின் தற்காப்பை தகர்த்து முன்னேறிய நிலையில் 80-ஆவது நிமிடத்தில் கார்னர் மூலம் பேடியா அடித்த பந்தை மௌர்டடா பால் கோலாக மாற் றினார். ஆட்ட நேரம் முடிந்து ஒதுக்கப்பட்ட கூடுதல் நேரத்தில் சென்னை வீரர் ஆர்லன்டி கார்னர் மூலம் அடித்த பந்தை எலிசபியா கோலாக்கினார். இதன் மூலம் 3-1 என்ற கோல்கணக்கில் சென் னையை வீழ்த்தியது கோவா.

ஜப்பான் ஓபன் டென்னிஸ்: இறுதிச் சுற்றில் நிஷிகோரி

டோக்கியோ, அக். 6: ஜப்பான் ஓபன் டென்னிஸ் போட்டியில் இறுதிச் சுற்றுக்கு மூன்றாம் நிலை வீரர் நிஷி கோரி தகுதி பெற்றுள்ளார்.

இரு முறை சாம்பியனான நிஷி கோரி, சனிக்கிழமை நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் 7-6, 6-1 என்ற நேர் செட்களில் 8-ஆம் நிலை வீரர் ரிச்சர்ட் கேஸ்கட்டை வீழ்த்தி இறுதிக்கு முன்னேறினார்.

நிஷிகோரி ஏற்கெனவே 2012, 2014-இல் ஜப்பான் ஓபன் பட்டம் வென்றுள்ளார்.

மற்றொரு அரையிறுதியில் ரஷிய வீரர் டேனில் மெத்வெதேவ் 6-3, 6-3 என கனடாவின் டெனிஸ் ஷப லோபவை வீழ்த்தி இறுதிக்கு முன் னேறினார். ஞாயிற்றுக்கிழமை இறுதிச் சுற்று ஆட்டம் நடக்கிறது.

சீன ஓபன்: ஒஸாகா அதிர்ச்சித் தோல்வி

பெய்ஜிங்கில் நடைபெற்று வரும் சீன ஓபன் போட்டியின் அரையி றுதி ஆட்டத்தில் யுஎஸ் ஓபன் சாம் பியன் நவோமி ஒஸாகா 4-6, 4-6 என்ற நேர் செட்களில் லாட்வியா வின் அனஸ்டிஜா செவஸ்டோவி டம் அதிர்ச்சித் தோல்வியடைந் தார். இதன் மூலம் மூன்றாவது முறையாக இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெறும் ஒஸாகாவின் கனவு தகர்ந்தது. யுஎஸ் ஓபனில் சாம்பி யன் பட்டம், பான்பசிபிக் ஓபனில் இரண்டாம் இடம் பெற்றிருந்தார் அவர்.

மற்றொரு அரையிறுதியில் சீன வீராங்கனை வாங் குயாங்கை 6-1, 6-3 என்ற நேர் செட்களில் வென்று இறுதிக்கு முன்னேறினார் டென் மார்க்கின் கரோலின் வோஸ்னி யாக்கி.

அதே நேரத்தில் ஆடவர் பிரி வில் இரண்டாம் சுற்று ஆட்டத்தில் ஜெர்மனியின் இரண்டாம் நிலை வீரர் அலெக்சாண்டர் வெரேவ் 7-6, 2-6, 6-4 என்ற செட் கணக்கில் 61-ஆம் நிலை வீரர் துனிசியாவின் மலேக் ஜஸிரியிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

நான்காம் நிலை வீரர் பேபியோ போக்னினி 6-4, 6-3 என ரஷிய வீரர் ருப்லேவை வீழ்த்தினார்.

அனஸ்டிஜா செவஸ்டோ

துளிகள்

- மலேசியாவின் ஜோஹோர் நகரில் நடைபெறும் 8-ஆவது சுல்தான் ஜோஹோர் கோப்பை துவக்க ஆட்டத் தில் இந்திய ஜூனியர் அணி 2-1 என்ற கோல் கணக்கில் மலேசியாவை வீழ்த்தியது. ஞாயிற்றுக்கிழமை நியூஸிலி டன் மோதுகிறது இந்தியா.
- சென்னையில் ஞாயிற்றுக் கிழமை தொடங்கும் புரோ கபடி லீக் சீசன் 6 தொடக்க ஆட்டத்தில் நடப்பு சாம்பி யன் பாட்னா பைரேட்ஸ் அணி-தமிழ்த் தலைவாஸ் அணிகள் மோதுகின்றன. இரண்டாவது ஆட்டத்தில் புனேரி பல்டன் அணியும்-யு மும்பா அணியும் மோது கின்றன.
- பாகிஸ்தானுக்கு எதிராக துபையில் ஞாயிற்றுக்கி ழமை முதல் டெஸ்டில் ஆட உள்ள ஆஸி. அணியில் இடம் பெற்றுள்ள இளம் வீரர்களுக்கு இது சிறந்த வாய்ப்பு எனவும், பந்தை சேதப்படுத்திய விவகாரத் தில் இருந்து மீண்டும் வந் துள்ளோம் என அதன் கேப் டன் டிம் பெயின் கூறியுள் ளார்.
- இங்கிலாந்தின் பிரபல கால் பந்து அணிகளில் ஒன்றான மான்செஸ்டர் யுனைடெட் அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து ஜோஸ் மௌரின்ஹோ விரைவில் நீக்கப்படுவார் என தகவல் கள் வெளியாகி உள்ளன.
- ரொனால்டோ மீதான பாலியல் புகார் எதிரொ லியாக அவர் இடம் பெற் றுள்ள ஜுவென்டஸ் அணி யின் பங்குகள் 20 சதவீதம் சரிந்து விட்டன. ரொனால் டோவின் ஸ்பான்சர்களான ஈஏ ஸ்போர்ட்ஸ் நிறுவனம் தனது இணையப் பக்கத்தில் இருந்து ரொனால்டோவின் படத்தை மறைத்துவிட்டது.
- ஒப்பந்த விதிகளை மீறி தேசிய தேர்வாளர் குழுவின் தொடர்பு கொள்கை குறித்து விமர்சித்த கிரிக்கெட் வீரர் கள் கருண் நாயர், முரளி விஜய் ஆகியோரிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்ப பிசிசிஐ முடிவு செய்துள்ளது.
- கனடாவின் மார்க்கம் நக ரில் நடைபெறவுள்ள உலக ஜூனியர் பாட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியா சார்பில் லக்ஷயா சென், வைஷ்ணவி ரெட்டி உள்பட 24 பேர் கொண்ட அணி பங்கேற்கிறது.

டிரம்ப் – கிம் இடையே 2–ஆவது சந்திப்பு: அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் நம்பிக்கை



ஜப்பான் பிரதமர் ஷென்ஸோ அபேவுடன் பேச்சுவார்த்தை நடத்தும் மைக்கேல் பாம்பேயோ.

டோக்கியோ, அக். 6: தனது ஆசிய சுற்றுப் பயணத்தின் மூலம், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்புக்கும், வட கொரிய அதிபர் கிம் ஜோங்–உனுக்கும் இடையிலான இரண்டாவது சந்திப்பை நடைபெறச் செய்ய முடியும் என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மைக்கேல் பாம்பேயோ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஆசியச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மைக்கேல் பாம்போயோ, முதலாவதாக சனிக்கிழமை ஜப்பான் வந்தடைந்தார்.

அங்கு அந்த நாட்டுப் பிரதமர் ஷென்ஸோ அபே மற்றும் முக்கிய அதிகாரிகளுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஜப்பானைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை வட கொரியா செல்லும் அவர், தலைநகர் பியாங்கியோங்கில் அந்த நாட்டு அதிபர் கிம் ஜோங்–உனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

அந்தப் பேச்சுவார்த்தையில், கிம் ஜோங்குக்கும், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்புக்கும் இடையிலான இரண்டாவது சந்திப்புக்கான சூழலில் முன்னேற்றம் ஏற்படும் என்று பாம்பேயோ நம்பிக்கை தெரிவித்தார்.

சமாதான முன்முயற்சிகளுக்குப் பிறகு, அதிபர் கிம் ஜோங்–உனை அமைச்சர் மைக்கேல் பாம்பேயோ சந்திக்கவிருப்பது, இது 4–ஆவது முறை என்பது குறிப்பிடத்தக்கது.

தென் கொரியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில், அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணை சோதனைகளை வட கொரியா கடந்த ஆண்டின் இறுதிவரை தொடர்ந்து நடத்தி வந்தது. இதனால், வட கொரியாவுக்கும், அமெரிக்க–தென் கொரிய கூட்டணிக்கும் இடையே கடும் பதற்றம் நிலவி வந்தது.

இந்தச் சூழலில், தென் கொரியாவில் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக்கில் வட கொரியா பங்கேற்றதைத் தொடர்ந்து, இரு கொரிய நாடுகளுக்கும் இடையே பதற்றம் தணிந்து இணக்கமான சூழல் ஏற்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, வட கொரிய அதிபர் கிம் ஜோங்–உன், தென் கொரிய அதிபர் மூன் ஜே–இன் ஆகியோரிடையிலான வரலாற்றுச் சிறப்பு மிக்க சந்திப்புகள் இரண்டு முறை நடைபெற்றது.

இதற்கிடையே, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பையும் கிம் ஜோங்–உன் சிங்கப்பூரில் கடந்த ஜூன் மாதம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது, கொரிய தீபகற்பத்தை அணு ஆயுதங்களற்ற பிரதேசமாக்குவது உள்ளிட்ட 4 அம்ச தீர்மானத்தில் இரு தலைவர்களும் கையெழுத்திட்டனர்.

எனினும், அந்த ஒப்பந்த அம்சங்ககளை நிறைவேற்றுவதில் வட கொரியா முனைப்பு காட்டவில்லை என்று அமெரிக்காவும், இந்த விவகாரத்தில் அமெரிக்கா மிரட்டல் பாணியை கையாள்வதாக வட கொரியாவும் ஒன்றின் மீது ஒன்று குற்றம் சாட்டி வந்ததால், இந்த விவகாரத்தில் இழுபறி நீடித்து வருகிறது.

இந்தச் சூழலில், அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மைக்கேல் பாம்பேயோ வட கொரியா செல்வது முக்கியத்துவம் பெறுவதாகக் கூறப்படுகிறது.

அழுகும் உடல்களால் நோய்கள் பரவும் அபாயம்

பாதிக்கப்பட்ட பகுதிகளை 'இடுகாடாக' அறிவித்துவிட இந்தோனேஷிய அரசு பரிசீலனை

பாலு, அக். 6: இந்தோனேஷியாவில் கடந்த வாரம் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமிக்கு பலியான ஏராளமானவர்களது உடல்கள் இன்னும் மீட்கப்படாமல் அழுகி வருவதால், அந்தப் பகுதிகளில் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணியைக் கைவிட்டு, அந்தப் பகுதிகளை 'இடுகாடாக' அறிவிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

இதுகுறித்து மீட்புக் குழுவின் செய்தித் தொடர்பாளர் யூசூப் லத்தீஃப் சனிக்கிழமை கூறியதாவது:

சுலாவெசி தீவில் கடந்த வாரம் ஏற்பட்ட நிலநடுக்கத்திலும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியிலும் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,649–ஆக உயர்ந்துள்ளது.

அந்தப் பகுதியில் இன்னும் 1,000–க்கும் மேற்பட்டவர்கள் மாயமாகியுள்ளதால் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

சுனாமி ஏற்பட்டு 8 நாள்கள் கடந்து விட்ட நிலையில், இடிபாடுகளில் உயிருடன் யாரேனும் சிக்கியிருப்பதற்கான நம்பிக்கை வெகுவாகக் குறைந்து விட்டது. எனினும், மீட்புக் குழுவினர் தங்களது மீட்புப் பணியை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

நிலநடுக்கம், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக, பாலூ நகர விமான நிலையத்தில் சனிக்கிழமை வந்திறங்கிய மீட்புக் குழுவினர்.

இடிபாடுகளில் 8 நாள்களுக்கும் மேல் அழுகிய நிலையில் உடல்கள் சிக்கியுள்ளதால், அந்தப் பகுதியில் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது, மீட்புக் குழுவினருக்கு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, மிகுந்த கவனத்துடன் உடல்களைத் தேடும் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, நோய்களிலிருந்து மீட்புக் குழுவினரைப் பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கு நோயெதிர்ப்பு மருந்துகள் அளிக்கப்பட்டுள்ளன என்றார் அவர்.

இதனிடையே, நோய் பரவும் அபாயம் அதிகரித்து வருவதால், நிலநடுக்கம் மற்றும் சுனாமியால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடல்களை அப்படியே விட்டுவிடவும், அந்தப் பகுதியை 'இடுகாடாக' அறிவிப்பது குறித்தும் பரிசீலித்து வருவதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் விராந்தோ தெரிவித்தார்.

இந்தோனேஷியாவின் தீவுகளில் ஒன்றான சுலாவெசியில் கடந்த மாதம் 28–ஆம் தேதி சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. சுமார் 10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்டு, ரிக்டர் அளவுகோலில் 7.5 அலகுகளாகப் பதிவான இந்த நிலநடுக்கம் காரணமாக, அந்தப் பகுதியைச் சேர்ந்த ஏராளமான வீடுகள் இடிந்து விழுந்தன.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியில் சுலாவெசி மாகாணத் தலைநகரான பாலூவும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் மிகக் கடுமையான பாதிக்கப்பட்டன.

வங்கதேசம்: கலீதா ஜியா மருத்துவமனையில் அனுமதி

டாக்கா, அக். 6: ஊழல் வழக்கு தொடர்பாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள வங்கதேச முன்னாள் பிரதமர் கலீதா ஜியா, உடல் நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் சனிக்கிழமை அனுமதிக்கப்பட்டார்.

இதுகுறித்து, அவர் அனுமதிக்கப்பட்டுள்ள ஷேக் முஜிப் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் செய்தித் தொடர்பாளர் கூறியதாவது:

முன்னாள் பிரதமர் கலீதா ஜியா எங்களது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

மருத்துவமனையில் உள்ள முக்கிய நபர்களுக்கான பகுதியில் கலீதா ஜியா தங்க வைக்கப்படுவார். அந்தப் பகுதியை ஒட்டிய அறையும் அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

சிறையில் கலீதா ஜியாவின் உடல் நலன் குன்றி வந்த நிலையில், அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளிக்குமாறு அரசுக்கு வங்கதேச உயர் நீதிமன்றம் வியாழக்கிழமை உத்தரவு பிறப்பித்தது.

அந்த உத்தரவின் அடிப்படையிலேயே அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

'ஜியா ஆதரவற்றோர் அறக்கட்டளை'க்காக வெளிநாடுகளிலிருந்து 2.10 கோடி டாலரை (சுமார் ரூ.1.6 கோடி) முறைகேடாகப் பெற்றதாக, முன்னாள் பிரதமர் கலீதா ஜியா (72), அவரது மகன் தாரிக் ரஹ்மான் உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக டாக்காவிலுள்ள விசாரணை நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்தது.

கலீதா ஜியாவின் கணவரும், வங்கதேசத்தின் முன்னாள் ராணுவ ஆட்சியாளர் மற்றும் அதிபருமான ஜியாவுர் ரஹ்மானின் பெயரிடப்பட்ட அந்த அறக்கட்டளை, ஏட்டளவில் மட்டுமே இயங்கி வந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், கடந்த 6 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த விவகாரம் தொடர்பாக நடைபெற்று வந்த வழக்கில் கலீதா ஜியாவுக்கு கடந்த பிப்ரவரி மாதம் 8–ஆம் தேதி 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மேலும், தலைமறைவாகியுள்ள அவரது மகனும், வங்கதேச தேசியவாதக் கட்சியின் துணைத் தலைவருமான தாரிக் ரஹ்மான் மற்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ள 5 பேருக்கு 10 ஆண்டு கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

'குடும்பம்' என்பதற்கான வரையறை: ருமேனியாவில் விநோத வாக்கெடுப்பு

புகரெஸ்ட், அக். 6: ருமேனியாவின் அரசமைப்புச் சட்டத்தில், 'குடும்பம்' என்பதற்காக அளிக்கப்பட்டுள்ள விளக்கத்தில் மாற்றம் ஏற்படுத்துவதற்கான விநோத பொது வாக்கெடுப்பு சனிக்கிழமை நடைபெற்றது.

ருமேனியா அரசியல் சாசனத்தில் 'குடும்பம் என்பது இரண்டு பேர் சுயவிருப்பத்துடன் திருமணம் செய்து கொள்வதன் மூலம் உருவாக்கப்படுகிறது' என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

எனினும், அந்த வரையறையில் 'இரண்டு பேர்' என்பதற்குப் பதில், 'ஒரு ஆணும், பெண்ணும்' என்று மாற்றம் செய்ய வேண்டும் என்று பழைமைவாதிகள் வலியுறுத்தி வந்தனர்.

எனினும், அவ்வாறு மாற்றம் செய்தால் ஓரினச் சேர்க்கையாளர்களின் உரிமைகள் பறிக்கப்படும் என்று மற்றொரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில், இதுதொடர்பான பொதுமக்கள் வாக்கெடுப்பு சனிக்கிழமை நடைபெற்றது. பழமைவாத கிறிஸ்துவ மதத்தினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட ருமேனியாவில், அரசமைப்புச் சட்டத்தில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கே பெரும்பாலானவர்கள் ஆதரவு தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த பொதுவாக்கெடுப்பால் அனைத்துத் தரப்பினருக்குமான சட்ட அந்தஸ்தில் எந்த மாற்றமும் ஏற்படாது என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், அரசின் மீதான ஊழல் புகார்களிலிருந்து மக்களின் கவனத்தை திசைத் திருப்பவே இந்த பொதுவாக்கெடுப்பு நடத்தப்படுவதாக ஒரு சாரார் குற்றம் சாட்டியுள்ளனர்.

பாகிஸ்தான்: ஷாபாஸ் ஷெரீஃபுக்கு 10 நாள் காவல்

லாகூர், அக். 6: ஒப்பந்த முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்ட பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீஃபின் சகோதரரும், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான ஷாபாஸ் ஷெரீஃபை 10 நாள் காவலில் வைத்து விசாரிக்க அந்த நாட்டு ஊழல் தடுப்பு நீதிமன்றம் சனிக்கிழமை உத்தரவிட்டது.

மூன்று முறை பஞ்சாப் மாகாண முதல்வராக இருந்த ஷாபாஸ் ஷெரீஃப், தனது பதவிக் காலத்தின் போது குடியிருப்பு திட்டங்களையும், குடிநீர் வசதி திட்டங்களையும் அறிமுகப்படுத்தினார்.

அந்த திட்டங்களுக்கான ஒப்பந்தங்களை அவர் விதிமுறைகளை மீறி வழங்கியதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. இதன் காரணமாக, வீட்டு வசதித் திட்டத்தில் ரூ.1,400 கோடியும், குடிநீர் திட்டத்தில் ரூ.400 கோடியும் முறைகேடு நடந்ததாகக் கூறப்படுகிறது.

இது முறைகேட்டில், ஷாபாஸின் மருமகன் அலி இம்ரான் யூசூப்புக்கும் தொடர்புள்ளதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

இந்தச் சூழலில், இந்த வழக்கு தொடர்பாக ஷாபாஸ் ஷெரீஃபை ஊழல் தடுப்பு அதிகாரிகள் வெள்ளிக்கிழமை கைது செய்தனர். அதனைத் தொடர்ந்து சனிக்கிழமை ஊழல் தடுப்பு நீதிமன்றத்தில் அவரை ஆஜர்படுத்திய அதிகாரிகள், அவரிடம் விசாரணை நடத்துவதற்காக அவரை 15 நாள் காவலில் வைத்திருக்க அனுமதிக்குமாறு கோரினர்.

எனினும், அவரை 10 நாள் காவலில் வைத்து விசாரிக்க நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

ஏற்கெனவே, பனாமா ஆவண ஊழல் வழக்கில் ஷாபாஸ் ஷெரீஃபின் சகோதரரும், முன்னாள் பிரதமருமான நவாஸ் ஷெரீஃபுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது நினைவுகூரத்தக்கது.

கடந்த 2015–ஆம் ஆண்டில் பனாமா ஆவணங்கள் வெளியானதைத் தொடர்ந்து, அப்போதைய பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீஃப் மீது ஊழல் புகார் எழுந்தது.

அவரும், அவரது குடும்பத்தினரும் முறைகேடாகசேர்த்த பணத்தை ரகசியமாகவெளிநாடுகளில் முதலீடு செய்திருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுகளை விசாரித்த பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம், நவாஸ் ஷெரீஃப் மீதான பனாமா ஆவணக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாகக் கூறி, அவரை தகுதி நீக்கம்செய்தது. அதையடுத்து, அவர் பிரதமர் பதவியிலிருந்தும், ஆளும் கட்சித் தலைவர் பதவியிலிருந்தும் விலகினார்.

பனாமா முறைகேடு தொடர்பாக பாகிஸ்தான் ஊழல் தடுப்பு நீதிமன்றத்தில் நவாஸ் ஷெரீஃப் மற்றும் அவரது உறவினர்கள் மீது தனித் தனியாக 3 வழக்குகள் நடைபெற்று வருகின்றன.



ஷாபாஸ் ஷெரீஃப்

லாகூரிலுள்ள ஊழல் தடுப்பு நீதிமன்றத்துக்கு ஷாபாஸ் ஷெரீஃப் அழைத்து வரப்படுவதையொட்டி, அந்தப் பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள போலீஸார்.

அவற்றில், பிரிட்டன் தலைநகர் லண்டனில் உள்ள அவென்ஃபீல்டு அடுக்குமாடி குடியிருப்புகள் வாங்கியது தொடர்பான வழக்கில் நவாஸ் ஷெரீஃபுக்கு கடந்த ஜூலை மாதம் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

மேலும், அவரது மகள் மரியம் நவாஸுக்கு 7 ஆண்டுகளும், மருமகன் முகமது சஃப்தாருக்கு ஓராண்டும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அதையடுத்து, அந்த மூவரும் கைது செய்யப்பட்டு ராவல்பிண்டியிலுள்ள அடியாலா சிறையில் அடைக்கப்பட்டனர்.

அதனைத்தொடர்ந்து, நவாஸ், மரியம், சஃப்தார் ஆகியோருக்கு விதிக்கப்பட்டுள்ள சிறைத் தண்டனையை எதிர்த்து இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவை பரிசீலித்த நீதிபதிகள், நவாஸ் மற்றும் இருவருக்கு ஊழல் தடுப்பு நீதிமன்றம் விதித்த சிறைத் தண்டனைகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்தனர். மேலும், தலா ரூ.5 லட்சம் பிணைத் தொகையின் பேரில் அவர்கள் மூவரையும் விடுவிக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

அதையடுத்து, நவாஸ், அவரது மகள் மரியம், மருமகன் சஃப்தார் ஆகிய மூவரும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், மற்றொரு ஊழல் வழக்கில் நவாஸின் சகோதரரும், எதிர்க்கட்சித் தலைவருமான ஷாபாஸ் ஷெரீஃப் கைது செய்யப்பட்டுள்ளார்.

நவாஸ் சிறையில் இருந்த சமயத்தில், அவரது பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சி தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் ஷாபாஸ் ஷெரீஃப் தான் பிரதமர் பதவியை ஏற்றிருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

பறந்து பறந்து பயிற்சி...

அமெரிக்காவின் சான் ஃபிரான்சிஸ்கோ நகரில், இந்த வார இறுதியில் நடைபெறவிருக்கும் விமானக் கண்காட்சியில் சாகச நிகழ்ச்சிகளை மேற்கொள்வதற்காக, கடுமையான பயிற்சியில் ஈடுபட்டுள்ள அந்த நாட்டு 'புளூ ஏஞ்சல்ஸ்' விமானங்கள்.

தொழில்-வர்த்தகம்



பிஎம்டபிள்யூ விற்பனை 11% உயர்வு

புது தில்லி, அக். 6: ஜெர்மனைச் சேர்ந்த சொகுசுக் கார் தயாரிப்பாளரான பிஎம்டபிள்யூவின் இந்திய விற்பனை, கடந்த ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான கால அளவில் 11 சதவீதம் அதிகரித்துள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கடந்த ஜனவரி மாதம் முதல், செப்டம்பர் வரையிலான கால அளவில், பிஎம்டபிள்யூ குரூப் இந்தியா நிறுவனம் 7,915 வாகனங்களை விற்பனை செய்துள்ளது.

கடந்த ஆண்டின் இதே கால அளவில் நிறுவனத்தின் விற்பனை 7,424 வாகனங்களாக இருந்தது. அந்த எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், நிகழாண்டின் ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான வாகன விற்பனை 11 சதவீதம் அதிகரித்துள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் இந்த நிறுவனம் பிஎம்டபிள்யூ, மினி, மோட்டாராட் ஆகிய மூன்று வணிகப் பெயர்களில் கார்களையும், இருசக்கர வாகனங்களையும் விற்பனை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

விவசாயிகள் தினக் கொண்டாட்டம்...

பேங்க் ஆஃப் பரோடாவின் சென்னை மண்டல அலுவலகத்தில், சனிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் தினக் கொண்டாட்டத்தின் துவக்க நிகழ்ச்சியின்போது, விவசாயிகளுக்கு வங்கி அளித்து வரும் சேவைகள் குறித்து செய்தியாளர்களுக்கு விளக்கமளிக்கும் வங்கியின் துணைப் பொது மேலாளர் (சென்னை மண்டலம்) ஜி. வெங்கடேஷ், துணைப் பொது மேலாளர் (சென்னை பிராந்தியம்) வெங்கட் நிஷ்டாலா உள்ளிட்டோர்.

பயணிகள் சேவை: ஏர் இந்தியா – ஏர் செஷல்ஸ் ஒப்பந்தம்

மும்பை, அக். 6: அரசுக்குச் சொந்தமான ஏர் இந்தியா நிறுவனமும், செஷல்ஸ் நாட்டைச் சேர்ந்த ஏர் செஷல்ஸ் நிறுவனமும் தங்களது பயணிகளுக்கான உள்ளூர் சேவைகளை பரஸ்பரம் பகிர்ந்துகொள்வதற்கான ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், ஒரு விமான சேவை நிறுவனம் தனது பயணிகளுக்கு கூட்டு நிறுவனத்தின் விமான சேவையை பெற்றுத் தர முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

வியாழக்கிழமை கையெழுத்தான இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், செஷல்ஸ் நாட்டின் உள்ளூர் விமானப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படும் ஏர் செஷல்ஸ் விமானத்தில், 'ஏஐ' என்ற குறியீட்டைப் பயன்படுத்தி ஏர் இந்திய விமானப் பயணிகள் சேவை பெற முடியும்.

அதேபோல், சென்னை, தில்லி, பெங்களூரு, கொல்கத்தா போன்ற உள்ளூர் சேவைகளை ஏர் இந்தியா விமானத்தில் 'ஹெச்எம்' என்ற குறியீடு மூலம் ஏர் செஷல்ஸ் பயணிகள் பெற முடியும்.